பேணு செந்தமிழ் வாழப் பிறந்த காடவன்

# கோப்பெருஞ்சிங்கன்

எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

59. பிராட்வே · சென்னை-1.

First Edition : January 1965.
Publishers : Mudgala Trust.

# KOPPERUNJINGAN

by S. R. Balasubrahmanyam
(Author of "Four Chola Temples")

*Price Rs.* 3·50.

Printed by Jeevan Press, Madras-5. *(888)*

## அர்ப்பணம்

முன்னறி தெய்வங்களான
என் தாய் மங்களாம்பாள் அவர்களுக்கும்,
தந்தை இராமசுவாமி அய்யர் அவர்களுக்கும்
இந் நூல் அர்ப்பணம்

# முகவுரை

திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் சிறந்த கல்வித் தொண்டின் இடையே தமிழ்நாட்டு வரலாற்று ஆராய்ச்சியை ஒய்வுக் கலையாக வளர்த்து இன்புற்று வாழ்கிருர். சோழர் காலத்தில் அவர் மனம் ஈடுபட்டது. கோயிற்கலை வளர்ச்சியை நெஞ்சுருக ஈடுபட்டு எழுதியும், பேசியும் வருவதோடு பிற்காலச் சோழர் வரலாற்றில் பல உண்மைகளைக் கண்டு வெளியிட்டு வருகிருர்.

இப்போது தமிழருக்கு அவர் அளிக்கும் பொங்கல் வாழ்த்தோ கோப்பெருஞ்சிங்கனைப் பற்றிய இந்த நூலேயாகும். சோழ அரசினைச் சிதைத்தவன் என்ற நோக்கத்திலன்றிப் பழைய பல்லவப் பேரரசை மீட்டும் நிலை நிறுத்த முயன்றவன் என்று அவர் காட்டும் புதுக் கோணத்திலிருந்து பார்க்கும்போது கோப்பெருஞ்சிங்கனைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதிலும் "பேணு செந்தமிழ் வாழப் பிறந்த காடவன்" என்பதனை வற்புறுத்தி ஆசிரியர் விளக்கும் போது தமிழர் எவ்வாறு கோப்பெருஞ்சிங்கனை மறக்க முடியும்? நூல் முழுவதிலும் காடவனைப் பற்றிக் கல்வெட்டுக்கள் பாடும் பாடல்களை எல்லாம் திரட்டித் தந்து விளக்கி அவற்றில் தம்மை மறந்து—ஆனல் உண்மையை மறவாது—ஆசிரியர் எழுதிப் போகிருர்.

இவர் முன்னர் இவனைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதியிருந்தாலும் தமிழில் இப்பொழுது எழுதும் இந்த நூல் மிக, மிக இனிக்கின்றது.

வரலாற்றினை அதற்குரிய ஆதாரங்களின் வழியே உருவாக்குங் கலையை இந்த நூலில் காணலாம். ஆதாரங்கள் எல்லாம் தமிழிலேயே இருப்பதால், இந்தக் கலையின் நுட்பத்தைத் தமிழர் அனைவரும் இந்த நூலின் வழியே நன்கு அறியலாம். ஆதலின் நம்முடைய புலவர் மாணவர்களும், வரலாற்று மாணவர்களும் இதனைப் பயிலுதல் வேண்டும்.

இருவேறு கோப்பெருஞ்சிங்கர்களைப் பற்றிக் கூறும் கல்வெட்டுத் துறையினரை மறுத்து கோப்பெருஞ்சிங்கன் ஒருவனே என்று நிலை நாட்டு முறையையும் நம் மாணவர்கள் உற்று நோக்குதல் வேண்டும். அவன் செய்த பலவகைத் தொண்டுகளையும், அவன் காலத்துத் தென்னுட்டு நிலைமையையும் ஆதாரங்களின் வழியே நன்கு படம் பிடித்துக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

தமிழ் நாடு இதனை வரவேற்று மேலும் இத்தகைய நூல் பலவற்றைத் தமிழில் ஆசிரியர் எழுதும்படி தூண்ட வேண்டும்.

வாழ்க கோப்பெருங்சிங்கன்; வாழ்க தமிழ்; வாழ்க பாலசுப்பிரமணியனுர்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகம்
14—1—1965

தெ. பொ. மீனுட்சிசுந்தரம்.

# முன்னுரை

நான் 1931 ஆம் ஆண்டில் கோப்பெருஞ்சிங்கனைப் பற்றி ஆங்கிலத்தில் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை வரைந்தேன். அதற்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் 'சங்கர பார்வதி பரிசு' வழங்கப்பட்டது. அதன் சுருக்கம் அக் கழகத்து ஆராய்ச்சி இதழின் 9, 10 ஆம் தொகுதிகளில் வெளிவந்துள்ளது. சில ஆண்டுகளுக்கு முன் அக் கட்டுரையைச் சற்று விரிவாகத் தமிழில் எழுதினேன். தற்போதுதான் அது அச்சேறும் வாய்ப்பினைப் பெற்றுள்ளது.

13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர் பலருடைய அருந்தமிழ்ப் பாடல்கள் பலவும், பாண்டியர், சோழர், பல்லவர் மெய்க்கீர்த்திப் பகுதிகளும் இந் நூலில் இடம் பெற்றுள்ளன. அப் பாடல்களை உரிய வடிவில் அமைத்து, அரிய உரைநடையில் பொழிப்புரை வரைந்தும், அச்சுத் தாள்களின் பிழைகளைத் திருத்தியும் உதவிய என் நண்பர் பண்டித வித்துவான் தி. வே. கோபாலன் M. A., B. O. L., அவர்களின் செயல் போற்றற்பாலது.

இந் நூலுக்கு அரிய முகவுரை வழங்கிய அண்ணமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் உயர்திருவாளர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் M.A.B.L., M.O.L., அவர்களுக்குப் பெரிதும் கடப்பாடுடையேன்.

இந் நூலை அச்சேற்றுவதில் பேருக்கங்கொண்ட என் நண்பர் திரு. அழ. வள்ளியப்பா அவர்களுக்கும், ஜீவன் அச்சகத்தாருக்கும் என் நன்றி உரித்தாகுக.

*4, முதல் கிராஸ் ரோடு,*
*ஸ்ரீராம்நகர்,*
*சென்னை-18*
*குரோதி ஆண்டு,*
*தைத் திங்கள்*
*பொங்கல் நன்னாள்*
*(14—1—1965)*

**எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்**

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| | நூன்முகம் | 5 |
| 1. | பேணுசெந்தமிழ் வாழப்பிறந்த காடவன் | 7 |
| 2. | கோப்பெருஞ்சிங்கனுடைய முன்னோர்கள் | 10 |
| 3. | கோப்பெருஞ்சிங்கன் ஒருவனே; இருவர் அல்லர் | 35 |
| 4. | வாழ்க்கையின் முற்பகுதி | 63 |
| 5. | இதர நாடுகளோடு தொடர்பு | 93 |
| 6. | கோப்பெருஞ்சிங்கனின் பெருமை | 110 |
| 7, | கோப்பெருஞ்சிங்கனுடைய அரசியலும் நாட்டு நிலையும் | 132 |

# நூன்முகம்

தமிழ் நாட்டின் பெருமையைப் பாடிய பாரதியார்,

"மாரத வீரர் மலிந்தநன் னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்தபொன் னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையும் நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்தநன் னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே."

என்று பாரத நாட்டின் பெருமையைப் புகழ்கின்றார்.

இப்பெருமையை நம் நாடு பல காலங்களில் நிலை பெறுத்தி யுள்ளது. அப்பொற்காலங்களில் ஒன்று கோப் பெருஞ்சிங்கன் வாழ்ந்த பதின்மூன்றாம் நூற்றாண்டாகும்.

'பேணு செந்தமிழ் வாழப் பிறந்த காடவன்' என்ற புகழ்பெற்ற கோப்பெருஞ்சிங்கன் இப் பதின்மூன்றாம் நூற்றாண்டில் (கி. பி. 1243—79) தமிழகத்தில் வாழ்ந்த பல்லவக் குரிசில் ஆவான். சோழ, பாண்டிய, போசள, காகதீய, மன்னர்களோடு பல போர்கள் செய்து தன்னுடைய வீரத்தை நிலைநிறுத்தி அழிவுற்றிருந்த பல்லவ குலத்துக்குப் புத்துயிர் அளித்தான். கட்கமல்லன், நிச்சங்கமல்லன் என்ற விருதுகள் இவனுக்குப் பொருத்தமானவையே. இவன் சீரிய நிர்வாக முறையை அமைத்துச் செவ்வனே ஆட்சி செய்தான்.

வடமொழியையும் தமிழையும் வளர்த்த இவ்வள்ளல் 'ஸர்வக்ஞன்' 'ஸாஹித்ய ரத்நாகரன்' என்று பலவாறு புகழப்பட்டான். வயலூர், திருவண்ணாமலை முதலிய இடங் களில் பொறிக்கப் பெற்ற பாக்களைப் பாடியவர்கள் சிறந்த தமிழ்ப்புலவர்கள். இத்தகைய கவிஞர்களை ஆதரித்த கோப்

பெருஞ்சிங்கன் 'பேணு செந்தமிழ் வாழப்பிறந்த காடவன்' அல்லனே!

நாட்டியம் முதலிய கலைகளையும் ஆதரித்த இம் மன்னன் 'பரதம் வல்லான்' என்று போற்றப்பட்டான்.

இவன் அளவுகடந்த தெய்வபக்தி உடையவன். கனக சபையில் தாண்டவம் பயிலும் நடராசப் பெருமானைத் தன் குலநாயகமாகவும், தான் அப்பெருமானுக்குச் சர்வகால, சர்வகாரிய நிர்வாஹகனுகவும் கருதினுன். அறம் வளரக் கலிமெலியச் செங்கோலோச்சினுன்.

இத்தகைய மன்னனுடைய வரலாற்றையும், இவன் காலத்திய தென்னுட்டு நிலையையும் நூலகத்து விரிவாகக் காண்போம்.

# பேணு செந்தமிழ் வாழப் பிறந்த காடவன் கோப்பெருஞ்சிங்கன்

## அத்தியாயம் 1

### அக்கால இந்தியாவின் நிலைமை

தென்னிந்தியாவில் பல்லவ மன்னர்கள் கிருஷ்ணையாற்றுக்கும் காவிரியாற்றுக்கும் இடைப்பட்ட பகுதியைச் சுமார் 600 ஆண்டுகள் (கி. பி. 275-897) அரசாட்சி செய்து வந்தனர். பல்லவர்களது ஆதிக்கத்தைத் தொலைத்து, சோழர்களின் பேரரசை நிறுவிய பெருமை விஜயாலய சோழனையே சாரும். விஜயாலயன் மகன் ஆதித்த சோழன் தொண்டை மண்டலத்தை வென்று பல்லவர் ஆட்சிக்கு முடிவு கண்டான். சோழ வமிசம் சுமார் 400 ஆண்டுகள் வல்லரசாய் விளங்கிற்று. தனது வமிசத்து ஆட்சியைத் தொலைத்தது சோழவமிசமே என்பதை உட்கொண்டு சோழவமிசத்து அரசனான மூன்றும் இராசராசனை வென்று சோழப் பேரரசுக்கு அழிவு உண்டாக்கிப் பட்டுக்கிடந்த பல்லவரது ஆட்சியாகிய மரம்தளிரும்படிப் (பல்லவம்) புத்துயிர் அளித்த பெருமை பல்லவக் கோப்பெருஞ் சிங்கனையே சாரும்.

13-ஆம் நூற்றுண்டின் இடைப் பகுதியில் வட இந்தியாவை அடிமை அரசர்களான முஸ்லீம் மன்னர்கள் வென்று ஆண்டு வந்தனர்.

தக்காணத்தில் மூன்று முக்கிய வல்லரசு நாடுகள் இருந்தன. தேவகிரியைத் தலைநகராகக்கொண்டு யாதவகுல மன்னர்கள் ஆண்டனர். இவ்வமிசத்தில் பெரும் புகழ் படைத்தவன் கிருஷ்ணன் (கி. பி. 1247-60) என்ற மன்னனுவான். இவனது காலத்தில் யாதவப் பேரரசு பரந்த நிலப் பரப்பைக் கொண்டு மிளிர்ந்தது. துவாரசமுத்திரத்தைத் (தற்காலத்து

மைசூரிலுள்ள ஹளேபீடு) தலைநகராகக்கொண்டு போசள மன்னர்கள் ஆண்டனர். அவர்களில் முக்கியமானவர்கள் இரண்டாம் நரசிம்மன் (கி. பி. 1220-38), சோமேசுவரன் (கி. பி. 1233-1267) என்பவர்களும், அவர்களுடைய இரு புதல்வர்களும் ஆவர். அப்புதல்வர் இருவரும் தம் நாட்டை இரண்டாகப் பிரித்துக்கொண்டு ஆண்டனர். மூன்றும் நரசிம்மன் (கி. பி. 1254-92) வட பாகத்தையும் அவன் தம்பி இராமநாதன் (கி. பி. 1254-95) தென் பாகத்தையும் ஆண்டு வந்தனர்.

தக்காணத்தின் கீழ்ப் பகுதியில் ஓரங்கல் (ஆந்திரப் பிரதேசம்) என்ற நகரைக் கோநகராகக்கொண்டு காகதீய மன்னர்கள் ஆண்டு வந்தனர். 13-ஆம் நூற்றுண்டில் இந்நாட்டை ஆண்டவர்களில் முக்கியமானவர்கள் கணபதி (கி. பி. 1199-1262) என்பவரும் அவருடைய மகளும் ஆவர். ருத்ரம்மா என்ற அவ்வரசி ருத்ரமகாராஜா என்ற ஆண் பெயருடன் நாடாட்சி செய்துவந்தாள்.

தமிழகத்தில் புகழேணியின் உச்சியிலிருந்த சோழப் பேரரசு படிப்படியாகச் சரிந்து அழிவுக் காலத்தை எதிர் நோக்கி இருந்தது. இக்காலத்தில் ஆண்ட சோழ மன்னர்களில் முக்கியமானவர்கள் மூன்றும் குலோத்துங்க சோழன் (கி. பி. 1178-1216), மூன்றும் இராசராசன் (கி. பி. 1216-56), மூன்றும் இராசேந்திரன் (கி. பி. 1246-79) என்பவர்கள் ஆவர்.

இக்காலத்தில் சோழப் பேரரசின் வலி குன்றவே, பாண்டியர்களுடைய வலி ஓங்குவதாயிற்று. மூன்றும் குலோத்துங்கன் மதுரையை மூன்று முறை வென்றுன். மூன்றுவது போரில் சடையவர்மன் குலசேகர பாண்டியனைத் தோற்கடித்தான். மூன்றும் குலோத்துங்கன தன் வெற்றிக்கு அறிகுறியாக வீராபிஷேகம் செய்துகொண்டு மதுரையில் மாபெரும் விழாவை நிகழ்த்தினுன்.

தமக்கு ஏற்பட்ட இத் தோல்வியைப் பொருமல் குலசேகரனுடைய தம்பியான மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி. பி. 1216-1239) மனம் வருந்தினுன். சோழ நாட்டின்மீது படையெடுப்பதற்குப் பெரும் படை திரட்டினுன். சோழ நாட்டில் பெரும் போர் நிகழ்த்தி மூன்றும் குலோத்துங்கனை முறியடித்

தான். சோழ மன்னர்களின் தலைநகர்களில் ஒன்றான ஆயிரத் தளியில், மதுரையில் குலோத்துங்கன் நிகழ்த்திய பெரு முடி சூட்டு விழாவுக்குப் போட்டியாகப் பெரு விழா ஒன்றை நிகழ்த் தினான். சோழ நாட்டை வென்ற இவனுக்குச் 'சோணாடு கொண்ட சுந்தர பாண்டியன்' என்ற பெயர் வழங்குவ தாயிற்று. தான்கொண்ட சோழநாட்டை மீண்டும் தோற்ற சோழ மன்னனுக்கே வழங்கியதால் ''சோணாடு வழங்கிய சுந்தரபாண்டியன்'' என்றும் அழைக்கப்பட்டான். இச் சுந்தர பாண்டியனுக்குப் பிறகு மாறவர்மன் இரண்டாம் சுந்தர பாண்டியனும் (கி. பி. 1238-53), சடையவர்மனான முதலாம் சுந்தரபாண்டியனும் (கி. பி. 1251-69) பாண்டிய நாட்டை முறையே ஆண்டு வந்தனர். இச் சடையவர்மன் சுந்தர பாண்டியனுக்கு, 'எல்லாம் தலையானான்', 'எம்மண்டல மும் கொண்ட சுந்தர பாண்டியன்' என்ற பட்டங்களும் உண்டு. பின்னைய பாண்டிய ஏகாதிபத்திய மன்னர்களுக்குள் இவனே தலைசிறந்தவன். இவன் சோழ நாட்டை வென்று வடக்கே நெல்லூர் வரையில் பாண்டிய நாட்டின் எல்லையை நீட்டினான்.

இக் காலத்தில்தான், பட்டுக்கிடந்த பல்லவ வமிசத்தை உயிர்ப்பித்து, சேந்த மங்கலத்தைத் தலை நகராகக்கொண்டு, பண்டைக் காலத் தொண்டை நாட்டைக் கோப்பெருஞ்சிங்கன் ஆண்டு வந்தான். இவன் சோணாட்டு மன்னனை வென்று சோணாட்டின் வடபாகத்தைத் தன்னகப்படுத்தினான். தவிர, இவனே பாண்டியரோடும், காகதீயரோடும், போசளரோடும் பல போர்கள் செய்து, வெற்றிக் கொடி நாட்டி ஏக வீரனாய்த் திகழ்ந்தவன் ஆவான்.

# அத்தியாயம் 2

## கோப்பெருஞ்சிங்கனுடைய முன்னோர்கள்

### முன்னோர்களின் கிளை

1. வளந்தானர் ஆன காடவராயர்

|

2. ஆட்கொள்ளியார் ஆன காடவராயர்

|

3. நாலுதிக்கும் வென்றுரான ஏழிசை மோகன் காடவராயர்

|

ஆட்கொள்ளி ?

4. அரசநாராயணன் கச்சியராயரான காடவராயர்

|

5. கற்கடமாராயன் கூடலும் அதியமான் நாடும் அழித்த கூடல் அவனியாளப் பிறந்தான் வீரசேகரனை காடவராயர் (சகர யாண்டு—*1108*=கி. பி. *1186*). கூடல் ஏழிசை மோகன் ஆளப்பிறந்தான் (திருக்கழுக்குன்றம்—No *130* of S.I.I. XII. *187/32-33.*)

|

6. தொண்டை மண்டலம் கொண்டருளிய பல்லவாண்டாரான காடவராயர் (அத்தி—*296/1912.* No. *125* of S. I. I. XII.)
அழகிய பல்லவன்-முன்னூர் *63/1919.* திருக்கழுக்குன்றம்,*484/21.* ஜீயமகிபதி—திரிபுராந்தகம் *197/1905.* மணவாளப் பெருமாள்—சேந்தமங்கலம் கல்வெட்டு (*73/1903*) (*5* ஆண்டுகள்)

|

7. மகாராஜசிம்மன் சகலபுவன சக்ரவர்த்திகள் கூடல் அவனியாளப் பிறந்தான், கோப்பெருஞ்சிங்கன் (கி.பி. *1243-79*)

|

8. காடவகுமரன்

காஞ்சியில் ஆண்டுவந்த பல்லவப் பேரரசு அழிந்த பிறகு, ஆர்க்காட்டுப் பிரதேசங்களில் காடவ வம்சத்தினர் பலர் சோழர்களுடைய சிற்றரசர்களாக விளங்கினர்கள். அங்ஙனம் ஆண்ட குடும்பங்களில் ஒன்றனைப்பற்றி விருத்தாசலத்துக் கல்வெட்டொன்று விளக்கிக் கூறுகிறது. அக் கல்வெட்டின் மற்றொரு படி (நகல்) திருவெண்ணெய் நல்லூரில் உள்ளது. அக் கல்வெட்டை அரச நாராயணன் ஆளப் பிறந்தான் வீர சேகரன காடவராயன் அவ்வூர்க் கோயில் கண்டராதித்தன் வாசலில் வெட்டுவித்துள்ளான். "சகரயாண்டு 1108னல் (கி. பி. 1186) ஆடி மாசத்துப் பிற்பத்தில் கண்டராதித்தன் வாசலுக்கு மேற்கே புறப்பட்டுக் கற்கடமாராயன் கூடலும் அதியமான் நாடும் அழித்து வெற்றிக்கொடி உயர்த்தி அனுமனும் பொறித்தான் ஆளப் பிறந்தான் வீரசேகரன காடவராயன்" என்று இக் கல்வெட்டில் குறிப்பு காணப்படுகிறது. இதில் ஐந்து தலைமுறை காடவச் சிற்றரசருடைய பெருமை விளக்கப்படுகிறது. ஒவ்வொருவரைப் பற்றியும் சில பாடல்கள் பொறிக்கப் பட்டுள்ளன. ஐந்தாவது மன்னனே இக் கல்வெட்டை கி. பி. 1186-இல் வெட்டுவித்தான்.

### 1. வளந்தானன் :

இவன் பெரு வலி படைத்த சிங்களருடன் போரிட்டு, அவர்கள் தோற்றோடிக் கடலில் விழுந்து உயிர் தப்புமாறு அவர்களை விரட்டினன். தங்களது யானைப் படை, குதிரைப் படை இவற்றின் வலியால் இவ்வரசனோடு கங்கர்கள் போரிடவந்தனர். அவர்களையும் இவன் தோற்கடித்து விரட்டவே உயிர் தப்புவதற்காக அவர்கள் மலைக் குகைகளுக்கு ஓடிப் பதுங்கிக்கொண்டனர். இவன் பல தேவதானங்களை வழங்கினன். நாட்டு மக்கள் வறுமை நீங்கி நல்வாழ்வு வாழுமாறு நல்லரசு செலுத்தினன்.

### 2. ஆட்கொள்ளி காடவராயன் :

இவன் சோழ இரண்டாம் இராசராசன் (கி. பி. 1146—62) காலத்தவன். இவன் சிவபெருமானிடத்தும் திருமாலிடத்தும் பேரன்பு கொண்டு வாழ்ந்தவன். இவன் திருவெண்ணெய் நல்லூர் ஸ்ரீவைகுந்தத் தெம்பெருமானுக்குத் திருவாய்க் குலத்து ஆழ்வாரையும் பிராட்டிமாரையும் உகந்தருளப் பண்

ணிக் கோயிலுக்கு 20 மாநிலத்தை, அனைத்து ஆயங்களும் நீக்கி, இறையிலியாக இராசராசனது 12 ஆம் ஆண்டில் கொடுத்தான். கோப்பெருஞ்சிங்கன் தன் 11ஆம் ஆண்டில் (கி. பி. 1254) இக்கோயிலின் ஸ்ரீ விமானத்தை இழுச்சி எடுத்தபோது பழைய விமானத்திலிருந்த இக் கல்வெட்டைப் புது விமானத்தில் பொறிக்கச் செய்தான். இச் செய்தியை S. I. I. Vol. XII No. 170-486/1921-கல்வெட்டால் அறியலாம்.

இவ்வாட்கொள்ளி காடவராயனே தீர்த்த நகரியில் உள்ள சிவாங்குரேசுவரருக்கு (பொழில் திணைமா நகர் ஈசருக்கு) திருவமுதுக்கும் திருநந்தாவிளக்குக்கும் தன் நிலத்தின் பாடி காவல், வெட்டி என்ற வரிகளைக் கொடுத்தான். இச்செய்தி கீழ்க்கண்ட கல்வெட்டுப் பாடலால் தெரிகிறது.

கூடாத வன்புகழ்க் கூடல்மன் ஆட்கொள்ளிக் காடவர் கோன்
சேடார் பொழிற்றிணை மாநகர் ஈசரைச் சிந்தைசெய்து
பீடார் நிலத்துப் பெரும்பாடி காவல்வெட்டி தவிர்த்து
நாடா ரமுதுக்கும் நுந்தா விளக்குக்கும் நாட்டினனே.

பிறருக்குக் கிடைக்காத மிக்க புகழை உடைய ஆட்கொள்ளிக் காடவனாகிய மன்னன் பெருமை மிக்க சோலை சூழ்ந்த திணைமா நகரத்து ஈசனை வணங்கிப் பெருமை சான்ற நிலத்தின் பெரும்பாடி காவல், வெட்டி என்ற வரிப்பணத்தைத் தான் தவிர்ந்து, அமுதுபடிக்கும் நந்தா விளக்குக்கும் கோயிலுக்கு நல்கினன்.

[S. I. I. Vol. XII, No. 262; 115/1904.]

### 3. ஏழிசை மோகன் :

இராசராசனுடைய 6–ஆவது ஆண்டில் கூடல் ஆளப் பிறந்தான் மோகனான நாலுதிக்கும் வென்ற இராசராசக் காடவராயன் பருந்தல் ஆன மலைய விசாதிர நல்லூர் முதலிய தேவதானக் கிராமங்களின் பெரும்பாடிகாவல், சிறுபாடி காவல் உள்ளடங்கிய வரிகளைத் தவிர்த்து, இறையானறையூர் (இலவானுசூர்) ஆன சோழ கேரள சதுர்வேதி மங்கலத்தில் எழுந்தருளியுள்ள ஊர் (ஓர்) பாகங் கொண்டருளிய மகாதேவரைப் புரட்டாசித் திருவோண நட்சத்திரத்தன்று எழுந்தருளுவிப்பதற்கு அவ்வரிகளைக் கொண்டு நிவந்தம் செய்தா

னென்று அறிகிரும். அதே தலைவன் அடுத்த ஆண்டில் அம் மகாதேவர்க்கே ஒரு திருமாளிகை எடுப்பித்தான் என்று மற்ருெரு கல்வெட்டு கூறுகிறது. (166/1906; 170/1906.) [இராசராசனது 12 ஆம் ஆண்டுக் கல்வெட்டுக்கு உரியவன் ஒருகால் ஆட்கொள்ளி மகன் ஏழிசை மோகனுடைய புதல்வனுக இருக்கக் கூடும்.]

இம்மோகன் நாலுதிக்கும் வென்ற பெருமை உடையவன். இவன் மதம்பிடித்த யானைகளை அடக்கிச் செலுத்துவதில் வல்லவன்.

## 4. கச்சியராயன் :

இவனுடைய ஆட்சியில் நாடு பெரும் பரப்பை உடையதாக இருந்தது. மக்கள் பகைவர்களது பயம் இன்றி வாழ்ந்தனர். இவனுடைய ஆட்சியில் **'பின்னிச் சிலம்பு'** இவனுக்குச் சொந்தமாக இருந்தது. இவன் தமிழ் மன்னர் மூவரையும் வென்று அவர்களுடைய மலைகளைத் தகர்த்ததாகவும், இரட்டர்களை வென்று **வாதாபியை** அழித்ததாகவும் கல்வெட்டுப் பாடல்களிலிருந்து அறிகிரும்.

## 5. அவனியாளப் பிறந்தான் வீரசேகரன் காடவராயன் :

இவன் அதியமான் நாட்டை அழித்துக் கற்கட மாராயன் கூடலை வென்ற பெருமை உடையவன். கற்கட மகாராசன் என்ற குடும்பத்தினரை வென்று கொண்ட இக்கூடல் வெற்றியைப் பிற்காலத்தில் இவன் புதல்வரும் பெயரரும் பெரிதும் போற்றிக் **கூடல் ஆளப் பிறந்தான்** என்ற பட்டப் பெயர் கொண்டனர்.

புறமலை நாடு என்று சொல்லப்பட்ட (தற்காலம் சேலம் ஜில்லா) பிரதேசத்தில் தீர்த்தமலை என்னும் பெயருடைய தோரூர் இருக்கிறது. அந்த ஊரிலுள்ள ஆண்டவனுக்குக் 'கூடல் ஆழ்வார்' என்ற பெயர் இருந்து வருகிறது. அங்கு கற்கடமாராயன் என்று பட்டம் பெற்ற சிற்றரசன் ஒருவன் பரகேசரி இராசேந்திர சோழன் காலத்தில் வாழ்ந்து வந்ததாகக் கல்வெட்டுக்களால் அறிகிரும். (658, 60, 69, 72, 73/1905.) எனவே கூடல் என்பது தற்காலத்துத் 'தீர்த்தமலை'யாக இருக்கலாம். அவ்வூர் பெண்ணையாற்றின் தென் கரையில் உள்ளது.

பின் ஆண்ட கோப்பெருஞ்சிங்கன் காலத்துக் கல்வெட்டுக்களில், கூடலும், திருமுனைப்பாடியும் கீழாமூர் நாட்டில் உள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இக்கூடல் கற்கடமாராயன் கூடலோ அன்றிக் கோபெருஞ்சிங்கன் நிறுவிய புதிய கூடலோ தெரியவில்லை (73, 83/1918). கூடல் என்ற ஊர் திருப்பாதிரிப்புலியூருக்கு அருகாமையிலுள்ள கடலூர் அன்று. விருத்தாசலத்துக்கு வடமேற்கே கள்ளக்குறிச்சி தாலூகாவில் கூடலூர் என்பதோர் ஊர் உள்ளது. விருத்தாசலம் தாலூகாவிலும் பெண்ணுகடத்துக்கு மேற்கே, வெள்ளாற்றங்கரைமீது கூடலூர் என்ற மற்ருேர் ஊரும் உள்ளது. கூடல் என்ற ஊர் எந்த ஊராக இருப்பினும் இக் குடும்பத்தார் கூடல் ஆளப்பிறந்தான் என்ற பட்டத்தைப் பெருமையாகக் கொண்டனர் என்பது தேற்றம்.

## 6. தொண்டை மண்டலம் கொண்டருளிய பல்லவாண்டான் காடவராயன்:

இக்காடவன் மூன்ரும் குலோத்துங்கனுடைய காலத்தில் வாழ்ந்தவன் என்று தெரிகிறது. குலோத்துங்க சோழனின் மூன்ரும் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று கூடல் மோகன் ஆளப்பிறந்தான் அரச நாராயணன் ஆன காடவராயன் கி. பி. 1181–இல் கோபுரம் ஒன்றுஎடுப்பித்த செய்தியைச் (477/1921) சுட்டுகிறது. எட்டாம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று கூடல் அரச நாராயணனை ஆளப்பிறந்தான் காடவராயன் திருவதிகைத் திருவீரட்டானம் உடையாருக்கு 425¼ கழஞ்சு நிறையுடைய ஓர் அணிகலன் வழங்கினுன் (391/1921) என்று குறிப்பிடுகிறது. மேலும் அதே ஆண்டில் திருவெண்ணெய்நல்லூரில் 50½ கழஞ்சு நிறையுடைய ஒரு வெள்ளிக் குடத்தை **'அபிஷேக கடமாக'**க் கூடல் ஆளப்பிறந்தானை அரசநாராயணன் காடவராயன் கொடுத்ததாக அறிகிரும். பதினென்ரும் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று (கி. பி. 1189) கூடல் அரசநாராயணனை ஆளப்பிறந்தான்காடவராயனும், செங்கேணி வீர சோழன் அத்திமல்லனை குலோத்துங்கசோழ சம்புவராயனும், ஆளப்பிறந்தான் எதிரிலி சோழ சம்புவராயனேடு யாதொரு தொடர்பும் கொள்வதில்லை என்று முடிவுகட்டி ஒப்பந்தம் செய்து கொண்டதாக அறிவிக்கிறது (மடம்—254/1919).

இக்கல்வெட்டுச் சான்றிலிருந்து, அரச நாராயணனுன ஆளப்பிறந்தான் காடவராயன் மூன்ரும் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தவன் என்பதும், குலோத்துங்கனுடைய 11-ஆம் ஆண்டிலிருந்து (கி. பி. 1189) சோணுட்டில் குழப்பம் ஏற்படத் தொடங்கியது என்பதும், சிற்றரசர்கள், நாட்டின் குழப்பத்தைத் தடுக்கவும், ஆக்கிரமிப்பால் தங்கள் நாட்டின் எல்லைப்புறப் பூசல்களை விலக்கவும், ஒப்பந்தம் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டது என்பதும் அறியக்கிடக்கின்றன.

இவ்வொப்பந்தம் செய்து கொள்ளும் முறை புதியதன்று. முதல் குலோத்துங்கன், விக்கிரம சோழன், இரண்டாம் இராசாதிராசன் இவர்களுடைய காலங்களிலும் இவ்வித ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. ஆனுல் அவை மிகச் சிலவே. மூன்ரும் குலோத்துங்கன், மூன்ரும் இராசராசன் என்ற இவர்களது ஆட்சிக் காலத்தில் இவ்வொப்பந்தங்கள் அதிகமாயின; மூன்ரும் குலோத்துங்கனுடைய 13-ஆம் ஆண்டு (56/1922), 18-ஆம் ஆண்டு (483/1908),20–ஆம் ஆண்டு (115/1900), 27–ஆம் ஆண்டு (516/1902), 35—ஆம் ஆண்டு (425/1913), 40–ஆம் ஆண்டு (4991/912) ஆகிய இவ்வாண்டுகளில் பலஒப்பந்தங்கள் ஏற்பட்டன. இங்ஙனம் ஒப்பந்தங்கள் ஏற்படக் காரணமென்ன? சிற்றரசர்கள் வலிமையை மிகுத்துக்கொண்டனர். மத்திய அரசாங்கத்துக்கு அடங்காத பெரும் பலம் படைத்த குறுநில மன்னர் பலர் தலையெடுததனர் என்பதாம். மத்திய அரசாங்கத்தின் வலி குன்றவே ஆக்ரமித்தல் அதிகமாயிற்று. எல்லைப்புறத் தகராறுகள் ஏற்பட்டன. தற்காப்புக்காகச் சிற்றரசர்கள் இவ்வித ஒப்பந்தங்களைச் செய்துகொண்டனர். இக்காலத்தில் சேலம் பகுதியில் வாழ்ந்த அதியமான்களும், நெல்லூர், செங்கற்பட்டு ஆகிய பகுதிகளில் வாழ்ந்த தெலுங்குச் சோடர்களும், தொண்டை மண்டலப் பகுதிகளில் ஆண்ட யாதவராயர்களும், சம்புவராயர்களும், மலையமான்களும், சேதிராயர்களும் பெரும்பலம் படைத்த சிற்றரசர்களாக விளங்கினுர்கள். நாட்டில் சிவத்துரோகம், இராசத் துரோகம் போன்ற குற்றங்கள் மலிந்திருந்தன. இக்குற்றம் செய்தவர்கள் அதிகாரிகளையும் எதிர்த்தனர்; கோயில்களிலிருந்த செல்வங்களைக் கொள்ளை கொண்டனர். ஆதலின் பெரு வீரனுகிய மூன்ரும் குலோத்துங்கன் ஆண்ட காலத்திலேயே நாடு அமைதியின்றித் துன்புற்று வாடி

யது. பின்வரும் சில மேற்கோள்களால் சோணுட்டின் சீர் குலைந்த நிலையை அறியலாம்.

**S. I. I., Vol, VIII No. 106; A. R. No. 516/1902.**

## 27 ஆம் ஆண்டு மூன்றும் குலோத்துங்கன்

ஸ்வஸ்திஸ்ரீ- திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதிரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளின ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 27 ஆவது பாண்டி நாடு கொண்டானுன சம்புவராயனும், செங்கேணி அத்திமல்லன் வீராண்டானுன எதிரிலி சோழச் சம்புவராய னும், அத்திமல்லன் பல்லவாண்டானுன குலோத்துங்க சோழச் சம்புவராயனும், கிளியூர் மலையமான் பெரியுடை யானுன இராசராச சேதிபராயனும், கிளியூர் மலையமான் ஆகார சூரனுன இராச கம்பீரச் சேதியராயனும், குந்தங் நம்பூரலான இராசராச நீல கங்கரையனும், அம்மையப்பன் மருந்தனுன இராசராச மூவேந்தரையனும், பாவந்தீர்த்தானுன இராஜேந்திர சோழச் சம்புவராயனும், மலையன் நரசிங்க பன்மனுன கரிகால சோழ ஆடையூர் நாடாழ்வானும், சோழன் திருவண்ணுமலை உடையானுன குலோத்துங்க சோழ பிருதி கங்கனும், சோமன் வரந்தருவானுன சோளேந்திர சிங்கப் பிரதி கங்கனும் இவ்வனைவோமும் எங்களில் இசைந்து கல் வெட்டின படியாவது:

நாங்கள் ஒரு காலமும் இராச காரியத்துக்குத் தப்பாமே நின்று சேதிராயர் அருளிச் செய்தபடியே பணி செய்யக் கடவோமாகவும். இப்படிச் செய்யுமிடத்து மகதை நாடாள் வானுன வாண கோவரையனும், குலோத்துங்க சோழவாண கோவரையனும் இவர்கள் பக்கல் ஆளாதல், ஓலையாதல், போகக் காட்டுதல், உறவு பண்ணுதல், அறுதி செய்தல் செய்யக் கடவோம் அல்லாதோம் ஆகவும். இவர்களும் இவர்கள் அநுதாபத்துள்ளார் பக்கல் நின்றும் ஆளாதல், ஓலையாதல் வந்ததுண்டாகில், தேவர் ஸ்ரீ பாதத்திலே போகக் காட்டக் கடவோமாகவும்; எங்களில் ஒருவன் வேறுபட நின்று இராச காரியத்துக்கும் சேதிராயர் காரியத்துக்கும் எங்கள் காரியத்துக்கும் விரோதமாகச் சில காரியம் செய்த துண்டாகில்......தேவரும் நாங்களும் இவனை......அறச் செய்யக் கடவோமாகவும். எங்களிலே ஒருவரை வாண

கோவரையராதல், இராசராசக் காடவராயனுதல் வினை செய்வார் உண்டாகில், படையும் குதிரையும், முதலுக்கு நேராகக்கொண்டு குத்தக் கடவோமாகவும் இப்படிச் செய் திலேமாகில் வாணகோவரையருக்குக் கடைகாக்கும் பறை யற்குச் செருப்பு எடுக்கிறேம்.'

**S. I. I., Vol. VII, No.** *119;* **A. R. No.** *117/1900.* (சங்கம்-செங்கைமா).

மலையன் வினையை வென்றுனை கரிகால சோழ ஆடை யூர் நாடாள்வார்க்கும் செங்கேணி-அம்மையப்பன் அத்திமல் லனை விக்கிரம சோழச் சம்புவராயற்கும் இராசராச தேவன் விடுகாதழகிய பெருமாளான இராசராச அதிகைமா னேன் கல்வெட்டினபடியாவது:

இவர்கள் எனக்கு ஒரு காலமும் தப்பாதிருக்க நானும் இவர்களுக்கு ஒரு காலமும் தப்பாதிருக்கக் கடவேனுகவும்.

இவர்களுக்கு இன்னுதார் எனக்கு இன்னுதார்களாகவும், எனக்கு இன்னுதார் இவர்களுக்கு இன்னுதார்களாகவும், இவர்கள் பகை என்பகை ஆகவும், என்பகை இவர்கள் பகை ஆகவும்.

யாதவராயர் பக்கலும், செய்ய (சீய) கங்கர் பக்கலும் குலோத்துங்கச் சோழச் சம்புவராயர் பிள்ளைகள் பக்கலும், ஆளுமோலையும் போகக் காட்டுதல், உறவு பண்ணுதல் செய்யாதேனுகவும்.

......நாடு முன்பு **இராசராசதேவர் போது** நின்றபடியே எங் களில் எல்லை கொல்லைகள் நிற்பதாகவும்,

**இருபத்தொன்ருவது** ஆவணி மாதத்துச் செய்த நிலைமை காட்டினபடியே மற்றுள்ள காரியங்களும் ஒரு காலமும் தப்பாதே இருக்கக் கடவேனுகவும்.

இப்படிச் சம்மதித்தேன் விடுகாதழகிய பெருமானேன் இப்படிக்குத் தப்பினேனுகில் எனக்கின்னுத சரிமா (வா)ழ் வான் செருப்பும் எடுத்துத் தம்பலமும் தின்றேனுவேன்.

**S. I. I. Vol. VII, No.** *127;* **A. R. No.** *115/1900,*

''ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத் துங்க சோழ தேவர்க்கு யாணடு 20-ஆவது. மலையன் வினையை வென்றுனை கரிகால் சோழ ஆடையூர் நாடாழ்

வார்க்குச் செங்கேணி அம்மையப்பன் அத்திமல்லனுன விக்கிரம சோழச் சம்புவராயனேன்.

இவ் வாண்டை ஆவணி மாசத்துப் பதினுலாம்தியதியும் ஞாயிற்றுக்கிழமையும் திருவாதிரையுமான அன்று கல்வெட்டினபடியாவது—

நானும் இவரும் உள்ளதனையும் எங்களிலே தப்பாதிருக்கக் கடவோமாகவும், பிறந்த பெருமாளான இராசராச அதியமானுருடன் உறவு பண்ணுதல் பகை கொள்ளுதல் செய்யுமிடத்து இரண்டு திறத்தோருக்கும் ஏவிச் செய்யக் கடவேனுகவும் மற்றும் இவர்க்கு இன்னுதாருடன்கூடி இவர்க்கு விரோதமாயிருப்பன செய்யக் கடவேன் அல்லாதேனுகவும்.

இப்படிக்குத் தப்பினேனுகில் என்னெட்டியானை எடுத்துத் தம்பலமும் கலச்சோறும் தின்றேனுவேன் விக்கிரம சோழச் சம்புவராயனேன்.

சில ஆராய்ச்சியாளர் மூன்றும் குலோத்துங்கன் ஒப்பற்ற வீரன் என்றும், தோல்வியையே அறியாதவன் என்றும். அவனுக்குப்பின் பட்டம் பெற்று ஆண்ட மூன்றும் இராசராசனே சோணுட்டிற்கு ஏற்பட்ட எல்லா இன்னல்களுக்கும் உள்ளானவன் என்றும் கருதுவர். (**T. V. Sadasiva Pandarathar, The Later Cholas, II, pp. 172-3**). இக் கூற்று உண்மைக்கு மாருனது. மாறவர்மன் சுந்தர பாண்டியனுடைய மெய்க் கீர்த்தியிலேயே, தோல்வியுற்ற சோழ மன்னனும் அவனுடைய மகனும் பாண்டியனைப் பொன்னமராவதியில் கண்டு இறைஞ்சவே அவர்களுக்குச் சோணுட்டைப் பாண்டியன் வழங்கினுன் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தவிர பாண்டியனது கல்வெட்டுக்களிலே (72-1924; 322/1927-28) குலோத்துங்கன் பெயரையே குறிப்பிட்டு அவனுக்கே சோணுடு வழங்கப்பட்டது என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

மேலும் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் 15-ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று இராணியூரில் உள்ளது. அதில் சுந்தரபாண்டியன் மூன்றும் குலோத்துங்கனின் கொங்கு, கருவூர், ஈழம் முதலியவற்றை வென்ற வெற்றிச் செயல்களைத்

தனக்கே உரிமை ஆக்கிக் கொள்கிறான். அதன் வாசகம் பின் வருமாறு:

''இரு கொங்கும், ஈழமும், கருவூரும், சோழனின் முடித் தலையும் கொண்டு, முடிகொண்ட சோழபுரத்திலுள்ள பழையாறு மண்டபத்து வீராபிஷேகமும் விசயாபிஷேகமும் கொண்டருளி, முடியையும் முடி கொண்ட சோழபுரத்தையும் **குலோத்துங்க சோழ தேவற்கு** வழங்கிய சுந்தர பாண்டியன்''

இம் முடிவை மேற்கூறிய வேறு இரண்டு கல்வெட்டுக்களும் வலியுறுத்தும். (72/1924; 322/1927-28)

ஆகையால் குலோத்துங்கன் தன் இறுதிக் காலத்தில் படுதோல்வி அடைந்தான் என்பதும், அவனுக்குச் சோழ முடி பாண்டியனால் வழங்கப் பெற்றது என்பதும், இத்தோல்வியை ஆற்றாது அவன் கி. பி. 1218-க்குள் இறந்திருக்கக்கூடும் என்பதும் எளிதில் விளங்கும். இதற்கு முன்பே கி. பி. 1216-இல் மூன்றாம் இராசராசன் இளவரசாக முடிசூடி அவ்வாண்டு முதல் சோணாட்டை ஆண்டு வந்தான் என்பதும் உளங் கொளத்தக்கது.

இனி இக்காடவ குலத்து மன்னர் ஐவருடைய செயல்களையும் குறிப்பிட்டு, திருவெண்ணெய் நல்லூரிலும், விருத்தாசலத்தில் கண்டராதித்த வாசலிலும், அரச நாராயணன் ஆளப் பிறந்தான் வீர சேகரனான காடவராயன் கல்லில் வெட்டி வைத்துள்ள சாசனக் கவிகளை நோக்குவோம்.

[இப்பாடல்கள் சந்த விருத்தம், கொச்சகக் கலிப்பா, நேரிசை வெண்பா, கலி விருத்தம், கட்டளைக் கலித்துறை என்று ஐவகைப் பாக்களாக அமைந்துள்ளன. இவற்றுள் சில புறத்திணைப் பாடல்கள். சில அகப்புறப் பாடல்கள். இவற்றிற்குப் பொழிப்புரை ஓராற்றான் வரையப்பட்டுள்ளன. செய்யுட் கருத்து இனிது விளங்குவதற்குப் பாடல்களுடைய துறைகளும் தேவையான இடங்களில் குறிக்கப்பட்டுள்ளன. கடுமையான பாடல்களைக்கொண்டு கூட்டிப் பொருள் செய்யும்போது முதலில் அவை உரை நடைப்படுத்தி எழுதப்பட்டுள்ளன.]

ஸ்வஸ்தி ஸ்ரீ, அரச நாராயணன் ஆளப்பிறந்தான் வீரசேகரனான காடவராயர் கண்டராதித்த வாசலில் கல்வெட்டு வித்தபடி.

**சந்த விருத்தம்**

1. வரிவளை பொலம்பூண் கொடுத்த மங்கையர்
மயலுறு மனந்தாந் தொடக்கு கின்றன.
மதிகதி ரிரண்டும் கொண்டாங் கென்றொளிர்
வயிரமும் இசைந்தாங் கிட்டுச் சிறந்தன.
பரிமள தளந்தான் சமைத்த குங்குமம்
பரிவொடு பசுஞ்சாந் தெழக்க மழந்தன.
பலிகொள விறல்தாங்(கு) மிக்க சிங்களர்
பரவையில் விழுந்தங் கோடத் தொடர்ந்தன.
கரிபரி யுடன்சேர்ந் தெடுத்த கங்கர்கள்
கருவரை யிடந்தாம் புகக்க டந்தன.
கனலென உகந்தான் சுடத்தொ டங்கிய
கலிவலி பிலந்தான் புகத்து ரந்தன.
அரிபெற இரந்தான் தடக்கை ஒன்றினில்
அகலிட முகம்தான் புனற்சொ ரிந்தன
அவிர்தகை நெடுஞ்சரங் கிடக்கை கொண்டன
அழகிய வளந்தான் திருப்பு யங்களே.

இது வளந்தானர் ஆன காடவராயர் கவி.

காடவராயர் கவி, காடவராயரைப் பற்றிய கவி என்க. இது கலம்பகங்களில் காணப்படும் புயவகுப்பு என்ற துறையில் அமைக்கப்பட்ட பதினறு சீர்ச் சந்த விருத்தமாகும். இதன் பொருள் :

1. கீற்றுக்களை உடைய வளையல்களையும் பொன் அணிகளையும் காம மயக்கத்தால் இழந்த பெண்களின் அம் மயக்கமுற்ற மனங்களை வளந்தானரின் திருப்புயங்கள் தம்மிடம் பிணித்துள்ளன.

மதியும் பருதியும் ஆகிய இரண்டனையும் அணிந்தாற் போன்று ஒளி வீசும் வயிரத் தோள்வளைகளை அணிந்து அவற்றல் வனப்புற்றன.

2. பல மணப் பொருள்களையும் சேர்த்துக்கூட்டிய குங்மக் கலவையையும் சந்தனக் குழம்பையும் விருப்புடன் பூசியதால் அவற்றின்மீது நறுமணம் வீசப்பெற்றன.

பிறரிடம காணிக்கை பெறுமாறு வலிமிக்க ஈழநாட்டவர் தோற்றுக் கடலில் குதித்து உயிரைக் காத்துக் கொள்வதற்காக ஓடுமாறு அவர்களை விரட்டினா.

*3.* யானைப் படை, குதிரைப் படை இவற்றின் துணை கொண்டு படையெடுத்த கங்க நாட்டவர் உயிர் உய்வதற்குப் பெரிய மலைகளைப் புகலிடமாகக் கொள்ளுமாறு போரில் வஞ்சியாது எதிர் நின்று வென்றன.

தீ, சேர்ந்தாரைக் கொல்லுவது போன்று, இவ்வுலகத்தில் வாழ்பவர்களைத் துன்புறுத்தத் தொடங்கிய வறுமையின் வலிமை கடலிலே சென்று ஒளிக்குமாறு அதனை விரட்டின.

*4.* உணவு பெறுவதற்காகப் பிச்சை யெடுத்த சிவபெருமானது நீண்ட வலக்கரத்திலே அகன்ற உலகத்து நிலம் முழுவதையும் நீர் வார்த்துக் கொடுத்தன. விளங்கும் தன்மையை உடைய நீண்ட அம்புகள் தங்கப் பெற்றன. அழகிய வளந்தானுருடைய திருப் புயங்களின் பெருமைகள் இவையாகும்.

**II.** **கொச்சகக் கலிப்பா**

*அலங்குலவும் வயற்பெறுகை யாட்கொள்ளி காடவர்கோன்*
*பலங்குலவும் மதயானை பதநிகளம் விடுகின்ருன்*
*இலங்குமணி முடியரசர் யார்கொலோ யிணையடியில்*
*விலங்குகலன் கலினென்ன வீதிதொறும் வருவாரே.*

[இது இவர் மகனுர் ஆட்கொள்ளியரான காடவராயர் கவி]

பயிர்கள் அசைகின்ற வயல்களைத் தனக்கு உடைமையாகப் பெற்ற ஆட்கொள்ளி என்ற காடவர் கோமான், வலிமை மிக்க, மதமயக்கங்கொண்ட தன் யானையின் கால்களைப் பிணித்த சங்கிலியை நீக்கப் போகின்ருன். விளங்கும் மணிகள் அழுத்திய முடிகளையணிந்த மன்னர்களில், தம் கால்களில் அமைந்த, விளங்கும் வீரக் கழல் முதலிய அணிகள் கலின் என்று ஒலிக்குமாறு, வீதிகள் தோறும் நடந்துவரும் வீரம் சான்றவர் யாவரேனும் உளரோ ?

**III.** **வெண்பா**

பொருகாம னம்பு புகுந்துயிர்மே லன்றிச்
செருகா விடையாமம் செல்லா—தொருகாலும்
பாகைக் கனலியானைக் கண்டு பணிந்தாளை
மோகர்க்கவ் வந்திபடா முன்.

இஃது இவர் மகனுர் நாலுதிக்கும் வென்ருரான ஏழிசை மோகன் காடவராயர் கவி.

[மோகன் பவனிவர அவனைக் கண்டு தொழுதாளொருத்தி காமநோயால் அல்லலுற்று விரைவில் உயிர் நீப்பாள் என்று தோழியர் தம்முள் சொற்றது.]

மோகனை யானையில் கண்டு பணிந்தாளுக்கு என்று மாறுக.

மோகனைப் பாகர்களையும் கோபிக்கும் யானையின்மேல் பவனிவரக்கண்டு பணிந்த பெண் ஒருத்திக்கு, மாலைப் பொழுது நீங்கும்முன், போரிடும் காமனுடைய அம்புகள் உள் புகுந்து உயிர்மேலன்றி மற்ற உறுப்புக்களின்மேல் தைக்க மாட்டா. ஒரு காலத்திலும் இடையாமப் போது அவளுக்கு நன்மை தருவதாகக் கழியாது.

IV. **கலிவிருத்தம்**

துடக்கு மாரன் சொரிசரப் பாயன்மேற்
கிடக்கு மிவ்வுல கென்பதும் கேட்டுமே
வடக்கு மேருவும் தெற்கு மலையமும்
கடக்கு மாணையான் கச்சிய ராயனே.

வடக்கிலுள்ள மேரு மலையையும் தெற்கிலுள்ள மலைய மலையையும் கடந்து செல்லும் ஆணையை உடைய கச்சியராயனது ஆட்சியிலே அவனுடைய நாடு ஆகிய இவ்வுலகம் மன்மதன் செலுத்தும் அம்புப்படுக்கையின்மேல் கிடக்கும் என்றும் நாம் கேள்விப்படுகிரேம். என்றது அவன் நாட்டு மக்கள் மன்மதனுடைய அம்புகளன்றிப் பகைவர்களின் அம்புகளைப் பெருதார் என்றபடி.

[நாமவேல் நரபதி உலகங்காத்த நாள், காமவேள் கவர்கணை கலந்ததல்லது, தாமவேல் வயவர்தம் தழலங் கொல்படை, நாமநீர் வரைப் பகம் நலிவதில்லையே—என்ற சூளாமணிப் பாடல் போலக் கொள்க.]

V. **வெண்பா**

மும்மலை முன்பெறிந்தாய் பின்பு முரணிரட்டர்
தெம்மலை வாதாவி சென்றெறிந்தாய்—மெய்ம்மைச்
செருவரசேய் பின்னிச் சிலம்போ வெறிந்த
தொரு வரைசே ! மேனு ளுடன்று.

[ஒரு அரசே ! மெய்ம்மைச் செருவர, முன்புமும்மலை எறிந்தாய், பின்பு முரண் இரட்டர் தெம்மலை வாதாவி சென்று எறிந்தாய். சேய் ! பின்னிச் சிலம்பு எறிந்ததுவோ— என்று உரைநடைப் படுத்துக.]

ஒப்பற்ற அரசனே, உண்மையான களம் வகுத்துப் போரிடும் போர்வந்த அளவிலே, முன்பு சேரர் சோழர் பாண்டியர்களுக்குச் சொந்தமான கொல்லி, நேரி, பொதியில் என்ற மூன்று மலைகளையும் கைப்பற்றினாய். பின்பு மாறுபட்ட இரட்டர்களாகிய பகைவர்களின் மலையை, வாதாவி என்ற தலைநகருடன், படையெடுத்துச் சென்று தகர்த்தாய். இப்போது நீ உனது வெகுநாளைய உரிமையாகக் கொண்டு இருக்கும் பின்னிமலையும் நீ உன் அரசாட்சியின் தொடக்கத்தில் வென்று கைப்பற்றியது தானே ! (பின்னிமலை–யாது என்று சொல்ல இயலவில்லை.)

[இவை இவர் தம்பியர் அரசநாராயணன் கச்சியராயரான காடவராயர் கவி.]

VI. இவர் மகன் சகரர் யாண்டு ஆயிரத்து ஒரு நூற்றெட்டினால், ஆடி மாஸத்துப் பிற்பத்தில் கண்டராதித்தன் வாசலுக்கு மேற்கே புறப்பட்டுக் கற்கடக மாராயன் கூடலும் அதியமானுடும் அழித்து வெற்றிக் கொடி உயர்த்தி, அனுமனும் பொறித்தான் ஆளப் பிறந்தான் வீர சேகரனான காடவராயன்

**கட்டளைக் கலித்துறை**

*பாரள வல்ல பணைத்தோ ளளவு பகலவன்பொற்*
*றேரள வல்லநின் செங்கோ லளவு திகிரிச்செங்கை*
*காரள வல்ல பரவீர சேகர காடவநின்*
*போரள வல்லவன் வாம்பரி வேந்தர் புறத்தளவே.*

மேம்பட்ட வீரசேகர காடவனே ! உன்னுடைய பருத்த தோள்கள் இவ்வுலகை மட்டும் தாங்கும் அளவின உடையன அல்ல; உன்னுடைய செங்கோல் நடக்கும் எல்லை சூரியனுடைய பொன்னாலாகிய தேர்சுற்றிவரும் மேருமலை மட்டும் அன்று (அதைக் கடந்தும் உள்ளது.) ஆக்ஞாசக்கரம் செலுத்தும் நின் கைகள் கொடையினால் மேகத்தை மட்டும்

ஒத்தன அல்ல. (கற்பகம் சிந்தாமணி முதலியவற்றையும் ஒக்கும்.) நின் போர்களுக்கு ஓர் அளவு கிடையாது. தாண்டும் குதிரைகளையுடைய வலிமை சான்ற நின் பகைவர் புறமுதுகு காட்டி ஓடும் நிலையை நின் போர்கள் எல்லையாகக் கொண்டுள்ளன.

## VII.

தாரார் மணிப்புயம் தண்ணந் துழாய்மண நாறுஞ்சந்தக்
காரார் திருநிறஞ் செய்யாள் திருமண நாறுங்கச்சி
ஆரார் திகிரிக்கை யாளப் பிறந்தாற் கசஞ்சலற்குப்
பாராள் வடமன்னர் பொன்முடி நாறும் பதாம்புயமே.

கலக்க மில்லாத தன்மையனான வீர சேகர காடவராயனுக்கு மாலையை அணிந்த அழகிய புயங்கள் அழகிய குளிர்ந்த திருத்துழாயின் நறுமணம் கமழும். சந்தனம் பூசிய, கருமை பொருந்திய அழகிய மார்பானது திருமகளுடைய இனிய நறுமணம் கமழும். காஞ்சியில் இருந்துகொண்டு, மற்ற எல்லா மன்னர்களின் ஆக்ஞா சக்கரங்களையும் கவர்ந்து அரசாளப் பிறந்த காடவனுடைய பாத தாமரைகள் நாடாளுகின்ற வடநாட்டு மன்னர்களுடைய அழகிய முடிமலர்களின் நறுமணம் கமழும்.

## VIII.

விடையள விட்ட கொடிவீர சேகர காடவநின்
நடையள விட்டது ஞாலங்க ளேழையும் வாழிநின்போர்ப்
படையள விட்டது பத்துத் திசையும் பரியமுத்தக்.
குடையள விட்ட திருசுடர் சூழண்ட கூடத்தையே.

காளையின் வடிவத்தைக் கொடியிலே கொண்டுள்ள வீர சேகர காடவனே ! உனது புகழ் ஏழு உலகங்களையும் அளவிட்டுள்ளது. உன்னுடைய போர் செய்யும் படை பத்துத் திசைகளையும் அளவிட்டுள்ளது. பெரிய முத்துக்கள் தொங்கவிடப்பட்ட வெண்கொற்றக் குடை, சூரியன் சந்திரன் என்ற இரு சுடர் சுற்றிவரும் அண்டப் பகுதிகளையே அளவிட்டுவிட்டது. நீ வாழ்க.

[ஸ்வஸ்தி ஸ்ரீ இக் கல்வெட்டழிப்பான் வல்லவரையன் சத்தியம்]

## 6. தொண்டைமண்டலம் கொண்டருளிய பல்லவாண்டான் காடவராயன்

*அத்தி பாடல்கள் (296/1912)*

*அத்தி பாடலின் முதலாம் பாடல் (187/1932-33) திருக் கழுக்குன்றம்.*

*அத்தி பாடலின் மூன்ருவது பாடல் மோரிஜோனே (178/1921)*

*பல்லவாண்டான் தனது தோள்வலியால், சேவூர் என்ற இடத்தில் நிகழ்ந்த போரில் தனக்குப் பணியாத தொண்டை நாட்டு மன்னர்களை வென்று தொண்டை நாட்டைக் கைப்பற்றினுன்.*

சேவூர் என்பது தென்ஞர்க்காடு ஜில்லா, திண்டிவனம் தாலூகா **'மேல்சேவூர்'** என்ற ஊராக இருக்கலாம். இப்பகுதியில் தெலுங்குச் சோடர்கள், அதிகமான்கள், சேதியராயர்கள், யாதவராயர்கள், சம்புவராயர்கள் என்ற குடும்பத்தைச் சேர்ந்த குறுநில மன்னர்கள் வாழ்ந்தார்கள். இச்சேவூர்ப் போர் இவர்களில் யாவரேனும் ஒருவருடன் நிகழ்ந்திருக்க வேண்டும். இவ்வெற்றியின் பயனுய், பெண்ணைநாடு, வட வேங்கடம், கடற்கச்சி—ஆகிய பாகங்கள் அடங்கிய தொண்டை மண்டலம் இவர் வசம் வந்தது.

திருக்கழுக்குன்றக் கல்வெட்டில் 'தங்கோ நகர்பெற' என்ற பாடல் காணப்படுகிறது. அதன் தலைப்பில் 'ஏழிசை மோகன் ஆளப்பிறந்தான் பல்லவாண்டாரான காடவராயர்' என்ற குறிப்பு காணப்படுகிறது. அக்குறிப்பை உட்கொண்டு, 'தங்கோ நகர் பெற' என்ற பாடலையும், அதனேடு தொடர்புடைய ஏனைய பாடல்களையும் கொண்ட மேற்குறிப்பிடப்பட்ட கல்வெட்டு தொண்டைமண்டலம் கொண்ட காடவராயனுக்கே உரியது என்று தீர்மானிக்கப்படுகிறது. மோரி ஜோனையில் அத்தி கல்வெட்டின் மூன்ரும் பாடல் உள்ளது. இப் பல்லவாண்டானே அழகிய பல்லவன் என்றும் மணவாளப் பெருமான் என்றும் ஜீயமகீபதி என்றும் அழைக்கப்பட்டான். மணவாளப் பெருமானுன அழகிய பல்லவனே திரிபுராந்தகக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்ட ஜீயமகீபதி ஆவான். இக் கல்வெட்டு ஜீயமகீபதியின் புதல்வனுன சகலபுவன சக்கரவர்த்தி அவனியாளப் பிறந்தான் மகாராச சிம்மன் கட்கமல்லன் கோப் பெருஞ் சிங்கனுடையது (நம் கிளைவழி ஏழாமவன்). இக்

கல்வெட்டில் கோப்பெருஞ்சிங்கன் "குணத்துக்கு இருப்பிடமானவனும் புண்ணிய நிலையமானவனும் ஆன ஜீய மகாராஜனுக்குச் சீலாவதியிடம் பிறந்தவன்" என்று குறிப்பிடப்படுகிறன்.

மூன்ரும் குலோத்துங்கனின் பதினேழாம் ஆண்டில் (கி.பி. 1195) கூடல் ஏழிசை மோகன் மணவாளப் பெருமாள் வாணிலை கண்டாரான காடவராயன் சோழனுடைய சிற்றரசனுக இருந்தமை (213/1902) அறியப்படுகிறது. அச் சோழனுடைய 28, 29-ஆம் ஆண்டுக் கல்வெட்டுக்களிலும் இக் காடவனைப்பற்றிய குறிப்புக்கள் உள்ளன. ஆனல் இவனைப்பற்றிய கல்வெட்டுக்களில் முக்கியமானது சேந்தமங்கலத்தில் உள்ளதே. அக் கல்வெட்டிலிருந்து மணவாளப் பெருமாள் என்ற காடவராயன் சேந்தமங்கலத்தில் ஊரும் படைவீடும் அமைத்தான் என்றும் (சேந்தமங்கலம் தென்னுர்க்காடு ஜில்லா திருக்கோவலூர் தாலூகாவில் உள்ளது.) தன் பெயரால் வாணிலை கண்டீசுவரம் என்ற கோயிலை எடுப்பித்து 'ஏழிசை மோகன் சந்தி' என்ற விழாவை ஏற்படுத்தினன் என்றும் தன் பெயராலேயே திருவோலை விடுக்க அரச உரிமை பெற்றிருந்தான் என்றும் அறிகிறேம்.

## மணவாளப் பெருமாளின் சேந்தமங்கலக் கல்வெட்டு

"ஸ்வஸ்தி ஸ்ரீ சகல புவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ **மணவாளப் பெருமாள்** உடையார்க்கு யாண்டு 5-ஆவது சேந்தமங்கலத்து ஊரும் படைவீடும் செய்து, உடையார் **வாணிலை கண்டீசுவரமுடைய நாயனுரை**யும் எழுந்தருளப் பண்ணி இந்நாயனுருக்கு நாங்கண்ட **ஏழிசை மோகன் சந்தி**க்கும், பூரட்டாதித் திருநாளுக்கும், திருநந்தா விளக்கு பத்துக்கும், கெடிலத்துக்கு வடக்கு, குறுகால் வழிக்கு மேற்கு, மோகனூர்மாறனர் நான் கெல்லைக்கு உட்பட்ட நன்செய் புன்செய் உள்ளிட்ட பயிர் மற்றும் எப்பேர்ப்பட்ட அனைத்து ஆயமும் உட்படத் திருநாமத்துக்காணி இறையிலியாகத் தந்தோம். இப்படிச் சந்திராதித்தவல் செல்ல இவ்வூர் நான்கெல்லையும் நாட்டிலும் திரிசூல தாபனம் பண்ணிக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க. இவை மணவாளப் பெருமாள் எழுத்து பன்மாஹேசுவர ரக்ஷை."

இந்த மணவாளப் பெருமாளுடைய மற்ரெருரு பெயர் அழகிய பல்லவன் என்பதைத் திருவெண்ணெய் நல்லூர்க் கல்வெட்டு அறிவிக்கிறது. இக் கல்வெட்டு காடவராயனுடைய ஓலே. இக் காடவராயன் கோப்பெருஞ் சிங்கனுகத்தான் இருக்கவேண்டும். அவ்வூரிலுள்ள பெருமாள் கோயிலுக்கு 'அழகிய பல்லவன் விண்ணகரம்' என்ற பெயர். இம்மணவாளப் பெருமாளுடைய மற்ரெருரு பெயராகிய 'அழகிய பல்லவன்' என்ற பெயரைக் கொண்டு வைக்கப்பட்டது என்றும் இந்த மணவாளப் பெருமாளுடைய ஆச்சியார் அக்கோயிலுக்குச் செய்து வந்த திருப்பணி, ஐயன் மணவாளப் பெருமாள் 'அபாவத்திலே' (மறைவு) தடையுற்றது என்றும் அதைக் காடவராயனுன கோப்பெருஞ்சிங்கன் முட்டாமை நடத்துவதற்கு ஆணையிட்டு உதவினுன் என்றும் அறிகிறேும்.

## திருவெண்ணெய் நல்லூர்க் கல்வெட்டு 486/1921

"காடவராயன் ஓலே. திருவெண்ணெய் நல்லூர் **அழகிய பல்லவ விண்ணகர்** எம்பெருமான் கோயில் தானத்தார் கண்டு விடை தந்ததாவது : இவ்வெம்பெருமான் கோயில் முக்காலங் தொடங்கி **எங்கள் ஆச்சியார் தன்மமாய்ப்** போகிற இத்திருமுற்றம் **ஐயன் மணவாளப் பெருமான்** அபாவத்திலே, இத்திரு முற்றம் நோவு படுகையாலே, நாம் இந்நாளிலே நம்முடைய பெயரால் உகந்தருளப் பண்ணி, இவ்வெம் பெருமான் திருவிடை யாட்டம் நன்செய் புன்செய் களுக்கு வரும் தேவை குடிமைகளும் அனைத்து ஆயங்களும் உட்பட இழந்து இறையிலியாகத் தந்தோம். இப்படிக் கல்வெட்டிக் கொள்வதே. இவை காடவராயன் எழுத்து." இவ்வழகிய பல்லவனது சேந்தமங்கலக் கல்வெட்டை யன்றி வேறென்றும் இவனது ஆட்சியின் நிலேயையும் கால அளவையும் அறிவதற்குக் கருவியாக இல்லே.

"கூடல் ஆளப்பிறந்தான் அழகிய பல்லவனுன காடவராயன், மூன்றும் குலோத்துங்கனுடைய *33* ஆம் ஆண்டில் (கி. பி. *1212—13*) இராசநாராயண சதுர்வேதி மங்கலத்து ஆடவல்ல நாயனுர் தேவதானங்கள் பாட்டன் கல்வெட்டி விட்டு வந்தபடியே விட்டேன்" என்று குறிப்பிட்டுள்ள செய்தி முன்னூர்க் கல்வெட்டிலிருந்து (*63/1919*) கிடைக்கிறது.

இதிலிருந்து அழகிய பல்லவனான காடவராயனுடைய வாழ் நாள் கி. பி. 1212—13 வரையில் நீடித்திருக்கலாம் என்று கருத இடன் ஏற்படுகிறது.

a. தொண்டை மண்டலம் கொண் டருளிய பல்லவாண்டாரான காடவராயர். } அத்தி. (296/1912.)

b. கூடல் ஆளப்பிறந்தான் அழகிய பல்லவரான காடவராயர் } முன்னூர். (62/1919.)

c. அழகிய பல்லவரான மணவாளப் பெருமாள். திருவெண்ணெய் நல்லூர் (486/1921)

d. ஸ்வஸ்தி ஸ்ரீ சகலபுவன சக்கரவர்த்தி கள் ஸ்ரீ மணவாளப் பெருமாளான ஏழிசை மோகன் வாணிலை கண்டவன். } சேந்தமங்கலம். 73/1923.

e. ஜீய மகீபதி (மகாராஜசிம்மனின் தகப்பன்) } திரிபுராந்தகக் கல் வெட்டு 197/1903

(f) S. I. I. Vol. VIII. No. *329-54/1903.*

திரிபுவன சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழ தேவருக்கு ஆண்டு 13 ஆவது. (கி. பி. 1191)

கூடல் அசல குலோத்தமன் ஆட்கொண்ட நாயகன் காடவராயன். (இவன் மணவாளப் பெருமாள்தானா? வேறு உறவினனா?)

(g) S. I. I. Vol. VII. No. *942 313/1902.*

''பூமருவிய திசை முகத்தோன்'' என்று தொடங்கும் 'திரிபுவன சக்கரவர்த்திகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளின **ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவரின் 17-ஆம் ஆண்டு.** (கி. பி. 1195)

**''கூடல் ஏழிசை மோகனான மணவாளப் பெருமாள் வாணிலை கண்டானான காடவராயன்.''**

(h) S. I. I. VII—*146-133/1900.*

திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவரின் 28 ஆவது ஆண்டு. (கி. பி. 1206)

திருமுனைப் பாடிக் கீழாமூர் நாட்டுக் கூடல் ஏழிசை மோகன், மணவாளப் பெருமாள் வாணிலை கண்ட பெருமாளான ராஜராஜக் காடவராஜன்.

(i) S. I. I. Vol. VIII—*317-43/1903.*

திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவரின் ஆண்டு 29 ஆவது (கி. பி. 1207)

"கூடல் அசல குலோத்தமன் ஏழிசை மோகப் பெருமாள் மணவாளப் பெருமாள் வாணிலை கண்ட பெருமாளான காடவராயர்."

இவ்விதம் பல பெயர்கள் பூண்ட இவ்வீரன் கி. பி. 1191 முதல் 1213க்குள் வாழ்ந்திருக்க வேண்டும்.

மேற் குறிப்பிட்ட கல்வெட்டுச் சான்றுகளைக் கொண்டு மூன்றும் குலோத்துங்கனுடைய 13-ஆம் ஆண்டு முதல் 34-ஆம் ஆண்டு வரையில் (கி. பி. 1191-1212-3) இக் காடவராயன் வாழ்ந்திருக்க வேண்டும் என்று முடிவு செய்யலாம். இவ்வரசன் தொண்டை மண்டலத்தை வென்று சேந்தமங்கலத்தில் படை வீடு செய்து தன் பெயரால் கோயிலை அமைத்து அரச பதவியை ஏற்று, மத்திய அரசை மதியாமல் மாபெரும் பலம் படைத்த சிற்றரசனாகத் திகழ்ந்தான் என்று கூறலாம்.

இம் மன்னனைப் பற்றிய அத்தி பாடல்களை நோக்குவோம்.

## அத்தி பாட்டுக்கள்

ஸ்வஸ்திஸ்ரீ கூடல் ஆளப் பிறந்தானான காடவராயர் மகனார் தொண்டை மண்டலங் கொண்ட பல்லவாண்டாரான காடவராயர் கல்வெட்டு :

### கட்டளைக் கலித்துறை

தங்கோ நகர்பெறத் தம்புவித் தாம்பெறத் தாள்வணங்கி
செங்கோல் வளைக்கை அரிவைய ரோடும் அடியுங்கையும்
பங்கே ருகமன்ன பல்லவன் காடவன் பார்முழுதாள்
எங்கோ னுபயபதந் தோளிடா மன்னரெம்மன்னரே.

தமது தலைநகரங்களை மீண்டும் பெறுவதற்காகவும், தமது நாடுகளைத் தாம் மீண்டும் பெறுவதற்காகவும், தாம் தமது சிவந்த திரண்ட வளையல்களை யணிந்த கைகளை உடைய மனைவியர்களோடும், கால்களும் கைகளும் தாமரையை ஒத்த மன்னவனான காடவன் என்னும் உலக முழுதாளும் எம் தலைவனுடைய இரண்டு பாதங்களையும் வணங்கித் தரையில் விழுந்து பணிதலால் தோள்களில் பொருந்திக் கொள்ளாத அரசர்கள் யாவர் உளர் ?

2. பொருதிக்கி லுஞ்சென்று போர்வென்ற பல்லவன் காடவர்கோன்
கருதிப் பொரச்சென்று **சேவூரி** னிற்றிருக் கண்சிவக்கப்
பருதிக்கு மேலு முயர்பிணக் குன்றில் பரந்திழிந்த
குருதிப் புனல்தொண்டை நன்னு டடங்கலுங் கொண்டதுவே.

போர் செய்தற்குரிய எல்லாத் திசைகளிலும் சென்று போர்களை வென்ற பல்லவனாகிய காடவர்கோன், மனங்கொண்டு போர் செய்யச் சென்று, **சேவூர்க் களத்தில்** கண் சிவந்த அளவில், சூரிய மண்டலத்தின் உயரத்தைவிட அதிகமாகக் குவிக்கப் பட்ட பிணங்களின் குன்றுகளிலிருந்து பரவியோடிய இரத்தமாகிய நீர் தொண்டை நாடு முழுவதையும் சூழ்ந்து கொண்டது.

3. கூராழி ஏந்திய பல்லவர்க் குக்கூடல் மன்னவற்குப்
பாராழி சூழுந் திசைபரிக் குப்பந்தி பண்டளந்த
நீராழி வேழங்கள் நீராடு மாமடு நின்றகொற்றப்
பேராழி வெற்பிவன் செங்கோல் நடக்கும் பெருவழியே.

கூர்மையுடைய சக்கரத்தை ஏந்திய பல்லவனான கூடல் அரசனுக்கு, நில உலகத்தைச் சுற்றியுள்ள எட்டுத் திசைகளும் குதிரைக் கட்டப்படும் இடமாகும். முன்பே இவனால் உடைமையாக்கப்பட்ட நீர் நிரம்பிய கடல் இவனுடைய யானைகள் நீராடும் மடுவாகும். நிலை பெற்றிருக்கும் வெற்றி மிக்க சக்கரவாள மலையே இவனது செங்கோல் நடக்கும் நாட்டின் பரப்பாகும்.

4. தொழுதிய லாமன்னர் தொண்டைத் திருநாடு கொண்டவரூர்
கழுதிய லக்கண்ட காடவன் பல்லவன் காசினிமேல்
பழுதிய லாத்தனிச் செங்கோல் நடாத்திய பாரதஞ் சென்று
எழுதிய தூணங்க ளெண்டிசை யார்குல வேழ்கிரியே

காடவனுகிய பல்லவன், தன்னைத் தொழுது வாழாத மன்னர்களுடைய தொண்டை நாடாகிய அழகிய நாட்டைக் கைப்பற்றி, அவர்களுடைய தலைநகரங்களில் பேய்கள் உலவுமாறு செய்து, இவ்வுலகில் குற்றம் எதுவும் நிகழாத ஒப்பற்ற செங்கோலைச் செலுத்திய வரலாற்றை எழுதி வைத்துள்ள தூண்களே, எட்டுத் திசைகளிலும் பொருந்தியுள்ள எழு குல பர்வதங்களாம்.

5. *கைம்மலை வெள்ளக் கடற்படைப் பல்லவன் காடவர்தஞ்*
*செம்மலை வந்து பணியா வடமன்னர் சேனைவிட்டுத்*
*தம்மலை விட்டுப் புறமலை வேலித் தலத்துளஞ்சா*
*தெம்மலை யெச்சுரத் துட்புகு வார்புக் கிருப்பதற்கே.*

யானைப் படைகளை வெள்ளம் என்ற பேரெண் அளவாகக் கொண்ட, கடலைப் போன்ற படைகளை உடைய பல்லவனுகிய காடவர் செம்மலை, வந்து வணங்காத வட நாட்டரசர்கள் தமது சேனையை இழந்து, தமது மலையைத் துறந்து, சக்கரவாளகிரியை எல்லையாக உடைய இவ் வுலகத்தில், அஞ்சாமல் எந்த மலையில் அல்லது எந்தக் காட்டில் போய்த் தங்கியிருப்பதற்காகப்புகக் கூடும் ?

6. *வண்டற் புனற்பெண்ணை நாடுடை யான்வட வேங்கடவெற்பன்*
*தொண்டைத் திருநாடு தோள்வலி யாற்கொண்ட தொண்டை மன்னன்*
*கண்டற் கடற்கச்சிப் பல்லவன் காடவன் காரிருளிற்*
*பண்டைப் பிறமன் னவர்க்கன்பி லாப்பொற் பதாம்புயனே*

வண்டலிடும் நீரையுடைய பெண்ணை யாறு பாயும் நாட்டையுடையவன், வேங்கட மலைக்குத் தலைவன். அழகிய தொண்டை நாட்டைத் தன் புயவலியால் கைக் கொண்டவன். தொண்டை மன்னவன், நீர் முள்ளிச் செடிகளையுடைய கடலையடுத்த காஞ்சியில் வாழும் பல்லவனுகிய காடவன், காரிருளில் நாட்டை விட்டு ஓடுகின்ற பகை மன்னர்களிடம் அன்பு செலுத்தாத அழகிய திருவடித் தாமரைகளை உடையவன்—என்றது திருவடியை வணங்காத பகைவர் இரவிடை உயிருக்கு அஞ்சி ஓடினர் என்பதாம்.

## வே: வேங்கட சுப்பையர் கூறும் கிளைவழி

1. வளந்தானுர் ஆன காடவராயர்

2. ஆட்கொள்ளியார் ஆன காடவராயர்

3. நாலுதிக்கும் வென்முரான ஏழிசை மோகன் காடவராயர்.

4. அரச நாராயணன் கச்சிய ராயரான காடவராயர்

5. கற்கடமாராயன் கூடலும் அதியமாஞ்டும் வென்ற கூடல் ஆளப் பிறந்தான் வீரசேகர காடவராயர்.

6. ஏழிசை மோகனுன ஜன நாத கச்சியராயர்.

7. தொண்டை மண்டலம் கொண்டருளிய பல்லவாண் டாரான காடவராயர் ஏழிசைமோகன், மணவாளப் பெருமாள், வாணிலை கண்டபெருமாள், அழகிய பல்லவன், ஜீயமகீபதி.

(?) முதலாம் கோப்பெருஞ் சிங்கன். (11 ஆண்டு அல்லது 16ஆண்டு) ப. 1231.

8. இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன். பட்டம் 1243.

## வே. வே. ஐயர் கூறும் கிளைவழி

கற்கட மாராயன் கூடலை அழித்த ஆளப் பிறந்தானின் சகோதரன் ஏழிசை மோகன் ஆன ஜனநாத கச்சியராயன் என்றும் அவனுடைய மகன் பல்லவாண்டார் என்னும் அப் பல்லவாண்டரே மணவாளப் பெருமாளான முதலாம் கோப் பெருஞ்சிங்கன் (கி. பி. 1231 முதல் 11 ஆண்டு ஆட்சி) என்றும் அவர் மகன் இரண்டாம் கோப்பெருஞ் சிங்கன் (1243-79 கி. பி.) என்றும் வே. வே. ஐயர் கருதுகிறுர்.

ஜனநாத கச்சியராயனும் கூடல் ஆளப்பிறந்தான் வீர சேகரனும் சகோதரர்கள் என்பதற்கு ஆதாரம் இல்லை. தொண்டை மண்டலங் கொண்ட பல்லவாண்டார் ஜனநாதக் கச்சியராயரின் மகன் அல்லர். கற்கட மாராயன் கூடலும் அதியமானுடும் வென்ற ஆளப்பிறந்தான் வீரசேகரனின் மகன் என்று அத்தி, மோரி ஜோணை, திருக்கழுக்குன்றம் ஆகிய இடங்களிலுள்ள கல்வெட்டுகள் வலியுறுத்துகின்றன. அவ்வாறு இருக்கத் தொண்டை மண்டலங் கொண்ட பல்லவாண்டாரை ஜனநாதக் கச்சியராயனின் மகன் என்று கூறும் இவருடைய கற்பனை பொருந்தாது.

### க. அ. நீலகண்ட சாஸ்திரியார் கூறும் கிளை வழி.

1. வளந்தானுர்
   - 2. ஆட்கொள்ளியார்
     - 3. நாலுதிக்கும் வென்ற ஏழிசை மோகன்
       - ஆட்கொள்ளி ? (456/1921)
     - 4. அரசநாராயணன் கச்சியராயன்
       - 5. ஆளப்பிறந்தான் ஏழிசை மோகன் (?) ஜனநாதகச்சிய ராயன் ஆன வீரசேகரன் சகர யாண்டு 1108. கி. பி. 1186.
         - 6. அழகிய பல்லவன் (ஜீயன்) சாடும் பெருமாள் = லீலாவதி.
           - 7. அழகிய சீயன் கோப் பெருஞ்சிங்கன்.

ஸ்ரீ. க. அ. நீலகண்ட சாஸ்திரியாரும் (சோழர்கள்—புதிய பதிப்பு—பக்கம் 403) அதிகமான் கூடலை வென்ற ஆளப் பிறந்தானும் ஜனநாத கச்சியராயனும் ஒருவனையே குறிப்பன வாம் என்று கொண்டுள்ளார். அதற்கும் ஆதாரமில்லை.

மூன்ரும் குலோத்துங்கனின் 5, 6—ஆம் ஆண்டுக் கல் வெட்டுகள் (157/1906; 413/1909.) இந்த அரச நாராயணன் ஏழிசை மோகன் ஆன ஜனநாத கச்சியராயன் என்பவன் (ஏழிசை) மோகன் ஆளப்பிறந்தான். அரச நாராயணனை காடவராயனின் மகன் என்று கூறுகின்றன. ஆளப்பிறந்தான் அரச நாராயணனைப் பற்றி மற்ருெரு கல்வெட்டும் உள்ளது. (477/1921). இது மூன்ரும் குலோத்துங்கனின் 3ஆம் ஆண் டைச் சார்ந்தது (கி. பி. 1181). இவன் [5(a)] நான்காம் எண் பொருந்திய அரச நாராயண கச்சியராயனின் இளைய மகனும், அதிகமான் நாட்டை வென்ற அரச நாராயணன் ஆளப் பிறந்தானின் (எண் 5) இளவலும் ஆவான் என்று கொள்ள இடம் உள்ளது. ஆனல் இவ்வுறவை நிச்சயமாகக் கூற ஆதாரமில்லை. கிடைத்துள்ள ஆதாரத்தைக் கொண்டு, வேறு விதமாகக் கிளை வழியைக் கொள்வது பொருத்தமாகத் தெரிய வில்லை.

நாம் கொள்ளும் கிளை வழியைப் பின்னல் பார்க்க.

# அத்தியாயம் 3

## "கோப்பெருஞ்சிங்கன் ஒருவனே" "இருவர் அல்லர்"

### நாம் கொள்ளும் கிளை வழிப் பட்டியல்

*74/1918*-விருத்தாசலம்
*463/1921*-திருவெண்ணெய் நல்லூர்

1. வளந்தானுர் காடவராயர்

2. ஆட்கொள்ளியார் காடவராயர்
(a) S. I. I. XII No. *170* (இரண்டாம் இராசராசனது பன்னிரண்டாம் ஆண்டு)
(b) S. I. I. XII *262* (*115/1904*)
(c) *486/1921*.

3. நாலு திக்கும் வென்ருரான ஏழிசை மோகன் காடவராயர் இராசராசன் II ஆரும் ஆண்டு கி. பி. *1152*.
*166/1906*.
*170/1906*.

ஆட்கொள்ளி (?) S. I. I. XII No. *170*.

4. அரசநாராயணன் கச்சியராயரான காடவராயர்.

5. அரசநாராயணன் ஆளப்பிறந்தான் வீரசேகர காடவராயர்
a. குலோத்துங்கனின் 8ஆம் ஆண்டு கி. பி. *1185*. அரசநாராயணனை கூடல் ஆளப்பிறந்தான்
*391/1921*; *467/1921*

(?)
5. (a) (ஏழிசை) மோகன் ஆளப்பிறந்தான் அரசநாராயணனை காடவராயர்
குலோத்துங்கன் III *3* ஆம் ஆண்டு கி. பி. *1181*-
*477/1921*.

b. சகரயாண்டு 1108-கி.பி. 1186. 5. (b) அரசநாராயணன் ஏழிசை மோகனான ஜனநாதக் கச்சிய ராயன்
74/1918.

c. குலோத்துங்கன் IIIன் 11 ஆம் ஆண்டு கி. பி. 1189. மடம்—255/1919.

குலோத்துங்கன் III 5 ஆம் ஆண்டு கி. பி. 1183 157/1906
குலோத்துங்கன் 6 ஆம் ஆண்டு 413/1909.

d. கூடல் ஆளப்பிறந்தான் காடவ ராயன் (அத்தி 296/12)

e. கூடல் ஆளப்பிறந்தான் (மோரி ஜோனை 178/1921)

கி. பி. 1184.

f. கூடல் ஏழிசை மோகன் ஆளப் பிறந்தானை...) திருக்கழுக் குன்றம்-(187/1932-33)

விருத்தாசலம்—99/1934-35
அரசநாராயணன் ஏழிசை மோகனான கச்சிய ராயன்.

6.

a. தொண்டை மண்டலம் கொண்ட பல்லவாண்டாரான வீரர் வீரன் காடவராயர் (அத்தி. 296/12)
b. கூடல் ஆளப்பிறந்தான் அழகிய பல்லவனான காடவராயர். (முன்னூர் 63/1919)
c. அழகிய பல்லவரான மணவாளப் பெருமாள் (திருவெண்ணெய் நல்லூர் 486/1921)
d. திருமுனைப்பாடிக் கீழாமூர்நாட்டுக் கூடல் ஏழிசை மோகன் மணவாளப் பெருமாளான வாணிலை கண்டபெருமாளான இராஜராஜக் காடவராயன் (S. I. I. VII 146-133/1900)
e. சகலபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீமணவாளப் பெருமாளான ஏழிசை மோகன் வாணிலை கண்டவன் (சேந்த மங்கலம் 73/1923)
f. ஜீயமகீபதி / அழகியசீயன் } (திரிபுராந்தகம் 187/1905)

7. கோப் பெருஞ்சிங்கன் (கி. பி. 1243—1279)

a. அழகிய பல்லவன் கோப்பெருஞ்சிங்கன்.
b. அழகியசீயன் கோப்பெருஞ்சிங்கன்.
c. சொக்கச்சீயன்
d. மகாராசசிம்மன்.
e. சகலபுவன சக்ரவர்த்திகள் அவனியாளப்பிறந்தான் கோப்பெருஞ் சிங்கன்.
f. சர்வக்ஞன்.
g. கட்கமல்லன். (வாள் வல பெருமாள்)
h. நிச்சங்கமல்லன்.
i. பரதம்வல்லான். (ஆடவல்லான்)
j. அவனி யவன சம்பவன்.
k. தமிழ்நாடு காத்தபெருமாள்.
l. பேணு செந்தமிழ் வாழப்பிறந்த காடவன்.
m. மல்லாபுரிவல்லபன் (மல்லைக்காவலன்)
n. பின்னி காவலன்
o. பெண்ணைநதிநாதன். (பெண்ணைக்கேள்வன்)
p. சாடும்பெருமாள்.

8. காடவகுமரன்
(திருவண்ணாமலை 480/1902)

## கோப்பெருஞ்சிங்கனின் விருதுப் பெயர்கள்

| திராக்ஷாராமம்—சகயாண்டு 1184 கி. பி. 1262 | திரிபுராந்தகம் - காலம் குறிக்கப்படவில்லை திராக்ஷாராமத்துக்குப் பிற்பட்டதே ஜீயமகீபதி=சீலாவதி—மகாராச சிம்மன் | ஆத்தூர்—5 ஆம் ஆண்டு 286/1921 |
|---|---|---|
| 1. சகலபுவன சக்ரவர்த்தி | 1. காடக குல திலகன்—காடக ஷோம்பாலன் | 1. சகல புவன சக்ரவர்த்தி |
| 2. அவன் யவனேத்பவன் | 2. கர்நாட ராஜ மான மர்தனன் | 2. கோ - புருஷ சிம்ஹ மகாராஜன் |
| 3. மகாராச சிம்மன் | 3. சோழ குல கமலாகர திவாகரன் | 3. கோ - நரசிம்ஹன் |
| 4. காடக குல திலகன் | 4. பாண்டிய ராஜ்ய ஸ்தாபனு சூத்ரதாரன் | 4. காடவ குல சூடாமணி |
| 5. காடகபார்த்திவ அன்வய ரவி | 5. சரஸ ஸாஹித்ய சாம்யாத்ரி கேனன் | 5. கர்நாடார்ணவ கும்ப சம்பவன் |
| 6. கலா-நாட்யாக்ய வேதாம்பூதி | 6. பரதார்ணவ கர்ணதாரிணன் | 6. சோழ பிரதிஷ்டாசார்யன் |
| 7. கர்நாடக அதிப அவன் யவனேத்பவன் | 7. கனக சபாபதிநாத சரணரவிந்த மதுகார்ய மார்நேனன் | 7. பாண்டிய மண்டல தண்டதாரன் |
| 8. கர்நாடக பூவமான மண்டினன் | 8. சர்வக்ஞன் | 8. சாஹித்ய ரத்நாகரன் |
| 9. சோர குல அரிகுல கானனன் | 9. கட்க மல்லன் | 9. பரத மல்லன் |
| 10. பாண்டிய மண்டல ஸ்தாபன ஸூத்ரதாரன் | 10. கவேரஜ விஷாய வீர போகார் ஜிதை, காவேரி காமுகன் | 10. கரவாளு மல்லன் |
| 11. சரஸ ஸாஹித்ய ஸாகர சாம்யாத்ரியன் | 11. அவன் யவன சம்பவ க்ஷிதிபதி | 11. கட்க மல்லன் |
| 12. பரதார்ணவ பரீணன் | 12. மகாராச சிம்மன் | 12. பெண்ணுநதிநாதன் |
| | 13. நிச்சங்கமல்லன் | 13. க்ஷீராபக தக்ஷிண நாயகன் |
| | | 14. காஞ்சீபுரி காந்தன் |
| | | 15. மல்லாபுரி வல்லபன் |
| | | 16. துண்டீர (தொண்டை) மண்டல புண்டரீக மார்த்தாண்டன் |

## கோப்பெருஞ்சிங்கனின் விருதுப் பெயர்கள்—தொடர்ச்சி

| வயலூர் | திரிபுவனி (182 / 1919) | திருவக்கரை (191/1904) | திருவண்ணுமலை 490/1902 |
|---|---|---|---|
| 1. கன்னடரை வென்றவன் | 1. பூ போக ஜாதன் | 1. சர்வக்ஞன் | 1. பரதம் வல்ல பெருமாள் |
| 2. கனகசபைக் கடவுளிடம் ஈடுபாடுடையவன் | 2. ஆந்த்ர கர்ணுடோ பூபதிர் தாரிணி பாலனேத்பவன் | 2. கட்கமல்லன் | 2. மல்லை காவன் |
| 3. அவனி நாராயணன் | 3. பூபால னேத்பவன் | 3. கிருபாண மல்லன் | 3. நிச்சங்க மல்லன் |
| 4. பேணு செந்தமிழ் வாழப் பிறந்த காடவன் | 4. பூபால லோக பாலன சம்பவன் | | 4. காவலர் தம்பிரான் |
| 5. நிருபதுங்கன் | 5. பூலோக ரக்ஷாத்பவன் | | |
| 6. மிண்டன்சீயன் | 6. காடக வம்ச மௌதிகாமணி | | |
| 7. ராசாக்கள் தம்பிரான் | 7. சோழ மண்டல மகி | | |
| 8. மல்லை வேந்தன் | 8. தொண்டீர தேச ஹிருதை | | |
| 9. சொக்கச்சீயன் | | | |

## I. கல்வெட்டிலாகா—1913-ஆம் ஆண்டறிக்கை

கூடல் அவனியாளப் பிறந்தான்—முதல் காடவன்.

|

பல்லவாண்டார் காடவராயன்—(அத்தி பாடல்கள்)

1. தொண்டை மண்டலம் வென்றவன்.
2. திருவண்ணுமலைக் கல் வெட்டில் கூறப்பட்ட காடவ குமரன்.
3. சேவூர்ப் போர் வென்றவன்.
4. மூன்ரும் இராசராசனைச் சிறையில் வைத்த பெருஞ் சிங்கன்.
5. மகா ராஜ சிம்ஹறன்.

} இரண்டாம் காடவன்

மேற் குறிப்பிட்டபடி 1913-ஆம் ஆண்டுக் கல்வெட்டறிக்கை இரண்டு காடவர்கள் ஆண்டார் என்று குறிப்பிடுகிறது. முதல் காடவன் அத்தி பாடல்களில் குறிப்பிடப்பட்ட தொண்டை மண்டலங்கொண்ட பல்லவாண்டாரான காடவராயனின் தகப்பனுன கூடல் அவனியாளப் பிறந்தான் என்று வரையறுக்கிறது. இரண்டாம் காடவனே திருவண்ணுமலைச் சாசனத்தில் குறிப்பிடப்படும் காடவ குமரன் என்றும், அவனே அத்தி பாடல்களுக்கு உரிமை உடையவன் என்றும், அவனே சேவூர்ப் போரில் வெற்றி கண்டவன் என்றும், அவனே திருவகீந்திரபுரத்துக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்ட, சோழ மன்னன் மூன்ரும் இராச ராசனைச் சிறையிலிட்ட, மகாராஜ சிம்ஹறனென்றும், அவ்வறிக்கை கருதுகிறது. எனவே, தொண்டை மண்டலம் கொண்ட செயலும், சோழனைச் சிறையிலிட்ட செயலும் இரண்டாம் காடவனுக்கு ஏற்றி உரைக்கப்பட்டுள்ளன. நம் வமிசாவளியில் குறிப்பிடப்பட்டுள்ள 6, 7, 8 என்ற மூன்று தலைமுறை மன்னர்களேயும் இக்கல்வெட்டறிக்கை ஒருவராகக் கொண்டு குறிப்பிடுகிறது என்பது வெளிப்படை.

## II. 1921-22 ஆம் ஆண்டுக் கல்வெட்டறிக்கை:

இவ்வாண்டறிக்கையில் புதிய தொரு கற்பனையைக் காணலாம். இங்ஙனம் கற்பனை செய்வதற்குத் திருவதிகையிலுள்ள சாசனம் ஒன்று அடிப்படையாக அமைந்தது. (391 of 1921). இது மூன்ரும் குலோத்துங்கனுடைய 8-ஆம்

ஆண்டுச் சாசனமாகும். திருவதிகையில் உள்ள திரு வீரட்டானேசுவரருக்குக் கூடல் ஆளப் பிறந்தானான அரச நாராயண காடவராயன் (நம் கிளை வழி ஐந்தாமவன்) $425\frac{1}{4}$ கழஞ்சு பொன் நிறை உடையதும் முத்து, வைரம், சிவப்பு, பச்சை ஆகிய கற்களில் 2080 பதிக்கப்பட்டதும் ஆகிய அட்டிகையை வழங்கியதாக அக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இவனைக் கோப்பெருஞ் சிங்கனே என்று கொண்டு (நம் கிளை வழி ஏழாமவன்) கல்வெட்டறிக்கை ஆராய்ச்சி செய்கிறது. மூன்றும் குலோத்துங்கனின் 8–ஆம் ஆண்டு கி. பி. 1185 ஆகும்.

கோப்பெருஞ் சிங்கன் கி. பி. 1243-இல் பட்டம் பெற்றுத் தனியரசனாகக் கி. பி. 1277 வரையில் ஆண்டவன் என்பது ஒருதலை. குலோத்துங்கனின் 8–ஆம் ஆண்டுக் கல்வெட்டு கோப் பெருஞ்சிங்கனுடைய செய்தியைக் குறிக்கிறது என்று கொண்டால் கோப் பெருஞ்சிங்கனுடைய காலம் கி. பி. 1185 முதல் கி. பி. 1277 வரையில் நீண்டு செல்கிறது. 90 ஆண்டுகளுக்கு மேல் ஒருவனுடைய ஆட்சியை நீட்டிக்கச் செய்வது உலக இயலுக்கு மாறுபட்டது. ஆதலின் கி. பி. 1185-இல் காணப்படுபவன் முதல் கோப்பெருஞ்சிங்கன் என்றும் கி. பி. 1243-இல் பட்டம் பெற்றவன் இரண்டாம் கோப்பெருஞ் சிங்கனென்றும் கல்வெட்டறிக்கை முடிவு செய்கிறது.

கூடல் அவனியாளப் பிறந்தான் அரச நாராயணனான காடவ ராயனே (நம் கிளை வழி ஐந்தாமவன்) கோப் பெருஞ் சிங்கனாவான் (நம் கிளை வழி ஏழாமவன்) என்று கொண்ட காரணத்தால் இவ்வறிக்கையை வெளியிட்டவர் இடர்ப்படுவாராயினர்.

இத் திருவதிகைக் கல்வெட்டு கோப்பெருஞ்சிங்கனுடையது அன்று. அவனுடைய பாட்டனுடையதேயாகும். இதே ஆண்டில் இதே காடவன் திருவெண்ணெய் நல்லூரில் ஆட்கொண்ட தேவருக்குத் திருமஞ்சனம் ஆட்டுவதற்கு $50\frac{1}{2}$ கழஞ்சு எடையுடைய வெள்ளிக்குடம் ஒன்றைப் பரிசாகக் கொடுத்தான் என்று ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. (467 of 1921). கோப்பெருஞ்சிங்கன் 36-ஆண்டுகள் ஆட்சி செய்தான். கல்வெட்டறிக்கையில் அவனது ஆட்சிக்

காலத்தை 35 ஆண்டுகள் என்று குறிப்பிட்டிருப்பதும் பொருத்தமற்றதே. இனி கோப்பெருஞ்சிங்கனுடைய கால அளவு பற்றி நோக்குவோம்.

கோப்பெருஞ் சிங்கனைப் பற்றிய முதற் குறிப்பு திரு வெண்ணெய் நல்லூரில் கிடைத்துள்ளது. அவ்வூரிலுள்ள வைகுந்தப் பெருமாள் கோயிலின் வடக்கு தெற்குச் சுவர் களில் கோப்பெருஞ் சிங்கனின் 11-ஆம் ஆண்டுக் கல்வெட் டொன்று காணப்படுகிறது. அது முன்னுள் இருந்த ஸ்ரீவிமா னம் இழிச்சிப் புதுப்பிக்கப்பட்டது என்றும், அப்போது முன் இருந்த ஸ்ரீவிமானத்தில் காணப்பட்ட கல்வெட்டுக்களின் படி எடுக்கப்பட்டு மறுபடியும் புதிய விமானத்தில் பொறிக்கப் பட்டது என்றும் குறிப்பிடுகிறது. அப் பழைய கல்வெட்டுக் களுள் இரண்டு முந்திய அரசர் காலத்தவை. ஒன்று திரிபு வன சக்ரவர்த்திகள் ஸ்ரீராஜ ராஜ தேவரின் (இரண்டாம் இராச ராசர்) 12-ஆம் ஆண்டைச் சேர்ந்தது. மற்றொன்று திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீதிரிபுவன வீரதேவரின் (மூன்றும் குலோத்துங்கன் கி. பி. 1178-1216) 35-ஆம் ஆண்டிற்குரியது. இவ்விரண்டாவது கல்வெட்டு (487 of 1921)

"திருமுனைப் பாடித் திருவெண்ணெய் நல்லூர் நாட்டுத் திருவெண்ணெய்..........வைகுந்தத்தெம் பெருமானுக்கு **அழகிய பல்லவன் ஸ்ரீ கோப்பெருஞ் சிங்க தேவர் இராசாக்கள்** திருத் தாயார் திருநாமத்தால் உகந்தருளப் பண்ணின பெரிய பிராட்டியாருக்கு காண்மோடாரான சோழிங்க தேவனேன் விட்ட திருவிடையாட்ட நிலமாவது" என்று கூறிச் செல் கிறது.

இதுவே (கி. பி. 1178+35—1213 கி. பி.) அழகிய பல்ல வனன ஸ்ரீ கோப்பெருஞ் சிங்க தேவனின் (நம் கிளை வழி ஏழாமவன்) மிகப் பழைய குறிப்பாகும். இதிலிருந்து கோப் பெருஞ்சிங்கனுடைய மறைவுக் காலம் வரையில் உள்ள இடைக் காலம் 66 ஆண்டுகளாகத் தான் உள்ளன. இங்ஙனம் கொள்ளின் உலக இயற்கைக்கு முரணுகக் கொள்ள வேண்டிய நிலை ஒன்றும் ஏற்படாது. (**Nos. 486 & 487 of 1921, and No. 170 of S. I. I. XII The Pallavas**).

## III. 1923-ஆம் ஆண்டுக் கல்வெட்டறிக்கை

இவ்வாண்டறிக்கையில் மற்ருெரு கோட்பாட்டைக் கல்வெட்டிலாகாத் தலைவர் வெளியிட்டுள்ளார். அது பின் வருமாறு.

மூன்ரும் இராச ராச சோழனின் திருவகீந்திரபுரக் கல்வெட்டில் (142 of 1902) கூறப்பட்டுள்ள கோப்பெருஞ் சிங்கனும் கி. பி. 1221—22-ல் சோழனை எதிர்த்துப் போர் செய்த அழகிய சீயன் அவனியாளப் பிறந்தானும் ஒருவரே; ஆனல் திரிபுராந்தகக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ள சீயமகீபதியின் மகனுன மகாராச சிம்மன் வேருனவன்.

இக் கொள்கையும் அகச்சான்றுகளை ஊன்றி நோக்கின், பொருத்தமின்மை உணரப்படும்.

திரிபுராந்தகக் கல்வெட்டும், தெள்ளாற்றங்கரையில் மூன்ரும் இராச ராசனைத் தோற்கடித்த விபரத்தைக் கூறும் வயலூர்ச் சாசனமும், போசளர்களுடைய தலையீட்டினுல் கோப்பெருஞ் சிங்கன் சோழ மன்னனை விடுதலை செய்ய நேரிட்ட செய்தியைக் கூறும் திருவகீந்திரபுரக் கல்வெட்டும் அதே காடவ மன்னனையே குறிப்பதாகும். அக் காடவ மன்னன் கோப் பெருஞ் சிங்கனே. (நம் கிளை வழி 7) சான்றுகளைப் பின்னர்க் காண்போம்.

## IV. அரங்காச்சாரியாரின்—கல்வெட்டுக்களின் ஊர்வாரித் தொகுப்பு-

சஞ்சிகை I. — பக்கம் 253 எண் 1085

## தென்னுர்க்காடு ஜில்லா

### 1. விருத்தாசலம் கல்வெட்டு 136 of 1900

இக் கல்வெட்டு மூன்ரும் இராச ராசனின் 14-ஆம் ஆண்டில் ஏற்பட்டது. இது பல்லவ கோப்பெருஞ்சிங்கனின் அகம்படி முதலி 'எதிரிலி கணராயன் பொத்தப்பிச் சோழன்' செய்த உபயத்தைக் குறிப்பிடுவதாகும்.

இக் கல்வெட்டிலிருந்து கோப்பெருஞ்சிங்கன் கி. பி. 1229-இல்,மூன்ரும் இராசராசனுக்கு அடங்கி-விசுவாசத்துடன்

வாழ்ந்து வந்தான் என்பது தெளிவு. 1231-இல் இவன் சோழ மன்னனை எதிர்த்தான். ஹூல்ட்ஷ் (Hultzsch) இவன் 1243-இல் மறுபடியும் அரசு கட்டில் ஏறினன் என்று குறிப்பிடுகிறார். ஆனல் கி. பி. 1243-இல் பட்டத்துக்கு வந்தவன் இவனின் வேறானவனே. ஒரு கால் இவனுடைய மகனாக இருக்கலாம் என்று அரங்காச்சாரியார் குறிப்பிட்டுள்ளார்.

சோழ மன்னன் மூன்றும் இராச ராசன் காலத்தில் (கி. பி. 1216—1246) வாழ்ந்து வந்த கோப்பெருஞ் சிங்கன் ஒருவனே. இருவர் அல்லர் என்பது உளங்கொளத் தக்கது.

## V. சூயல் (Robert Sewell) என்பவர் பதிப்பித்த தென்னிந்தியச் சரித்திரக் கல்வெட்டுக்கள்

சூயல் (Sewell) வரைந்த குறிப்பு—பக்கம் 376.

''மூத்த பெருஞ் சிங்கனின் பெயர் (இருவர் கோப் பெருஞ் சிங்கர் இருந்திருப்பின்) அழகிய சீயன் அவனி யாளப் பிறந்தான் பெருஞ் சிங்கன் என்பது. ஏறக் குறைய கி. பி. 1221-இல் மூன்றும் இராச ராசன் என்ற சோழ மன்னனை எதிர்த்துக் கலகம் செய்தான். தெள்ளாற்றில் ஒரு போர் நிகழ்ந்தது. போசள இரண்டாம் நரசிம்மன் தலையிட்டுச் சோழ பட்டத்தைக் காப்பாற்றினன். கலகத்தையும் அடக்கினன். பிறகு கோப்பெருஞ் சிங்கன் கீழ்ப் படிந்தான். விருத்தா சலத்திலுள்ள கி. பி. 1229–ஆம் ஆண்டுக் கல்வெட்டு (136 of 1900) இதை வலியுறுத்தும்.

சூயல் குறிப்பு—பக்கம் 140

சுமார் கி. பி. 1231-இல் பெருஞ் சிங்கன் (ஒருகால் மகனே அல்லது அவனேயோ) மறுபடியும் கலகம் செய்தான். தன் தலைவனை மூன்றும் இராச ராசச் சோழனைச் சிறைப் பிடித்துத் தலைநகரான சேந்தமங்கலத்துக்குக் கொண்டு சென்றான். கி. பி. 1243-இல் இரண்டாம் கோப் பெருஞ் சிங்கன் (கோப் பெருஞ் சிங்கர் என்று இருவர் மன்னர் வாழ்ந்தது உண்மையானல்) மே மாதம் 9-இல் இருந்து 13-க் குள்ளாக 'அவனவ னேத்பவ ராச சிம்மன்' என்ற பட்டத்தோடு முடிசூட்டிக் கொண்டான்.

சூயல் இவ்வாறு கோப்பெருஞ் சிங்கன் ஒருவனே என்றோ, கோப்பெருஞ் சிங்கர் இருவர் என்றோ முற்றத் துணியாது ஐயத்தோடு எழுதியுள்ள செயல் குறிப்பிடத் தக்கது.

அவருடைய நூலில் 147-ஆம் பக்கத்தில் உள்ள கி. பி. 1249-ஆம் ஆண்டு பற்றிய குறிப்பு பின்வருமாறு:

"தஞ்சை ஜில்லாவிலுள்ள முதலாம் கோப் பெருஞ் சிங்கனின் 18-ஆம் ஆண்டுக் கல்வெட்டு கி. பி. 1249-ஆம் ஆண்டின் ஜூலை 30-ஆம் தேதியது. இரண்டாம் கோப்பெருஞ் சிங்கன் கி. பி. 1243—4-ஆல் பட்டம் பெற்றான் என்பதால், இக் கல்வெட்டு 18 ஆண்டுகள் வாழ்ந்து பின் விலகிய முதலாம் பெருஞ் சிங்கனதாக இருக்க வேண்டும். (**V. R. II.** சஞ்சிகை. தஞ்சை. எண் 346—135/1895. **E. I. VII.** பக்கம் 165)

இதிலிருந்து நாம் அறிய வேண்டிய செய்தி பின்வருமாறு: இத்திருவிடை மருதூர்க் கல்வெட்டு (135 **of** 1895) கோப்பெருஞ்சிங்கனின் 18-ஆம் ஆண்டைச் சேர்ந்தது. அதற்குச் சமமான காலம் கி. பி. 1249 ஆகும். எனவே இவனது ஆட்சி கி. பி. 1231-இல் தொடங்கியிருக்க வேண்டும் என்பதே.

மேற்குறிப்பிட்ட செய்தி உண்மையே! ஆனால் ஒரு தவறு வேறு தவறுகளை விளைவிக்கும். சூயலின் முதல் தவறு யாது?—அதை நோக்குவாம். கல்வெட்டுக்களின் கால நிர்ணய நிபுணரான கீல்ஹார்ன் (**Kielhorn**) என்பவர் மூன்று கல்வெட்டுக்களின் காலத்தை வெளியிட்டுள்ளார். (**Epigraphia Indica**—vii **page** 165 **etc**)

## கீல்ஹார்ன்—(Kielhorn)

I. ………………………………

II. ஏழாம் ஆண்டு—திருவெண்ணெய் நல்லூர்.
362 **of** 1902
இதன் காலம் 1249-ஆம் ஆண்டு ஜூலை 30 ஆம் தேதி.

III. பதினெட்டாம் ஆண்டு—திருவிடை மருதூர்.
135 **of** 1895
இதன் காலம் தவருகக் குறிக்கப்பட்டுள்ளது.

அவர் கோப்பெருஞ்சிங்கனின் 7-ஆம் ஆண்டுக் கல்வெட்டின் காலம் 1249-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30-ஆம்

நாள் என்றும் திருவிடை மருதூர்க் கல்வெட்டை அவனுடைய 18–ஆம் ஆண்டினது என்று குறிப்பிட்டிருப்பது தவறு என்றும் எழுதியிருக்கிறார்.

இவ்வாறு கீல்ஹார்ன் குறிப்பிட்டிருக்கவும் அரங்காச் சாரியார் இவற்றைப்பற்றிக் குறிப்பிடும்போது பின்வருமாறு எழுதுகிறார் :

“சகல புவன சக்ரவர்த்திகள் கோப்பெருஞ்சிங்கதேவரின் 18-ஆம் ஆண்டுக் கல்வெட்டு நில தானத்தைக் குறிக்கிறது. (**E. I. Vol VII** பக்கம் 165) **எபிகிராபிகா இண்டிகா** என்ற பத்திரி கையில் கீல்ஹார்ன் இந்த 18–ஆம் ஆண்டுக்குச் சரியானது கி. பி. 1249 ஜூலை 30-ஆம் நாள் என்று குறித்துள்ளார்.”

கீல்ஹார்ன் கோப்பெருஞ்சிங்கனின் 7-ஆம் ஆண்டுக் கல் வெட்டுத்தான் கி. பி. 1249 க்குச் சரியானது என்றும் 18-ஆம் ஆண்டுக் கல்வெட்டின் காலக் குறிப்பு தவறு என்றும் எழுதி யிருக்கவும், இதற்கு மாறாக 18-ஆம் ஆண்டுக் கல்வெட்டே கி. பி. 1249 க்கு உரியது என்று கொண்ட தவறே **அரங்காச் சாரியாருக்கும்,** அவருடைய நூலை அடியொற்றி எழுதிய **சூய லுக்கும்** குழப்பம் தருவதாயிற்று என்பது தெற்றென உணரற் பாலது.

சமீப காலத்தில் அநேக பல்லவர்களின் கல்வெட்டுக் களைத் தொகுத்து வே. வேங்கடசுப்பையர் வெளியிட்ட தொகுதியில் கோப்பெருஞ்சிங்கன் என்ற பெயர் பூண்ட இரு மன்னர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்குச் சில மறுக்க முடியாத சான்றுகள் கிடைத்துள்ளனவாக இடித்துக் கூறியுள்ளார். அவர் குறிப்பிட்டுள்ள சான்றுகளைக் கவனிக்க வேண்டியது அவசியமாகும்.

அவர் கொண்டுள்ள கிளை வழியை நாம் மேலே குறிப் பிட்டுள்ளோம் அதனையும் நாம் கொண்டுள்ள கிளை வழியை யும் கூர்ந்து நோக்கினால் இரண்டுவே வற்றுமைகளைக் காண லாம். தொண்டை மண்டலங்கொண்டருளிய பல்லவாண் டாரைக் கூடல் ஆளப் பிறந்தாரான காடவராயருடைய தம்பி யான ஏழிசை மோகனை ஜனநாதக்கச்சியராயரின் மகனாக அவர் கருதுகிறார். ஆனால் நாம் பல்லவாண்டாரைக் கூடல் ஆளப் பிறந்தான் வீர சேகரரின் (நம் கிளை வழி ஐந்தாமவன்)

மகனுகக் கருதுகிறோம். ஏனெனின், இம் முன்னேனைப்பற்றி அத்தி கல்வெட்டில் (296–12) கூடல் ஆளப் பிறந்தானுன காடவராயர் என்றும் மோரிஜோனைக் கல்வெட்டில் (178–1921) கூடல் ஆளப் பிறந்தார் என்றும், திருக்கழுக்குன்றக் கல் வெட்டில் (187 of 1932–33) கூடல் ஏழிசைமோகன் ஆளப் பிறந்தான் என்றும் கூறப்பட்டுள்ளன. இவ்வீரனுக்கும் ஏழிசைமோகன் என்ற பட்டம் உண்டு என்றும், இப் பட்டத்தையே மணவாளப் பெருமாள் வாழையடி வாழை யாகப் பெற்றிருந்தான் என்றும் கொள்ளுவதே மிகப் பொருத்தமாம்.

எலவானுசூர் (157 of 1906), சித்தலிங்க மடம் (413 of 1909) கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள கூடல் அரச நாராயணன் ஏழிசை மோகன் ஆன ஜனநாதக் கச்சிய ராயனின் மகனுகச் சோழ மண்டலங்கொண்ட பல்லவாண் டாரை வே. வே. ஐயர். கொள்ளுவது பொருத்தம் இல்லை என்று தோன்றுகிறது. இவன் அதே குடும்பத்தினன் என் ருலும் நேர் வழியில் சேராத வேறு வீரனே ஆவான். இவன் அரச நாராயணனின் (நான்காமவன்) மற்ருெரு மகனுக இருக் கலாம்.

மேலும் வே. வே. ஐயர் கோப்பெருஞ்சிங்கன் என்று பெயர் பூண்ட இரண்டு மன்னர்கள் ஆண்டாராகவும், அவ ருள்ளும் முதலாம் கோப்பெருஞ்சிங்கன் கி. பி. 1231 முதல் 1243 வரை ஆண்டானுகவும் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் கி. பி. 1243 முதல் 1279 வரையிலும் ஆண்டானுகவும் முடிவு செய்துள்ளார். இம் முடிவுக்கு மூன்று முக்கிய ஆதாரங் களைக் கையாண்டுள்ளார். அவையாவன வில்லியனூர் (136–1936–37), திருவெண்ணெய் நல்லூர் (486, 487 of 1921), சிதம் பரம் (103 of 1934-5) கல்வெட்டுக்களேயாம் என்று அவர் குறிப்பிடுகிருர். அக்கல் வெட்டுக்களை ஆராய்வோம்.

I. **வில்லியனூர் :**—இது சகல புவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ அவனியாளப் பிறந்தாரான கோப்பெருஞ்சிங்கதேவரின் 6–ஆம் ஆண்டுக் கல்வெட்டு (கி. பி. 1249) அரச முதலி பெரு மங்கலமுடையார் ஒருவர் கோயில் கணக்கைத் தணிக்கை செய்தார். சோழமன்னர் திரிபுவன வீர தேவரின் (மூன்ருங் குலோத்துங்கன் கி. பி. 1178-1216) 37–ஆம் ஆண்டு முதல்

அழகிய சீயர் கோப்பெருஞ்சிங்கதேவர்க்கு 11-வரை கணக்குக் கேட்டு "**ஆருவது தைமாதம் இருபத்தொன்ரும் தியதி முதல்** இரண்டு நொந்தா விளக்கு எரிப்பதாக முடிவு செய்தார்.

அவர் இக்கல்வெட்டு இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனின் ஆரும் ஆண்டுக் கல்வெட்டு என்றும், இக்கல்வெட்டில் முதல் கோப்பெருஞ்சிங்கனைப்பற்றிய குறிப்பு உள்ளது என்றும் அம் முதல் கோப்பெருஞ்சிங்கன் 11-ஆண்டுகளாவது ஆண்டிருக்க வேண்டும் என்றும் கருதுகிருர். இவ்வாராய்ச்சியை நோக்கு வோம்.

கல்வெட்டில் 11-என்று குறிக்கப்பட்டுள்ளதேயன்றி அதனையடுத்து மற்ற கல்வெட்டுக்களிற்போல ஆட்சி யாண்டைக் குறிக்கும் யாண்டு என்ற சொல் காணப்பட வில்லை. முதல் கோப்பெருஞ்சிங்கன் 11 ஆண்டுகள் ஆண் டான் என்ருல், இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் முடி சூடி யது கி. பி. 1243 எனவே, முதல் கோப்பெருங்சிங்கன் முடி சூடியது அதற்கு 11 அல்லது 12 ஆண்டுகளுக்கு முற்பட்டு, அதாவது கி. பி. 1231-32-இல் இருக்கவேண்டும்.

a. "கி.பி. 1232-இல் கோப்பெருஞ்சிங்கன் போசள தண்ட நாயக்கர்களிடத்தில் ஒரு பெருந்தோல்வியடைந்தான். தான் சேந்தமங்கலத்தில் சிறை வைத்திருந்த சோழ மன்னனைச் சிறை நீக்கினுன்." (142–1902) என்று திருவகீந்திரபுர சாசனம் கூறுகிறது. இப்படுதோல்வியடைந்த நிலையில் பட்டமளிப்புவிழா நிகழக்கூடுமா என்பது சிந்திக்கத் தக்கது.

b. சேந்த மங்கலம் கல்வெட்டொன்று (73–1903) மண வாளப் பெருமாள் என்ற காடவனின் ஐந்தாம் ஆண்டில் ஏற் பட்டதாகும். அம்மணவாளப் பெருமாள் எப்பொழுது ஆண் டான் ? கி. பி. 1232 க்கு முன்ன அல்லது பின்னரா ? முன்னி ருந்தால் மணவாளப் பெருமாளும் முதலாம் கோப்பெருஞ் சிங்கனும் எப்படி ஒருவரையே குறிக்கும் ?

c. மேலும் வில்லியனூர்க் கல்வெட்டுக்கு வே. வே. ஐயர் பொருள் செய்துகொண்டபடி முதலாம் கோப்பெருஞ் சிங்கனின் 11–ஆம் ஆண்டுவரைக் கணக்கைத் தணிக்கை செய்தவர், இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனின் ஆட்சியின் 6-ஆவது ஆண்டுவரை இருந்த கணக்கைத் தணிக்கை செய்

யாது விட்டிருக்க முடியுமா? கணக்கைத் தணிக்கை செய்ய இதுவா முறை?

கல்வெட்டு வாசகத்தில் சிறிதளவு குறை இருக்க வேண்டும். வில்லியனூர்க் கல்வெட்டிலிருந்து நாம் இயல்பாகத் தெரிந்துகொள்ள வேண்டிய செய்தி பின்வருமாறு: கோப் பெருஞ்சிங்கனின் ஆறும் ஆண்டு (கி. பி. 1249) தை மாதம் 11-ஆம் தியதி முதல் 21-ஆம் தியதிவரை தணிக்கை நடைபெற்றுத் தை மாதம் 22–ஆம் தேதி முதல் இரண்டு நொந்தா விளக்கு எரிப்பது என்று தீர்ப்புச் செய்தனர் என்பதே. இங்ஙனம் பொருள் செய்வதற்கு இதர கல்வெட்டுச் சான்றுகளும் உண்டு. ஒன்றை இங்கே கூறுவோம்.

தஞ்சை ஜில்லா மாயூரம் தாலுகா பல்லவராயன் பேட்டைச் சாசனத்தைக் (*432* **of** *1924*–**S.i. i vol xii No.** *199*) கவனிப்போம். அது பின்வருமாறு.

“ஸ்வஸ்திஸ்ரீ சகல புவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ கோப் பெருஞ்சிங்கதேவர்க்கு யாண்டு 16–ஆவது ஆடி மாதம் பிறந்த முப்பதாம் தியதியான நாயிற்றுக்கிழமை நாள் ராய ராய வள நாட்டுத் திருவிந்தளூர் நாட்டுப்பட்டான் ராஜ ராஜ குளத்தூர் உடையார் ராஜராஜேசுரமுடையாருக்குப் பிள்ளை சோழகோனுர் திருமேனி கல்யாணத் திருமேனியாக இவர் அகம்படி முதலிகளில் ஸ்ரீ கயிலாதமுடையானுன சோழ கோன் பல்லவரையர் இந்நாயனுர்க்குப் பிரமதேயம் திருவிந்தளூர் அமுதன்சாயன் தாமோதரப்பட்டன் இறுக்கும் மணியூர் நாடன் நிலத்துக்கும், அருங்காடன் நிலத்துக்கும் துன்ப விடங்கன் கொல்லைக்கும் மணலிட்டுக் கொல்லைக்கும் **இருபத்து மூன்றுவது முதல் இருபத்தைந்தாவதுவரை கணக்குக் கேட்டு……**”

இக்கல்வெட்டுப் பகுதியிலிருந்து 16–ஆம் ஆண்டில் ஆடி மாதம் 23 முதல் 25-ஆம் தியதிவரை கணக்குக் கேட்டு அதே ஆடி மாதம் **30**–ஆம் தியதி செலுத்த வேண்டிய காசு எண்ணுயிரத்துக்கு அவர்களது நிலத்தைத் திருநாமத்துக் காணியாகக் கொண்டு உச்சி சந்தி உடன் அமுது செய்தருளுவது என்றும், இரண்டு திருவிளக்கு எரிப்பது என்றும் தீர்மானம் செய்யப்பட்டது என்று அறிகிறோம்.

**d.** காட்டு மன்னூர்குடிக் கல்வெட்டொன்றில் (571-1920) இப்பிரதேசத்தில் இக்காலத்தில் ஆண்ட மன்னர்களின் வரிசைக் கிரமம் கூறப்பட்டுள்ளது. அது பின்வருமாறு:—

கோயில் பொன்வேய்ந்த குலோத்துங்க சோழதேவர்
(இரண்டாம் குலோத்துங்கர்)

இராச ராச தேவர் (இரண்டாம் இராசராசர்)

பெருமாள் திரிபுவன வீரதேவர்
(மூன்றும் குலோத்துங்கர்)

இராச ராச தேவர் (மூன்றும் இராசராசர்)

**அவனியாளப் பிறந்தான் கோப்பெருஞ்சிங்க தேவர்**

பெருமாள் சுந்தர பாண்டிய தேவர்
(முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன்)

பெருமாள் குலசேகர தேவர்,

வீரபாண்டிய தேவர்

பெருமாள் சுந்தர பாண்டிய தேவர்
(முதலாம் சடையவர்மன் பட்டம், கி. பி. 1251-இல்)

மேற்கண்ட பட்டியலை நோக்கின், கோப்பெருஞ் சிங்க தேவருடைய பெயர் ஓரிடத்திலேயே காணப்படுகிறது. கோப் பெருஞ்சிங்கர் இருவர் ஆண்டிருப்பின், குலோத்துங்க சோழ தேவர், இராசராச தேவர், சுந்தரபாண்டிய தேவர் என்ற பெயர்கள் இருமுறை காணப்பட்டிருப்பதைப் போல அப் பெயரும் இருமுறை குறிக்கப்பட்டிருக்கும் என்பது ஒருதலை. கோப்பெருஞ்சிங்கன் ஒரே தடவை குறிக்கப்பட்டிருப்பதால் கோப்பெருஞ்சிங்கன் ஒருவனே, இருவர் அல்லர் என்பது தேற்றம்.

மேல் **a, b, c, d** என்ற நான்கு பத்திகளிலும் குறிப்பிடப் பட்டுள்ள செய்திகளைக் கொண்டு வில்லியனூர்ச் சாசனம் இரண்டு கோப்பெருஞ் சிங்கர்கள் ஆண்டனர் என்று குறிப் பிடுவதற்குச் சான்று ஆகாது என்பது உணரப்படும். இனி, திருவெண்ணெய் நல்லூர்ச் சாசனத்தை நோக்குவோம்.

## II. திருவெண்ணெய் நல்லூர்ச் சாசனம் (486,487-1921)

இக் கல்வெட்டு கோப்பெருஞ் சிங்கனின் 11–ஆம் ஆண் டைச் (கி.பி. 1254) சேர்ந்தது. திருவெண்ணெய் நல்லூரி

லுள்ள வைகுந்தப் பெருமாள் கோயில் பழுதாகிப் புதுப்பிக்கப் பட்டபோது, பழைய விமானத்திலிருந்த கல்வெட்டுக்களைப் படியெடுத்துப் புதிய விமானத்தில் பொறித்துள்ளனர். வாசகத்தை நோக்குக.

"ஸ்ரீ விமானம் இழிச்சி எடுக்கிறபோது படியெடுத்த படிப்படி." "இக் கல்வெட்டில் பல அரசர்களின் கொடைச் செயல்களை வரிசையாகப் பொறித்துள்ளனர். அவை பின் வருமாறு.

1. 20 மாநிலத்தை ஆட்கொள்ளிக் காடவராயனேன், திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு (II) 12-ஆவது ஆண்டில் (கி.பி. 1146—12—1158) திருவிடையாட்ட நிலமாக விடுத்தேன்.

2. திரிபுவன வீரதேவரின் 35-ஆவது ஆண்டுக் கொடை—அப்பகுதி பின்வருமாறு:

திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ திரிபுவன வீரதேவர்க்கு யாண்டு 35ஆவது (கி.பி. 1213) ராஜராஜ வளநாட்டுத் திருமுனைப்பாடித் திருவெண்ணெய் நல்லூர் நாட்டுப் பிர்மதேயம் திருவெண்ணெய்.........வைகுந்தப் பெருமானுக்கு அழகிய பல்லவன் **ஸ்ரீ கோப்பெருஞ்சிங்க தேவர்** இராசாக்கள் திருத்தாயா.........ரர் திருநாமத்தால் உகந்தருளப் பண்ணின பெரிய பிராட்டியாருக்கு, **மோகாண்டாரான சோழிங்க தேவனேன்** விட்ட திருவிடையாட்ட நிலமாவது:

3. "இதன்மேல் இந்நாளில் அழகிய சீயன் சம்புவராயனேன் இவற்கு விட்ட" நில தானத்தைக் குறிக்கிறது.

மேற்கண்ட இரண்டாம் தானத்தில் சொல்லப்பட்ட "அழகிய பல்லவன் ஸ்ரீ கோப்பெருஞ்சிங்க சோழ தேவனை" வே.வே. ஐயர் முதலாம் கோபெருஞ்சிங்க தேவன் என்று குறிப்பிடுகிறார். இதில் குறிப்பிடப்பட்ட கோப்பெருஞ் சிங்கன் கி.பி. 1243—இல் முடி சூடிய கோப்பெருஞ் சிங்கனே. அவன் பேரரசனாக முடிசூடிக் கொண்டது கி.பி. 1243-இல் எனினும் அதற்கு முன் அவன் குறுநில மன்னனாக ஆண்டான் என்பது வெளிப்படை. அவனைப் பற்றிய முதற் குறிப்பு இதுவே யாகும். ஓர் அரசன் (கி.பி. 1213—79) 66 ஆண்டுகள் வாழ்ந்தான் என்று கொள்வது பொருத்தமற்றதுஆகாது என்பது முன்னும் குறிக்

கப்பட்டது. இவ்வழகிய பல்லவன் கோப்பெருஞ்சிங்க தேவனும் சகல புவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ அவனியாளப் பிறந்தான் கோப்பெருஞ்சிங்க தேவனும் ஒருவனே என்பதைத் திருவெண்ணெய் நல்லூர் வைகுந்தப் பெருமாள் கோயிலிலுள்ள மற்றொரு கல்வெட்டு வலியுறுத்தும். *(496–1921—எண் 158* s.i.i. xii. பல்லவர்)

| | |
|---|---|
| **1 முதல் 4 வரி** | ''ஸகல புவன ............... 6 ஆவது பசு |
| | ... ... ... ... ... ... |
| | பெருமானேன் **இந் நாளில்** |
| *3—6* | ... ... ... 6 பசு |
| | விட்டேன் |
| | இந் நாளில் ஆடு 12 |
| 6—8 | அளக்கக் கடவதாகவும்—**இதன்மேல்** |
| | **இத் தேவர்க்கு 9–ஆவது** |
| *9—10* | 2 பசு |
| | அளக்கக் கடவனுகவும் **இதன்மேல்** |
| *10—12* | **அழகிய சீயன் கோப்பெருஞ்சிங்க** |
| | **தேவர் நாளில்** |
| | மாதத்து நாழிநெய் அளக்கக் |
| | கடவார்களாகவும் |

இக் கல்வெட்டு கோப்பெருஞ் சிங்கனின் 6–ஆவது ஆண்டில் மூன்று தானங்களைக் குறித்துள்ளது. பிறகு ஏழாவது வரியில் ''இதன்மேல் இத்தேவர்க்கு 9–ஆவது'' என்ற வாசகத்தால் அதே கோப்பெருஞ்சிங்க தேவரின் ஒன்பதாவது ஆண்டுத் தானத்தைக் குறிக்கிறது. 10–ஆவது வரியில் ''இதன்மேல் அழகிய சீயன் கோப்பெருஞ்சிங்க தேவர் நாளில்'' என்று மற்றொரு தானம் சொல்லப்புட்டிருக்கிறது. இதில் ஆண்டு குறிக்கப்படவில்லை. ஒருகால் அதற்குமுன் குறிப்பிடப்பட்ட தானத்துக்கு உரிய ஒன்பதாம் ஆண்டாகவே இருக்கலாம்.

இவ்வைந்து தானங்களும் ஒரே அரசன் காலத்தைச் சேர்ந்தனவே. கல் வெட்டில் காணப்படும் 'இதன்மேல்' என்ற சொற்றொடர் மேல் குறிக்கப்பட்ட காலத்துக்குப் பிந்திய காலத்தைக் குறிப்பதற்குப் பயன்படுத்தும் சொற்றொடர் என்பது அனைவருக்கும் உடன்பாடே. ஆதலின் ''இதன்மேல்'' என்று தொடங்கும் 10 முதல் 12 அடி வரையிலுள்ள கல் வெட்

டுப் பகுதி கோப்பெருஞ்சிங்கனுடைய ஆட்சியில் 9-ஆவது ஆண்டையோ பிற்பட்ட காலத்தையோ குறிக்குமே யல்லாது, கோப்பெருஞ்சிங்கனுக்கு முற்பட்ட ஒரு மன்னனுடைய காலத்தைக் குறிக்காது என்பது வெளிப்படை. அங்ஙனம் இருக்கவும் வே. வே. ஐயர் கோப்பெருஞ்சிங்கர் இருவர் என்று தாம்கொண்ட கொள்கைக்கு இக் கல்வெட்டை ஆதார மாகக்கொண்டது பெரிய விந்தையாக உள்ளது. அவர் கூறும் செய்தி பின்வருமாறு :

''இக்கல்வெட்டில் காணப்படும் ஐந்து தானங்களில் ஒன்று கோப்பெருஞ் சிங்கனின் தந்தையான அழகிய சீயன் கோப் பெருஞ் சிங்கதேவன் காலத்தில் செய்யப்பட்டது. ஏனைய நான்கனுள் மூன்று கோப்பெருஞ் சிங்கனின் 6-ஆவது ஆண்டி லும் ஒன்று 9-ஆவது ஆண்டிலும் கொடுக்கப்பட்டன.''

முதல் நான்கும் இரண்டாம் கோப்பெருஞ் சிங்கனுடைய தானங்கள் என்றும் ஐந்தாவது முதலாம் கோப்பெருஞ் சிங்க னுடையதென்றும் வே. வே. ஐயர் குறிப்பிடுவது ஆச்சரியப் படத் தக்கதே.

இதுகாறும் கூறியவாற்ருல் திருவெண்ணெய் நல்லூர்க் கல்வெட்டுக்கள் இரண்டும் கோப்பெருஞ்சிங்கர் இருவர் ஆண்டதற்குச் சான்றுகள் ஆகமாட்டா என்பது போதரு கிறது.

III. அடுத்து, அவர் மூன்ருவது சான்ருகக் குறிப்பிடும் சிதம்பரம் கல்வெட்டுக்களை (*465* of *1902*)
(*467* of *1902*)
(*103* of *1934-35*) நோக்குவோம்.

## a. சிதம்பரம்—465—1902

**பெரிய தேவர் சான்று**—சகல புவன சக்கரவர்த்திகள் அவனி ஆளப் பிறந்தான் கோப்பெருஞ் சிங்க தேவரின் **3-ஆம் ஆண்டு 81-ஆம்** நாள்—சோழ கோன் ஓலை.

**ஆளியார் திருத்தோப்பு** என்ற பெயர் கொண்ட ஒரு திரு நந்தனவனம் சிதம்பரத்தின் மேல் பிடாகையான **விக்கிரமசிங்க புரத்தில்** நிறுவப் பெற்றது. அதற்காக ஏற்பட்ட 50 தோப்புக் குடிகளின் இலக்கைக்கும் கொற்றுக்கும் 100 மா நிலம் வழங்

கப் பெற்றது. **இவ்வூரிலே** முன்னதாகவே அமைக்கப் பெற்ற "**சொக்கச்சீயன் கமுகு திருநந்தாவனத்துக்** குடிகளுக்கு உதவிய திட்டப்படியே **ஆளியார் தோப்புக்** குடிகளுக்கும் உதவுகிறது" என்று நிச்சயிக்கப்பட்டது.

## b. சிதம்பரம்—467—1902 (S. I. I. VIII, No. 55)

சகல புவன சக்கரவர்த்திகள் அவனியாளப் பிறந்தான் கோப்பெருஞ் சிங்கனின் **16-ஆம் ஆண்டு 262-ஆம் நாளில்**—சோழகோன் ஓலே.

கோப்பெருஞ் சிங்கனின் **15-ஆம் ஆண்டு** (262-ஆம் நாள்) **வேசாலிப்பாடி** பற்று **பூபாலசுந்தர சோழ நல்லூரில் சொக்கச் சீயன் கமுகு திருநந்தாவனம்** என்ற ஒரு பூந்தோட்டம் நிறுவப் பெற்றது. இதற்கு உடலாக, 63 மா நிலம் திருநந்தவனத் தரைக்கு உடலாகவும் 247 மா நிலம் தோப்புக் குடிகளின் ஜீவிதத்துக்கும் கொடுக்கப்பட்டன.

(1) ஸ்வஸ்தி ஸ்ரீசகல புவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகோப்பெருஞ்சிங்க தேவற்கு யாண்டு **பதினாறுவது நாள் இருநூற்றருபத்திரண்டு** சோழகோன் ஓலே. தென்னவன் பிரம்மமாராயரும் மதுராந்தக விழுப்பரையரும் உடையார் திருச்சிற்றம்பல முடையார் கோயில்

(2) ஸ்ரீ மாகேசுவரக் கண்காணி செய்வார்களும் ஸ்ரீகாரியஞ் செய்வார்களும் சாமுதாயஞ் செய்வார்களும் பண்டாரப் பொத்தக முடையார்களும் கணக்கருங் கண்டு விடுதந்ததாவது, கோயிலுக்கும்

(3) திருக்காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியார்க்கும் வேசாலிப்பாடிப் பற்று பூவாலேயில் **சொக்கச்சீயன் கமுகு திருநந்தவனத்துக்கு** திருநந்தவனம் செய்ய முதல்கொண்ட நாயகம் பேர் ஐஞ்சும் பேர் தொண்ணூற்றைஞ்சும் ஆகப்பேர் நூற்றுவர்க்கு இலக்கைக்கும், கொற்றுக்கும் இவ்வூ

(4) ரில் அடைத்த நிலம் இருநூற்று நாற்பத்தேழு மா அரைக்காணியினால் நெல்லு ஆருயிரத்துத் தொளாயிரத்தொரு பத்தெண்கலனே இரு தூணிக் குறுணியும் **பதினேஞ்சாவது நாள் இருநூற்றருபத்திரண்டு முதல்** அந்தராயம் பாட்டம் உள்பட **இறையிலியாக** இட்டுத் தேவர் திரு

888—4

(5) வெழுத்துச் சாத்தி அருளின திருமுகம் வந்தமையில் **சொக்கச் சீயனென்னும் திருநாமத்தால் செய்த கமுகு திருநந்தவனத்துக்கும்** சுற்றுக் குலேக்கும் வேசாலிப்பாடி நாட்டுக் குறுஞ்சி அள நாட்டுத் தேவதானம் சிறுபாலேயூர்ப்பால் பூந்தமங்கலத்தும் இராஜாதிராஜ வளநா

(6) ட்டு குறுஞ்சி அளநாட்டுத் தேவதானம் தாமரையான் பாடியான வேளங்கன் பட்டிலும் வெள்ளாற்றுக்கு மேல் கரைப்பட்ட துண்டத்தும் கூடின நிலத்துக் கமுகு தறையும், சுற்றுக் குலேயும் உள்பட **விரிவு நிலம் அறுபத்துமூன்று மா முக்காணி கீழ்முக்காலும்** நீங்கலாகவும் இத்திருநந்

(7) தவனஞ் செய்யவேண்டும் பேராய் நிச்சயித்த நாயகம் பேர் ஐஞ்சும் பேர் தொண்ணூற்றைஞ்சும் ஆகப் பேர் நூறு. இதில் நாயகம் பேர் ஐவர்க்கு கொற்றுக்கு நாள் ஒன்றுக்கு பேர் ஒன்றுக்கு முக்குறுணியாக நெல்லு கலனே முக்குறுணியும் புடவை முதல் ஆட்டைக்கு பேரால் மூன்ரு

(8) கக்காசு பதினேஞ்சும் பேர் தொண்ணூற்றைவர்க்கு கொற்றுக்கு நாளொன்றுக்கு பேர் ஒன்றுக்கு நெல்லு பதக்காக நெல்லு பதினேங்கலனே இரு தூணிப்பதக்கும் புடவை முதலாட்டைக்குப் பேரால் காசு இரண்டாக காசு நூற்றுத் தொண்ணூறும் ஆகப்பேர் நூற்றுவர்க்கு கொற்றுக்கு நாள் ஒ

(9) ன்றுக்கு நெல்லு பதினேழு கலனே குறுணியும் ஆக ஆட்டைக்கு உடைய நெல்லுக்கும் புடவை முதலாட்டைக்கு காசு இருநூற்றைஞ்சுக்கும் காசு ஒன்றுக்கு பதினேங்கலப் படியால் வந்த நெல்லுக்கும் தேவதானமான ஊர்களில் பல பணி நிபந்தக்காரர்க்கு சீவிதமடைக்கும்படி

(10) யாலுள்ள நெல்லுக்கு வேசாலிப்பாடிப் பற்று ஜெயங்கொண்ட சோழச் சருப்பேதி மங்கலத்துக் கீழ்பிடாகை பூவாலே சுந்தர சோழநல்லூரில் **பதினேஞ்சாவது நாள் இருநூற்றறுபத்திரண்டு முதல்** அந்தராயம் பாட்டம் உள்பட தேவதான இறையிலி இட்டநிலம் இருநூ

(11) **ற்று நாற்பத்தேழுமா வரைக்காணிக்கு மாத்தால் நெல்லு** இருபத்தெண்கலமாக நெல்லு ஆருயிரத்து தொளாயிரத்தொருபத்தொன்பதின் கலனே தூணிப்பதக்கும் ஆகத்திரு

நந்தவனத்தறை உள்பட நிலம் **எழுபத்தேழரையே நான்மாவரை முந்திரிகைக் கீழ் முக்காலி**னுல் விரி

(12) வு நிலம் **முந்நூற்றெருபதுமா முக்காணி அரைக்காணிக் கீழ் முக்காலும்** அந்தராயம் பாட்ட முள்பட தேவதான இறை யிலி இட்டமைக்கு **குலோத்துங்க சோழன் திருமாளிகையில் புறவா யிலே கல் வெட்டிக் கொள்ளக் கடவதாகப் பண்ணுவதே** கமுகு தறை யும் சுற்றுக்குலையும்

(13) நிலம் அறுபத்துமூன்று மா முக்காணிக் கீழ் முக்கா லும் திருநந்தவனக் குடிகளுக்கு ஜீவிதம் அடைத்த நிலம் இரு நூற்று நாற்பத்தேழுமா அரைக்காணியினுல் நெல்லு ஆரு யிரத்துத் தொளாயிரத்து ஒருபத்தொன்பதின் கலனே தூணிப்பதக்கும் இவை சோழகோன் எழுத்து

(14) என்று வந்த ஏவற் தீட்டுப்படி கல் வெட்டியது.

## c. சிதம்பரம்—103 of 1934-35 (S. I. I. XII, No. 215)

சகல புவன சக்கரவர்த்திகள் அவனியாளப் பிறந்தானுன கோப்பெருஞ்சிங்க தேவனின் **19-ஆம்** ஆண்டு—சோழகோன் ஓலை.

மேற்கூறிய (b) சாசனத்தில் சொல்லப்பட்ட **சொக்கச் சீயன் கமுகு திரு நந்தவனத்** தரைக்காகக் கொடுக்கப்பட்ட 63 மா நிலம் (அறுபத்து மூன்றுமா முக்காணிக்கீழ் முக்காலும்) **'சொக்கச் சீயன் கோலால்** அளந்த இடத்து' **பதினாறுமா வரைக்காணி முந்திரிகைக் கீழ்க்கால்** நிலம் **அளவு ஏற்றம்** உண்டாகையாலே, இந் நிலத்துக்குப் **பதினெட்டாவது** வரையும் கடமையாகக் கூடின காசு தவிர்வதாகவும். இந்நிலம் உள்பட **80 மா** நிலமும் திரு நந்தவனமாவதாகவும். திருமாளிகையிலே கல்லு வெட்டுவிப் பதற்குத் **தேவர் திருமுகம் வந்தமையின்** இத் திருமுகம் **திருக்கை ஒட்டிப் பண்டாரத்திலே** சேர்த்துக் கொண்டு திருமுகப்படியே **அளவேற்ற மான நிலம்** பதினாறுமா (வரைக்காணி முந்திரிகைக் கீழ்க்காலும்) உட்பட **எண்பது மா நிலமும்** திரு நந்தவனமாக **முன்பு பெரிய தேவருக்குப் பதினைந்தாவது நாளில்** (15-ஆம் ஆண்டு 262-ஆவது நாள்) **இத் திரு நந்தவனத்துக்குத் திருமாளிகையிலே கல் வெட்டின இடத்திலே கல்லு வெட்டி வைக்கவும்** கடவதாகப் பண்ணுவதே—இவை சோழகோன் எழுத்து—என்று எழுதிப் புகுந்த ஏவற்றீட்டுப்படி கல்வெட்டியது.''

இதில் (C) கூறப்பட்டுள்ள **சொக்கச் சீயன் 'கழுகு' திருநந்தவனம்,** 16-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட திரு நந்தவனத்தைச் **சொக்கச் சீயன் கோலால்** அளந்த போது ஏற்பட்ட அள வேற்றத்தால் கூடிய (16 மாவும் குறைவும்) 80 மாநிலமும் திருநந்தவனம் ஆவதாக திருமுகம் வந்தது. அதன்படி முந்திய (b) 15 ஆம் ஆண்டுச் சாசனம் கல் வெட்டின இடத்திலேயே (தில்லைக் கோயில் இரண்டா பிரகாரம் வடக்குச் சுவரிலேயே) 19 ஆம் ஆண்டுக் கல் வெட்டும். வெட்டப் பெற்றது. ஆகவே b, c என்ற இரண்டு பகுதிகளும் ஒரே கோப்பெருஞ் சிங்கன் (கி. பி. 1243—1279) காலத்தில் ஏற்பட்டவையே என்பதில் ஐயமில்லை. தேவர் என்பதும் **பெரிய தேவர்** என்பதும் இக் கோப்பெருஞ் சிங்கனையே குறிக்கும் தொடர்களாம் என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாம்.

'A' பகுதியிலுள்ள திரு நந்தவனம் **விக்கிரமசிங்கபுரத்தில்** நிறுவப்பெற்றது.

'B, C' பகுதியிலுள்ள திருநந்தவனம் **வேசாலிப்பாடிப் பற்று பூபால சுந்தர சோழநல்லூரில்** நிறுவப் பெற்றது. இவை யாவும் ஒரே மன்னனல் நிறுவப் பட்டன என்பது வெளிப்படை.

இங்ஙன மிருக்கவும் 'A, B, C' பகுதிகளிலுள்ள 'சொக்கச் சீயன் திருநந்தவனம்' **ஒன்றே** என்றும் **பெரிய தேவர்** என்ற சொல் முதல் கோப்பெருஞ் சிங்கனைக் குறிக்கும் என்றும் வே. வே. ஐயர் கொள்ளுவது ஆதாரமற்ற முடிவாகின்றது.

எனவே வே. வே. ஐயர் தமது கொள்கை யாகிய 'கோப் பெருஞ் சிங்கர் இருவர்' என்பதை நிலை நாட்டச் சான்றுகளாகக் கருதிய (1) வில்லியனூர். (2) திருவெண்ணெய் நல்லூர் (3) சிதம்பரம் என்ற இடத்துக் கல் வெட்டுக்கள் பயனிலவாய் முடிந்தமை தேற்றம். மூன்றும் ஒரே தோட்டத்தைக் குறிக்கின்றன என்றும், **பெரிய தேவரின் 15-ஆம் ஆண்டு** என்பது முதலாம் கோப்பெருஞ் சிங்கனைக் குறிக்கிறது என்றும், மற்ற 19 ஆம் ஆண்டு, 3 ஆம் ஆண்டு என்ற இரு கல் வெட்டுக்கள் இரண்டாம் கோப்பெருஞ் சிங்கனைக் குறிக்கும் என்றும் வே. வே. ஐயர் கருதுகிறுர். மேலும் வில்லிய நல்லூர்க் கல் வெட்டு விமர்சனத்தில், முதல் கோப்பெருஞ் சிங்கன் 11 ஆண்டுகள் ஆண்டிருக்க வேண்டும் என்று கூறி விட்டுப் பின், பெரிய தேவரின் 15 ஆம் ஆண்டு 262 ஆம் நாளில்

நிறுவப் பெற்ற தோட்டத்தைக் குறிக்கும் சாசனத்தைக் கண்டு முதல் கோப்பெருஞ் சிங்கன் சுமார் 16 ஆண்டுகளாவது ஆணடிருக்க வேண்டும் என்று முன்னுக்குப்பின் முரணுக அதிசய முடிவுக்கு வந்துள்ளமை விந்தையே !*

கோப்பெருஞ் சிங்கன் **அழகிய பல்லவன்** என்றும் வழங்கலானுன். எனவே கோப்பெருஞ் சிங்கன் என்பதும் அழகிய பல்லவன் கோப்பெருஞ் சிங்கன் என்பதும் ஒருவனுடைய பெயர்களே. இச் செய்தியைப் பின்வரும் கல்வெட்டுச் சான்றுகள் வலியுறுத்தும்.

## 1. S. I. I. Vol. XII. No. 129-229/1925—ஆக்கூர்.

**சகல புவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ கோப்பெருஞ்சிங்க தேவர் அழகிய பல்லவரான வீரப்ரதாபர்** போசாளர்களேயும் சிறை கொண்டருளிப் பாண்டியாகளேயும் திறை கொண்டருளி, மீண்டு எழுந்தருளிச், சோழ மண்டலம் பார்த்தருளிக், காவேரி யாற்றுக்குத் தென்கரையே கிழக்கு நோக்கி எழுந்தருளி, திருப்பதிகளெல்லாம் கும்பிட்டருளி...''

## 2. S. I. I. XII. No. 134-62/1919—முன்னூர்.

**சகல புவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ கோப்பெருஞ் சிங்க தேவற்கு** யாண்டு 3 ஆவது... ஐய்ய தேவர் கல் வெட்டி விட்டபடியே, **அழகிய பல்லவ்ன் வீரராயனுன......கச்சிய ராயனேன்.**

---

* Vide-Article of Sri V. Venkata Subba Ayyar in the journal of the Madras University Vol. XIII No. *1*. p.p. *98—100* extracts.

In this connection, it may be pointed out that the *11*th year of Kopperunginga I corresponded with the initial year of Koppunjinga II who was coregent with his father during the last six years of the latter's rule.

The most smportant facts gleaned from the present inscription are that the elder chief was also known as Kopperunjinga deva, that he had the title Sakalabuvana chakravarthin and that he had an independent *rule of 16 years*.

*Note 3*

While Publishing the Sendamangalam inscription of Manavala-perumal, I assigned to the chief a rule of *11 years*. (Epigraphia Indica XXIV p. 27.) but now it has *to be extended to 16*.

## 3. S. I. I. XII. No. 138-221/1934-35. கோட்டமருதூர்.

சகல புவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ **அழகிய பல்லவன் கோப் பெருஞ் சிங்க தேவற்கு யாண்டு 3-ஆவது.**

## 4. No. 230. S. I. I. XII. 170/1918. பிர்ம்ம தேசம்.*

சகல புவன சக்கர வர்த்திகள் ஸ்ரீ கோப்பெருஞ் சிங்க தேவற்கு யாண்டு **27**-ஆவது... இந்நிலத்துடல் கொண்டு ஆட்டைக்கு ஒரு திருநாள் **ஆவணித்** திருநாளாக **நாம் பிறந்த நாள் திருவோணம்** தீர்த்தமாக எழுந்தருளப் பண்ணவும் **அழகிய பல்லவன்** சந்தி ஒன்று...... 'வீர பிரதாபர்'. 'புவனைகவீரர்' (இம் மன்னனின் விருதுகள்)

## 5. No 259. S. I. I. XII. 383/1928-29— திருப்பருத்திக்குன்றம்.

இத்திருமதிள் **அழகிய பல்லவன்......**

## 6. No. *121* S. I. I. XII. 83/1918—விருத்தாச்சலம்.

சகல புவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ கோப்பெருஞ் சிங்க தேவர்க்கு **6 ஆவது......**

கீழாமூர் நாட்டு திருமுனைப்பாடி **கூடல் ஆளப்பிறந்தான் அழகிய சீயன் கோப்பெருஞ் சிங்கன்** என்பவர் திருப்பள்ளித்தாமம் உதவ **அழகிய பல்லவன்** தோப்பு நிறுவுவதற்கு நில தானம் செய்தார்.

## 7. வயலூர்—418/1922.

**சகல புவன சக்கரவர்த்தி ஸ்ரீ கோப்பெருஞ் சிங்கன்** சோழனைத் (தெ)தள்ளாற்றில் வென்று, சகல பரிச் சிங்கமும் கொண்டு,

---

* The new order now issued retained only *4* out of *20* ma of land as *Madappurum* transferring the remaining *16* ma as *Devasthanam* in order to conduct from its income a festival on the day of *Tiruvonam* the natal star of the chief, to provide one *padakku* of rice daily in the month of Avani for offering to the good during the service *'Alagiya Pallavan Sandi'* instituted in his name and for repairs to the temple. V. V. Ayyar.

சோழனைச் சிறையிலிட்டு வைத்து **சோணாடு கொண்ட அழகிய சீயன்......சொக்கச் சீயன் ஆணை.**

மேற்காட்டிய கல் வெட்டுச் சான்றுகளால், அழகிய சீயன், கோப்பெருஞ் சிங்கன் என்ற பெயர்கள் சகல புவன சக்கர வர்த்திகள் ஸ்ரீ கோப்பெருஞ்சிங்க தேவர்க்கு உரியன என்பது தேற்றம்.

கோப்பெருஞ் சிங்கனே அழகிய சீயன், கோப்பெருஞ்சிங் கன் எனவும் வழங்கப் பட்டான் என்பதைப் பின்வரும் கல் வெட்டுக்களால் அறியலாம்.

## 1. No. 119. S. I. I. XII-285/1921—ஆத்தூர்.

சகல புவன சக்கர வர்த்திகள் கோப்பெருஞ்சிங்க தேவர்க்கு யாண்டு 5-ஆவது தனியூர் பெரும் பற்றப்புலியூர் உடையார் சிற்றம்பல முடையார்க்கு **அழகிய சீயன் அவனியாளப் பிறந்தான் காடவன் கோப்பெருஞ் சிங்கனேன்.**

## 2. No. 121. S. I. I. XII 83 of 1918—விருத்தாசலம்.

சகல புவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ கோப்பெருஞ் சிங்க தேவற்கு யாண்டு 6-ஆவது...... உடையார் திருமுதுகுன்ற முடைய நாயனார்க்கு திருமுனைப் பாடிக் கீழாமூர் நாட்டுக் கூடல் ஆளப் பிறந்தான் **அழகிய சீயன் கோப்பெருஞ் சிங்கன்.**

**அழகிய பல்லவன்** தோப்புக்காக நிலம் நாலு மாவும் விட் டோம்''.

## 3. No. 122. S. I. I. XII. 497/1921—திருவெண்ணெய்நல்லூர்.

சகல புவன சக்கரவர்த்திகள் **அழகிய சீயன்** கோப்பெருஞ் சிங்க தேவற்கு யாண்டு 8-ஆவது.

## 4. No. 123. S. I. I. XII. 94/1934-35—விருத்தாசலம்.

சகல புவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ கோப்பெருஞ் சிங்க தேவர்க்கு யாண்டு 8-ஆவது ஆளப்பிற...... **அழகிய சீயன் கோப்பெருஞ்சிங்கன்** முதலிகளில்.

**5. No. 221. S. I. I. XII. 119/1904—தீர்த்தநகரி.**

"ஸ்ரீ கோப்பெருஞ் சிங்க தேவர்க்கு யாண்டு இருபத்திரண்டாவது முதல் உடையார் திருத்தினை நகருடையார் தேவ தானங்கள், திருநாமத்துக் காணிகள்...... **அழகிய சீயன்** திருநந்தா விளக்கும், சந்தி விளக்கும்...... திருப்பணிகளுக்கும் இறையிலியாக விட்டோம்"

6. 513 of 1902—**திருவண்ணுமலை**

'சகல புவன சக்ர வர்த்திகள் . கோப்பெருஞ் சிங்க தேவர்க்கு யாண்டு 4-ஆவது' திருவண்ணுமலை உடைய நாயனார்க்கு 302 கழஞ்சு நிறையுள்ள பதக்கமாலை அளித்தான். **"அழகிய சீயன் அவனியாளப் பிறந்தான் கோப்பெருஞ் சிங்கன்"**

7. 500/1902—**திருவண்ணுமலை**

சகல புவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ கோப்பெருஞ் சிங்க தேவர்க்கு யாண்டு 5-ஆவது,...... நிபந்தங்களுக்கும் திருப்பணிகளுக்கும் உடலாக **'கூடல் ஆளப் பிறந்தான் காடவராயன் அழகியசீயன்ன கோப்பெருஞ் சிங்கன்'** ஒரு பரிசு அளித்தான்.

8. No. 158. S. I. I. XII. 496/1921—
**திருவெண்ணெய்நல்லூர்.**

சகல புவன சக்கரவர்த்திகள் அவனியாளப் பிறந்தான் ஸ்ரீ கோப்பெருஞ் சிங்க தேவர்க்கு யாண்டு 6 ஆவது...... இதன் மேல் **அழகிய சீயன்கோப்பெருஞ் சிங்க தேவர் நாளில்......**

9. 497/1921—**திருவெண்ணெய்நல்லூர்.**

சகல புவன சக்கரவர்த்திகள் **அழகிய சீயன் கோப்பெருஞ் சிங்க தேவர்க்கு** யாண்டு 8 ஆவது.

10. 488-b/1902—**திருவண்ணுமலை.**

சகல புவன சக்கரவர்த்திகள் **கூடல் அழகிய சீயன்** காடவராயன் அவனியாளப் பிறந்தான் கோப்பெருஞ் சிங்க தேவர்க்கு யாண்டு 9–ஆவது. மிட்டாண்டர் நாச்சியாரான நம்பிராட்டியார் பரிசு.

*11.* 512/1902—**திருவண்ணுமலை.**

சகல புவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ கோப்பெருஞ் சிங்க தேவர்க்கு யாண்டு 9-ஆவது.

'கூடல் **அழகிய சீயன்** காடவ ராயன் அவனியாளப் பிறந் தான் கோப்பெருஞ் சிங்கன் ஓலை.

## 12. 520/1902—திருவண்ணுமலை.

சகல புவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ கோப்பெருஞ்சிங்க தேவர்க்கு யாண்டு 9–ஆவது

கூடல் **அழகிய சீயன்** காடவராயன் அவனி ஆளப் பிறந் தான் கோப்பெருஞ்.சிங்கன் ஓலை.

## 13. 119/1904—தீர்த்த நகரி

ஸ்ரீ கோப்பெருஞ்சிங்க தேவர்

'அழகிய சீயன் திரு நந்தா விளக்கு'

## 14. 517/1902—திருவண்ணுமலை

சகல புவன சக்ரவர்த்திகள் காடவன் **அழகிய (சீயன்)** அவ [னியாளப்] பிறந்தான் ஸ்ரீ கோப்பெருஞ்சிங்க தேவர்க்கு யாண்டு 27–ஆவது.

## 15. 518/1902—திருவண்ணுமலை

சகல புவன சக்ரவர்த்திகள் காடவன் **அழகிய சீயன்** அவனி ஆளப் பிறந்தான் ஸ்ரீ கோப்பெருஞ்சிங்க தேவர்க்கு யாண்டு 27-ஆவது—அவனியாளப் பிறந்தான் நீல கங்கரையரின் பிராட்டியார் நங்கை ஆழ்வார்.

## 16. 489/1902—திருவண்ணுமலை

சகல புவன சக்ரவர்த்திகள் காடவன் **அழகிய சீயன்** அவனி யாளப் பிறந்தான் ஸ்ரீ கோப்பெருஞ்சிங்க தேவர்க்கு யாண்டு 31 ஆவது.

## 17. 418/1922—வயலூர்

சகல புவன சக்ரவர்த்தி ஸ்ரீ கோப்பெருஞ்சிங்கன் சோழ னைத் தெள்ளாற்றில் வென்று சகல பரிச்சிந்நமும் கொண்டு சோழனைச் சிறையிலிட்டு வைத்துச் சோணுடு கொண்ட **அழகிய சீயன்.**

மேற்குறிப்பிட்ட சான்றுகளால் கோப்பெருஞ்சிங்கன் அழகிய சீயன் எனவும் வழங்கப்பட்டானுதல் தேற்றம்.

மேலும் வே. வே. ஐயர் தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் பன்னிரண்டாம் தொகுதியில் 118 ஆம் எண் முதல் 130 ஆம் எண் முடிய உள்ள கல்வெட்டுக்கள் முதல் கோப்பெருஞ்சிங்கனைச் சார்ந்தவை யென்றும் 130 ஆம் எண் முதல் 260 ஆம் எண் முடிய உள்ள கல்வெட்டுக்கள் இரண்டாம் கோப்பெருஞ் சிங்கனைச் சார்ந்தவை என்றும் முடிவு செய்துள்ளார்.

முதலில் அவர் பகுத்து வைத்துள்ள முதல் பத்திக் கல் வெட்டுக்களை ஆராய்வோம்.

இவைகளில் அத்தி (எ. *125—296/1912*) மோரிஜோனை (எண் *127—178/1921*) திருக்கழுக்குன்றம் (எண் *130—187/1932–33*) ஆகிய இக் கல்வெட்டுக்கள் கோப்பெருஞ்சிங்கனின் தகப்பனை (நம் கிளை வழி ஆறுமவன்) பல்லவாண்டார் (அழகிய பல்லவன், ஜீயமகீபதி) காலத்தவை. மற்றவை கோப்பெருஞ்சிங்கனுக்கு (நம் கிளைவழி ஏழாமவன்) உரிமை யானவை.

இவற்றுள் **வயலூர்** (எண் *128—418/1922*) **ஆத்தூர்** (எண் *119—285/1921/*- எண் *120–286/1921*) **திரிபுவனி** (எண் *126—182/1919*) ஆகிய கல் வெட்டுக்களை நோக்கு வோம். இவற்றில் காணப்படும் விருதுகளும், கோப்பெருஞ் சிங்கனின் திராக்ஷாராமம் *(419/1893)* திரிபுராந்தகம் *(197/1905)* திருவக்கரை *(191/1904)* திருவண்ணமலை *(480/1902)* சாசனங்களில் காணப்படும் விருதுகளும் ஒப்பிட்டுக் காணப்படின் இவ்விரு திறத்தனவும் ஒருவனுக்கே உரியவை என்பது தெற்றெனப் போதரும்.

## S. I. I. எண் 118—விருத்தாசலம் 85/98

அரசூருடையான் செங்கனிவாயான் **சோழ கோனாரின்** அகம்படி முதலிகளில் ஒருவன் திருமுது குன்றமுடைய நாயனார்க்கு வைத்த திரு நந்தா விளக்குத் தானத்தைக் குறிக்கிறது. சோழ கோனார் கோப்பெருஞ்சிங்கனின் (நம் கிளை வழி ஏழாமவன்) அதிகாரிகளில் முக்கியமானவர். ஆகவே இக் கல்வெட்டு கோப்பெருஞ் சிங்கனுடையது (ஏழாமவன்) இச் சோழ கோனைப் பற்றிப் பின்வரும் கல் வெட்டுக்களிலும் காணலாம்.

திரிபுராந்தகம்— *142/1902*—மூன்றும் இராசராசரின் *16* ஆம் ஆண்டு.

சிதம்பரம்— *3* ஆம் ஆண்டு— *465/1902. 466/1902.*
சிதம்பரம்— *5* ஆம் ஆண்டு— *459/1902.*
சிதம்பரம்— *8* ஆம் ஆண்டு— படியெடுக்கப்படவில்லை.
சிதம்பரம்— *9* ஆம் ஆண்டு— *318/1913.*
சிதம்பரம்— *10* ஆம் ஆண்டு— *312/1913.*
விருத்தாசலம்— *11* ஆம் ஆண்டு— *80/1918.*
சிதம்பரம்— *11* ஆம் ஆண்டு— *108/1934 - 35.*
விருத்தாசலம்— *12* ஆம் ஆண்டு— *302/1913.*
சிதம்பரம்— *12* ஆம் ஆண்டு— படியெடுக்கப்படவில்லை.
சிதம்பரம்— *17* ஆம் ஆண்டு— *307/1913.*
சிதம்பரம்— *20* ஆம் ஆண்டு— படியெடுக்கப்படவில்லை.
சிதம்பரம்— *27* ஆம் ஆண்டு— ,,
சிதம்பரம்— *36* ஆம் ஆண்டு— *456/1912.*

போசளர்கள் கோப்பெருஞ்சிங்கனின் நாட்டின்மீது படையெடுத்த காலத்தில் **சோழகோன்** தொழுதகையூரில் இருந்து எதிரியுடன் போர் செய்தான் என்று திருவயீந்திரபுரக் கல்வெட்டு கூறுகிறது.

திருவெண்ணெய்நல்லூரில் கிடைத்துள்ள கல்வெட்டு—**S. I. I. XII No.** 122 (497/1921)— கோப்பெருஞ்சிங்கனின் 8-ஆம் யாண்டைச் சேர்ந்தது.

எண் 150—(448/1921) கோப்பெருஞ்சிங்கனின் ஆறும் ஆண்டைச் சேர்ந்தது.

எண் 189 (447/1921) அவ்வரசனின் 15 ஆம் ஆண்டைச் சேர்ந்தது.

மூன்று கல் வெட்டுக்களும் வீரர்கள்வீரப்பல்லவரையரின் தானத்தைக் குறிக்கின்றன. முதல் இரண்டும் கோப்பெருஞ் சிங்கனின் 8 ஆம் ஆண்டையும் 6 ஆம் ஆண்டையும் முறையே சேர்ந்தனவாம்.

கடைசிக் கல் வெட்டு—கோப்பெருஞ்சிங்கரின் 15 ஆம் ஆண்டில் வீரப் பல்லவரையர் இறக்கும் போது தமக்கும் தமது தம்பிக்கும் சொந்தமான 9½ மாநிலத்தைக் கோப் பெருஞ்சிங்க தேவரின் முதலிகளில் ஒருவனான இராசராச தேவனம்மையன் வானவராயனுக்குத் தேவர் **திருக்கை வழக்க**

மாகத் தந்தருள, அம்முதலி அங் நிலத்தை உடையார் ஆட்கொண்ட தேவர்க்குத் திருவிளக்குப் புறமாக விட்டருள வேண்டுமென்று விண்ணப்பித்தான். அப்படியே செய்க என்று தேவர் திருவுள்ள மாகையால் சந்தி விளக்குப் புறமாக விட்டருள வேண்டுமென்று விண்ணப்பித்தான். அப்படியே செய்க என்று தேவர் திருவுள்ளமாகையால் சந்தி விளக்கு பதினெட்டு எரிப்பதற்காக இங்நிலம் விடப்பட்டது—என்று குறிப்பிடுகிறது. இம் மூன்று கல் வெட்டுக்களும் ஒரே மன்னன் காலத்தவை என்பதில் ஐயமே இல்லை. ஆகவே, 122 ஆம் எண்ணிடப்பட்ட முதல் கல் வெட்டு முதலாம் கோப் பெருஞ் சிங்கனுடையது என்றும் ஏனைய இரண்டும், இரண்டாம் கோப்பெருஞ் சிங்கனுடைய என்றும் வே. வே. ஐயர் கொள்வது ஆதாரமற்ற துணிபாகும்.

மணவாளப் பெருமாள் என்று பட்டம் பூண்டு 5 ஆண்டுகள் ஆண்ட அழகிய பல்லவன் (நம் கிளை வழி ஆருமவன்) சேந்தமங்கலத்தில் ஊரும் படை வீடும் செய்து மறைந்தான். அவனுக்குக் கோப்பெருஞ் சிங்கன் என்ற பெயர் இல்லை. அவன் மகனே. கோப்பெருஞ்சிங்கன் சகல புவன சக்ரவர்த்தி கோப்பெருஞ் சிங்கதேவன் என்று பெயர் உடையனவும், ஆண்டு வரையறுக்கப் பட்டனவுமான கல் வெட்டுக்கள் யாவும் கி. பி. 1243 முதல் 1279 வரை ஆண்ட மகாராஜ சிம்மன் என்ற கோப்பெருஞ்சிங்கனுடையனவே என்பது ஐயமின்றித் துணியப்படும்.

## அத்தியாயம்-4

## கோப்பெருஞ்சிங்கன்

## 'வாழ்க்கையின் முற்பகுதி'

### கோப்பெருஞ்சிங்கனது பிறந்தநாள்

கோப்பெருஞ்சிங்கன் ஜீயமகீபதிக்கும் (அழகிய பல்லவன்) சீலாவதிக்கும் பிறந்த உத்தமன். அவன் ஆவணித் திருவோணத்தில் பிறந்தவன் என்பதைப் பிரமதேசம் கல்வெட்டொன்ருல் (S. I. I. XII. எண் 230, 170/1918) அறியலாம். அக் கல்வெட்டு பின் வருமாறு :

"சகலபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ கோப்பெருஞ்சிங்க தேவர்க்கு யாணடு 27-ஆவது "ஒகூர் பனையூரில் மடப்புற இறையிலியாய்ப் போதுகிற பெரும் பூமி நிலம் இருபது மாவிலே ஒகூரிலே நாலுமா நிலம் மடப்புற இறையிலியாக நீக்கவும், நீக்கி நின்ற நிலம் பதினாறு மாவும் பிராமீசுரமுடைய நாயனார்க்குத் தேவதானமாக அனைத்தாயங்களும் கார்த்திகைப் பொன் வரவும் உட்பட இறையிலியாக இருபத்தேழாவது கார்த்திகை மாதம் முதல் இட்டோம். இந் நாள் முதல் இறையிலி தேவதானமாக அனுபவிக்கவும், இந் நிலத்து உடல் (Capital Endowment) கொண்டு ஆட்டைக்கு ஒரு திருநாள் ஆவணித் திருநாளாக **நாம் பிறந்த நாள் திருவோணம்** தீர்த்தமாக எழுந்தருளப்பண்ணவும், அழகியசீயன் சந்தி என்று நாள் ஒன்றுக்குப் பதக்கு அரிசி அமுதுபடி செய்யவும் அமுதுபடிக்கும் திருநாளுக்கும் வேண்டும் உடல் நீக்கி, நீக்கி நின்ற உடல் கொண்டு திருப்பணி செய்வதாகவும் சொன்னோம். இப்படிக் கணக்கிலும் நிறுத்துவதே. இப்படிக்குக் கல் வெட்டிக் கொள்வதே என்று எழுதிய திருவெழுத்து" இக் கல்வெட்டிலிருந்து கோப்பெருஞ்சிங்கனுக்கு

'வீரப் பிரதாபர்—புவனேகவீரர்' என்ற பட்டங்களும் உண்டு என்று அறிகிறோம்.

## இவனைப் பற்றிய முதற் குறிப்பு

கோப்பெருஞ்சிங்கனைப் பற்றிய முதற் குறிப்பு திருவெண்ணெய்நல்லூர்ச் சாசனத்தில் S. I. I. XII. எண் 170—486, 487/1921) உள்ளது. இது கோப்பெருஞ்சிங்கனின் 11-ஆம் ஆண்டுக் கல்வெட்டு (1254 கி. பி.) இதன்படி, இவ்வூரிலுள்ள வைகுந்தப் பெருமாள் கோயில் விமானம் இழுச்சி எடுக்கிற போது அக் காலத்தில் முந்திய விமானத்திலுள்ள கல்வெட்டுக்களை "படியெடுத்த படிப்படி — **இற்றை நாளால்** கல் வெட்டின படி" சில தானங்கள் கூறப்பட்டுள்ளன. அவைகளில் இரண்டாவது திரிபுவன வீரதேவனான மூன்றாம் குலோத்துங்க தேவனின் 35 ஆவது ஆண்டுக் கல் வெட்டாம். அது பின் வருமாறு :

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ திரிபுவன வீரதேவருக்கு யாண்டு 35-ஆவது, ராஜராஜ வளநாட்டுத் திருமுனைப்பாடி திருவெண்ணெய்நல்லூர் நாட்டு பிரமதேயம் திருவெண்ணெய்... வைகுந்தத்தெம்பெருமானுக்கு அழகிய பல்லவன் ஸ்ரீ கோப்பெருஞ்சிங்க தேவர் இராசாக்கள் திருத்தாயார் திருநாமத்தால் உகந்தருளப் பண்ணின பெரிய பிராட்டியாருக்கு மோகண்டரான சோழிங்க தேவனேன் விட்ட திருவிடை நிலம்... 6 மா" அதாவது இவ் விமானம் கி. பி. 1254-இல் இழிச்சி எடுக்கப்பட்டது. அதிலுள்ள பழைய கல்வெட்டு திரிபுவன வீர தேவரின் 35 ஆம் ஆண்டுக்குச் சரியான கி. பி. 1213-ஆம் ஆண்டில் பொறிக்கப் பெற்றது. அதில் அழகிய பல்லவன் ஸ்ரீ கோப்பெருஞ்சிங்கரின் திருத்தாயார் திருநாமத்தால் நிலத் தானம் செய்யப்பட்டது. கி. பி. 1213இல் கோப்பெருஞ்சிங்கன் சோழ மன்னனுக்கு அடங்கிய சிற்றரசனாக இருந்திருக்க வேண்டும் என்று இதிலிருந்து தெரியவருகிறது.

## கோப்பெருஞ்சிங்கன்—பேரரசனாக முயற்சி செய்தமை (கி. பி. 1213—43)

கோப்பெருஞ்சிங்கன் கி. பி. 1213-ல் மூன்றாம் குலோத்துங்கனுக்கு அடங்கிய சிற்றரசனாகக் காணப்படுகிறான்.

அடுத்த 30 ஆண்டுகள் பேரரசனுக முயற்சிகள் பல செய்கிருன் அப்போதிருந்த நாட்டு நிலைமை இவனது எண்ணம் ஈடேறுவதற்குச் சாதகமாக இருந்தது. அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு கி. பி. 1243-ல் பேரரசனுக முடி சூட்டிக் கொண்டு 36 ஆண்டுகள் ஆண்டதாகக் கல் வெட்டுக்களிலிருந்து அறிகிறோம். இனி அப்போதிருந்த தமிழக நிலைமையை வரிசையாக நோக்குவோம்.

## மூன்றும் குலோத்துங்கனும் மதுரைப் படையெடுப்புகளும்

மூன்ரும் குலோத்துங்கனே (கி. பி. 1178—1216) சோழப் பேரரசின் கடைசி மாபெரும் வீரனுவான். இவன் ஏறக்குறைய 40 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவனது ஆட்சியின் பிற்பகுதியில் எல்லைப்புறங்களிலிருந்த குறுநில மன்னர் பலர் சுயேச்சை யடைவதற்காக முயற்சி செய்தனர் என்பதற்குப் பல சான்றுகள் முன்பே குறிப்பிட்டுள்ளோம். வடக்கே வடுகர்களும் போசளர்களும் படையெடுத்துத் தம்முடைய நாட்டெல்லையை நீட்ட முயன்றனர். காஞ்சி, நெல்லூர்-ஆகிய பிரதேசங்களில் தெலுங்குச்சோடர்களுடைய ஆதிக்கம் இருந்துவந்தது. பாண்டியர்களுடைய பட்ட உரிமைப் போரில் இரண்டாம் இராசாதிராசர் காலத்திலிருந்தே சோழர்களுடைய தொடர்பு இருந்து வந்தது. மூன்ரும் குலோத்துங்கனுடைய ஆட்சித் தொடக்கத்தில் குலசேகர பாண்டியனுக்கும் வீரபாண்டியனுக்குமே இடையே பட்டஉரிமை பற்றிய போட்டி ஏற்பட்டது. நாடு கடத்தப்பட்ட, குலசேகரனுடைய வழித்தோன்றலான விக்கிரம பாண்டியன் குலோத்துங்கனுடைய உதவியை நாடினன். சிதம்பரத்தில் காணப்படும் கல்வெட்டொன்று குலோத்துங்கனுடைய 9 ஆம்ஆண்டு 88–ஆம் நாளில் வெட்டப்பட்டதாக அறிகிறோம். குலோத்துங்கன் விக்கிரம பாண்டியனுக்கு உதவி செய்தமை அக்கல் வெட்டிலிருந்து அறியக்கிடக்கிறது.

> விக்கிரம பாண்டியன் வேண்டிவிட்ட தண்டால்
> வீரபாண்டியன் மகன்பட ஏழகம்பட மறப்
> படைபட சிங்களப்படை மூக்கறுப் புண்டு
> அலைகடல் புகவீரபாண்டியனை முதுகிடும்படித் தாக்கி
> மதுரையும் அரசுங்கொண்டு சயத்தம்பம் நட்டு
> அம்மதுரையும் அரசும் நாடும் பாண்டியற்குக்
> கொடுத்தருளி—

என்பது குலோத்துங்கனுடைய இம் முதலாம் மதுரைப் போரைக் குறிக்கும் மெய்க் கீர்த்திப் பகுதியாகும்.

அடுத்த ஆறு ஆண்டுகளுக்குள், நாடிழந்த வீரபாண்டியன் கொல்லம், ஈழம் முதலிய நாட்டு மன்னருடைய உதவியைத் துணைக்கொண்டு, மறுபடியும் இழந்த தனது அரச உரிமையைப் பெற முயற்சி செய்தான். நெட்டூரில் தன்னை எதிர்த்த வீரபாண்டியனைக் குலோத்துங்கன் தோற்கடித்தான். இதுவே குலோத்துங்கனுடைய இரண்டாம் மதுரைப் போர். வீரபாண்டியனுக்குக் கேரளர் முதலிய மன்னர்கள் உதவி செய்தும் அவன் குலோத்துங்கனை வெல்ல இயலவில்லை. எனவே, தோற்றுப்போன வீரபாண்டியன் கேரள மன்னனுடன் குலோத்துங்கனைச் சரணடைந்தான். குலோத்துங்கன் மதுரையை மீண்டும் வீரபாண்டியனுக்கே அளித்து அவனைத் திறை கொடுக்கும் அடிமன்னன் ஆக்கினான். இங்ஙனமே, சேரமன்னனையும் தனது ஆதிக்கத்தின் கீழ் அடங்கிய சிற்றரசனாக்கினான். இவ்வெற்றிக்குப் பின் குலோத்துங்கன் ஈழமண்டலத்தின் மீதும் படையெடுத்ததாக அறிகிறோம்.

மீண்டதற் பின்,
பரிபவத்தால் எடுத்து வந்து நெட்டூரில் எதிர்த்த வீரபாண்டியன்

முடித்தலைகொண்டு அமர்முடித்து அவன்மடக்கொடியை
வேளமேற்றித்
திருவிழந்த தென்னவனும் சேரலனும் வந்திறைஞ்சி
அரியணையின் கீழிருப்ப அவன்முடிமேல் அடிவைத்து
படிவழங்கி முடிவழங்கிப் பாண்டியற்கு விடைகொடுத்து
கொடிவழங்கு வில்லவர்க்குக் கொற்றவர்பெருந் திருவழங்கி
வீரகேரளன் விறல்தறித்து வெலக்கண்டு வந்திறைஞ்ச
பாரறிய வாழ்வருளிப் பரிசுவந்து அமுதளித்துப்
பருதிகுல பதியென்று திருநாமந்தரித்த பாண்டியற்கு
இருநிதியும் பரிச்சட்டமும் இலங்குமணிக் கலனும் நல்கி
ஈழமண்டலம் எறிந்தருளி—

என்ற மெய்க்கீர்த்திப் பகுதி குலோத்துங்கனுடைய இரண்டாவது மதுரைப் படையெடுப்பை விளக்கிக் கூறுவதாகும்.

இப்போர் முடிந்த அளவிலே சோழ நாட்டின் வட பகுதியில் குறுநில மன்னர்களால் கலகம் ஏற்படவே, பெரிய

தொரு சேனையுடன் சென்று காஞ்சியையும் தெலுங்குச் சோழ நாடுகளையும் வென்று குலோத்துங்கன் வெற்றி வீரனாக மீண்டான். இங்ஙனம் அமைதியை நிலைநாட்டிய சோழமன்னன் ஏறக்குறைய பத்தாண்டுகள் போர் முழக்கமின்றி அரசாண்டு வந்தான்.

அதற்குள் பாண்டிய நாடு புத்துயிர் பெற்றது. நாடிழந்த விக்கிரம பாண்டியன் புதல்வனான சடைய வர்மன் குலசேகரன் பாண்டிய அரசுக்குப் புத்துயிர் அளிக்க மாபெரு முயற்சி செய்து வந்தான். இரண்டாம் பாண்டியப் பேரரசுக்கு அடிகோலியவன் இக் குலசேகர பாண்டியனே யாவான். சோழனால் ஆதரிக்கப்பட்ட வீரபாண்டியனை விலக்கி விட்டுச் சடையவர்மன் குலசேகரபாண்டியன் அரியணையேறிச் சோழனது வலிமையை அடக்குவதற்கு ஆவன புரிவதில் தனது கவனத்தைச் செலவிட்டான். சோழனது ஏகாதிபத்தியத்தை ஒப்புக்கொள்ளாமல் தனது சுயேச்சையை நிலை நாட்டினான். பாண்டியனது வலிமை பெருகவே, பாண்டிய மன்னனைக் குலோத்துங்கன் மீண்டும் அடக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்காகவே மூன்றும் மதுரைப் படையெழுச்சி ஏற்பட்டது. வட மன்னர்களை வென்று கருவூரில் விசயாபிஷேகம் செய்து கொண்ட குலோத்துங்கன் வீரமுடி புனைவதற்கு மதுரையின் மீது (மூன்றும் முறை) படையெடுத்ததாக மெய்க் கீர்த்தி குறிப்பிடுகிறது. புதுக்கோட்டைப் பகுதியில் கிடைத்துள்ள சேரனூர், குடுமியான்மலை ஆகிய இடங்களிலுள்ள கல்வெட்டுகள் இம்மெய்க் கீர்த்தியைக்கொண்டு மிளிர்கின்றன.

குலோத்துங்கனின் மூன்றும்முறை மதுரைப் படையெடுப்பை விளக்கிக் கூறும் மெய்க்கீர்த்திப் பகுதி பின்வருமாறு :

பூழியர் கெடக் கொங்கும் பாழ்படப் பொருதுபுக்கு
கருவூரில் சோழ கேரளன் என்று மன்னர்தொழ
விசையமா முடிசூடி வீரமுடி புனைவதற்கு
விட்டெழுந்து பன்னதான் வந்துடன் போர்மலையப்
படைவிட்ட...........மாயப் படையெல்லாம் படப்பொருது
கட்டரண்கள் அட்டுக்கொடி மலைக்குவ டிடித்து
மட்டியூரும் கழிக்கோட்டையும் வளைத்தறுத்துக் களமாடி
நெட்டலகைக் குலமாட நெடுங்களிற்றுலமர்ந்.........குடியில்
கடியரணப் போர்ப்படையைப் பொடியாக்கி அடியுண்ட
படைத்தகை விறைவிருதா வளைப்புண்டு பிடியுண்டு

புலமாட நெடுங்களிற்ருல் கட்டுண்டு பேதையர்கள் உடங்கே
போக
எண்ணில் கோடி படைவீரர் புண்ணீரில் புக்கழிந்து
ஆக்கியபோர் வலிவிருதர் மூக்கிழந்து முகமழிய
மறப்படையுடன் ஏழகப்படை சிறைப்பட்டு விழத்தடிந்து
தந்தைமறஞ் சாய்ந்துடையத் துரந்துசெந்நா அழிஞ்சநறுந்
தென்மதுரைப் புறமதிலைத் தன்னெடும் படைக்கடல் வளையப்
பெருவழுதியரும் தம்பியரும் பெற்றதாயரும் பேருரிமையும்
பொருவருதுயர் துணையாக வேறுவேறு சுரம்படரத்
தென்மதுரைப் பதிபுக்கு வந்ததையெல் லாங்கொடுத்துப்
பொடிபடுத்தி வழுதியர் தம்கூட மண்டபம்
கழுதை யேரிட உழுதுபுகழ்க் கதிர்விளையக் கவடிவித்தி
..................... பேல பதங்கண்டு கேட்டு
..................... மதகளிருே ரெட்டும் ஏழுலகும் இடர்தீரச்
சோழபாண்டியன் என்று போர்வீரர்............கள் களிப்ப
வீரமா முடி புனைந்து.

குலோத்துங்கனின் மூன்ரும் முறை மதுரைப் படையெடுப்பை விளக்கிக் கூறும் மெய்க்கீர்த்திப் பொருள் பின்வருமாறு:

(இ. ள்.) பூழி நாட்டவர் கெடவும், கொங்கு நாடு பாழ்படவும் போர் செய்து புகுந்து, கருவூரிலே சோழ கேரளன் என்ற பெயரோடு கூட அரசர்கள் வணங்கும்படியாக விஜயாபிஷேகம் செய்து கொள்வதற்காக அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுப் பல அரசர்களும் வந்து ஒரு சேரப் போர் செய்ய, அவர்கள் அனுப்பிய பெரிய சேனைகளெல்லாம் அழியுமாறு போர் செய்து, வலிமை பொருந்திய மதில்களை இடித்துக் கொடிகள் உயர்த்திய மலை உச்சிகளை இடித்து,மட்டியூரையும் கழிக்கோட்டையையும் முற்றுகை யிட்டுக் கைப்பற்றிப் போர்க் களத்தில் வென்று, பேய்க்கூட்டங்கள் ஆடும்படியாகத் தான் யானை மீது ஏறி, காவல் பொருந்திய மதில்களில் போர்செய்யும் படைகளைச் சின்ன பின்னம் செய்து, அடிபட்ட படைவீரர்கள் பிடிக்கப்படவும், எண்ணற்ற பெண்கள் அடிமையாகி உடன் செல்லவும். பலகோடிப் படை வீரர்கள் இரத்த வெள்ளத்தில் புக்கு அழுந்தவும், போரில் வலிமைமிக்க அரசர்கள் மூக்கினை இழந்து முகத்தழகு அழியவும், வலிமை மிக்க மறப் படையும், ஏழகப் படையும் அணையாகுமாறு வெட்டி வீழ்த்தி, பாண்டிய மன்னனுடைய வீரம் அழிந்து, ஒழியுமாறு படை

யைச் செலுத்தி, புலவர்களால் பாடப்படும் தன்மை நீங்கிய அழகிய மதுரையின் வெளி மதிலைத் தன்னுடைய பெரிய படைக்கடல் வளைக்கவும், பெரு வழுதியாகிய பாண்டிய மன்னனும், தம்பிகளும், பெற்ற தாய்மார்களும், பெரிய தேவியர் கூட்டமும் துயரமே துணையாக வேறு வேறு பாலை நிலங்களை நோக்கிச் செல்லவும், அழகிய மதுரைமா நகரினுள் புகுந்து, கிடைத்த செல்வத்தை வறியோர் முதலியவர்களுக்குக் கொடுத்துப் பாண்டியனுடைய கூட மண்டபத்தை இடித்துத் தூளாக்கிக் கழுதையை ஏராகக் கட்டி உழுது புகழாகிய கதிர் விளையுமாறு கவடிகளை விதைத்து, எளிய செவ்வியோடு முறை வேண்டினவர்களையும் குறை வேண்டினவர்களையும் கண்டு, அவர் துயரத்தைக் கேட்டு, அஷ்டதிக்கஜங்களும் ஏழு உலகங்களும் துயர் நீங்குமாறு சோழ பாண்டியன் என்ற பெயரோடு போர்வீரர்கள் கண்டு களிக்குமாறு வீராபிஷேகம் செய்துகொண்டு.

"திரிபுவன வீரரென்று இருநிலஞ்சொல முடிசூடி
இகல்கழல் கட்டி புகழ்வீரக் கொடியெடுத்துத்
தியாகக்கொடி திசை எட்டிலும் ஏகக் கலிப்பகைதுரக்க
மாமதுரை வலங்கொண்டு திருவால வாயுறையும்
தேமலர்க் கொன்றை வார்சடைச் செழுஞ்சுடரைத்
தொழுதிறைஞ்சி
ஆங்கவர்க்கும் பூணாரம் அநேகவிதம் கொடுத்தருளி
ஓங்கிய பே ரொலிகழ லிறைஞ்ச இந்த............நது
பொற்படியும் இரத்தினக் கற்படியும் கொடுத்தருளி
வண்டலர்தார் வழுதியரைக் கொண்ட பாண்டி மண்டலத்தைச்
சோழபாண்டியன் மண்டல மென்று எழுபாரும் செலநிறுத்தி
மல்லல்வையை மதுரையையும் மதுரை என்ற பேரொழித்துத்
தொல்லை முடித்தலை கொண்ட சோழபுரம் என்றருளித்
தார்வழுதி மண்டபத்தில் சேரபாண்டியர் தம்பிரான் என்று
பேர்எழுதிப் பாண்டியனைப் பாண்டியன் என்னும் பேர்மாறிவர
நெடும்படைத் தென்னவன்கெட மதுரைகொண்ட தோள்வலி
பாடிய
பாணனைப் பாண்டியன் என்று பருமணிப்பட்டம் கட்டி சூட்டி.

(இ. ள்.) தன்னைத் **திரிபுவன் வீரன்** என்று உலகத்தார் சொல்லுமாறு மகுடஞ்சூடி, மாறு பாட்டை உடைய வீரக்கழலைக் கட்டி, புகழுக்குரிய வீரக் கொடியை உயர்த்தி, தியாகத்தைத்தெரிவிக்கும் கொடி எட்டுத் திக்கிலும் செல்ல, தரித்திர

மாகிய பகையை விரட்டுவதற்கு மதுரைமா நகரை வளங் கொண்டு, திருவாலவாயில் எழுந்தருளியிருக்கும் தேன் பொருந்திய கொன்றைப் பூவை நீண்ட சடையிலணிந்துள்ள சிவபெருமானை மனத்தாலும், மெய்யாலும் வணங்கி, அவ்வாண்டவனுக்குப் பலவிதமான ஆபரணங்களைக் கொடுத்து, மிக மேம்பட்ட திருவடிகளை வணங்கி, அவருடைய இந்திர விமானத்துக்குப் பொற்படியும் இரத்தினக் கற்படியும் கொடுத்து, வண்டுகள் ஒலிக்கும் மாலையை யணிந்த பாண்டியர்களுக்குச் சொந்தமாக இருந்த பாண்டிய மண்டலத்தைச் **சோழ பாண்டிய மண்டலம்** என்று உலகம் சொல்லுமாறு பெயர் வைத்து, வளப்பமுடைய வையை யாற்றை யடுத்த மதுரை என்ற கோநகருக்கு அம்பெயரை நீக்கி, தொல்லை **முடித்தலை கொண்ட சோழபுரம்** என்று பெயர் வைத்துப் பாண்டியனது அத்தாணி மண்டபத்தில், சேர பாண்டியர் தம்பிரான் மண்டபம் என்று பெயர் பொறித்து, பாண்டியனுடைய 'பாண்டியன் என்ற அரசர் குடிப் பெயரை'த்தான் மதுரையைக் கைப்பற்றிய தோள்வலிமையைப் பாடிய பாணனுக்குச் சூட்டி, அவனுக்குப் பாண்டியன் என்று பட்டங் கட்டி—

"வெஞ்சிலை வாங்கி வேட்டைநீர் படிந்தாடி
ஓடைமத களிறேறி ஆடல்வன் பரிகடவித்
தண்துளவ மலர் மாலையில் வண்டரற்றச் செண்டாடி
அரன்திரு ஆலவாயில் அமைந்தவர்க்குத் தன்பேரால்
சிறந்த பெருந் திருவீதியும் திருநாளும் கண்டருளிப்
பொருப்பு நெடுஞ்சிலையான் முப்புரம் எரித்த சொக்கற்குத்
திருப்பவனி கண்டருளித் திருவீதியில் சேவித்துத்
தென்மதுரைத் திருவாலவாய் பொன்மலை எனப் பொன்வேய்ந்து
சிறைகொண்ட புனல்வையைச் சேரபாண்டியன் மண்டலத்து
இறைகொண்ட பசும்பொன்னும் இறையிலியும் எயிற்புலியூர்
ஆடுமம்பல வாணர்கூடி வாய்ந்ததிரு நடங்கண்டருளும்
பாடகக்கால் பைங்கிளிக்கும் பைம்பொன்மதில் திருவாரூர்
வானவற்கும் திரிபுவனீச்சரம் அருந்தவர்க்கும்
தேன்விரிசடைத் திருவாலவாய் அரனெனும் செழுஞ்சுடர்க்கும்
கொடுத்தருளி"

(இ. ள்.) கொடிய வில்லை வளைத்து வேட்டையாடிய இரத்தத்தில் படிந்து ஆடி நெற்றிப் பட்டத்தையுடைய மத யானையின் மீதேறி, வெற்றியைத் தரும் வலிய குதிரையைச் செலுத்தி, தான் அணிந்த வளமான திருத்துழாய் மாலையில்

வண்டுகள் ஒலிக்குமாறு அதைச் செண்டு வெளியில் ஓடுவித்து, திருவால வாயில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்குத் தன் பெயரினுல் ஒரு திருவீதியும் கட்டித் திருநாளும் தொடங்குவித்து, மேருவை வில்லாக ஏந்தி மூன்று அரண்களையும் அழித்த சொக்கநாதற்குத் திருப்பவனி வருவதற்கு வேண்டிய பொருள்களை அமைத்துக் கொடுத்து, அவர் திருவீதியில் எழுந்தருளும் போது அவரைச் சேவித்து, அழகான மதுரையிலுள்ள திருவாலவாய்க் கோயிலைப் பொன்மலை என்று சொல்லுமாறு பொன்வேய்ந்து, வையை யாற்றைக் காவலாகக் கொண்ட சேர பாண்டியன் மண்டலத்தில் இருந்து கைப்பற்றிய பசிய பொன்னையும், இறையிலி நிலங்களையும், அழகான திருப்புலியூரில் (சிதம்பரம்) சிவபெருமானுடைய திரு நடனத்தைக் கண்டு களிக்கும் பாடகத்தை அணிந்த கால்களையுடைய சிவகாமி அம்மைக்கும், அழகான பொன்மயமான மதிலை உடைய திருவாரூர்த் தியாகேசருக்கும், திரிபுவனீச்சரமுடையார்க்கும், தேன்வெளிப்படும் சடைமுடியை உடைய திருவாலவாய்ச் சிவபெருமானுக்கும் கொடுத்து,

மந்திரமறை முழுதுணர்ந்த அந்தணர்க்கு அறமேற்றி
எழுதுவென்றிச் சயத்தம்பம் எத்திசையிலும் நடுவித்து
வழுவில்செஞ் சொற்கலி குன்று பீடங்களாக
மதுரை யடங்கலும்-பொறிப் பித்தவன்
அடிநிழற்கீழ் அபயமினி அஞ்சலென............
............வழுதிக்கும் பதிதடையும் சாமர்ரையும்
கோசலையும் வெம்பரியும் கொடித்தேரும் குஞ்சரமும்
வையைநாடும்............இவற்கு............
திக்கெட்டும் எல்லை தொடர............
............வெற்பின் புகழுலாவ
செம்பொன் வீரசிம்மாசனத்து வீற்றிருந்தருளிய
கோப்பரகேசரி வர்மரான திரிபுவன சக்கரவர்த்திகள்
ஸ்ரீமதுரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையும்
கொண்டு வீராபிஷேகமும் வீசையாபிஷேகமும் பண்ணியருளிய
திரிபுவன வீரதேவர்.

மந்திரமாகிய வேதம் முழுவதையும் உணர்ந்த அந்தணர்களுக்கு அறம் பல செய்து, தன் வெற்றிகள் எழுதப்பட்ட ஜயஸ்தம்பங்களை எல்லாத் திசைகளிலும் நடச்செய்து, குற்றமற்ற சொற்களால் இயற்றப்பட்ட தன் கீர்த்திச் செய்யுட்களைக்

குன்றுகளையே பீடங்களாகக் கொண்டு மதுரை முழுவதும் பொறிக்கச் செய்தவன் தன் அடியில் வந்து விழுந்து தஞ்சம் என்று கிடந்த பாண்டியனுக்கு, அவனது நாடும், ஊரும், சாமரைகளும், பசுக்கூட்டங்களும், குதிரைகளும் தேர்களும் யானைகளும் ஆகிய எல்லாவற்றையும் திருப்பியளித்துத் தன் நாட்டிற்கு எட்டு திக்குகளும் எல்லையாகப் பொருந்தவும், மலைகளிலே தன் புகழ் உலாவவும் செம்பொன்னால் ஆகிய வீர சிம்மாசனத்தில் வீற்றிருந்தருளிய அரசரான பரகேசரி வர்மர் திரிபுவன சக்கரவர்த்திகள்—மதுரையும், ஈழமும் கருவூரும் பாண்டிய மன்னனுடைய முடித்தலையும் கைக்கொண்டு வீராபிஷேகமும், விசையாபிஷேகமும் செய்தருளிய திரிபுவன வீர சோழதேவர்–[163, 166-**Pudukkottai Inscriptions**].

இம்மதுரை வெற்றியே (ஏறக்குறைய கி. பி. 1205–இல் நிகழ்ந்தது.) மூன்றாம் குலோத்துங்கனுடைய மாபெரும் வெற்றியாகும். இவ்வெற்றியே அவனுடைய வீழ்ச்சிக்கும் அடி கோலியாயிற்று. இத்தோல்வியால் ஏற்பட்ட பரிபவத்தைத் தாங்கவொண்ணாது சடையவர்மன் குலசேகர பாண்டியன் வருந்தி வருந்தி 10 ஆண்டுகள் வாழ்ந்து இறக்கவே, அவனுடைய இளவலான முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன், இப்போரினால் ஏற்பட்ட பரிபவத்தைத் துடைக்கக் கருதிப் பெரும்படை திரட்டித் தான் அரியணையேறிய (கி. பி. 1216) இரண்டு ஆண்டுகளுக்குள் சோழ நாட்டின் மீது படையெடுத்தான்.

**மாறவர்மன் சுந்தர பாண்டியனுடைய மெய்க்கீர்த்தி பின்வருமாறு:–**

பனிமலர்த் தாமரைத் திசைமுகன் படைத்த
மநுநெறி தழைப்ப மணிமுடி சூடி
பொன்னிசூழ் நாட்டில் புலியாணை போயகலக்
கன்னிசூழ் நாட்டின் கயலாணை கைவளர
வெஞ்சின இவுளியும் வேழமும் பரப்பித்
தஞ்சையும் உறந்தையும் செந்தழல் கொளுத்திக்
காவியும் நீலமும் நின்றுகவின் இழப்ப
வாவியும் ஆறும் அணிநீர் நலனழித்துக்
கூடமும் மாமதிலும் கோபுரமும் ஆடரங்கும்
மாடமும் மாளிகையும் பண்டாரமும் பல இடித்துத்
தொழுதுவந் தடையா நிருபர்தந் தோகையர்
அழுத கண்ணீர் ஆறு பரப்பிக்

கழுதைகொண் டுழுது கவடி வித்திச்
செம்பியனைச் சினமிரியப் பொருதுசுரம் புகவோட்டி.

(இ-ள்) குளிர்ந்த தாமரைப் பூவில் இருக்கும் பிரமனுல் படைக்கப்பட்ட மனுதர்மம் தழைக்குமாறு அழகான முடிசூடி, காவிரி சூழ்ந்துள்ள சோழ நாட்டில் புலி முத்திரையின் ஆணை போய் நீங்குமாறும், பாண்டிய நாட்டினுடைய கயல் முத்திரையின் ஆணை வளருமாறும், கொடிய கோபத்தையுடைய யானைகளையும் குதிரைகளையும் செலுத்தி, சோழர்களுடைய தலைநகரங்களாகிய தஞ்சாவூரையும், உறையூரையும் தீ வைத்துக் கொளுத்தி, குவளை மலர்களும், நீலமலர்களும் தமது அழகை இழக்கும்படித் தடாகங்களிலும் ஆறுகளிலும் உள்ள நீரைக் கலக்கி, கூடம், மதில், கோபுரம், கூத்தாடும் மேடைகள், மாடங்கள், மாளிகைகள், பொக்கிஷம்—இவற்றை இடித்துத் தள்ளி, தன்னை வந்து அடி பணியாத அரசர்களுடைய மனைவியர் அழுத கண்ணீரினுல் ஆறு ஓடுமாறு செய்து, பகைவரது நிலத்தைக் கழுதை ஏர் பூட்டி உழுது, கவடிகளை விதைத்து, தன் கோபம் நீங்குமாறு சோழனேடு போர் செய்து அவனைக் காட்டுக்கு ஓடுமாறு விரட்டி,

"பைம்பொன் முடிபறித்துப் பாணருக்குக் கொடுத்தருளிப்
பாடருஞ் சிறப்பின் பருதி வான்றேய்
ஆடகப் புரிசை ஆயிரத் தளியில்
சோழவளவன் அபிஷேக மண்டபத்து
வீராபி ஷேகம் செய்து புகழ் விரித்து
நாளும் பரராசர் நாமந் தனைப் பிடுங்கி
மீளும் தறுகண் மதயானை மேற்கொண்டு
நீராழி வையம் முழுதும் பொதுவொழித்துக்
கூராழியும் செய்ய தோளுமே கொண்டுபோய்,

(இ-ள்) சோழனுடைய பசிய பொன்னுலாகிய கிரீடத்தைப் பற்றிப் பாணனுக்குக் கொடுத்து, பெருமை மிகுந்த சூரியனை உடைய ஆகாயத்தை அளாவிய பொன் மதிலையுடைய ஆயிரத்தளி என்ற ஊரில் சோழ மன்னனுடைய 'சோழ வளவன்' என்ற பெயரை யுடைய முடி சூடும் மண்டபத்தில் வீராபிஷேகம் செய்துகொண்டு, தன் புகழை விரிவடையச் செய்து, நாள்தோறும் வேற்றரசர்களுடைய பெயரை அழித்து மீண்டு வரும் வீரம் சான்ற யானையின்மேல் ஏறிக் கொண்டு, கடலால் சூழப்பட்ட உலகம் முழுவதும் மற்றவருக்

கும் உரிமை என்னும் சொல்லை நீக்கி, கூர்மையான சக்கரமும் சிவந்த தோள்களும் ஆகிய இரண்டுமே தனக்குத் துணையாகக் கொண்டு சென்று,

"ஐயப்படாத அருமறைதேர் அந்தணர்வாழ்
தெய்வப் புலியூர்த் திருவெல்லை யுட்புக்கு
பொன்னம் பலம்பொலிய ஆடுவார் பூவையுடன்
மன்னும் திருமேனி கண்டு மனங்களித்துக்
கோல மலர்மேல் அயனும் குளிர் துழாய்
மாலும் அறியா மலர்ச்சே வடிவணங்கி
வாங்குசிறை யன்னம் துயிலொழிய வண்டெழுப்பும்
பூங்கமல வாவிசூழ் **பொன்னமரா வதியில்**
ஒத்துலகம் தாங்கும் உயர்மேரு வைக்கொணர்ந்து
வைத்தனைய சோதி மணிமண் டபத்திவிருந்து,"

(இ-ள்) பிறரால் ஐயுறத் தகாத அரிய வேதங்களை ஆராய்கின்ற அந்தணர்கள் வாழும்படியான தெய்வத் தன்மை பொருந்திய திருப்புலியூரின் (சிதம்பரம்) எல்லைக்குட் புகுந்து பொன்னம்பலம் விளக்க மடையுமாறு ஆடும் சிவபெருமான் உமாதேவியோடு நிலை பெற்றிருக்கும் அரிய மேனியைக் கண்டு மனம் களிப்புற்று, அழகிய தாமரைப் பூவில் உள்ள பிரமனும், குளிர்ந்த திருத்துழாய் மாலையை அணிந்த திருமாலும் அறியமாட்டாத திருவடித் தாமரைகளை வணங்கி, அன்னங்கள் துயில் நீங்குமாறு வண்டுகள் காலையில் ஒலித்து எழுப்பும் தாமரைப் பூக்களை உடைய தடாகங்கள் சூழ்ந்த பொன்னமராவதி என்ற ஊரில் உலகங்களைப் பொருத்தமாகத் தன்னிடத்தே கொண்டு தாங்கும் உயர்ந்த மேருவைக் கொணர்ந்து வைத்தாற்போன்ற அழகிய மண்டபத்திலே இருந்து,

"சோலை மலிபழனச் சோணாடுந் தானிழந்த
மாலை முடியும் தரவருக என்றழைப்ப
மான நிலைகுலைய வாழ்நகரிக் கப்புறத்துப்
போன வளவன் உரிமையொடும் புகுந்து
பெற்ற புதல்வனை நின்பேர்என்று முன்காட்டி
வெற்றி அரியணைக் கீழ்விழுந்து தொழுதிரப்பத்
தான்னேடி முன்பிழந்த வெம்மையெலாம் கையகலத்
தானே தகம் பண்ணி."

(இ-ள்) சோலைகள் நிரம்பிய மருத நிலத்தை உடைய சோழ நாட்டையும், தான் இழந்த முடியையும் தருகின்றேன்- சோழன் இங்கு வருக - என்று கூப்பிட்ட அளவிலே மானத்தின் நிலைகுலைந்ததால் தலைநகருக்கு அப்பால் ஓடி மறைந்த (மூன்றாம் குலோத்துங்க) சோழன் தன் மனைவியோடும் வந்து. தான் பெற்ற புதல்வனுக்கு (மூன்றாம் இராசராசன்) பாண்டியனுடைய பெயரை வைத்திருப்பதாகச் சொல்லி அவனிடத்தில் புதல்வனைக் காட்டி வெற்றிமிக்க அரியணையின் அடியில் விழுந்து வேண்டிய அளவில், தன் குலத்தினரைச் சோழன் முன்பு இழந்ததால் உண்டான வெம்மையெல்லாம் நீங்குமாறு நீர் வார்த்துச் சோழ நாட்டை அவனுக்கு அளித்து,

"தண்டார் முடியுடனே,
விட்ட புகலிடந்தன் மாளிகைக் குத்திரிய
விட்ட படிக்கென்றும் இதுபிடி பாடாக வெனப்
பொங்குதிரை ஞாலத்துப் பூபாலர் தோள் விளங்கும்
செங்கயல் கொண்டூன்றும் திருமுகமும், பண்டிழந்த
சோழபதி என்னும் நாமமும் தொன்னகரும்
மீளவழங்கி விடை கொடுத்து விட்டருளி."

(இ-ள்) குளிர்ந்த மாலையால் அலங்கரிக்கப்பட்ட முடியுடனே, தன் மாளிகைக்கு மீண்டும் செல்ல அனுமதிக்கப்பட்டதற்குச் சான்றாகக் கயல் முத்திரையிட்ட திருமுகம் கொடுத்து முன்பு இழந்த 'சோழபதி' என்ற பெயரையும் பழைய தலைநகரையும் மீண்டும் அவற்கு அளித்து விடை கொடுத்தனுப்பினான்.

இம்மெய்க் கீர்த்திப் பகுதியால் (சுமார் 1205-இல்) மதுரையில் குலோத்துங்கன் வெற்றி கொண்டதற்கு அறிகுறியாக விழா நடத்தி மகிழ்ந்தது போலவே சுந்தர பாண்டியனும் (கி. பி. 1218-இல்) சோழர் தலைநகரான ஆயிரத்தளியில் அபிஷேக மண்டபத்தில் விழா நடத்திப் பழிக்குப் பழி வாங்கிச் சினம் தீர்ந்தான் என்று அறிகிறோம்.

சோழ நாட்டைக் கைப்பற்றிய சுந்தர பாண்டியன் 'சோணாடு கொண்ட சுந்தர பாண்டியன்' என்று விருதுப் பெயர் பூண்டான். பின் சோழ நாட்டைக் குலோத்துங்கனுக்கே திருப்பிக் கொடுத்துச் 'சோணாடு வழங்கிய சுந்தர பாண்டியன்' என்றும் விருதுப் பெயர் கொண்டான்.

இவ்வளவு மாபெரும் வெற்றி பெற்ற சுந்தர பாண்டியன் சோழ நாட்டைத் தன் ஆளுகைக்குள் வைத்துக் கொள்ளாமல் மீண்டும் சோழ மன்னனுக்கே திருப்பிக் கொடுத்த செயல் வியப்பாகத் தோன்றக்கூடும். ஆனல் அங்ஙனம் சோழ நாட்டைத் திருப்பிக் கொடுத்ததற்குக் காரணம் இல்லாம லில்லை.

சுந்தர பாண்டியன் முடி சூடிய காலத்தில் போசள நாட்டை இரண்டாம் வல்லாள தேவன் ஆண்டு வந்தான். அவனுடைய தேவிமார்களில் 'சோழமாதேவி' என்று ஒருத்தி இருந்ததாக அறிகிறேம். ஆகையால் சோழர்களுக்கும் போசளர்களுக்கும் இடையே மணவினைத் தொடர்பு இருந் தமை போதரும். ஏறக்குறைய கி. பி. 1217இல் வல்லாள தேவ னுடைய மகனை வீர நரசிம்ம தேவன் படை திரட்டிக் கொண்டு திருவரங்கம் வந்ததாக அவனுடைய கல்வெட் டொன்று குறிப்பிடுகிறது. மற்ருெரு கல்வெட்டு வல்லாள தேவனுக்குச் "சோழ ராஜ்ய பிரதிஷ்டாசாரியார்" என்றும், "பாண்டிய கஜகேசரி" என்றும் பட்டப் பெயர்களைக் குறிப் பிடுகிறது. அவனுடைய புதல்வன் நரசிம்மனும் **சோழகுலைகரக்ஷ: மகதோர்வீபால நிர்மூலக:** என்னும் பட்டங்களைப் புனைந்துள்ள தாக அறிகிறேம். இவற்றிலிருந்து போசள மன்னர்கள் சோழ மன்னர்களுக்கு உறவினர் என்பதும், சோழ மன்னருக்குத் துன்பம் நேர்ந்த இடங்களிலெல்லாம் உதவி செய்து சோழ அரசை நிலைநிறுத்தியிருக்க வேண்டும் என்பதும் அறியப்படு கின்றன.

போசளர்களின் உதவி சோழர்களுக்கு இருந்ததால் சோழ அரசை அறவே ஒழிக்க முடியாது எனக் கருதித் தான் கைப்பற்றிய சோழ நாட்டைச் சுந்தரபாண்டியன் சோழ மன்னனுக்கே திருப்பியளித்திருக்க வேண்டும். இது மெச்சத் தக்க அரசியல் தந்திரம் என்பதில் ஐயமில்லை.

விஜயாலயச் சோழன் காலம் முதல் வீறு கொண்டு கிளம்பிய சோழநாடு, இராசேந்திர சோழ தேவன் காலத்தில் வட திசை கங்கையும் தென்திசை இலங்கையும் குடதிசை மகோதையும் குணதிசை கடாரமும் தனது எல்லைகளாகக் கொண்டு மிளிர்ந்த சோழ நாடு, திரிபுவன சக்கரவர்த்தி ஸ்ரீ மதுரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையும்

கொண்டு வீராபிஷேகமும் விசையாபிஷேகமும் பண்ணி யருளிய திரிபுவன வீரசோழதேவன் ஆகிய மூன்றும் குலோத் துங்கனின் ஆட்சியின் இறுதியில் கி. பி. 1218இல் தனது பழம் பெருமையை இழந்தது. பராந்தக சோழன் காலத்தில் ஏற் பட்ட கன்னர தேவனின் படையெழுச்சியைத் தவிர வேறு சமயத்தில் பகைவர் நுழைந்தறியாத சோழநாடு இப்போது பரிபவப்பட்டு மீண்டும் சோழ மன்னனுக்கே வழங்கப்படுவ தாயிற்று. பாண்டியனிடமிருந்து மீண்டும் தான் பெற்ற சோழ நாட்டைக் குலோத்துங்கன் ஆளவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே இளவரசனுக முடிசூட்டி வைத்த மூன்ரும் இராசராசனிடமே அரசாட்சி முழுவதையும் ஒப் படைத்துவிட்டுத் தான் அரசியலிலிருந்து அடியோடு விலகிக் கொண்டான் என்றே அறிகிருேம், மூன்ரும் குலோத்துங்க னின் 40-ஆம் ஆண்டுக்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் கிடை யாமையே இக் கருத்தை வலியுறுத்தும். தோல்விக்குப் பிறகு மூன்ரும் குலோத்துங்கன் அதிக நாட்கள் உயிர் வாழவில்லை. வெகு விரைவில் காலமாகிவிட்டான் என்றே உய்த்துணர வேண்டியிருக்கிறது. முன்பு கி. பி. 1205-இல் குலசேகர பாண் டியனுக்குத் தான் இழைத்த பரிபவம் முழுவதையும் கி. பி. 1218-இல் மூன்ரும் குலோத்துங்கன் தானும் அனுபவித்த இச் செயல், 'பிறர்க்கின்ஞ முற்பகல் செய்யின் தமக்கின்ஞ பிற் பகல் தாமே வரும்' என்ற குறட்பாவுக்கு இலக்கியமாய் அமைகிறதன்ருே !

இச்சீர் குலைந்த நிலையே தக்க தருணம் எனக் கருதிக் கோப்பெருஞ்சிங்கன் தலையெடுத்துச் சோழநாட்டை வென்று ஆள முயன்ருன் என அறிகிருேம். முதல் பாண்டியப் படை யெழுச்சிக்குப் பிறகு மற்ருெரு முக்கிய சம்பவம் தொண்டை நாட்டில் நிகழ்ந்தது. [271/1904]

ஆந்திர நாடு சித்தூர் ஜில்லாவிலுள்ள **யோகி மல்லவரம்** என்ற ஊரில் ஒரு வீரக் கல்வெட்டு உள்ளது. இதன்படி வீர நரசிங்கதேவர் ஆன யாதவராயருக்கும் காடவராயருக்கும் உறத்தியில் போர் நிகழ்ந்த தென்றும், அப்போரில் நாராயண பிள்ளை இறந்துபோனுர் என்றும், இறந்துபோன வீரரின் ஆன்ம சாந்தித்காக வீரநரசிங்க தேவர் ஆன யாதவராய ரிடம் மூன்று சிவ பிராமமணர்கள் நிலதானம் பெற்றுக் கொண்டு ஜயங்கொண்ட சோழ மண்டலத்துத்

திருவேங்கடக் கோட்டத்து, திருக்குடவூர் நாட்டு, திருச்சுக னூரில் எழுந்தருளியுள்ள திருப்பலா தீசுவரமுடைய நாயக னூர்க்கு அர்த்தயாமத்திலும், காலை சந்திப் பொழுதிலும் அமுது செய்விக்க ஒப்பந்தம் செய்து கொண்டார்களென்றும் அக் கல்வெட்டு கூறுகிறது. சோழ மூன்றும் இராசராசனின் 7-ஆம் ஆண்டில் இது நிகழ்ந்தது. (கி. பி. 1222-23). குறிப் பிடப்பட்டுள்ள காடவராயன் கோப்பெருஞ்சிங்கனே என்று கருத இடனுண்டு.

பாண்டிய மன்னன் சோழ நாட்டின்மீது படையெடுத்த காலத்தில் காடவன் பாண்டியனேடு உறவாடிச் சோழனை அழிக்க முயன்றிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. கி. பி. 1219–இல் ஏற்பட்ட போசளக் கல்வெட்டிலிருந்து (E. C. 9. K. N. 87) போசள மன்னன் வீரநரசிம்மன் **'காடவராய திசாபட்ட' 'காஞ்சி காஞ்சன காடவ குலாந்தக'** என்ற பட்டங்களைப் பெற்றுள்ளதாக அறிகிறோம், அவனல் வெல்லப்பட்ட காட வன் கோப்பெருஞ்சிங்கனாக இருக்கலாம்.

### மாறவர்மன் சுந்தர பாண்டியனின்
### இரண்டாம் சோணுட்டுப் போர் கி. பி. 1228

குலோத்துங்கனல் முடிசூட்டி வைக்கப்பட்ட மூன்றும் இராசராசன் சில ஆண்டுகள் பாண்டியனுக்குத் திரை செலுத் தும் சிற்றரசன் நிலையிலிருந்து ஆண்டு வந்ததாக அறிகிறோம். புதுக்கோட்டைப் பிரதேசத்திலுள்ள மாறவர்மனின் 12-ஆம் ஆண்டுக் கல்வெட்டில் சுந்தரபாண்டியன் "சோணுடு கொண்டு முடிகொண்ட சோழபுரத்து வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும் பண்ணியருளிய வீரசுந்தர் பாண்டிய தேவர்" எனக் குறிப்பிடப்படுகின்றான். அவனது மெய்க் கீர்த் தியில், சோழ மன்னன் திறை கொடுக்க மறுத்ததால் மீண்டும் சோழ நாட்டின்மீது அவன் படையெடுத்தான் என்பது விரிவா கக் குறிக்கப் பட்டிருத்தலாலும், சுந்தரபாண்டியன் தனது ஆட்சியின் 12-ஆம் ஆண்டில் (கி. பி. 1228) சோழ நாட்டின் மீது இரண்டாம் முறை படையெடுத்திருக்கவேண்டும் என்று முடிவு செய்கிறோம். (புதுக்கோட்டைக் கல்வெட்டுக்கள்— எண் 277)

தன்னல் சோழ அரசைப் பெற்ற மூன்றும் இராசராசன் தான் செய்த நன்றியை மறந்து ஆண்டுதோறும் அனுப்பப்

பட்டு வந்த திறையை நிறுத்தியதோடு அமையாது தன்னை எதிர்க்கவும் துணிந்ததைக் கண்ட சுந்தரபாண்டியன் தன் ஆட்சியின் 12-ஆம் ஆண்டில் (கி.பி. 1228) பெரும்படையுடன் சோணாடு நோக்கி வந்தான். தன்னை எதிர்த்த சோழமன்னனுடைய நான்கு வகைப் படைகளும் சுருண்டு ஒதுங்கச் செய்தான். சோழமன்னன் ஓடி ஒளியவே, அவனுடைய யானை முதலியவற்றை வெட்டிக் களவேள்வி செய்தான். வென்ற வாளைக் குருதிப் புனலில் நீராட்டினான். சோழனுடைய மாதேவியார் அட்ட மங்கலங்கள் ஏந்திவர **முடிகொண்ட சோழபுரத்தை** அடைந்து அங்கு சோழனுடைய அபிஷேக மண்டபத்தில் விஜயாபிஷேகம் செய்து அருளினான். இவ்வெற்றியை விரித்துக் கூறும் மெய்க்கீர்த்திப் பகுதி பின்வருமாறு :

**முன்னம் நமக்கு முடிவழங்கும் சேவடிக்கீழ்**
**இன்னம் வழிபடுவம் என்னாது பின்னொருநாள்**
**காவல் எனது புனல்நாடு எனும்களியால்**
**ஏவல் எதிர்கொள்ளாது இறைமறுத்த சென்னிவிடு**
தூசியும் பேரணியும் ஒக்கச் சுருண்டொதுங்கி
வாசியும் வாரணமும் தேரும் அடற்கரும்
காலாளும் வெட்டுண்ணக் கண்டுபயம் கைக்கொண்டு
வேலா வலயத்து வீழ்ந்தவன்போய் மெய்ந்நடுங்க
அம்பருந்து மார்த்தகடல் மண்டலி கருடல்
வெம்பருந் துண்ண அக்களத்தில்
ஆனையின் வெண்மருப்பும் கையுங் குறைத்தெங்கள்
மீனவர்க்குப் பாகுடமா மென்றுதம் வீரர்கொள.

(இ - ள்) முன்பு நமக்கு மகுடத்தை வழங்கிய பாண்டிய மன்னனுடைய திருவடியின் கீழ் இன்னும் வழிபாடு சொல்லி வாழ்வோம் என்று கருதாது, பின்னும் ஒரு நாளில் ‘சோழ நாடு என்னுடைய ஆளுகைக்கு உட்பட்டது’ என்ற செருக்கினால், பாண்டிய மன்னனுடைய ஏவலை ஏற்றுக்கொள்ளாது. கப்பங் கட்டுதலைத் தவிர்த்த சோழ மன்னன் அனுப்பிய முன்னணிப் படையும் பெரிய படையும் ஒரு சேரத்தோற்று ஒடுங்கிக் குதிரைகளும் யானைகளும் தேர்களும் துன்புறுத்தும் வலிய காலாட்களும் வெட்டப்பட, அந்நிலை கண்டு அச்சங் கொண்டு, கடலிலே போய் விழுந்து சோழன், உடல் நடுங்கவும், அம்புகள் பட்ட மண்டலிகருடைய உடல்களைக் கொடிய பருந்துகள் உண்ணவும், அப் போர்க்களத்தில் யானை

களுடைய தந்தங்களையும் கைகளையும் வெட்டி எங்கள் அரச னுக்குக் கையுறையாமென்று பாண்டிய வீரர்கள் கைக் கொள்ளவும்.

"மாக முகடு தடவி மழை தடுக்கும்
காக நெடும்பந்தர்க் கவந்தத்தி னுடலும்
கூகையின் பாடலும் கண்டும் கேட்டும்
களித்தடல் கருங்கூந்தல்
வெள்ளெயிற்றுச் செவ்வாய்ப் பொற்
சூலக்கை வல்லி பலி கொள்க என வாழ்த்தி
வென்று பகையின் மிகை ஒழிய வேந்தலறக்
கொன்று சினந்தணியாக் கொற்றநெடு வாள்உயற்கு
செங்குருதி நிறத்தொளி செய்து தெவ்புலத்து
வெங்கவடி வித்தி வீர முழுதெடுத்துப்
பாடும் பரணிதன் பார்வேந்தர் கேட்பிக்க
ஆடும் திருமஞ்சன நீரில் மண்குளிர
ஆங்கவன் திணைக்கட்டணத்துக் கற்புத் தனக்கானுய்
ஓங்குரி மைக்குழாம் ஒருங்கு கைக்கொண்டு
மூரிமணிப் பட்டங்கட்டி முடிசூட்டி
மார்பில் அணைத்து"

(இ - ள்) வானத்தின் உச்சியைத் தடவி மேகத்தைச் செல் லாமல் தடுக்கும் காக்கையின் பந்தர் போன்ற தொகுதிகளின் கீழே, உடற் குறைகளின் ஆடுதலையும், கோட்டான்களின் பாடல்களையும் கண்டும், கேட்டும் களிப்புற்று, கரிய கூந்தலை யும் வெள்ளிய பற்களையும் சிவந்த வாயையும் உடைய பொன் னுலாகிய வலிய சூலத்தை ஏந்திய கொற்றவை உணவு கொள் வாளாக என்று வாழ்த்தி, வெற்றி பெற்று, பகைமையின் மிகுதி ஒழிய, அரசர்கள் கதற, அவர்களைக் கொன்று, சினம் தணிந்து, வெற்றியைத்தரும் சிறந்த வாளால், சிவந்த இரத்த நிறமான சேற்றினை உண்டாக்கி, பகைவர்களது நிலத் திலே தனக்கு விருப்பான பல கறைகளை விதைத்து, தன்னு டைய வீரச் செயல் முழுவதையும் தொகுத்துப் பாடும் பரணி என்ற பிரபந்தத்தை தன் குறுநில மன்னர்கள் தன் செவி யில் கேட்பிக்கத்தான் திருமஞ்சன நீரில் ஆடுவதால், உலகு குளிர, அச்சோழ மன்னனது மிக்க உரிமைச் சுற்றமான பெண்களை ஒரு சேரக் கைக்கொண்டு, பெரிய மணிகள் அழுத் திய பட்டத்தைக் கட்டிக்கொண்டு முடியைச் சூட்டிக்கொண்டு அவ்வுலகம் என்னும் நங்கையை மார்பில் அணைத்து:

"வளவன் முதல் தேவி என்று
பேர் பெற்ற வஞ்சி முதலாய பெய் வளையார்
பொங்கு புனற்கும்ப முதலாகப் புலவர் புகழ்
மங்கலங்க ளெட்டும் மணிக்கைத் தலத்தேந்திக்
கொடிகொண்ட நெற்றி நிறைகோ புரஞ்சூழ்
முடி கொண்ட சோழபுர மண்டபத்துப் புக்குத்
திசைதொறும் செம்பொன் செயத்தம்பம் நாட்டி
விஜயாபிஷேகம் பண்ணி அருள் செய்து."

வளவனுன இராசராசனுடைய முதல் பெருந்தேவி என்ற சிறப்புப் பெற்றவள் முதலான வளையலணிந்த கைகளையுடைய பெண்களைப் பூரண கும்பம் முதலாகப் புலவர்களால் புகழப்படும் அஷ்டமங்கலங்களை அழகிய கைகளில் ஏந்திவரச்செய்து, பலவகைக் கொடிகளும் நிரம்பச் சூழ்ந்திருக்கும் கோபுரங்களை உடைய முடிகொண்ட சோழபுரத்தில் நுழைந்து திசைகள் தோறும் சிவந்த பொன்னுலான சயத்தம்பங்களை நட்டு, விஜயாபிஷேகம் செய்துகொண்டு.

இம் மெய்க்கீர்த்திப் பகுதியால் மாறவர்மன் சுந்தர பாண்டியனுடைய இரண்டாம் சோணுட்டு வெற்றி நன்கு போதரும்.

திருநெல்வேலியில் கிடைத்துள்ள மாறவர்மனின் சாசனமும் இதர சாசனங்களும் (20-ஆம் ஆண்டு 374-ஆம் நாள்)

(S. I. I. V.) இவ்விரு படையெழுச்சிகளையும் விவரமாகக் கூறுகின்றன. முதலில் ஆயிரத்தளியில் சுந்தர பாண்டியன் செய்த வீராபிஷேகத்தையும் பொன்னமராவதியில் சோழ மன்னனுக்கு முடிவழங்கியதையும் கூறிவிட்டு அடுத்து வடகொங்கர் தென் கொங்கரை அடிப்படுத்திய செய்தியைக் குறிப்பிடுகின்றன.

பின் வழிபடுவோம் என்னுது திறைமறுத்துப் பொரத் துணிந்த இராசராச சோழனைத் தோற்கடித்துச் சுந்தர பாண்டியன் முடிகொண்ட சோழபுரத்தில் இரண்டாம் தடவை புகுந்து விசையாபிஷேக விழாவை விமரிசையாக நடத்தினுன்.

முதல் படையெழுச்சியின் இறுதியில் ஆயிரத்தளியில் வீராபிஷேகம் செய்துகொண்ட சுந்தர பாண்டியன் இரண்டாம் படையெழூச்சியின் இறுதியில், அதே சோழ நகரான

ஆயிரத்தளியை முடிகொண்ட சோழபுரம் என்று பெயர் மாற்றி அங்கு விசையாபிஷேகம் செய்து கொண்டான் என்று குறிப்புக்கள் கிடைக்கின்றன.

இவ்விரண்டாம் பாண்டிய படையெழுச்சிக்குப் பிறகு (கி. பி. 1228-31) சோழ மன்னன் இழந்த பதவியை மீட்கப் பல முயற்சிகள் செய்திருக்கவேண்டும். பல போர்களும் நிகழ்ந்திருக்கவேண்டும். தன்னால் இயலாது போகவே, தன் உறவினர்களான போசள மன்னர்களின் உதவியை நாடினான். இச்சமயம் பார்த்துக் கோப் பெருஞ்சிங்கனும் சோழ மன்னனைத் தாக்கினான்.

விருத்தாசலத்தில் மூன்றாம் இராசராசனின் 14-ஆம் ஆண்டுக் கல்வெட்டுள்ளது. (கி. பி. 1229-30-136/1900.) இதன் படி இவ்வாண்டில் பல்லவக் கோப்பெருங்சிங்கனின் முதலிகளில் ஒருவனான எதிரிகணயன் ஆன பொத்தப்பிச் சோழன் விருத்தாசலத்திலுள்ள திருமுதுகுன்றமுடைய நாயனார்க்கு ஒருதிரு நுந்தா விளக்கு எரிப்பதற்கு ஒரு நிவந்தம் செய்தான் என்று தெரிகிறது. ஆகவே, கி. பி. 1229–30 வரை கோப் பெருஞ்சிங்கன் சோழமன்னனின் சிற்றரசனாக வாழ்ந்தான் என்றும் அரசபதவியை எட்டவில்லை என்றும் ஊகிக்க இடம் இருக்கிறது.

பாண்டியனிடம் படுதோல்வியுற்ற மூன்றாம் இராசராசனை வென்று சோணாட்டைக் கைப்பற்றக் கருதிய கோப்பெருஞ் சிங்கன் இராசராசனைத் தெள்ளாற்றங்கரையில் தோற்கடித்துத் தனது தலைநகரமான சேர்ந்தமங்கலத்துக்கு அவனையும் அவன் மந்திரிகளையும் உரிமைச் சுற்றங்களையும் பிடித்துச் சென்று சிறையிலிட்டான். இத் தெள்ளாற்றங்கரைப் போர் கி. பி. 1231-இல் நிகழ்ந்ததாகும். இந்நிகழ்ச்சி பற்றிய விபரங்களை வயலூர்ச் சாசனம் விரிவாகக் கூறும்.

வயலூர்ச் சாசனம் ''ஸ்வஸ்தி ஸ்ரீ சகலபுவனசக்கரவர்த்தி ஸ்ரீ கோப்பெருஞ்சிங்கன் சோழனைத் தள்ளாற்றில் (தெள்ளாற்றில்) வென்று சகல பரிச்சின்நமும் கொண்டு, சோழனைச் சிறையிலிட்டு வைத்துச் சோணாடு கொண்ட அழகிய சீயன்''— என்று தொடங்குகிறது.

[இச்சானத்தில் இனிய தமிழ்ப் பாடல்கள் 5 உள்ளன. அவை முறையே பன்னிரு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்

தம், வெண்பா, கலிவிருத்தம், இரண்டு எண் சீர்க் கழி நெடி லடி ஆசிரிய விருத்தங்கள் என்ற அமைப்பில் அமைந்துள்ளன. முன்னிரண்டு பாடல்களும் புறத்திணையாகவும் பின் மூன்று பாடல்களும் அகப்புறப் பாடல்களாகவும் அமைந்துள்ளன. அவ் வைந்தற்கும் பொழிப்புரையும், அகப் பாடல்களுக்கு மட்டும் துறை விளக்கமும் தரப்பட்டுள்ளன.]

## வயலூர்ச் சிலா சாஸன செய்யுட்கள்

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

1. பொன்னி நாடனு முரிமையு மமைச்சரு மிருப்பதுன் சிறைக்கூடம்
பொருப்பி ரண்டென வளர்ந்ததோள் வலியினுற் கொண்டது
சோணுடு.
கன்னி காவிரி பகிரதி நின்பரியாடுதண் டுறைவாவி காவன்
மன்னவர்
திறையுட னுணங்குவ துன்பெருந் திருவாசல்.
வென்னிடாத போர்க் கன்னடர் வென்னிடப் பொருததுன்
பெருஞ்சேனே
விளங்கு செம்பொனின் அம்பலக் கூத்தனே விரும்பியதேவா !
கடற்
பின்னி காவல ! அவனிநா ராயண ! பேணு செஞ் தமிழ் வாழப்
பிறந்த காடவ! கோப்பெருஞ் சிங்க ! நின் பெருமையார்
புகழ்வாரே.

சோழ மன்னனும் மனைவிமாரும் மந்திரிகளும் உன் சிறைக் கூடத்திலுள்ளனர். இரண்டு மலைகளைப் போன்று வளர்ந்த உனது தோள் வலியினுல் சோழ நாட்டை நீ கைப்பற்றினுய். உன்னுடைய குதிரைகள் நீர் மூழ்கும் துறைகளையுடைய குளங்களாகக் கன்னித் துறையும் காவிரியும் கங்கையும் அமைந்துள்ளன. உன்னுடைய காவலாலே மன்னராயிருப்ப வர்கள் உன்னுடைய பெரிய அரண்மனை வாயிலின்கண் கப்பப் பணத்துடன் செவ்வி பெருது வருந்தியிருப்பர். முன்பு போரில் புறமுதுகிட்டோடாத கன்னடர்கள் புறங்காட்டி யோடுமாறு உன் பெரிய சேனை போர் செய்தது. விளங்கு கின்ற சிவந்த பொன்னுல் ஆகிய பொன்னம்பலத்தில் திரு நடனஞ் செய்யும் சிவபெருமானை உள்ளத்துக் கொண்ட அரசே! கடலையடுத்த பின்னி மலைத் தலைவனே! அவனி நாராயணனே! விரும்பப்படும் செந்தமிழ் தழைக்குமாறு

அவதாரம் செய்த காடவனே! கோப்பெருஞ் சிங்கனே! உனது பெருமையைப் புகழும் தகுதியை உடையார் எவர்?

### வெண்பா

2. திறையிட் டிருமின்கள் தெவ்வேந்தர்! செம்பொன்
துறையிட்ட பூம்புகார்ச் சோழன்—சிறைகிடந்த
கோட்டந் தனைநினைமின் கோப்பெருஞ்சிங் கன்கமல
நாட்டங் கடைசி வந்த நாள்.

பகை மன்னர்களே! சிவந்த பொன்னை நீர்த்துறை கொழிக்கும்படியான அழகிய புகார் நகரத்துச் சோழன் காவற்பட்டுக் கிடந்த சிறைச்சாலையை நினைமின். அது கோப்பெருஞ் சிங்கனுடைய கடைக் கண்கள் சிவந்த அளவி லேயே நிகழ்ந்த நிகழ்ச்சியாகும். எனவே, நீங்கள் காணிக்கை யைச் செலுத்துங்கள்.

### கலிவிருத்தம்

3. மீளிவன் கொடிவிடை வேந்தர் மார்பினும்
தோளினும் தீட்டிய தொண்டை மன்னவா!
வாளில்வென் றிடுசிறை வளவன் வைகிய
நாளினும் பெரியதிந் நள்ளென் யாமமே.

வலிமை பொருந்திய, கொடியிலுள்ள காளையை அரசர் களுடைய மார்பிலும் தோள்களிலும் தீட்டிய தொண்டை நாட்டு மன்னவனே! வாட்டொழிலாலே போரில் வென்று சிறையிலிடப்பட்ட சோழன் அச் சிறையில் தங்கி யிருந்த நாட்களது நீட்டத்தைவிட, இந்தச் செறிந்த இரவு பெரியதா யுள்ளது என்று காடவன் பவனி வரக் கண்டாளொருத்தி அவன்பால் கழிகாம முற்று, இரவு துயில் பெறாது அவ்விராக் காலம் நீண்டதாக அதனை வெறுத்துச் சொற்றது.

அறைகடலின் இசையுடனே அண்டர் வேயின்
ஆம்பலிசை செவிகவர அந்தி மாலை
நிறைமதியின் நிலவென்னும் நெருப்புப் பட்டால்
நேரிழைநின் றுற்றுவளோ நிருப துங்கா!
பிறைபொருத கனமகரக் கிம்புரிவன் கோட்டுப்
பெருங்களிற்றுச் சோழனையும் அமைச்சரையும் பிடித்துச்
சிறையிலிடக் களிறுவிடும் மிண்டன் சீயன்
திருமிகுந்த ராசாக்கள் தம்பி ரானே.

நிருபதுங்கன் பவனி வரக் கண்டு காம நோயுற்றுள் ஒருத்தியின் ஆற்றுமையைத் திருத்தாயர் அவ்வரசற் குரைத்தது.

நிருபதுங்கனே! பிறைச் சந்திரனை ஒத்த பெரிய பூணிடப்பட்ட வலிய கொம்பினையுடைய பெரிய யானையை யுடைய சோழனையும் அவனுடைய அமைச்சர்களையும் பிடித் துச் சிறை செய்வதற்காக யானையைச் செலுத்திப் போரிட்ட வல்லமை யுடைய சீயன் ஆகிய செல்வம் மிகுந்த அரசர்க் கரசனே! ஒலிக்கின்ற கடலொலியோடு இடையர்களுடைய வேய்ங் குழலிலிருந்து வரும் ஆம்பற் பண் காதிற்பட்டுத் துன்பந்தர, மாலையில் தோன்றும் பூரண சந்திரனுடைய நிலவாகிய நெருப்பு மேலே படுமாஞல் நேரிய அணிகளை யணிந்த இந்தப் பெண் அவற்றைச் சகித்து இருக்கும் தன்மை உடையவளா?

5. ஒரு நாளும் விடியாத நெடிய கங்குல்
ஊழின நீண்டுவர வுலகிற் புன்கண்
மருண்மாலை யதுமுன்னே வந்த தென்றல்
மடந்தையிவள் இரங்காளோ மல்லை வேந்தே
பொருமாலை முடியரசர் கன்னி மாதர்
போற்றிசெயும் புவனமுழு துடையார் தாமும்
திருமாதும் வளர்புயத்து மிண்டன் சீயன்
திரிபுவனத் தரசர் தங்கள் தம்பி ரானே.
துறை - இதுவுமது.

கடல் மல்லையை உடைமையாகக் கொண்ட அரசே! போர் செய்ய வந்த மாலையை உடைய மகுடந் தாங்கிய அரசர்களின் புதல்வியரும் மனைவியரும் இருந்து வணக்கஞ் செய்யும் புவன முழுதுடையாளும் திருமகளும் தங்கியிருக்கும் புயங்களை உடைய மிண்டன் சீயன் ஆகிய மூனறு நாட்டு அரசர்களுக்கும் தலைவனுனவனே! உலகத்திலேயே பிரிந் திருப்பாருக்குத் துன்பந் தருகின்ற மயங்கங் கொள்ளுதற்குக் காரணமான மாலைக் காலம் முடியும் முன், ஒரு காலத்திலும் விடிதல் இல்லாத நீண்ட இராக்காலம் ஒரு யுகத்தைப் போன்ற நீளத்தைக் கொண்டு வருமாஞல் இப் பெண் ஆற்றுமை மிக மாட்டாளோ—நின்னருள் இருக்கின்றவாறென்னே!

இப் பாக்களில் அவன் பெற்றுள்ள விருதுகள்:

அவனிநாராயணன், நிருபதுங்கன், மல்லை காவலன், மிண்டன் சீயன், சொக்கச் சீயன் என்பவை.

சிறைப்பட்ட மூன்றும் இராசராசனை மீட்பதற்குப் போசளர்கள் மறுபடியும் தென்னாடு நோக்கி வந்தனர். இச் சம்பவத்தைப் பற்றிக் **'காலகளப'** என்பவர் எழுதிய **'கட்யகர்ணுமிர்தம்'** என்ற கன்னட வரலாற்று நூலிலிருந்தும் மூன்றும் இராசராசனது பதினாறும் ஆண்டில் வெட்டப்பட்ட திருவயிந்திபுரக் கல் வெட்டிலிருந்தும் அறிகிறோம்.

கட்ய கர்ணுமிர்தம்: "பாண்டிய மன்னனால் தோற்கடிக்கப்பட்ட பிறகு, மூன்றும் இராசராச மன்னன் தலைநகரை விட்டுக் கிளம்பி, சபரிவாரமுடன் தன்னுடைய நண்பரான குந்தள மன்னரைச் சார்வதற்காகச் சென்றான். புளிய மிலேச்ச சேனைகளைக் கொண்டு காடவ மன்னன் சோழ மன்னனைச் சிறைப் பிடித்தான். சோழ சேனை தோற்று ஓடியது. சோழரைத் தாக்கிய காடவர் சம்பராசுரனுக்கு ஒப்பாவார். காடவ மன்னர் இராசராசனைச் **செயந்தமங்கலத்தில்** (=சேந்தமங்கலம்) சிறை வைத்திருந்தான். இச் செய்தி நரசிம்ம தேவருக்கு எட்டியதும், அவர் பெரிய சேனையுடன் கிளம்பித் தெற்கு நோக்கிக் காவிரியின் வடகரையில் திருவரங்கத்துக்கு அருகாமையில் படை வீடு அமைத்துத் தங்கியிருந்தார். பிறகு நரசிம்மர் தம்முடைய தண்ட நாயகரை அனுப்பிச் சோழ மன்னரை மீட்டுப் பாண்டிய மன்னரோடு பொருது, அவரைக் காவிரிக் கரையிலுள்ள **மகேந்திரமங்கலம்** என்ற ஊரில் தோற்கடித்து மாபெரும் வெற்றி பெற்றுப் பாண்டிய மன்னரைத் திறை கொடுக்குமாறு செய்தார்" என்று அந்நூல் குறிப்பிடுகிறது. இச் சம்பவங்களைத் திருவயிந்திரபுரக் கல்வெட்டு வலியுறுத்தும்.

## திருவயீந்திரபுரக் கல்வெட்டு

*1.* *ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு யாண்டு 15 ஆவதின் எதிராம் ஆண்டு பிரதாப சக்கரவர்த்தி ஹோய்ஸண ஸ்ரீ வீரநரசிம்மதேவன் சோழசக்கரவர்த்தியைக்*

*2.* *கோப்பெருஞ்சிங்கன் சேந்தமங்கலத்தில் பிடித்துக் கொடு இருந்து தன்படையை இட்டு ராஜ்யத்தை அழித்துத் தேவாலயங்களும் விஷ்ணு ஸ்தானங்களும் அழிகையிலே இப்படித்தேவன் கேட்டரு.*

3. ளி, சோழமண்டல பிரதிஷ்டாசாரியன் என்னும் கீர்த்தி
நிலை நிறுத்தி அல்லது எக்காளம் ஊதுவதில்லை என்று தோர
சமுத்திரத்தினின்றும் எழுந்துவந்து, மகாராஜ்ய நிர்மூலமாடி,
இவனையும் இவன் பெண்டு பண்டாரமும் கைக்கொண்டு,

4. பாச்சூரிலே விட்டு கோப்பெருஞ்சிங்கன் தேசமும் அழித்துச்
சோளச் சக்கரவர்த்தியையும் எழுந்தருளிவித்துக்கொடு என்று
தேவன் திருவுளமாய் ஏவ, விடைகொண்டு எழுந்த ஸ்வஸ்தி
ஸ்ரீமான் மகாபிரதானி பிரம விசுவாசி

5. தண்டினகோபன் ஜகதொப்பகண்டன் அப்பண தன்னக்க
னும், சமுத்திரகோபய்ய தன்னக்கனும், கோப்பெருஞ்சிங்கன்
இருந்த என்ளேரியும், கள்ளியூர் மூலையும், சோழகோன்
இருந்த தொழுதகையூரும் அழித்து,

6. வேந்தன் முதலிகளில் வீரகங்க நாடாள்வான், சீனத்தரையன்
ஈழத்து ராஜா பராக்கிரமபாகு உள்ளிட்ட முதலி 4 பேரை
யும் கொன்று இவர்கள் குதிரையும் கைக்கொண்டு, கொல்லி
சோழகோன் குதிரைகளையும் கைக் கொண்டு, பொன்.

7. னம்பல தேவனையும் கும்பிட்டு எதுத்துவந்த தொண்டைமா
நல்லூர் உள்ளிட தமக்கூர்களும் அழித்து.........
வெட்டிவித்து திருப்பாதிரிப்புலியூரிலே வீற்றிருந்து, திருவதிகை
திருவெக்கரை உள்ளிட்ட ஊர்

8. களும் அழித்து, வாரணவாசி ஆற்றுக்குத் தெற்கு, சேந்த
மங்கலத்துக்கும் கிழக்கு கடலிலே அழியூர்களும், குடிக்கால்
களும் சுட்டும் அழித்தும் பெண்டுகளைப் பிடித்தும் கொள்ளை
கொண்டும் சேந்தமங்கலத்தே எடுத்து

9. விடப்போகிற அளவிலே கோப்பெருஞ்சிங்கன் குழைந்து
சோழ சக்கரவர்த்தியை எழுந்தருளிவிக்கக் கடவதாக
தேவனுக்கு விண்ணப்பம் செய்ய, இவர் விட்டு, நமக்கும்
ஆள்வரக் காட்டுகையிலே, சோழ சக்கரவர்த்தியை
எழுந்தருளுவித்து கொடு போந்து ராஜ்யத்தே புகவிட்டதுஉ"

இதிலிருந்து—சோழ மன்னன் மூன்றும் இராசராசன் சேந்தமங்கலத்தில் சிறைப்பட்டான் என்றும் சோழ நாட்டி லுள்ள கோயில்களைக் கோப்பெருஞ் சிங்கன் அழித்தான் என்றும் கேள்வியுற்றுத் தன் பட்டமான 'சோழ மணடல பிரதிஷ்டாசாரியன்' என்பதை மறுபடியும் நிலைநிறுத்தாமல் தம் எக்காளத்தை ஊதுவதில்லை என்று போசள மன்னன் வஞ்சினம் கூறி மகத நாட்டை வென்று கொள்ளிடத்துக்கு

இரண்டு மைல் வடக்கே ஸ்ரீரங்கத்திற்கு எதிராக உள்ள பாச்சூரில் படை வீடு அமைத்து, அப்பண்ண, சமுத்திர கோபய்யா என்ற இரண்டு தண்ட நாயகர்களை அனுப்பி, கோப்பெருஞ் சிங்கனுடைய நாட்டை அழித்துச் சோழ மன்னனை மீட்கவேண்டும் என்று உத்தர விட்டான். இவ்விரு தண்ட நாயகர்களும் கோப்பெருஞ் சிங்கன் வசம் இருந்த எள்ளேரி, கள்ளியூர் என்ற ஊர்களை அழித்துக் கோப்பெருஞ் சிங்கனின் சேனாதிபதியான சோழ கோனைத் தொழுதகையூர் (தோகூர்) என்ற ஊரில் வென்று ஈழ அரசனான பராக்கிரம பாகுவைத் தோற்கடித்துப் பொன்னம்பல நாதனைச் சேவித்துத் தொண்டை மாநல்லூர், திருவதிகை, திருவக்கரை முதலிய வாரணாசி (கெடிலம்) நதியின் கிழக்குப் பாகத்திலுள்ள ஊர்களை அழித்துச் சேந்தமங்கலத்தை முற்றுகை யிட்டனர். எனவே, கோப்பெருஞ் சிங்கன் நடுங்கிச் சோழ மன்னனைச் சிறை விடுத்து அரசையும் கொடுப்பதாக ஒப்புக் கொண்டான் என்று அறிகிறோம். அம் மீட்சி திருவயீந்திர புரத்தில் ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது. மூன்றாம் இராசராச சோழனுடைய 16–ஆம் ஆண்டுக் (கி. பி. 1231–32) கல் வெட்டாகிய இது திருவயீந்திரபுரத்தில் ஏற்பட்டிருப்பதால் சிறை மீட்சி இங்கு நிகழ்ந்திருக்கலாம் என்று கருத இடன் ஏற்படுசிறது.

சோழ மன்னனைச் சிறை மீட்ட பிறகு போசளர்கள் பாண்டியர்களோடு போர் தொடுத்து அவர்களையும் அடக்கிச் சோழ மன்னனைக் காக்க முயன்றிருக்க வேண்டும். இவ்விரு திறத்தாருக்கும் பல போர்கள் நிகழ்ந்திருக்க வேண்டும். அவைகளில் முக்கியமானது 'கட்யகர்ணமிர்தத்தில்' கூறப்படும் **மகேந்திரமங்கலப் போர்** (மகேந்திரமங்கலம் திருச்சி ஜில்லாவிலுள்ள தோரூராகும்.) இந் நூலில் போசள வீர நரசிம்மன் பாண்டியர்கள் மீது பெரு வெற்றி அடைந்ததாகவும், பாண்டியர்கள் போசள மன்னனுக்குத் திறை கட்டியதாகவும் செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதற்குப் பிறகு சோழ பாண்டிய மண்டலங்களில் போசளர்களுடைய ஆதிக்கம் கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் வலுத்தது. கி. பி. 1230-இல் போசள வீர நரசிம்ம தேவன் காஞ்சியைக் கைப்பற்றினான். போசள தண்ட நாயகர்களுடைய செல்வாக்கு காஞ்சியிலிருந்து இராமேசுவரம் வரை பரவி யிருந்தது என்பது பல

கல்வெட்டுக்களால் அறியப்படுகிறது. சோழ பாண்டியர் களோடு மணவினையால் உறவும் போசளர்களுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் கி. பி. 1328இல் இறக்க, அவனுக்குப்பின்வந்த இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் போசள வீரநரசிம்மனின் புதல்வனுகிய வீரசோமேசுவரனை மாமடி (மாமன்) என்று அழைக்கிருன். அங்ஙனமே மூன்ரும் இராசராசனுக்குப் பிறகு அரசு பதவி பெற்ற மூன்ரும் இராசேந்திரச் சோழனும் அவ் வீரசோமேசுவரனையேயும் மாமன் என்று அழைக்கின்ருன்.

மேற்கூறிய இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் கி. பி. 1238இல் பட்டம் பெற்ருன். அவன் 15 ஆண்டுகளாவது ஆண்டிருக்கலாம். முன் ஆண்ட முதலாம் மாறவர்மனைப் (கி. பி. 1216—38) போலவோ, பின் வந்த முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியனைப் (பட்டம் கி. பி. 1251, 1251—69) போலவோ, இம் மன்னன் வலிமையும் புகழும் பெற்று வாழ்ந்ததாகத் தெரியவில்லை, போசள வீரசோமேசுவரன் 'பாண்டிய குல சம்ரக்ஷண தக்ஷ தக்ஷிண புஜ' (வலப் புய பலத்தால் பாண்டியனைக் காத்தவன்) என்ற பட்டத்தைப் புனைந்து கொள்வதால் ஓரளவு பாண்டிய நாடு போசளரின் அதிகாரத்துக்கு அடங்கியிருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்க இடம் உண்டு.

சோணுடும் பாண்டிய நாடும் வலி குன்றியிருந்த இக் காலத்தில் (கி. பி. 1243இல்) கோப்பெருஞ்சிங்கன் சமயமறிந்து முடிசூட்டிக் கொண்டான்.

## அத்தியாயம்-5

# இதர நாடுகளோடு தொடர்பு

### கோப்பெருஞ்சிங்கனும் மூன்றும் இராசராசனும் : (கி. பி. 1216—46—60)

மூன்றும் இராசராசன் கி. பி. 1216இல் பட்டம் பெற்று கி. பி. 1260 வரையில் வாழ்ந்தான் என்று தெரிய வருகிறது. இவனுடைய கல்வெட்டுகள் முக்கியமாக தஞ்சை, வடவார்க் காடு, தென்ஞர்க்காடு; செங்கற்பட்டு, சித்தூர், திருச்சி ஜில்லாக்களிலும், ஒருசில சேலம், கடப்பை, நெல்லூர் ஜில்லாக் களிலும் காணப்படுகின்றன. மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் சோழநாடு எவ்வளவு தூரம் பரவியிருந்ததோ, அவ்வளவு தூரம் இவனுடைய காலத்திலும் பரவி யிருந்தது. ஆனுல் சோழ நாடு பெயரளவில்தான் இந்தப் பரந்த எல்லையை உடையதாய் இருந்தது.

கோப்பெருஞ்சிங்கனுல் சிறைபிடிக்கப்பட்டுப் போசளர் களால் மீட்கப்பட்டுப் பெருமை யிழந்து வாழ்ந்த சோழ மன்னனுக்கு நாட்டு மக்களோ, சிற்றரசர்களோ எந்த அளவுக்கு மதிப்பு வழங்குவர் ! வலிகுன்றிய மன்னன் நாட்டை ஆண்டதால் சிற்றரசர்களுடைய பலமும் செல்வாக் கும் ஓங்கின. குழப்பமும், சச்சரவுகளும், இராசத் துரோகம் சிவத்துரோகம் முதலிய குற்றங்களும் நாட்டில் மலிந்தன.

இராசராசனின் 8ஆம் ஆண்டு 317ஆம் நாள் அரசியல் அதிகாரிகள் தஞ்சை ஜில்லாவிலுள்ள சீர்காழியில் சில துரோகி களுடைய நிலங்களையும், துரோகத்துக்கு உட்பட்டவர்க ளுடைய நிலங்களையும் பறிமுதல் செய்தார்கள் என்று அறிகிரேும் (393/1918). தஞ்சை ஜில்லா வலிவலத்திலுள்ள

இராசராசனின் 15ஆம் ஆண்டுச் சாசனத்தில் அரசியல் அதிகாரிகள் எண்மர் பல துரோகிகளின் நிலங்களை விற்று 33,000 காசுகள் திரட்டியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந் நிலத்தை—'துரோகிகளாய்ப் பலரையும் காணிமாறின நிலம்' என்று இக் கல்வெட்டு கூறுகின்றது. (112/1911).

இம் மன்னனின் 20ஆம் ஆண்டில் 348ஆம் நாளில், தஞ்சை ஜில்லாவிலுள்ள கோயில் திருமாகாளத்தில் சிலருடைய நிலங்களைப் பறி முதல் செய்து விற்று 13,000 காசுகள் அரசபண்டாரத்தில் சேர்த்தாக அறிகிறோம் (244/1917).

தஞ்சை ஜில்லா சிவபுரக் கல்வெட்டு (277-1927) இம் மன்னனின் 23ஆம் ஆண்டில் நிகழ்ந்த மற்றொரு அரசாங்க சம்பவத்தை விளக்குகிறது—"சில சிவ ப்ராஹ்மணர்கள் அம்மன் கோயில் தேவியாரின் நகைகளைத் திருடித் தங்கள் ஆசைநாயகிக்குக் கொடுத்தார்கள். தங்கள் வசம் இருந்த கோயில் பணத்தைக் கையாடினார்கள். தங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு உரிய வரியையும் வாரத்தையும் செலுத்த மறுத்தார்கள். மன்னனுடைய ஆணையை மீறி நடந்தார்கள். மன்னன் அனுப்பிய தூதர்களை அடித்தும் நீரில் மூழ்க வைத்தும் தொந்தரவு செய்தார்கள். கன்னடிய சேனை வீரர்களின் உதவியைக் கொண்டு மக்களிடம் கட்டாயமாய்ப் பணம் வசூல் செய்தார்கள். ஆகவே இச் சிவ பிராமணர்கள் மாகேசுவராலும் ஊராராலும் இராசத்துரோகிகள் என்றும் சிவத் துரோகிகள் என்றும் தண்டிக்கப்பட்டார்கள்.

மேற்குறிப்பிடப்பட்டன போன்ற பல கல்வெட்டுகள் நாட்டின் சீர்கெட்ட நிலையை விளக்குகின்றன. பண்டைப் பெருமையால் நாடு பெயரளவில் சோழ மன்னனுக்கு உட்பட்டதாக விளங்கியது.

### மூன்றும் இராசேந்திரன் (கி. பி. 1246—1271)

தன் நாட்டின் குழப்ப நிலையைத் தாங்க ஒண்ணாது மூன்றும் இராசராசன் நிர்வாகத்திலிருந்து விலகினான். கி. பி. 1246இல் மூன்றும் இராசேந்திரனுக்கு முடிசூட்டி வைத்தான். 'ஜகதேகவீரன்' 'கட்கவீரன்' 'மனுகுலத்தை உயர்த்தியவன்' 'சோழ குலத்துக்கு ஏற்பட்ட பரிபவத்தை நிவர்த்

தித்த விக்கிரமன்' 'இராச பரமேசுவரன்' 'இராசபரம மாகே சுவரன்' 'இராசநாராயணன்' என்று இவனுடைய மெய்க் கீர்த்தி இவனைப் புகழ்ந்து கூறுகிறது. இவன் ஏகதீரன். ஆனால், அழிவுற்று இருந்த சோழப் பேரரசை நிலைநாட்ட யாவராலும் இயலாததாயிற்று. இரரசேந்திரன் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனோடு போர் தொடுத்து அவனை அடக்கினான். "இரு முடிகளை மூன்று ஆண்டுகள் இராச ராசனைச் சூடும்படி செய்த வீரன்" என்று இவனுடைய மெய்க் கீர்த்தி இவனைக் கூறுவதால், பாண்டியர்களை அடக்கிச் சோழநாடு, பாண்டிய நாடு என்ற இரு நாடுகளுக்கும் இராச ராசனைத் தலைவனாகச் செய்தான் என்று கொள்ள இடமுண்டு. 'பாண்டிய கேரள மன்னர்கள் தனக்கு வெண்கவரி வீசிய பெருமையுடையவன்' என்னும் சோழனுடைய பெருமை பற்றிய சொற்றொடர் அவனுடைய பாண்டிய வெற்றியை வலியுறுத்துவதாகும்.

கர்நாடக மன்னன் வீரசோமேசுவரன் மீதும் இராசேந் திரன் போரிட்டு வெற்றி பெற்றான் என்றும் அறிகிறோம். போரில் தோல்வியுற்ற சோமேசுவரன் இராசேந்திரனைச் சரண டைந்து அவனது பாதத்தைச் சேவித்தான் என்று மெய்க் கீர்த்தி கூறுகிறது.

ஆனால், வேறு சில கல்வெட்டுகளில் வீரசோமேசுவரன் இராசேந்திரன்மீது வெற்றி பெற்றதாகவும், சரணமடைந்த பொழுது காப்பாற்றியதாகவும் குறிப்பிடுகின்றன. இராசேந் திரன் காஞ்சியை ஆண்ட திக்கன் என்ற கண்டகோபால னுடன் நட்புப் பாராட்டித் தன் அதிகாரத்தைப் பலப்படுத் திக் கொண்டான். மாவிலங்கை என்பது திண்டிவனத்துக்கு (சங்ககாலத்துக் கிடங்கில்) அருகிலுள்ளதோர் ஊராகும். அதற்கு உத்தர(வட) இலங்கை என்ற மறுபெயர் உண்டு. இராசேந்திரன் இப்பிரதேசத்தில் ஆண்ட சம்புவராயர்களை வென்றான். ஆதலால் இராசேந்திரன் உத்தரலங்கையை ஆண்ட வீரராட்சசர்களை வென்ற இராமன் என்ற பட்டத் தைப் புனைந்தான்.

கி. பி. 1254இல் வீரராமநாதன் தென் நாட்டிலுள்ள போசள ராச்சியத்துக்குத் தலைவன் ஆனான். வீரராமநாதனும் இராசேந்திரனும் நண்பர்களாக வாழ்ந்தனர் என்று அறிகி

ரேம். கி. பி. 1258இல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் சோனுட்டை வென்று மாபெரும் திக்விஜயம் செய்தான். வீர சோமேசுவரன் காலத்திய பாண்டியர்களை ஆதரித்த போசளர்கள், இப்போது வலிமை குன்றிய சோழ மன்னனை ஆதரிக்கலாயினர். சடையவர்மன் சுந்தர பாண்டியன் நெல்லூர் வரையிலுள்ள நாடுகளை வென்று, நெல்லூரில் வீராபிடேக விழா நடத்தினுன். சுந்தர பாண்டியனுக்குப் பிறகு பட்டம் பெற்ற மாறவர்மன் குலசேகர பாண்டியன் போசள வீர ராமநாதன், இராசேந்திர சோழன் ஆகிய இருவரையும் தோற்கடித்தான்.

இக் குலசேகர பாண்டியன் மலைநாடு, சோணுடு, இரு கொங்கு, ஈழம், தொண்டை மண்டலம் என்ற நாடுகளை வென்ருன். ஆகவே, எம்மணடலமும் கொண்டருளிய குலசேகர தேவன் என்று பட்டம்பெற்று விளங்கினுன். கி. பி. 1279இல் சோழப் பேரரசு மறைந்தது. இராசேந்திரனே சோழப் பேரரசின் கடைசி மன்னன் ஆவான். இராசேந்திரனுடைய கல்வெட்டுகளில் பெரும்பாலன தஞ்சை ஜில்லாவிலேயே அகப்படுகின்றன, இவனுடைய ஆட்சியின் முதல் எட்டு ஆண்டுகள் வரையில் சில கல்வெட்டுக்கள் திருச்சியிலும் கிடைத்துள்ளன. ஒரு கல் வெட்டு கடப்பை ஜில்லாவிலுள்ள நந்தலூரிலும் மற்ருென்று கர்நூல் ஜில்லாவிலுள்ள திரிபுராந்தகத்திலும் கிடைத்துள்ளன.

தொண்டை மண்டலம் கோப்பெருஞ்சிங்கன் வசம் இருந்தது. அவனும் முழுச் சுயேச்சையுடன் ஆளவில்லை. சடையவர்மன் சுந்தரபாண்டியனுக்குத் திறை செலுத்தும் சிற்றரசனுகவே வாழ்ந்தான். இந்நிலையில் கி. பி. 1279இல் கோப்பெருஞ்சிங்கனுடைய ஆட்சி முடிவடைந்தது.

**கோப்பெருஞ்சிங்கனும் போசளர்களும்**

வீர வல்லாளன் II — கி. பி. *1173-1220.*
|
வீர நரசிம்மன் II — கி. பி. *1220-1238.*
|
வீர சோமேசுவரன் — கி. பி. *1233-62.*
|
நரசிம்மன் III கி. பி. *1254-92.*     வீரராமநாதன். (கி. பி. *1254—95*)
|
வல்லாளன் III கி. பி. *1291-1342*

தற்போது மைசூர் என்று வழங்கும் பகுதியையும் அதற்கு அண்மையிலுள்ள பகுதியையும் போசளர்கள் ஆண்டு வந்தனர். துவார சமுத்திரம் (தற்போது ஹலிபீடு என்று வழங்கப்படுவது) அவர்களுடைய தலைநகராகும்.

வல்லாள தேவனின் தேவியர்களுள் சோழ மகாதேவி என்று ஒருவர் இருந்ததாக அறிகிறோம். ஆகவே, சோழர்களுக்கும் போசளர்களுக்கும் நெருங்கிய உறவு இருந்து வந்தமை தேற்றம். 'சோழ ராஜ்ய ஸ்தாப்னசாரியன்' என்ற பட்டம் இரண்டாம் வல்லாள தேவனுக்கு உண்டு. மாறவர்மன் சுந்தர பாண்டியன் சோழ நாட்டின்மீது படையெடுத்த காலத்தில் மூன்றாம் குலோத்துங்கனும் மூன்றாம் இராராச சோழனும் போசளர்களின் உதவியை நாடினார்கள். அச் சமயம் கோப்பெருஞ்சிங்கன் சோழ ஆட்சியை ஒழிக்கப் பாண்டியரோடு நட்புப் பாராட்டினான். போசளர்கள் சோழர்களுக்கு உதவி செய்ய முற்பட்டுக் கோப்பெருஞ் சிங்கனை அடக்குவதற்கும் அவனது நாட்டை தாக்கிக் கைப் பற்றுவதற்கும் முயன்றனர். அதனால் பல போர்கள் நிகழ்ந்தன. கோப்பெருங்சிங்கனுடைய ஆளுகைக்கு உட்பட்டிருந்த தென்னார்க்காடு ஜில்லாவைச் சார்ந்த திருவடத் துறைக் கோயிலில் இருந்த சிலைகளைப் போசளர்கள் எடுத்துச் சென்றார்கள் என்றும் அதனால் புதுச் சிலைகள் எடுப்பிக்கப்பட்டு விழாக்கள் நடந்தன என்றும் அவ்வூர்க் கல்வெட்டொன்று கூறுகிறது. மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழ மன்னனை வென்று முறியடித்த போதிலும் போசளர்கள் தலையிட்டதால் தான் சோணாட்டைச் சோழ மன்னனுக்கே மீண்டும் வழங்க நேரிட்டது என்று முன்னும் குறிப்பிட்டுள்ளோம், தென் நாட்டுப் போர்களில் பெரும் பங்குகொண்ட போசளன் இரண்டாம் நரசிம்ம தேவனே யாவன்.

தன் வலிமையை அறியா. இராசராசன் பாண்டியனோடு போர் தொடங்கினான். போரில் சோழன் தோற்றான். இச் சமயத்தை எதிர்பார்த்திருந்த கோப்பெருஞ்சிங்கன் சோழ மன்னனைத் தெள்ளாற்றில் தோற்கடித்தான். சோழ இராசராசனைப் பிடித்துச் சேந்தமங்கலத்தில் சிறையிலிட்டான்; இதை அறிந்த போசள மன்னன் தன்னுடைய தண்ட நாயகர்களை அனுப்பி, சோழமன்னனை மீட்டுத் தன்னுடைய பழைய பட்ட

மான 'சோழராஜ்ய பிரதிஷ்டாசாரியன்' என்ற பட்டத்தை நிலைநாட்ட வேண்டும் என்று ஆணை பிறப்பித்தான். போசள தண்ட நாயகர்கள் சோணாட்டின்மீது படையெடுத்துக் கோப் பெருஞ்சிங்கன் வசமிருந்த நாட்டை அழித்து, அவனையும் அவனுடைய சேனையையும் தோற்கடித்துத் திருவயீந்திர புரத்தில் சோழ மன்னனையும் மீட்டனர்.

கி. பி. 1229-30இல் இரண்டாம் நரசிம்மன் காஞ்சியைக் கைப்பற்றினான். பின் அப்பிரதேசத்தைப் போசளர்கள் ஆண்டு வந்தனர். கி. பி. 1238இல் தெலுங்குச் சோடர் தலைவனான திக்கன் என்ற கண்டகோபாலன் போசளர்களோடு போர்செய்து வீரநரசிம்மனைக் கொன்றதாக மூன்றும் இராச ராசனின் 23ஆம் ஆண்டுக் கல்வெட்டு கூறுகிறது. இதன் பிறகு தெலுங்குச் சோடர்கள் காஞ்சியைத் தம் வசப்படுத்திக் கொண்டார்கள். கி. பி. 1233இல் இளவரசுப் பட்டம் பெற்ற வீரசோமேசுவரன் கி. பி. 1238இல் இருந்து முழு உரிமை யோடு போசள நாட்டை ஆண்டு வந்தான்.

கி. பி. 1240இல் வீரசோமேசுவரன் திக்கனோடு போர் செய் தான். அவனுடைய தண்ட நாயகனான இரவிதேவன் கான நாட்டை வென்றான் (கி. பி. 1245). வீர சோமேசுவரன் சில காலம் பாண்டியர்களை ஆதரித்துச் சோழரது ஆதிக்கம் மேல் ஓங்க விடாமல் தடுத்து வந்தான்.

கோப்பெருஞ்சிங்கன் போசளர்களை அடக்குவதற்கு ஒரு பெரு முயற்சி செய்தான். அவன் தன்னுடைய 10ஆம் ஆண்டில் கி. பி. 1253இல் பெரும்பலூரில் போசளர்களுடைய தண்டநாயர்களை வென்று, அவர்களுடைய பெண்டிர் பண்டா ரங்கள் உட்படக் சவர்ந்து கொண்டான். அதற்குப் பிராயச் சித்தமாகக் திருமுது குன்றமுடைய நாயனார் திருமேனியில் சாத்தியருள 'அவனியாளப் பிறந்தான்' என்னும் திருநாமத் தால் திருப்பட்டம் ஒன்று வழங்கினான். நெய்யும் பாலும் ஆடியருள 290 பசுக்களையும் தானம் செய்தான். அச்சாசனம் பின்வருமாறு: (73/1918) S. I. I. Vol. XII No. 124. "ஸகல புவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ கோப்பெருஞ்சிங்க தேவர்க்கு யாண்டு 10ஆவது...உடையார் திருமுதுகுன்றம் உடைய நாயனாருக்குத் திருமுனைப்பாடிக் கீழாமூர் நாட்டுக் கூடல்

அவனி ஆளப்பிறந்தானான கோப்பெருஞ்சிங்கன்; பெரும் பலூரில் போசளனார் தண்டநாயகம் செய்வார்களில்...னான கேசவனும், ஹரிஹர தண்டநாயகனும், யதிபதி தேவனும் திக்காணைப் பெருமாள் உள்ளிட்ட தண்டநாயகஞ் செய்வார் களை உயுத்தகளத்திதே.........தருளி.........இவர் பெண்டிர் பண்டார முள்படக் கவர்ந்து கொண்ட இதுக்குப் பிராயச் சித்தமாக இந்நாயனார் திருமேனியில் சாத்தியருள 'அவனி யாளப் பிறந்தான்' என்றும் திருநாமத்தால் "சாரு ரத்நமயம் பட்டம் அவன்யவன ஸம்பவ: திசேத திருத சேசாய ஸ்ரீ விருத்தகிரி வாஸிநே"—இப்படியால் சாத்தி யருளின திருப்பட்டம் 1-ல் செய்த முகம் 3ல் தச்ச கோமளம் 3ம், வயிரத்தருப்பு 72ம், பிஞ்சும் நிலை ஆணியும் உட்படப் பொன் 127 கழஞ்சு—

இந்நாளில் நெய்யாடி அருளவிட்ட பசு 200ம் பால் ஆடி யருள விட்டபசு 90ம் ஆகபசு 290. இதில்......" இக் கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

இவ்வெற்றிக்குப் பிறகு போசளர்களால் கோப்பெருஞ் சிங்கனுக்கு இடையூறு ஏற்படவில்லை என்றே கருத வேண்டி யிருக்கிறது.

அடுத்த ஆண்டே (கி. பி. 1254) போசளர்களுடைய தென் நாட்டிற்கு வீரராமநாதன் தலைவனாக நியமிக்கப்பட்டான்.

கி. பி. 1251இல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் மதுரை மன்னனாக முடிசூட்டப்பெற்றான். இவன் பெருவீரன். போச ளர்கள், சோழர்கள், பல்லவ கோப்பெருஞ் சிங்கன், தெலுங் குச் சோடர்கள் முதலிய யாவரையும் வென்று மாபெரும் திக் விஜயம் செய்தான். திருவரங்கத்துக்கு அருகில் கண்ணனூர்க் கொப்பத்தில் அமைக்கப்பட்ட போசளர்களின் படை வீட்டை கி. பி. 1258இல் தாக்கினான். போருக்கு வந்த சோமேசுவரனை கி. பி. 1262இல் விண்ணுலகுக்கு அனுப் பினான்.

பிறகு வீரராமநாதன் தென் நாட்டிற்கு அதிபதியானான். இப்போது பாண்டியர்கள் தங்களுடைய ஏகாதிபத்தியத்தை நிலை நாட்ட முன்வந்ததால் போசள இராமநாதன் சோழ

இராசேந்திரனேடு உறவாடி அவனுக்கு உதவியாக இருந்தான். இக் கூட்டுறவைத் திருச் சோற்றுத்துறையில் கிடைத்துள்ள இரு கல்வெட்டுகள் விளக்குவனவாகும். (207, 208/1931) வீரராமநாதனின் 10ஆம் ஆண்டிற்குச் சரியான இராசேந்திர சோழனின் 20ஆம் ஆண்டிலும், வீரராமநாதனின் 15ஆம் ஆண்டிற்குச் சரியான இராசேந்திரனின் 25ஆம் ஆண்டிலும் சில நிலங்கள் விற்பனை செய்யப்பட்டன என்று கூறுவதால் இவ்விரு மன்னர்களின் கூட்டுறவும் எளிதில் புலப்படும். ஆனல், சடையவர்மன் சுந்தரபாண்டியனை எதிர்க்கும் ஆற்றல் எவருக்கும் இருந்ததாகத் தெரியவில்லை.

**கோப்பெருஞ்சிங்கனும், தெலுங்குச் சோடர்களும்**

(1) பேடா I

(2) மதுராந்தக பொத்தப்பிச் சோழன் ஆன ஏறசித்தி

(3) நல்ல சித்தி.
(201/1894)
S. I. I. Vol. V. No. 500

(4) நல்லசித்தி
மதுராந்தக பொத்தப்பிச்
சோழன் ஆன
இராசேந்திரமானசித்தி
கி. பி. 1187-1216 = நுங்கம்மா

(5) பேடா II

(6) தம்முசித்தி.
சகயாண்டு 1127
= கி. பி. 1205
(35/1893)

(7) பேட்டரசர் (கி. பி. 1230-50)
அல்லூன் திருக்காளத்தி தேவனுன
கண்டகோபாலன்
திக்க நிருபன்
சோள ஸ்தாபனு சாரியன்
சம்புவராயர், காடுவெட்டி,
சோமேசுவரரை வென்றவன்
கி. பி. 1233-34 ல் காஞ்சியை
வென்றவன்
சம்பாபுரியில் சோமேசனை
வென்றவன்

விக்கிரம சிங்க நகர அதிபதி.

| | | |
|---|---|---|
| (8) கண்டகோபாலன் ? (கி. பி. 1250-57-58) ? சடையவர்மன் சுந்தர பாண்டியனால் கொல்லப் பட்டவன் ? [கி. பி. 1908 ஆம் ஆண்டு கல்வெட்டிலாகா அறிக்கை பக்கம் 71.] | மது சூதன தேவன் | (9) மன்மசித்தி II 'நிர்வசனோத்தர ராமாயணம்' என்ற தெலுங்கு நூலை இயற்றிய திக்கண சோமயாஜியைப் போற்றிய வள்ளல். கடப்பை ஜில்லா நந்தலூரில் உள்ள மூன்றாம் இராசேந்திர சோழனின் 13 ஆம் ஆண்டு கல்வெட்டு. |
| | காகு நாயகன் [487/1902. திருவண்ணாமலை] | சகரயாண்டு 1179-கி.பி. 1257-580/1907. |

## தெலுங்குச் சோடர்களும், காகதியர்களும்

கடப்பை, செங்கற்பட்டு, சித்தூர், தற்கால நெல்லூர் ஆகிய பிரதேசங்களில் தெலுங்குச் சோடர்கள் என்ற வம்சத்தினர் ஆண்டுவந்தனர். சில கல்வெட்டுக்கள் இவர்களைப் பல்லவ குலத்தினர் என்றும் வேறு சில கல்வெட்டுக்கள் இவர்களைச் சாளுக்கிய குலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் (சசிகுல சளுக்கியர்) கூறுகின்றன. மற்றும் சில, கரிகாலனை இவர்களுடைய குல முதல்வனாகவும் அழைக்கின்றன. இவர்களது ஆதித்தலைநகர் **பொத்தப்பி**. இக் குலத்தைச் சேர்ந்த பலர், 'மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன்' 'கண்டகோபாலன்' என்ற விருதுப் பெயர்களைப் பூண்டிருந்தனர். இம் மன்னர்களுடைய வரலாறு மிகச் சிக்கலானது. அதைப்பற்றி ஐயம் திரிபு அறக் கூறுவது இயலாததாயுள்ளது.

மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் (கி. பி. 1178-1216) நல்லசித்தன் மதுராந்தக பொத்தப்பிச் சோழன் ஆன மான்மசித்தன் நல்லூர்ப் பிரதேசத்தை ஆண்டான். இவனுடைய மகன் பேட்டரசன் அல்லூன் திருக்காளத்திதேவனான கண்ட கோபாலன் ஆவான். இவனைத் திக்கநிருபன் என்றும் அழைப்பர். இவன் சுமார் கி. பி. 1234இல் காஞ்சியை வென்றான். இவனுக்கும் போசளர்க்கும் காஞ்சியில் போர்

நிகழ்ந்தது. கண்ட கோபாலன் போசள மன்னனைக் கொன்ருன் என்று சோழ இராசராசனின் 23-ஆம் ஆண்டுக் கல்வெட்டால் (கி. பி. 1239) அறிகிருேம். இப்போசள மன்னன் வீரநரம்மனுக இருக்கலாம். ஆகவே கி. பி. 1246–இல் அவனுடைய மகனுன வீரசோமேசுவரன் காஞ்சியைத் தாக்கினுன். (E. C. VI. KD 150) ஆனுல் வெற்றிபெற்றதாகத் தெரியவில்லை. கி. பி. 1246–இல் இவன் காஞ்சியில் ஆண்டதாக ஒரு கல்வெட்டு கூறுகிறது. (நெல்லூர்க் கல்வெட்டுகள் I-206) கி. பி. 1250 வரை இக் கண்டகோபாலன் ஆண்டிருக்கலாம்; இவனே சடையவர்மன் சுந்தர பாண்டியனுல் கொல்லப்பட்ட கண்டகோபாலன் என்று சிலர் கருதுகின்றனர். ஆனுல் திக்கனுக்கு இரண்டு புதல்வர்கள் உண்டு என்றும், அவர்களில் இளையவனே இரண்டாம் மன்மசித்தி என்றும், அவளே **'நிர்வசனேத்தர இராமாயணம்'** என்ற தெலுங்கு நூலை எழுதிய **திக்கண சோமாஜியைப்** போற்றிய வள்ளல் என்றும் அறிகிருேம். இந்நூலில், ஆசிரியர் தம்மை ஆதரித்த இரண்டாம் மன்மசித்தியின் தந்தையாரின் வீரச்செயல்களான சம்புவராயர் முதலிய மண்டலீகர்களை வென்றது, காஞ்சியையும் சேதி மண்டலத்தையும் கொண்டது, காடவ பதியை (கோப்பெருஞ் சிங்கனை) அடக்கியது எள்பவைகளைக் குறிப்பிட்டுள்ளார்.

நந்தலூர்க் கல்வெட்டு ஒன்றில் (580/1917) இந்த மன்மசித்திக்கு மூத்தவன் எருவன் இருந்ததாக அவனுடைய வம்சாவளி கூறுகிறது. (1908-ஆம் ஆண்டு அறிக்கை பக்கம் 74) மேலும் சடையவர்மன் சுந்தர பாண்டியனின் பாக்கல்வெட்டு ஒன்றும் இதற்குச் சான்ருகிறது. அது பின் வருமாறு:

> வாக்கிய செந்தமிழ்ச் சுந்தர பாண்டியன் வாளமரில்
> வீக்கிய வன்கழற் கண்டகோ பாலனை விண்ணுலகிற்
> போக்கிய பின்பவன் தம்பியர் போற்றப் புரந்தரசில்
> ஆக்கிய வார்த்தை பதினு லுலகமு மாகியதே.

ஆகவே, சுந்தர பாண்டியன் கண்டகோபாலனை விண்ணுலகிற்போக்கினுன் என்றும், அவன் தம்பியர் போற்றப் புரந்து அரசியல் ஆக்கிய வார்த்தை எவ்வுலகமும் அறியும் என்றும், இப்பா கூறுவதால், பாண்டியனுல் கொலை செய்யுப்பட்ட கண்டகோபாலன் மன்மசித்தியின் தமையன் என்றும், தமையனுக்குப் பிறகு காஞ்சியின் அரசைப் பெற்றவன் மன்மசித்சி



108763
V211PL G

தானே என்றும் ஊகிக்க இடன் உண்டு. இவன் ஏறக்குறைய கி. பி. 1250-இல் பட்டம் பெற்று ஆண்டான்; காஞ்சியிலே கோப்பெருஞ்சிங்கன், விஜய கண்ட கோபாலன் என்ற இரு மன்னர்களுடைய சாசனங்களும் கிடைத்துள்ளன. (கி. பி. 1254-450, 538/1919) (கி. பி. 1257, 343, 350, 393, 571/1919) இங்கு கூறியுள்ள விஜய கண்ட கோபாலன் என்பவன் மேற் கூறிய மன்மசித்தியாக இருககலாம்.

இப்படிக் கோப்பெருஞ்சிங்கனுக்கும் மனமசித்திக்கும் போட்டியிருந்ததால் மன்மசித்தி சோழ இராசேந்திரனோடு நட்புப் பாராட்டி வந்தான். நந்தலூர்க் கல்வெட்டு ஒன்றில் மன்மசித்தி சோழ மூன்றும் இராசேந்திரனுடைய 13-ஆம் ஆண்டில் கி. பி. 1259 தன் தகப்பனுருடைய ஆன்ம நலத் திற்கு ஒரு கிராமத்தைத் தானம் செய்தான் என்று கூறப் பட்டுள்ளது. (590/1907.) இதனால் மன்மசித்திக்கும் இராசேந் திர சோழனுக்குமிடையே இருந்த நட்புரிமை பெறப்படும்.

மேலும் மன்மசித்தி தன் கவிவாணரான திக்கண சோமயா ஜியின் தலையீட்டால் காகதீய வம்சத்துக் கணபதி மகாராஜா வின் உதவியைப் பெற்றுத் தன்னுடைய அதிகாரத்தைக் காஞ்சியில் நிலைநிறுத்த முயன்றான். கணபதி என்பவன் கி. பி. 1249-இல் (சகரயாண்டு 1172) காஞ்சியில் தங்கியிருந்த தாக (26/1890; 12/1893. **S. I. I. IV** 814) அறிகிறோம்.

கோப்பெருஞ்சிங்கனுக்கும் கணபதி மகாராஜாவுக்கும் போர் நிகழ்ந்திருக்ச் வேண்டும்.

இச்சமயம் (கி. பி. 1258) சடையவர்மன் சுந்தரபாண்டி யன் சோணாட்டின் மீது படையெடுத்து, கோப்பெருஞ் சிங் கனை வென்று, காஞ்சி கண்ட கோபாலனைக் கொன்று கணபதி யோடு போர் தொடுத்துக் காகதீயர்களைத் துரத்தி நெல்லூரில் வீராபிடேகம் செல்து கொண்டான் என்று அறிகிறோம். தனிப் பட்டோ, சுந்தரபாண்டியனுக்கு உதவி செய்தோ கோப் பெருஞ்சிங்கன் காகதீயரோடு போரிட நேர்ந்திருக்க வேண் டும். கோப்பெருஞ் சிங்கனுடைய கல்வெட்டொன்று கோதா வரி ஜில்லாவில் உள்ள திராக்ஷாராமாவிலும் மன்றொன்று கர் நூல் ஜில்லாவிலுள்ள திரிபுராந்தகத்திலும் கிடைத்துள்ளன.

திராக்ஷாராமக் கல்வெட்டு கோப்பெருஞ் சிங்கனுடைய விருதுகளையும், அவன் காகதீயபதி மகாராஜனின் ஆணைக்கு

உட்பட்டவன் என்பதையும், அவன் பீமநாதருக்குக் கொடுத்த கொடைகளையும் கூறுகின்றது. இக்கல்வெட்டு சகரயாண்டு 1184 (கி. பி. 1262)-இல் தோன்றியது.

திரிபுராந்தகக் கல்வெட்டு இதற்குப் பிற்பட்டதாகும். ஏனெனில் இதில் கோப்பெருஞ்சிங்கன் திராக்ஷாராமம்; காஞ்சி (காஞ்சியிலுள்ள ஏகாம்பர நாதர் கோயில்), வீரட்டானம், சுவேதசம்பு (ஜம்புகேசுவரம்) மதுரை, காளத்தி முதலிய தலங்களிலுள்ள கோயில்களுக்குச் செய்த தானங்கள் குறிக்கப்பட்டுள்ளன. மேலும் அக் கல்வெட்டு கோப்பெருஞ்சிங்கன் மசாராஜசிம்மனுக்கும் சீலாவதிக்கும் தோன்றியவன் என்றும்; அவன் நான்கு திக்கிலும் வாழ்ந்த மன்னர்களை வென்று, துலாபாரம் செய்து, தில்லை நகரிலுள்ள நடராசப் பெருமானின் கீழைக் கோபுரத்தைக் கட்டினவன் என்றும் குறிப்பிடுகின்றது.

## அம்ப தேவர்

தற்காலம் கடப்பை, கர்நூல் ஜில்லா பிரதேசத்தில் (ஆந்திர இராச்சியம்) காயஸ்த வகுப்பைச் சேர்ந்த அம்பதேவன் என்பவன் ஒரு பிரபல சிற்றரசன். காகதீய கணபதி இவனை அடக்கினர். கணபதி தேவனின் இறுதிக் காலத்திலும், பிறகு அவர் பட்டத்தைப் பெற்ற அவருடைய மகளான உருத்திராம்பா. (இவள் ஆண் பெயர் புனைந்து உருத்திர மகாராசர் என்று வழங்கப் பெற்றுள்) காலத்திலும் அம்பதேவன் மகாராசன் என்ற பட்டம் வகித்து காகதீயரோடு பல போர் செய்தான்.

அம்ப தேவனைப் பற்றிய ஒரு கல்வெட்டு சகரயாண்டு 1194-கி. பி. 1272-க்கு உரித்தானது (168/1905). அவனுடைய மற்றெரு கல்வெட்டு சகரயாண்டு 1213 (கி. பி. 1291-2) (193/1905) ஐச் சேர்ந்தது. இதில் அம்பதேவர் **'காடவராய விமர்த்தகர்'** என்ற பட்டத்தைப் புனைந்துள்ளனர். இக்காடவராயன் கோப்பெருஞ்சிங்கனுக இருக்கவேண்டும். கோப்பெருஞ்சிங்கனே சுமார் 1279-இல் இறந்துபோய் இருக்கவேண்டும். ஆகையால், சுமார் திரிபுராந்தகக் கல்வெட்டுக் காலத்தில் (சுமார் கி. பி. 1262) கோப்பெருஞ்சிங்கன் அம்பதேவனுலும் தோற்கடிக்கப் பட்டிருக்கவேண்டும். அம்பதேவன்

சொந்த முறையிலே இப்போரை நிகழ்த்திஞன் என்று தெற்றெனக் கூறமுடியவில்லை. கோப்பெருஞ்சிங்கனுடைய திருவண்ணமலைச் சாஸனத்தில் 'இவன் மகன் காடவ குமாரனின்' புகழைப் பின்வரும் வரிகள் விளக்கும். "வடதிசைத் தெலுங்கர் வடக்கிருந்தழியவும் போர் பல கடந்து பொருந்தா மன்னவர் ஆரெயிற் செறிந்நூர் மலையர ணழித்து" தெலுங்கர்களோடு நிகழ்ந்த போரும், அதில் கோப்பெருஞ் சிங்கனின் மகஞன காடவகுமாரன் எடுத்துக் கொண்ட பங்கும் இவ்வரிகளால் தெரியவரும்.

## கோப்பெருஞ்சிங்கனும் பாண்டியர்களும் (கி. பி. 1238—79)

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் இச்சோணுட்டுப் படையெழுச்சிக்குப் பிறகு கி. பி. 1238-இல் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் அரச பதவியைப் பெற்ருன். இவன் செயலற்றவன். ஆகவே, கோப்பெருஞ்சிங்கன் இப் பாண்டிய மன்னனைத் தோற்கடித்துச் சோணுட்டின் வட பாகத்தைத் தன் வசப்படுத்திக் கொண்டான்.

கி.பி. 1251-இல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் மதுரை அரசு கட்டில் ஏறிஞன். இவனே பிற்பட்ட பாண்டிய மன்னர்களில் தலை சிறந்தவன். அரச பதவியைப் பெற்ற ஏழு ஆண்டுகளுக்குள் மாபெரும் திக்குவிஜயம் செய்தான். சேரனை வென்ருன். மலைநாடு கொண்டான். சென்னியைத் திறை கொண்டான். பொன்னி நாட்டுப் போசளவரசர்களைப் புரிசையில் அடைந்தான். ஆண்மை படைத்த சிங்கணன் முதலாய போசள தண்டத் தலைவரும் தானையும் படத்துண்டித்துப் பெரும் பிணக்குன்று நிறைத்தான். உட்பகையாய் நின்ற சேமனைக் கொன்ருன். பிறரால் எண்ணுதற்கரிய கண்ணனூர்க் கொப்பத்தைக் (திருவரங்கத்துக்கு அருகில் உள்ளது) கைக்கொண்டருளிஞன். பொன்னி சூழ் செல்வப் புனல் நாட்டைக் கன்னி நாடெனக் காத்தருளிஞன். கருநாட ராசனிடமிருந்து களிறு திறைகொண்டான். இலங்கை காவலனை வென்று இறை கொண்டருளிஞன். பல்லவ கோப்பெருஞ் சிங்கன் சேனையைத் தோற்கடித்து, வேந்தர் கண்டறியா விறற்றிண் புரிசைச் சேந்தமங்கலச் செழும்பதியை முற்றுகை யிட்டான். பல்லவன் நடுங்கப் பல போர் செய்

தான். அவன் காலில் விலங்கு இட்டான், நெல்விளைநாடும், நெடும் பெரும் பொன்னும், பரும யானைபும் பரியும் முதலாய அரசுரிமையையும் கைக் கொண்டான். பல்லவனைத் திறை செலுத்தும் சிற்றரசனாக்கினான். பிறகு பல்லவனுக்கே அரசு அளித்தான். இவ் வெற்றிக்குப் பிறகு பாண்டிய மன்னன் தில்லையம்பலத்துத் திருநடம் பயிலும் தொல்லை இறைவர் துணை கழல் வணங்கினான். அதன் பிறகு கோழிமாநகர் (உறையூர்) சென்று, வேப்பம் பூவை வாகைமாலையாகச் சூடினான். எண்ணெண் கலை தேர் இன்மொழிப் பாவலர் பல்லூழி வாழ்க எனப் பல்லாண்டு ஓதினர். "கண்டவர் மனமும் கண்ணும் களிப்ப,

வெண்திரை மகர வேலையின் நடுவண்
ஆயிரம் பணைபணத் தனந்தன் மீமிசைப்
பாயல் கொள்ளும் பரமயோ கத்து
ஒருபெருங் கடவுள் உவந்தினி துறையும்
இருபெருங் கடல்விரி இடைநிலத் திலங்கும்

திருவரங்கம் பெருஞ் செல்வம் சிறப்பப்" பன்முறை துலாபாரம் செய்தான். பொன்மலை என்னப் பொலிந்து தோன்ற பொன் வேய்ந்தருளிய செம்பொற் கோயிலுள் (திருவரங்கம்) சிங்காதனம் ஏறிக் கனகமாமுடி கவின் பெறச் சூடினான். இதுவே சுந்தர பாண்டியனின் திக்கு விஜயத்தின் முற்பகுதியாகும். தில்லையிலும் திருவரங்கத்திலும் இப் பாண்டிய மன்னன் நடத்திய துலாபாரத்தைப் பற்றிச் சில அரிய, வடமொழி தென்மொழிப் பாக்கள் வடிவமான கல் வெட்டுக்கள் உள்ளன.

வாழ்க கோயில் பொன்வேய்ந்த மகிபதி
வாழ்க செந்தமிழ் மாலை தரித்தவன்
வாழ்க மண்டலம் யாவையும் கொண்டவன்
வாழ்க சுந்தர மன்னவன் தென்னனே.
இனவரிக் கிம்புரி வெண்பிறைக் கோட்டிகல் வெங்கடுங்கண்
சினமத்த வெங்கரிச் சுந்தரத் தென்னவன் தில்லைமன்றில்
வனசத் திருவுடன் செஞ்சொற் றிருவை மணந்ததொக்கும்
கனகத் துலையுடன் முத்தத் துலையிற் கலந்ததுவே.

(சுந்தரபாண்டியன் தில்லையிலுள்ள கனகசபையில் கனக துலாபாரமும் முத்துத் துலாபாரமும் செய்தது திருமகளோடு கலைமகளைக் கலந்த நிலையை ஒத்திருக்கும்.)

வாணன், போசளன், தெலுங்கர்—இவருடன் செய்த போர்கள் பற்றிய பாக்கள்:

வட்ட வெண்குடை மன்னர் தம்புகல்
கொண்டு மாமுடி கொண்டுபோர்
மாது கொண்டெழு போசளன் நடை
கொண்டு வாணன் வனம் புகத்
தொட்ட வெம்படை வீரன் வென்றி
புனைந்த சுந்தர மாறன் முன்
சூழ விட்ட தெலிங்கர் சேனை
துணித்து வென்ற வெங் களத்து மேல்
விட்ட வெம்பரி பட்ட பேர்தெழு
சோரி வாரியை யொக்கும் நேர்
மேல்மி தந்த நிணப்பெருந் திரள்
வெண்ணு ரைத்திர ளொக்கு முன்
பட்ட வெங்கரி யந்தவாரி
படிந்த மாமுகில் ஒக்கும் வீழ்
பருமணிக் குடை அங்கு வந்தெழு
பருதி மண்டல மொக்குமே.

சோழனையும் ஆரியரையும் வென்றது.

காரேற்ற தண்டலைக் காவிரி நாடனைக் கானுலவும்
தேரேற்றி விட்ட செழுந்தமிழ்த் தென்னவன் சென்றெதிர்ந்து
தாரேற்ற வேம்படை ஆரியர் தண்படத் தனியே
போரேற்று நின்ற பெருவார்த்தை இன்னும் புதுவார்த்தையே,

வேணாடரையும் வடவேந்தரையும் வென்றது.

மீளா வழிசெல்ல வேணாடர் தங்களை வென்றதடந்
தோளான் மதுரைமன் சுந்தர பாண்டியன் சூழ்ந்திறைஞ்சி
ஆளான மன்னவர் நன்றேவல் செய்ய அவனிமுட்ட
வாளால் வழிதிறந் தான்வட வேந்தரை மார்திறந்தே.

காடவர்கோனை வென்றது.

பண்பட்ட மென்மொழிப் பைந்தொடி கொங்கை பரக்க, வைவேற்
கண்பட்ட முத்தவடங்கண்டும் காக்கிலன் காடவர்கோன்
எண்பட்ட சேனை எதிர்பட் டொழுக எழுந்த புண்ணீர்
விண்பட் டலைய படைதொட்ட சுநதர மீனவனே.

கி. பி. 1258-இல் இருந்து 1260க்குள் சுந்தரபாண்டியன் தெலுங்குச் சோட மன்னனான கண்டகோபாலனை வென்று,

விண்ணுலகுக்கு அனுப்பிக் காஞ்சியைத் தன் வசமாக்கினுன். அங்கே துலாபாரம் செய்தான்.

## காஞ்சிக் கல்வெட்டு (52—1893 S. I. I. IV. 865)

கேரள நாட்டை வென்றும், மகததேசத்தரசனை வெளியேற்றியும், இலங்கைத் தலைவனை வென்றும்,க்ஷேமியை வென்றும் ஹோய்ஸல நாட்டரசனையும்சோழ நாட்டரசனையும் துரத்தியும், காடகர்களின் கோட்டையை அழித்தும், ஆந்திர நாட்டரசனைக் கொன்றும், காஞ்சியில் துலாரோஹணமும், வீராபிஷேகமும் செய்துகொண்டு சுந்தர பாண்டியன் பூமியை ஆண்டான். பிறகு தெலுங்குச் சோடர்களின் தலைநகரான நெல்லூரை வென்றுன். சோடர்களையும் அவர்களுக்கு உதவியாக இருந்த காகதீய மன்னன் ஆகிய கணபதியையும் துரத்தினுன். சுந்தர பாண்டியன் நெல்லூரில் வீராபிஷேகம் செய்து கொண்டான்.

## (S. I. I. IV. 433)

கோச்சடைய பன்மரான—எல்லா உலகத்திற்கும் ஆதார மானவரும் சந்திர வம்சத்திற்குத் திலகம் போன்றவரும் மதுரா புரிக்கு மாதவன் போல் விளங்குபவரும் கேரள வம்சத்தை அழித் தவரும், இலங்கைத் தீவைக் கொள்ளையிட்டவரும் இரண்டாவது இராமர் போன்றவரும், சோழவம்சமாகிற மலைக்கு வஜ்ராயுதம் போன்றவரும், கர்நாடக அரசனைத் துரத்தியவரும், காடவ குலத் தினராகிய யானைக் கூட்டத்திற்கு சிங்கமானவரும் பலவித சத்ருக் களின் கோட்டைகளை அழிப்பவரும், வீரகண்ட கோபாலனுகிற காட்டிற்கு காட்டுத் தீ போன்றவரும், காஞ்சியின் அரசனுன கண பதியாகிற மானுக்குப் புலிபோன்றவரும் நெல்லூரில் வீராபிஷே கம் செய்து கொண்டவரும் தன்னைவணங்கின அரசர்களை அவர வர்களின் ராஜ்யத்தில் அமர்த்துபவருமான மஹாராஜாதிராஜ, பரமேச்வரரான ஸ்ரீ சடையவர்மன் சுந்தர பாண்டிய தேவர்.

கோப்பெருஞ்சிங்கன் இச்சமயம் சுந்தரபாண்டியனுக்கு உதவி யாக இருந்து வட மன்னர்களோடு போர் செய்தான். இதனுல் தான் கோப்பெருஞ்சிங்கனுடைய கல் வெட்டுக்கள் திராக்ஷா ராமாவிலும் (சகரயாண்டு 1184 கி. பி. 1242) திரிபுராந்தகத் திலும் காணப்படுகின்றன. காகதீய மன்னனேடு செய்த போரில் கோப்பெருஞ்சிங்கன் வெற்றி பெற்றதாகத் தெரிய வில்லை. இவ்விரு கல்வெட்டுக்கலிலும் கோப்பெருஞ்சிங்கன் செய்த தானங்களே குறிக்கப் பெற்றுள்ளன. யாதொரு

வெற்றியும் குறிக்கப் படவில்லை. திராக்ஷா ராமக் கல்வெட்டில் கோப்பெருஞ்சிங்கன் தன்னைக் காகதீய மன்னனின் ஆணைக்கு உட்பட்டவன் என்று கூறிக் கொள்கிருன்.

மறுபடியும் கோப்பெருஞ்சிங்கன் சுயேச்சையடைய முயன்ருன். பாண்டியனுக்குத் திறை செலுத்தவில்லை. இதை யறிந்த மன்னன் பல்லவனை அடக்குவதற்கு மீண்டும் முயற்சி செய்தான். சுந்தரபாண்டியனின் கூட்டரசனுன சடைய வர்மன் வீரபாண்டியன் போப்பெருஞ்சிங்கனுடைய நாட்டின் மீது கி. பி. 1267–இல் படையெடுத்தான். காடவன் மறுபடி யும் தோற்கடிக்கப்பட்டான். பாண்டியனுக்குத் திறை செலுத் தினுன். பாண்டிய மன்னன் பிறகு சிறம்பரத்துக்கு வந்து தில்லையம்பலத்திலுள்ள நூற்றுக்கால் மண்டபத்தில் முடி புனைந்தான். இவ் விழாவைப் பற்றிப் பின்வரும் கல்வெட்டு விளக்கும். (புதுக்கோட்டை—சாசனம் *370, 192/1914*).

''கோச்சடைய பர்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் கொங்கீழங் கொண்டு கொடுவடுகு கோடழித்துக் கெங்கை யிருகரையும் காவிரியும் கைக்கொண்டு, திங்கள் அரவமும் செழுமலர்தார் புனல் செஞ்சடையோன் **பொற்புலியூர் வீற்றிருந்து; காடவன் திறையிடக் கண்டினிதிருந்து; வீராபிஷேகமும் விஜயாபிஷேகமுல் பண்ணியருனிய வீரபாண்டிய தேவர்''**

தில்லை நூற்றுக்கால் மண்டபத்திலுள்ள சில தூண்களில் ''ஸ்வஸ்ஸ்ரீ வீரபாண்டியன் திருமண்டபம்'' என்ற கல்வெட்டு பொறிக்கப் பெற்றுள்ளதால் இவ்விழாக்கள் இம் மண்டபத்தி லேயே நிகழ்ந்திருக்க வேண்டும். இம் மண்டபத்துக்கு வீர பாண்டியன் மண்டபம் என்ற புதுப் பெயரும் இவனுல் வழங் கப்பட்டிருக்க வேண்டும். இதற்குமுன் இம் மண்டபம் அகளங்கன் (விக்கிரம சோழனின் மறு பெயர்) திரு மண்டம் என்றே வழங்கப்பட்டது. இவ் விழாவிற்குப் பிறகு கோப் பெருஞ்சிங்கன் 12 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தான். பாண்டி யர்களும் தெலுங்குச் சோடர்களும் காகதீயர்களும் பலம் படைத்த எதிரிகளாக இருந்ததால் கோப்பெருஞ்சிங்கன் தனிப்பட்ட சுதந்திரம் படைத்த மன்னனுக ஆண்டான் என்று கொள்வதற்கில்லை.

கி. பி. 1268-இல் மதுரை முடியை முதலாம் மாறவர்மன் குலசேகரன் பெற்ருன். இவன், ''எம் மண்டலமும் கொண்ட

வன்'' என்ற பட்டம் சூடினுன். போசளர்கள், சோழர்கள், பல்ல வர்கள் ஆகியோருடைய நாடுகளை வென்று தென்னுட்டில் இணையற்ற மன்னனுய்த் திகழ்ந்தான். கடைக்காலப் பாண்டிய மன்னர்களில் இவனே பிரசித்திபெற்றவன், கி. பி. 1279-இல் மூன்ரும் இராசேந்திர சோழன், கோப்பெருஞ்சிங்க பல்லவன் ஆகிய இருவருடைய ஆட்சியும் முடிவடைந்தது.

அத்தியாயம்-6

## கோப்பெருஞ்சிங்கனின் பெருமை

இதுகாறும் ஆராய்ந்தவற்ருல்,

கோப்பெருஞ்சிங்கன் பட்டுக்கிடந்த பல்லவ குலமாகிய மரத்தின், ஒரு பக்கத்தில் தளிர்த்த சிறுமுளையிலிருந்து பரவி வளர்ந்த பெரிய கிளை போன்றவன். இவன் தகப்பனை மணவாளப்பெருமாள் சேந்தமங்கலத்தில் படைவீடு அமைத்துப் புதிய தலைநகரை நிறுவிய திறல் சான்றவன். தம் முன்னோர் கொண்டிருந்த கூடல் நகரை நீத்துச் சேந்தமங்கலத்தைத் தலைநகராகக் கொண்டு மூன்ரும் குலோத்துங்கனின் சிற்றரசனுகத் திகழ்ந்தான். இவனும் சோழ மன்னர்கள் வலி குன்றி வாழ்வதைக் கண்டு தனது அதிகாரத்தை நிலைநாட்டும் காலத்தை எதிர்பார்த்திருந்தான்.

“ ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின் ”

என்பது முதுமொழியன்ரே! மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோணுட்டில் நிகழ்த்திய இரு படையெழுச்சிக்குப் பிறகு சோழனது வலி குன்றிய நிலை வெளியாயிற்று.

“ கொக் கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து ”

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க, முன்பு சோழனுக்கு அடங்கி வாழ்ந்த கோப்பெருஞ்சிங்கன், தனக்கு இடன் கிடைத்த காலத்தில், சோழனைத் தாக்கித் தெள்ளாற்றில் தோற்கடித்துச் சேந்தமங்கலத்தில் சிறை வைத்தான்.

போசளர்கள் தலையிட்டபோது,

“ வினை வலியும் தன்வலியும் மாற்ருன் வலியும்
துணை வலியும் தூக்கிச் செயல் ”

என்ற முறையில் தன் வலிமையைத் தன் மாற்றான் வலியோடு ஒப்பிட்டுத் தன் வலி குன்றியது என்று கண்டு,

"செருநரைக் காணின் சுமக்க இறுவரைக்
காணின் கிழக்காந் தலை"

என்ற முன்னோர் வாக்கிற்கு இணங்கத்தான் குழைந்து சோழனை விடுதலை செய்தான். விடுதலை பெற்றதும் சோழ மன்னவன் செயலற்றவனே. மாறவர்மன் இரண்டாம் சுந்தர பாண்டியனும் வலியற்றவனாகவே இருந்தான். ஆகவே கோப்பெருஞ்சிங்கனும்,

"எய்தற்கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கரிய செயல்"

என்பதை உட்கொண்டு கி.பி. 1243-இல் முடிசூடிக் கொண்டான். பண்டைக் காலப் பல்லவ நாட்டின் பெரும் பகுதியைத் தன் ஆளுகைக்குள் கொண்டு வந்தான்.

"காய்ந்தெறி கடுங்கற்றன்ன கவுட்கொண்ட களிறுபோல
ஆய்ந்தறி வுடைய ராகி அருளொடு வெகுளி மாற்றி
மன்னர்கள் வாழ வேண்டும்"

என்ற அரசியல் முறையை பின்பற்றித் தன் வலிமை மிகும் அளவு வாளா இருந்து, வலிமை மிக்க அளவில் தனக்குப் போசளர்கள் பகையாக வந்து செய்த தொல்லைகளை நினைவுறுத்திக் கொண்டு, அவர்களை எதிர்த்துப் பல போர்கள் செய்து வெற்றி பெற்றான்.

'வையங் காவலர் வழி மொழிந் தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச் சொல் பொறாஅது
இடம் சிறிதென்னும் ஊக்கம் துரப்ப,
ஒடுங்கா உள்ளத்தோடும்'

சென்று அமர் மலைந்து, தெலுங்குச் சோடர்களையும் பன்முறை போரில் வென்று வடக்கே கிருஷ்ண நதிக்கரைவரையில் தனது ஆணையைச் செலுத்தினான்.

சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஒப்பற்ற வீரன். சண்டமாருதத்தின் முன் சராசரங்கள் வலியுற்று ஒடுங்குவது போல, அவனது வீரத்திற்குமுன் மற்ற மன்னர்கள் நிற்கலாற்றாது மறைந்தனர். காவிரி நாடன் கலங்கினான். போசளர்

புறங்காட்டினர். கோப்பெருஞ்சிங்கன் குலைந்தான். காஞ்சியை யாண்ட கண்டகோபாலன் கழலிணை தொழுதான். முதலில் குலைந்த கோப்பெருஞ்சிங்கன் பின் குழைந்து சுந்தர பாண்டியனின் நட்பரசனானான். தெலுங்குச் சோழரின் உறுதுணையாயின காகதீயர்களை வெல்லப் பாண்டியனுக்குக் கோப்பெருஞ்சிங்கன் உதவி செய்தான். கோப்பெருஞ்சிங்கனும், அவனுடைய மகன் காடவ குமரனும் காகதீயர்களோடு பல்லாண்டுகள் போர் செய்தனர், இவர்களுடைய அதிகாரம் காகதீய நாட்டின் எல்லையிலுள்ள திரிபுராந்தகம், திராக்ஷாராமம் முதலிய நகர்கள் வரை எட்டியது. பாண்டியனுடைய வெற்றி நெல்லூர் வீராபிஷேகத்தோடு முற்றுப்பெற்றது. கோப்பெருஞ்சிங்கனோ, பாண்டியனோ காகதீயர்களை அடியோடு வென்றடக்க முடியவில்லை.

சுயேச்சையை நிலைநாட்டக் கோப்பெருங்சிங்கன் மறுமுயற்சி செய்திருக்க வேண்டும். பாண்டியனுக்குத் திறை செலுத்தியதை நிறுத்தியிருக்கவேண்டும். ஆதலின் சடையவர்மன் சுந்தரபாண்டியனுடைய கூட்டரசனான சடையவர்மன் வீரபாண்டியன் படையோடு வந்து கோப்பெருஞ்சிங்கனை அடிப்படுத்தி, தில்லையில் வீராபிஷேகம் செய்து திறையோடு மீண்டான் என்று அறிகிறோம்.

பாண்டியனுக்கு அடங்கியவன் எனினும் அவன் ஒரு குறுநில மன்னனாக மதிக்கப்படவில்லை. தனது நாடாகத்தான் ஆள்வினையால் பரப்பிய தொண்டை நாட்டை (செங்கற்பட்டு ஜில்லாவில் காஞ்சி வரையிலுள்ள பகுதி, தென்னார்க்காடு ஜில்லா, தஞ்சை ஜில்லாவின் வடபாகம்) நேரிய முறையில் பெருநில மன்னனைப் போலவே ஆண்டு வந்தான். தனது பெயராலேயே கல்வெட்டுக்கள் வெட்டுவித்தான். அவன் நேரில் ஆண்ட நாடு முழுதும், அவனுடைய ஆணையை மக்கள் ஏற்று, அதன்படி ஒழுகினர். அணையும் தீபம் படர்ந்து எரிவது போலக் கடைக்காலப் பல்லவ வமிசத்தின் கடைசி மன்னனாகிய இக் கோப்பெருஞ்சிங்கன் 36 ஆண்டுகள் வாழ்வாங்கு வாழ்ந்து, “காட்சிக்கெளியன், கடுஞ்சொல்லன் அல்லனாய், முறைசெய்து காப்பாற்றி, மக்கள் இறையென்று போற்ற இறவாப் புகழுடம்பை நிறீஇச் சென்றான்.” என்று அறிகிறோம்.

## மாபெரும் வீரன்

கோப்பெருஞ்சிங்கன் ஏக வீரன். குறுநில மன்னனுகக் காட்சியளிக்கும் இவ்வரசன் பெருமன்னர்களையும் எதிர்த்து நிற்கும் வாள் வீரனுக நமக்குக் காட்சியளிக்கிருன். எம் மண்டலமும் கொண்ட சோழனை வென்று சிறைப்பிடித்த செய லொன்றே இவனது இணையற்ற வீரத்துக்குச் சான்று பகரும். "கோப்பெருஞ்சிங்கனுடைய நாட்டம் கடை சிவந்த நாள் பூம்புகார்ச் சோழன் சிறை கிடந்தான்" "பொருப்பு இரண் டென வளர்ந்த தோள்வலியினுற் கொண்டது சோணுடு வெங் கிடாத போர்க்கன்னடர் வெங்கிடப் பொருததுன் சேனே" 'பிறை பொருத கனமகரக் கிம்புரிவன் கோட்டுப் பெருங் களிற்றுச் சோழனையும் அமைச்சரையும் பிடித்துச் சிறையி லிடக் களிறுவிடும் மிண்டன்சீயன்" முதலிய வயலூர்ச் சாசனப் பகுதிகள் இவனது போர்த் திறனை விளக்குவன வாகும். இவன் வினை வலியும் மாற்ருர் வலியும் தூக்குவதோடு தன் வலியையும் தூக்கித் துணை வலியும் தேடிக்கொண்டு பகைவர்களை எதிர்த்தவன் என்பது "புளிய மிலேச்ச சேனை களைக் கொண்டு காடவ மன்னன் சோழ மன்னரைச் சிறைப் பிடித்தான்." என்று கட்யகர்ணுமிர்தம் என்ற நூல் குறிப்பிடு வதால் அறியக் கிடக்கிறது. இவனுடைய பட்டப் பெயர்களில் 'கட்கமல்லன்,' 'நிச்சங்கமல்லன்,' 'வாள்வல பெருமாள்' என்பனவும் அமைந்திருப்பது இவனது வாளாண்மைக்குச் சான்று பகரும்.

## செந்தமிழ் வாழப் பிறந்தவன்

தனக்கு முற்பட்ட காலத்தில் ஆண்ட தமிழ் மன்னர்களைப் போலவே, கோப்பெருஞ்சிங்கனும் வடமொழி வல்லாரையும் தென்மொழி வல்லாரையும் பெரிதும் ஆதரித்தான். ஆற்றூர், ஒழுகரை, திரிபுராந்தகம், திராக்ஷாராமம் ஆகிய இடங்களில் இலக்கியச் சுவைபட அமைந்த இவனது வடமொழிக் கல்வெட் டுக்களைக் காணலாம். 'சர்வக்ஞன்,' 'சாகித்திய ரத்னுகரம்' (இலக்கியக் கடல்) என்ற இவனுடைய விருதுகள் இவனுடைய கல்வித் திறனை விளக்கும். இக் காடவன் காலத்தில் சங்கத் தமிழோசை மறுபடியும் கதிரவனைக் கண்ட கடல்போலப் பொங்குவதாயிற்று. இவனது பட்டப் பெயர்களில் பல 'வாள் வல பெருமாள்' 'பரதம் வல்லான்' 'கூடல் அவனி

ஆளப் பிறந்தான்' என்றாற்போல இனிய தமிழ்ச் சொற்றொடர்களாய் இருக்கும் நிலையை நோக்க, இவன் தமிழை எவ்வளவு விரும்பி யிருக்க வேண்டும் என்பது போதரும். இவன் பாணர்கள் இயற்றியுள்ள திருவண்ணாமலைச் சாசனம் இனிய தமிழில் ஆசிரியப் பாவாகத் திட்பமும் ஒட்பமும் பல்குமாறு அமைக்கப்பட்டுளது. அப் பாடலில் இம் மன்னனுடைய பல விருதுப் பெயர்கள் நல்ல தமிழ்ச் சொற்றொடர்களாக அமைத்துப் பாடப்பட்டுள்ளமை நம்மனோருக்கு உளம் மல்கு உவகை தருவதாகும். இவனைத் 'தமிழ்நாடு காத்த பெருமாள்' என்று திருவண்ணாமலை சாஸனம் புகழ்கின்றது. இவனது வயலூர்ச் சாசனம் இன்தீந் தமிழ்த் தொடையாய் அமைந்துள்ளது.

" மீளிவன் கொடிவிடை வேந்தர் மார்பினும்
தோளினும் தீட்டிய தொண்டை மன்னவா !
வானில்வென் றிடுசிறை வளவன் வைகிய
நாளினும் பெரியதிந் நள்ளென் யாமமே."

என்பதுபோன்ற அகப்புறப் பாடல்கள் சிறந்த இலக்கியச் சுவைபட அமைந்தனவாகும். இவையன்றி, இவனுடைய கல்வெட்டுக்களை நோக்குகையில், தமிழின் மறுமலர்ச்சிக் காலம் என்று பறை சாற்றும். இக் காலத்தவராகிய நாமும் இறும்பூது எய்தும் அளவில் உயர்ந்த இலக்கிய நடையில் அவை அமைந்துள்ளமை போதரும்.

உதாரணமாக ஒன்று நோக்குவோம்.

S. I. I. Vol. XII No. 126.

திரிபுவனி—182/1919. (ஒழுகரை ஏரிக்கரை)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சகல புவன சக்கரவர்த்தி காடவன் அவனியாளப் பிறந்தான் கோப்பெருஞ்சிங்கன்.

2. திரிபுவன மாதேவி **ஏரிகரை** பல இடங்களிலும் **உடைந்து ஏரியும் துகுந்து, மதகுகளும் முறிந்து.**

3. **கலிங்குகளும் அழிந்து** கிடக்கையில், உடைந்த **மடைகளும் அடைத்து, ஏரியும் கல்லி, கரையும் கற்கட்டி,**

4. **மதகுகளும் அட்டுவித்து, கலிங்குகளும் செய்தபடி"**

ஒவ்வொரு பெயருக்கு ஏற்ப ஒவ்வொரு வினையும் இலக்கியச் சுவையும் ஆழ்ந்த பொருளும் அமைய இணைத்து வரை

யப்பட்டுள்ள செய்தி இவன் காலத்தில் தமிழ் வழங்கி வந்த உயர்ந்த நிலையை எடுத்துக் காட்டுவதாகும்.

இந்நிலையைக் கண்டு களிக்குப் பேறுபெற்ற 'வயலூர்ச் சாசனக் கவி' இம் மன்னனைப் **'பேணு செந்தமிழ் வாழப் பிறந்த காடவ'** என்று நாவாரப் புகழ்ந்தது முகமன் அன்று என்பது தேற்றம்.

கோப்பெருஞ்சிங்கன் இசைக் கலையையும் நாடகக் கலையையும் ஆதரித்தான். திராக்ஷாராமக் கல்வெட்டு **'கலா நாட்டாக்ய வேதாம் பூதி,'' 'ப்ரதார்ணவ பரீணன்' சைரஸ ஸாஹித்ய ஸாகர சாம் யாத்ரியன்'** என்றும், திரிபுராந்தகக் கல்வெட்டு **''பரதார்ணவ கர்ணதாரன்,'' ''சர்வக்ஞன்,'' ''ஸாஹித்ய ரத்னகரன்,'' ''பரதம் வல்லான்''** என்றும், திருவக்கரை சாஸனம் ''சர்வக்ஞன்'' என்றும், ஆற்றூர் சாஸனம் 'பரதமல்லன்' என்றும் திருவண்ணமலை சாஸனம் ''பரதம் வல்லபெருமாள்'' என்றும் இம் மன்னனைப் புகழ்கின்றன. கோப்பெருஞ்சிங்கனின் 19–ஆம் ஆண்டு அறைகண்டநல்லூர் (அறையணி நல்லூர்) கல்வெட்டு இம் மன்னனே செய்த விளக்குத் தானத்தைக் குறிக்கிறது. ''அறையணி நல்லூருடையார் ஒப்பொருவருமில்லாத நாயனுர்க்கு **''அவனியாளப் பிறந்தான் வாள் வல்ல பெருமான் கோப்பெருஞ்சிங்கனே''** வைத்த திருநந்தா விளக்கு 1க்கு விட்ட சாவா மூவாப் பசு 32'' இப் பதியில் **வான் வல்ல பெருமான்** என்ற பட்டத்தைத் தன் பெயரோடு இணைத்துச் சொல்லியுள்ளான். இது கவனிக்கத் தக்கது.

ஆகவே இவன் காலத்தில் நாட்டியக் கலை ஓங்கி வளர்ந்து இருந்தது என்றும், இக் கலைஞர்களை இவன் போற்றினுன் என்றும் அறியக் கிடக்கின்றது. பரத நாட்டியம் என்பது இசை, நாடகம் முதலிய கலைகளை விளக்கும் இந்தியாவின் மிகப் புராதன கலை ஆகும். நாட்டிய சாத்திரத்தின் நடன முத்திரைகளையும், தாண்டவ இலக்கணங்களையும், சிற்பங்களால் விளக்கி, ஒவ்வொரு முத்திரைக்கும் உள்ள பரத நாட்டிய ஸ்லோகங்களையும் பொறித்துள்ள பெருமையைத் தில்லையின் கீழைக் கோபுர வாயிலின் இருமருங்கிலும் காணலாம். இக் கலைக்கு இவன் செய்த அருந்தொண்டு போற்றற்பாலது.

கோப்பெருஞ்சிங்கன் வென்று ஆண்ட நாடுகளையும், அவனுடைய பல விருதுகளையும், அவனுடைய அழியாப் புகழையும்

ஆற்றூர் வடமொழிக் கல்வெட்டு வாயார வாழ்த்துகின்றது. (S. I. I. of Vol. XII, No. 120, 286/1921.)

**ஆற்றூர்ச்சாசனம்** (தமிழாக்கம்)

ஸ்வஸ்திஸ்ரீ—இது மூவுலகத்து அரசர்களுடைய முடிகளிலுள்ள மாணிக்கங்களுக்கு அலங்காரம் செய்வது.

பூமியிலுள்ள நரசிரேஷ்டரான **(கோநரசிம்மன்) கட்கமல்லனுடைய** சாசனம். மூன்று உலக அரசர்க்ளுக்கும் தலைவன். எல்லா உலகத்திலுள்ள அரசர்களுடைய தலையிலுள்ள இரத்தினத்தில் தன்னுடைய திருவடித் தாமரைகளை வைத்தவன். சோழ இராச்சியத்தை ஸ்தாபித்தவன். பாண்டிய மண்டலாதிபதி. தொண்டை மண்டலமான தாமரைக்குச் சூரியன் போன்றவன்.

கர்நாடகமான சமுத்திரத்திற்கு அகத்தியர் போன்றவன். ஆந்தீரமாகிய சமுத்திரத்திற்கு மந்தரமலை போன்றவன். சேதி மன்னனுடைய மலைக் கோட்டைகள், அகழிகள் இவற்றை அழித்து ஜயபேரிகை முழக்கியவன்,

எதிரி அரசர்களை அமுக்குவதில் இயந்திரப் பொறி போன்றவன், பகை மன்னருடைய பெருந்தேவியாரின் கன்னம் காது கழுத்து இவற்றிலுள்ள மங்கல அணிகளாகிய நரிகளுக்குச் சுழல் காற்று போன்றவன்.

அபிமான துங்கள், சங்கிராமராமன், அசகாயவீரன், ஆகவதீரன், பரத மல்லன், பாரதமல்லன், கட்கமல்லன், பல்லவ குல பாரிசாதன், காடவகுல சூடாமணி, அவநி ஆளப் பிறந்தான், அவனிபாலன ஜாதன், மங்கள நிலையன், வீர விநோதன், தியாகத்தைச் சுவைப்பவன் (தியாக விநோதன்) பகை மன்னன் கண்டகோபாலனின் பண்டாரத்தைக் கவர்ந்தவன் (கண்டபண்டாரலுண்டாகன்) பகை மன்னரின் அந்தப்புரத்தைச் சிறைப்பிடிப்பவன் (பரராஜ அந்தப்புர பந்திகாரன்) இலக்கியப் பெருங்கடல் (ஸாஹித்யரத்நாஹரன்) மல்லைக் காவலன் (மல்லாபுரி நாயகன்) காஞ்சிக் காவலன் (காஞ்சி புரிகாந்தன்) காவிரியை மணந்தவன் (காவேரி காமுகன்) பாற்கடலின் பிரிய நாயகன் (க்ஷீராபகா தக்ஷிண நாயகன்) பெண்ணைக் கேள்வன் (பெண்ணு நதி நாயகன்,

கநக சபாபதி சபா சர்வகார்ய ஸர்வகால நிர்வாகன், கோப் பெருஞ்சிங்கன் (கோபிருது சிம்மகாராஜ :) ஸகலபுவன சக்கிரவர்த்தி.

கட்கமல்லனுன அரசன் தொண்டை மண்டலத்திலுள்ள அரசர்களால் பிரசித்தமான இராசராச நல்லூர் ஆகிய ஆத்தூர் நகரத்தையும், ஆளுடைய நாயனருக்கு வெளிக் கோபுரம், மதில், இரு சுடரளவும் நிகழ்த்துவதற்குரிய பூசை முதலியவற்றையும் செய்வித்தனன்.

எல்லா அரசர்களிடமிருந்தும் திறைபெறும் ஜகதேக வீரனுன கட்கமல்லன் பூமியை ஆண்ட காலத்தில் காஞ்சி கைப்பற்றப்பட்டது. அங்கம் கலங்கியது. மத்திய தேசம் முறியடிக்கப்பட்டது. அளகாபுரி மிகவும் நடுங்கியது.

## கோப்பெருஞ் சிங்கனின் திருப்பணிகள்

கோப்பெருஞ்சிங்கன் வைதிக மதத்தைச் சேர்ந்தவன். சிறந்த சிவ பக்தன். சிதம்பரம் நடராசப் பெருமானிடம் பெரும் பற்றுடையவன். இவன் 'கநக சபாபதி சபா சர்வகார்ய சர்வ காலா நிர்வாஹன்'' என்று பாராட்டப்படுகிருன். இவனுடைய ஐந்தாம் ஆண்டில் தோன்றிய ஆற்றூர்ச் சாசனம் தில்லை யம்பதியின் தெற்குக் கோபுரத்தைக் கட்டுவதற்கு இவன் செய்த தானத்தைக் குறிக்கிறது. இக் கோபுரம் இவனது பெய ரால் 'சொக்கச்சீயன் திருநிலை எழுகோபுரம்' என்று வழங்கப் பட்டது. இது ஏழு நிலைகளையுடைய கோபுரம் ஆகும். இத் திருப்பணிக்கு உடலாக ஆற்றூர் ஆன இராசராச நல்லூரில் நிலம் முன்னூற்றென்றே முக்காலும், கொல்லைப் புன்செயும் சில்காசு ஆயங்களும் தேவதான இறையிலியாக இம் மன்னன் தனது ஐந்தாவது ஆண்டு ஆடி மாதம் முதல் (கி. பி. 1248) இடப்பட்டன. அச்சாசனம் பின்வருமாறு :

S. I. I. XII. No. 119. 285/1921.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ **சகலபுவன சக்கரவர்த்தி கோப்பெருஞ் சிங்க தேவர்க்கு** யாண்டு 5-ஆவது, தனியூர் பெரும்பற்றப் புலியூர் உடையார் திருச்சிற்றம்பல முடையாருக்கு **அழகியசீயன் அவனியாளப் பிறந்தான் காடவன்.**

2. **கோப்பெருஞ்சிங்கனேன்.** இந் நாயனர் **கோயில் தெற்கில் திருவாசல் சொக்கச்சீயன் திருநிலை எழு**கோபுரமாகச் செயயத்

திருப்பணிக்கு உடலாக ஐயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக் காட்டுக் கோட்டத்து ஆற்றூர் நாட்டு ஆற்றூரான ராஜராஜ நல்லூருக்கு எல்லை.

3. ஈஞ்சலாற்றுக் கீழ் கரைக்கு மேற்கும் செய்யாறு நீரோடுகாலுக்கு வடக்கும், வில்லியன் பாக்கத்து எல்லைக்குக் கிழக்கும் சாத்தனம் பாக்கத்தும் கோன்கோட்டு எல்லைக்கும் தெற்கும் நடுவுள்பட்ட தரப்படி நிலம் முந்நூற்றறுபத்து நால்வேலி. இதில் உள்ளூர்த்,

4. தேவர்கள் தேவதானங்களும் திருவிடை யாட்டங் களும் பிடாரிபட்டி துக்கைபட்டி பள்ளிச் சந்தம் உள்பட நிலம் நாற்பத்தறு வேலியும், அகரம் **மஹாவிபூதிச் சதுர்வேதிமங்கலம்** நிலம் பன்னிருவேலியும் செட்டலூர்ப் பிரான் பட்டனுக்கும் மாடபொசை வரதராச பட்டனுக்கும்,

5. வங்கிபுரத்துக் கருணாகர பட்டனுக்கும் பட்டவிருத்தி நிலம் ஒருவேலியும் **கடிகையார்** இறையிலி நிலம் மூன்றே காலும் ஆக நிலம் **அறுபத்திரண்டேகால் நீக்கி** நின்ற நிலம் **முந்நூற்றொன்றே முக்காலும் கொல்லைப்** புன்செயும், காசாயங் களும் வெட்டி, பாடி காவலும் அறிபொடி காவலும் உள்பட,

6. நெல்லாயங்களும், காசாயங்களும், இவ்வூர்த்தேவர் கள் தேவதானம் அகங்கள் உள்பட இறையிலிகளுக்கு முன்பு கொண்டுவரும் ஆயங்கள் உட்பட அனைத்தாயங்களும் உட்பட தேவதான இறையிலியாக 5-ஆவது ஆடி மாதமுதல் சந்திராதித்தவரை செய்வதாக இட்டோம். உடையார் திரு வேகம்பமுடைய,

7. நாயனார் கோயிலிலும் ஆற்றூர் திருமுத்தீசுவர முடையார் கோயிலிலும் கல்லும் வெட்டி, நாற்பால் எல்லை யிலும் திருச்சூல ஸ்தாபனமும் பண்ணி கோயில் பண்டாரத் தார்க்கு ஏறக் கடமை குடிமை போக்கறுப்பார்களாகச் சொன்னோம். இப்படிச் செய்வதே. இவை கோப்பெருஞ் சிங்கன் எழுத்து.

8. என்றும் இவை குருகுலராசன் எழுத்தென்றும்,

9. இவை வில்லவராசன் எழுத்தென்றும் வந்ததிரு,

10. முகப்படிக் கல்வெட்டியது.

சடையவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு ஒன்றில் (S. I. I. Vol. IV. No. 624—176/1892) பின்வரும் குறிப் புள்ளது.

**''சுந்தர பாண்டியன் திருநிலை எழு கோபுரச் சந்நிதியில்** சொக்கச் **சீயன் குறளில்,** கீழ்ப்பக்கத்துக் கீழை மட சந்தானமாகத் திரு நோக்கு அழகியான் திருமடம் என்னும் பெயரால் செய்வித்த மடத்துக்கு மட சேஷமாக நாயகரும் நாச்சியாரும் எழுந் தருளும் திருப்புற்குடையில் அத்யயனம் பண்ணிச் சேவிக்க வும் ''ஒரு தானம் செய்விக்கப்பட்டது. இக் கோபுரம் **சொக்கச் சீயனுன** கோப்பெருஞ்சிங்கன் கட்டிய **தெற்குக் கோபுரத்தையே** குறிக்கும்.

கோப்பெருஞ்சிங்கன்மீது பாண்டியனுடைய வெற்றிக் குப் பிறகு இக் கோபுரத்துக்குச் ''சுந்தர பாண்டியன் எழு நிலைக் கோபுரம்'' என்ற புதுப் பெயரும் அளிக்கப்பட்டது போலும்! இக்காரணம் பற்றியே கோபுரத்தின் திருவாசலில் உள்ள நிலைக் கற்றூண்களின் மீதும் உத்தரக் கற்கள் மீதும் பாண்டிய இலாஞ்சனையாகிய **கயல்** மீன்கள் பொறிக்கப் பட்டுள்ளன.

## திரிபுராந்தகக் கல்வெட்டு

கோப்பெருஞ்சிங்கனுடைய திரிபுராந்தகக் கல்வெட்டில் அவன் சிதம்பரத்தின் கீழைக் கோபுரத்தை எழுநிலைக் கோபுர மாக எடுப்பித்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. நான்கு திக்கிலும் உள்ள மன்னர்களை வென்று, கொண்ட பொரு ளால் துலாபாரம் செய்து இத்திருப்பணியைச் செய்வித்தான். இக் கோபுரம் சுமார் கி. பி. 1262-இல் கட்டப்பட்டிருக்கலாம். இக் கல்வெட்டு வடமொழியில் அமைந்துள்ளது. அதன் தமிழாக்கம் பின்வருமாறு :

1-2. சகல புவன சக்கரவர்த்தியும், காடவகுல திலகனும் கர்நாடக ராஜமான மர்த்தனனும், சோழகுல கமலாகர திவாகரனும், பாண்டிய ராஜ்ய ஸ்தாபன சூத்ரதாரனும், ஸகல குண கண ரத்நாகரனும், ஸமஸ்தஜன உபகரணீபூத ஸாம் ராஜ்ய ஸம்பதனும், ஸரஸ ஸாகித்ய ஸாம்யாத்ரிகனும், பரதார்ணவ கர்ணதாரனும், பவித்ர கீர்த்தியனும், கநகசபா பதி நாத சரணாரவிந்த மதுகரமானவனும், ஸர்வக்ஞ கட்க மல்லனும் ஆகிய கோப்பெருஞ்சிங்கனால்.

3. இடப்புறத்தில் மனையாளான பார்வதி பார்த்துக் கொண்டிருக்கையில் மங்களகரமான ஆகாயம் என்னும் மேடையில் ஒப்பற்ற ஆனந்த வடிவோடு நடனம் செய்ப வரும் சந்திர ஜடாதரருமாகிய பரமேசுவரர், உலகைக் காப்பதில் விழிப்புடன் இருப்பவனும் ஒப்பற்ற சிவபக்திப் பெருக்கு நிறைந்தவனுமாகிய அவனியாளப் பிறந்தானை வெகுகாலம் காப்பாராக.

4. அவனியாளப் பிறந்தான்—காவேரி பாயும் நாட்டை வென்றதனுல் சம்பாதிக்கப்பட்ட பொருள்களால் கனக சபைக்குக் கிழக்கே (கீழைக் கோபுரத்தை) மேருமலை போன்றதும், தேவர் கூட்டங்களுடைய மகுடங்களோடு இடறக் கூடியதுமாகிய கோபுரத்தைத் தன் பெயரால் சிறிது காலத்தில் எடுப்பித்தான்.

5-6. கட்க மல்லனுகிய அரசன் ஏழு சமுத்திரங்களை யுடைய அலைகளையும் கடக்கக்கூடிய திறமையுடைய புகழை உடையவன். அவன் ஏழு தீவுகளையும் வென்று ஈட்டிய பொருளால் ஏழு உலகங்களுக்கும் நலன் தரக்கூடிய ஆதி நடேசனுன நடராசனுக்கு, நட்சத்திரக் கூட்டங்களை இடிக்கக் கூடிய, அன்பர்களின் விருப்பத்தைப் பூர்த்திசெய்யும் ஸ்ரீ கோபுரத்தை எடுப்பித்தான்.

7. நடராசனும், சபையிலுள்ள எல்லாத் தேவர்களும் நிரம்பியிருப்பதான காட்சியை உடைய கோபுரத்தை அவனி யாளப் பிறந்தானும் நற்குணங்களுக்கு இருப்பிடமானவனும் ஆகிய காடவகுல மன்னன்—ஏழு உலகங்களையும் மக்கள் கண்முன் கொண்டு வருவதற்காகவோ ஏழுநிலை அடுக்குகளை உடைய கோபுரத்தைச் சுத்தமான தன்புகழால் எடுப்பித் தான்.

8. கிழக்குத் திக்கிலுள்ள அரசர்களை வென்று அவர்கள் கொடுத்த பொன்னைத் துலாபாரம் செய்து, நிச்சங்கமல்லன், பார்வதி சமேதராக இருக்கும் நடேசன் நித்யமான சபையின் கிழக்குப் பக்கத்தில் கீழைக் கோபுரக் கீழ்ப் பகுதியைச் சூரியன் முறிந்து விழுந்தது போன்று ஒளி மிக்கதாக நிர்மா ணித்தான்.

9. கீழைக் கோபுரத்தின் தென்பாகத்தை—சோழ மன்னன் பயத்தினுல் குழந்தையைப் போல நடுங்கவும்,

அவனைத் தூக்கி விட்டு உறுதியான புத்தியை உடைய இவ்வரசன் சோழ மன்னனின்றும் கவர்ந்த பணத்தினால் துலாபாரம் செய்து, அந்தத் தங்கத்தால் கோபுரத்தினுடைய தக்ஷிண பாகத்தை அழகியதாகச் செய்தான். இந்தத் திரிபுவனநாதன்.

10. சிவனுடைய கோபுரத்தின் மேற்குப் பாகத்தை, கர்நாடக ராஜ்யத்தை அழித்து அந்நாட்டு மன்னர்களுடைய பொன்னால் துலாபாரம் செய்து கிருபாணமல்லன் அத்தங்கத்தால் எடுப்பித்தான்.

11. கட்கமல்லன்—ஆந்திர நாட்டரசரைப் படைவலியால் வென்று, அவர்களால் அனுப்பப்பட்ட காணிக்கைப் பொருள்களால் துலாபாரம் செய்து, **தப்ரசபாபதி**யின் ஸ்ரீ கோபுரத்தின் வட பாகத்தை—அந்தத் தங்கத்தால் மின்னல் கூட்டம் போல நிர்மாணித்தான்.

12. ஒப்பற்ற புகழை உடைய மகாராஜஸிம்மன் கோபுரமாகிய ராஜ்யத்தில் நடராசனுடைய கோபுரத்துக்கும் கும்பாபிஷேகத்தைச் செய்தான். தோற்ற மன்னர்களின் கிரீடங்களால் கோபுரத்துக்குரிய தங்கக் கலசங்களைச் செய்தான்.

13. திராக்ஷாராமம், காஞ்சீபுரம், ஸ்வேதாரண்யம், திருவானைக்கா (ஜம்பு) வீரஸ்தானம், (சோழ தேச) மதுரை, காளஹஸ்தி முதலிய இடங்களில் பூபோகஜாதனாகிய மன்னன், மகரதோரணம், கல்பக விருக்ஷம், ஊஞ்சல், முத்துக்கள் நிறைந்த தங்கமயமான படிச்சட்டம் ஆகியவற்றைத் திரிபுர ஸம்ஹாரியான பரமேசுவரருக்குக் கொடுத்தான்.

14. குணத்துக்கு இருப்பிடம், புண்ணிய நிலயம் ஆன ஜீய மகாராஜனுக்கு நல்லொழுக்கம் நிறைந்தவரான சீலாவதியிடம் பிறந்தவனும், அவனியை ஆளப் பிறந்தவனும், எல்லாவற்றையும் அறிந்தமைக்கு இருப்பிடமானவனுமான கட்கமல்லன் தங்கமயமான மேடையில் (கனக சபையில்) நாட்டிய நடனத்தில் ஆனந்தமாகப் பிரகாசிக்கிற பார்வதியினிடத்தில் அன்புடைய பரமேசுவரனால் நன்கு அனுகிரகிக்கப்பட்டவன். அவன் எல்லாத் திருப்பணிகளையும் செய்தான்.

15. நடராச மண்டபத்தின் மேற்றிசையில் மரகதக்கல் வடிவத்திலுள்ள பரமேசுவரருக்குச் சாசுவதமான இருப்

பிடத்தைச் செய்தான். அது அவனியாளப் பிறந்தவனல்— மயில் தோகையின் கூட்டமானது ஆகாயத்தில் சூழ்ந்திருப் பதுபோல நீலமாகத் தோன்றிற்று. மங்களம்

## S. I. I. XII-247 சோழகோன்

கோப்பெருஞ்சிங்கனும் அவனுடைய முதலிகளான அரை சூர் செங்கனிவாயன் ஆன பிள்ளையார் சோழகோனும், அவ னுடைய தம்பியான வேணுடுடையானும் சிதம்பரத்தில் நட ராசப்பெருமாளுக்குத் திருப்பள்ளித் தாமத்துக்கு வேண்டும் பூந்தோட்டங்களுக்காகவும்(திருநந்தாவனம் 462/02-296/1913) கோசாலைக்காகவும் (466/32) செங்கழுநீர் மலர்களுக்கு வேண் டும் திருவோடை களுக்காகவும் (460/02, 464/02) நகரத்துச் சாலியர்களின் குடியிருப்பு நத்தத்திற்காக-தில்லை நாதனுக் குத் திருப்பரிவட்டம் வழங்கும் தொழிலினரான இவர்களுக்கு விடப்படும் நிலத்திற்காகவும் (303/1913). [இக்குடியிருப்பு நிலம் திருவம்பலப் பெருமாள்புரம் என்று வழங்கப்பட்டது.] தில்லையம்மனுக்குக் குங்குமம் வழங்குவதற்காகவும் (396/03) திருத்தேர் விழாவுக்காகவும் (455/1908) பூசைத்திரவியங் களுக்காகவும் பல நிபந்தங்கள் விட்டனர் என்பது அறியப் படுகிறது.

திருவண்ணுமலையில் கோப்பெருஞ்சிங்கனும் அவனு டைய மகனுன காடவ குமாரனும் செய்த பலதிறத் திருப் பணிகளை அகவற்பாவில் அமைத்துள்ள பின்வரும் சாசனம் சொல்லோவியமாகப் பொலிகிறது. அது செவிவாயாக நெஞ்சுகளனுக கேட்டுக் கேட்டு விடாது உளத்து அமைக்கற் பாலது.

அப்பாடல் பின்வருமாறு: அதற்குப் பொழிப்புரையும் ஓராற்ருன் வரையப்பட்டுள்ளது.

### திருவண்ணுமலைச் சாஸனம்

*கார்வளர் மேனி கமலக் கண்ணன்*
*பார்வளர் உந்திப் பல்லவர் பெருமாள்*
**சகல புவன சக்கர வர்த்தி**
**கூடல் அவனி ஆளப் யிறந்தான்**
**கோப்பெருஞ் சிங்கன் கழற்கா டவர்கோன்**

சொன்மறை யரக்கன் சுடர்வாள் எடுத்துப்
பின்வர நடந்து பிலந்திறந் தருளிய
காவலர் தம்பிரான் கண்ணு ரமுதர்
அருண மலைவளர் பெருமான் தனக்குச்
செய்த திருப்பணி தெரிந்தெடுத் துரைப்பின்.

கார்மேனி வண்ணனுகிய தாமரைக் கண்ணன் என்னும் திருமாலின் உந்தியில் தோன்றிய பிரமனின் வமிசத்திலுதித்த பல்லவர் பெருமானுய், எல்லா உலகங்களுக்கும் மன்னர் மன்னனுய் இருக்கும் கூடல் என்ற ஊரில் உள்ள அவனியாளப் பிறந்தான் என்ற பட்டப் பெயரை உடைய கோப் பெருஞ்சிங்கன் என்னும் காடவர் குலமன்னன்—கயிலையின் அடியில் அகப்பட்டுச் சாமவேதம் பாடிய இராவணன் சிவ பெருமானுல் தனக்கு அருளப்பட்ட சந்திரஹாஸம் என்ற வாளை ஏந்திப் பின்னே வர, அவன் செல்லுவதற்கு வழி கொடுத்து அருளிய, அரசர்களுக்குந் தெய்வமாகிய கண்ணுக்கு இனிய அமுதம் போன்றவராகிய திருவண்ணுமலையில் எழுந்தருளி யிருக்கும் பெருமானுக்குச் செய்த திருப் பணிகளை ஆராய்ந்து எடுத்துச் சொல்லுவோமாயின்,

காதில் கம்பியும் கதிர்மணி மகுடமும்
செங்கதிர் எறிக்கும் அங்க சுத்தமும்
பாகு வலயமும் பைம்பொன் பலதொழில்
திருவுடை ஆடையும் திருக்கழற் கீழிரும்
பேதை பாதமும் பிறங்கிருட் கண்டமும்
இளஞா யிற்றின் எழில்நிறந் தோன்ற
வளர்மா ணிக்க வாள் வெயில் அரும்பிய
விரிகடல் அவனி யாளப் பிறந்தான்
திருவா சிகையும் சிங்கா தனமும்
கற்பக விருக்கமும் முத்தின் பந்தலும்.

காதிற்கு அணியும் கம்பியும், ஒளிவீசும் மணிகள் பதித்த முடியும், சிவந்த ஒளி வீசும் அங்க சுத்தம் என்ற அணியும், தோள் வளையமும், கிளிச்சிறை என்ற பொன்னுல் செய்யப்பட்டுப் பல வேலைப்பாடுகள் நிரம்பிய அழகிய ஆடையும், அழகிய வீரக்கழலையணியும் கால்களின் கீழ்ப் பெரிய பேதை பாதம் என்ற அணியும், காலைச்சூரியனுடைய அழகும் நிறமும் தோன்றுமாறு ஒளிவளருகின்ற மாணிக்கத்தின் மிக்க ஒளி வெளிப்படும் ‘அவனியாளப் பிறந்தான்’ என்ற பெயருடைய

திருவாசிகையும், அரியணையும், கற்பகமரமும், முத்துப் பந்தலும்;

ஓடரி மைக்கண் உமைஇசை பாட
ஆடிய அதிரும் கழற்பெரு மானுக்கு
இசைமா ணிக்கம் இலங்கச் செய்த
பரதம் வல்ல பெருமாள் என்னும்
திருவா சிகையும் சிறந்தசெங் கதிரொளி
விளங்குமா ணிக்கமும் துளங்கும் வயிரமும்
கட்டிய பொலன்திரு மஞ்சனக் கடமும்
கண்ணு ரமுதர் காமக் கோட்டத்து
உண்ணு முலையாம் உமையவள் தனக்குப்
பருமணி நிரைத்த திருவுடை ஆடையும்.

செவ்வரி, கருவரி படர்ந்த மை தீட்டிய கண்களை உடைய உமாதேவி இசை பாடவும், தான் ஆடிய ஒலிக்கின்ற கழல்களை அணிந்த சிவபெருமானுக்குப் பலவகை இரத்தினங்கள் விளங்குமாறு செய்த 'பரதம் வல்ல பெருமாள்' என்னும் பெயரை உடைய திருவாசிகையும் சிறந்த செவ்வொளி பரவும் மாணிக்கக் கற்களும், வைரக்கற்களும் பதித்த பொன்னுலாகிய திருமஞ்சனக் குடமும், கண்ணுக்கு நிறைந்த அமுதம்போன்ற சிவபெருமானுடைய அம்மன் கோயிலில் 'உண்ணு முலையம்மை' என்னும் பெயருடைய உமாதேவிக்குப் பருத்த இரத்தினங்கள் வரிசையாக அமைக்கப்பட்ட அழகிய ஆடையும்,

வென்றிவேல் கொண்டு குன்றெறி முருகன்
செந்நிற மேனியும் தேவியர் மேனியும்
மைந்நிறத் தோகை வண்ணமும் அடையப்
பொன்னிற மாக்கிய பொற்பணி பலவும்
மல்லை காவலன் நிச்சங்க மல்லன்
பல்லவர் வேந்தன் பரதம் வல்லன்
கூடல் அவனி யாளப் பிறந்தான்
செய்தனன் இப்பணி அடங்கலும் சிறந்திவண்
ஊழி காலம் வாழி.

வெற்றியைக் கொடுக்கக்கூடிய வேலினை ஏந்திக் கிரவுஞ்ச மலையை இரு கூறு செய்த முருகப்பெருமானுடைய சிவந்த நிறமுடைய திருமேனியும் அவன் தேவியர்களான வள்ளி, தெய்வயானை என்ற இவர்களுடைய திருமேனிகளும், கருநிற

மிக்க தோகையை உடைய மயிலின் நிறமும் பொன்னிறமே யாகுமாறு, பல்வகைப்பட்ட பொன்னல் ஆகிய அணிகளை யும், மல்லை நகருக்குத் தலைவனுகும் மல்லை காவலன், நிச்சங் கமல்லன், பரதம் வல்லான், கூடல் அவனியாளப் பிறந்தான் என்ற பட்டப்பெயர்களை உடைய பல்லவ மன்னன் செய் தான். இவனல் செய்யப்பட்ட இந்தத் திருப்பணிகள் யாவும் இவ்வுலகில் ஊழிக்காலம் வரையில் வாழ்க.

**இவன் மகன்,**
**வாடா வாகைக் காடவ குமாரன்**
வான்புகழ் மல்லையும் மயிலையும் காஞ்சியும்
தண்டக நாடும் தண்புனற் பாலையும்
பெண்ணையுங் கோவலும் பொய்கையும் உடையவன்
எண்ணருஞ் சிறப்பின் யாவரும் மதித்த
விருதரில் வீரன் விறல்வீர ரசனி
கரிய நாதன் காதற் குமாரன்
குடதிசைக் கருநடர் தென்புலம் குறுகவும்
வடதிசைத் தெலுங்கர் வடக்கிருந்து அழியவும்
போர்பல கடந்து பொருந்தா மன்னவர்
ஆரெயிற் செறிந்தூர் மலையரண் அழித்து
நல்லிசைப் படம்புனை நன்னன் வெற்பில்
வெல்புகழ் அனைத்தும் மேம்படத் தங்கோ
**நிலையும் குரங்கும் விசயமும் தீட்டிய**
அடர்புண் நெடுவேல் ஆட்கொண்ட தேவன்
கடகரி முனைமுகம் கடந்த காங்கயன்.

வாடாத பூவாகிய பொன்னலாகிய வாகைப் பூவைச் சூடிய காடவ குமாரன் இவனுடைய புதல்வனவான். இப்புதல்வன் மிக்க புகழை உடைய கடல் மல்லை, மயிலாபூர், (மைலார்ப்பில்) காஞ்சீபுரம் என்ற ஊர்களையும், தொண்டை நாட்டையும் குளிர்ந்த நீரையுடைய பாலாறு, பெண்ணை என்ற ஆறுகளை யும், கோவலூர், பொய்கை என்ற ஊர்களையும், உடையவன். கணக்கிட முடியாத சிறப்பினை உடைய எல்லோராலும் மதிக் கப்பட்ட, விருதுகளை உடைய வீரர்களுக்குள் தலையாயவன், வெற்றிமிக்க வீரர்களுக்கு இடிபோன்றவன், பெரிய தலை வனன கோப்பெருஞ்சிங்கனின் அன்புக்குரிய மகனகிய இவன், மேற்றிசையில் ஆண்ட கருநாடர்கள் தென் திசையை நோக்கி உயிர்பிழைத்து ஓடுமாறும், வடக்குத் திசையி லாண்ட தெலுங்கர்கள் வடக்கிருந்து வருந்துமாறும் பல

போர்களையும் வஞ்சியாது எதிர் நின்று வென்று, பகையரசர்களது கைப்பற்றுவதற்கு அருமையான மதில்களில் தங்கி அவர்களது தலைநகரங்களையும் மலைகளையும் அரண்களையும் அழித்து, நல்ல கீர்த்தியாகிய ஆடையை அணிந்த செங்கண் மாத்துவேன் நன்னன்சேய் நன்னன் வாழ்ந்த திரிசூலகிரி பர்வதமலை என்று இக்காலத்து வழங்கப் படும் நவிர மலையில், தனது வெற்றிப்புகழ் அனைத்தும் மேம் பட்டிருக்குமாறு தனது அரசாட்சியின் நிலையையும் குரங்குக் கொடியையும் வெற்றியையும் கல்லில் வெட்டுவித்த, புண்களை நினைத்தற்குக் காரணமான நீண்ட வேலை யேந்திய ஆட்கொண்ட தேவனாகிய, மதம் மிக்க யானைகளைப் போர்க் களத்தில் கொன்ற காங்கயன்,

கண்ணா ரமுதர் கனங்குழை பாதத்து
அண்ணா மலையர்க் கன்புகெழு நெஞ்சில்
விருப்புடன் செய்த திருப்பணிக் கோவை
யாவையும் எடுத்துப் பாவலர் உரைப்பின்......

கண்ணுக்கு நிறைந்த அமுதம்போன்றவரும் கனவிய காதணியை உடைய உமா தேவியை ஒரு பக்கத்தில் கொண்டவரும் ஆகிய திருவண்ணாமலை யாண்டவனுக்கு அன்பு நினைந்த மனத்தில் விருப்பத்தோடு செய்த திருப்பணித் தொகுதிகள் எல்லாவற்றையும் புலவர்கள் எடுத்து விரிவாகச் சொல்லப் புகுந்தால்,

நின்ற தொல்புகழ் நிலமுழு தளித்து
வென்றி புனைதோளாற் கொண்ட தேவன்
வேணா டுடையான் என்னும் பெயரால்
நீணாள் வாழ நிலைபெறச் செய்த
பெருமாள் அமரும் திருமண் டபமும்
மருக்கமழ் கனகத் திருப்பள்ளி யறையும்
திருவமு தியற்றும் பெருமண் டபமும்
விரிவு டன் செய்த திருக்காக் கிள்ளியும்
பெருவிறல் அவனி ஆளப் பிறந்தான்
திருமண் டபமும் செழுமலர்த் தொடுத்த
கண்ணி வாடாது கண்ணிமை யாது
மண்மிசை நடவா வானோர் வலம்வர
வெண்மதி நிலவில் விளங்குசுடர் எறிக்கும்
படித்தலம் எள்ளவும் படிமூன் றுக்கும்
அடித்தல மெள்ளவும் அடையா மன்னவர்

மலைத்தலம் பறித்தம் மன்னவர்ச் சுமந்த
சிலைத்தலம் கொண்டு செய்த சிலைத்தலமும்,

உலகம் முழுவதையும் காத்து நிலைபெற்ற பழைய புகழை, வெற்றியைத் தரும் தோள்களது வலிமையாற் கொண்ட தேவனாகிய வேணாடுடையான் என்ற பெயராலே நீண்ட காலம் நிலைபெற்றிருக்குமாறு செய்த 'சிவபெருமான் வீற்றிருக்கும் திருமண்டபமும், வாசனை வீசுமாறு, தங்கத்தால் செய்யப்பட்ட திருப்பள்ளியறையும், திருவமிர்து சமைக்கப்படும் பெரிய மடைப்பள்ளி மண்டபமும், விரிவாக அமைக்கப்பட்ட திருக்காக் கிள்ளியும், மிகுந்த திறமை உடைய 'அவனியாளப் பிறந்தான்' திருப்பெயரால் மண்டபமும் சிறந்த மலர்களால் தொடுக்கப்பட்ட முடிமாலை வாடாமல், கண்கள் இமைக்காமல், பூமியின்மேல் காலடி வைத்து நடவாமல் வாழும் தேவர்களும் சுற்றிவரும்படி வெண்மையான சந்திரனுடைய குளிர்ந்த ஒளியை வீசுகின்ற, உலகத்து மக்கள் யாவரும் இகழும்படியான பகை மன்னர்களது மலைகளை வென்று கைப்பற்றி அம் மன்னரைச் சுமந்திருந்த சந்திர காந்தக் கற்களால் செய்து அமைத்த சந்திரக் காந்தக் கல் மேடையும்—

எல்லையில் உகந்தொறும் செல்வந் தொலையாது
வரும்படி வகுத்த நிச்சங்க மல்லன்
பெரும்பண் டாரமும் பிறைமுடிப் பெருமான்
இந்நா ளுவந்தி ருந்தமை தோன்றவும்
முன்னாள் அமைந்த முறைமை காணவும்
வாட்டடங் கண்ணியர் மனைதொறும் பலிகொளக்
காட்டிய படிநற் கங்காள வேடமும்
வாண்முகத் தமரர் வணங்கச் செய்த
நாண்மு கத்தொரு நாயகி தனக்கும்
அப்படி வகுத்த அணிநெடுந் தேரும்
செப்பிய கதிரவன் திசைவலம் போதும்
சோதி நன்மணி வீதிகள் இலங்கக்
கலைபயில் தவத்தோர் நிலைபெற இருக்க
மலைவகுத் தனைய காங்கயன் மடமும்

எல்லையற்ற பல யுகங்களிலும் செல்வம் நீங்காது வந்துகொண்டிருக்கும்படியாக அமைக்கப்பட்ட நிச்சங்க மல்லன் என்ற பெயரை யுடைய பெரிய பொக்கிஷமும், சிவபெருமான்

இக் காலத்தில் இங்கு விரும்பி எழுந்தருளியிருக்கும் சிறப்புத் தோன்றுமாறும், அக் காலத்தில் தாருக வனத்து முனிவர் களின் ஆற்றலை அளந்த தன்மை விளங்குமாறும், வாள் போன்ற நீண்ட கண்களை உடைய, முனிவருடைய மனைவியர் களது வீடுகள் தோறும் உண்டிப் பிச்சைகொள்ள எடுத்துக் கொண்ட கங்காள வேடமும் ஒளிபொருந்திய முகத்தை உடைய தேவர்களும் வணங்குமாறு, நாணும் முகத்தை உடைய பார்வதிக்கும் அப்படியே அமைக்கப்பட்ட அழகான நெடிய தேரும், எல்லோராலும் புகழ்ந்து கூறப்படும் சூரியன் தன் திசையை நீக்கி வலப்புறமாகச் செல்லுதற்குக் காரண மான ஒளிவீசும் மணிகள் பதிக்கப்பட்ட வீதிகள் விளங்கவும், நல்ல சாத்திரங்களைப் பயிலும் தவவொழுக்கமுடையோர் நீடித்து இருக்குமாறு மலையைச் செயற்கையாகப் படைத்தது போன்று காட்சியளிக்கும் காங்கயன் மடமும்—

கானம் பயிலும் கடவுளர் தமக்கு
வேனில் தென்றல் வியன்பெருங் கவரி
இருமருங் கிரட்டவும் இமையவர் துதிக்கவும்
அருமணம் பெருகிய வாள்வல பெருமாள்
திருநெடுந் தோப்பும் தீர்த்த மாகிய
அமுதநன் னதியும் அனைத்திலும் தூய
தமிழ்நாடு காத்த பெருமாள் தடாகமும்
வண்டிசை பாடும் மதுமலர் வாசம்
கொண்ட காடவ குமரன் தோப்பும்
கவன வெம்பரிக் கதிர்வழி தடுத்த
அவனி யாளப் பிறந்தான் தோப்பும்
தவநிகழ் சேனைத் தலைவன் தோப்பும்.

காட்டிலே பழகும் தெய்வங்களுக்கு வேனிற்காலத்துத் தென்றல் காற்று மிகப் பெரிய கவரிபோல இரண்டு பக்கங் களிலும் வீசுவதற்காகவும், தேவர்கள் கண்டு துதிப்பதற்காக வும், கவர்ச்சி செய்யும் அருமையான வாசனை பெருகியுள்ள 'வாள் வல்ல பெருமான்' என்ற பெயரைஉடைய சிறந்த நீண்ட தோப்பும், புனித நீராகிய அமுத நதியும், எல்லா நீர் நிலைகளி லும் தூயதான "தமிழ் நாடு காத்தபெருமாள்" என்ற பெய ருடைய குளமும், வண்டுகள் இசைபாடும் படியான தேன் பொருந்திய பூக்களின் நறுமணத்தைக் கொண்ட காடவ குமாரன் தோப்பும், வேகமாகச் செல்லும் கொடிய குதிரை களை உடைய சூரியனுடைய வழியைத் தடுத்து உயர்ந்து

ஓங்கி வளரும் 'அவனியாளப் பிறந்தான்' என்ற பெயரை உடைய தோப்பும், நாட்டில் விளங்குகின்ற 'சேனைத்தலைவன்' பெயரை உடைய தோப்பும்,

வெம்மை நாளில் வெஞ்சுரம் அடைந்தவர்
தம்மனம் குளிரத் தண்டலை நிழல்செயும்
அம்மை மடமும் அப்பன் ஏரியும்
வெற்பகம் துளைத்தெனக் கற்புடை யாகிய
அடல்நெடும் பிலத்தின் அமுதுவந் தெழுந்த
வடிவாள் வல்ல பெருமாள் கிணறும்

வேனிற் காலத்தில் கொடிய பாலை நிலத்தை அடைந்தவர்கள் தமது மனம் குளிர்ச்சியடையும்படிச் சோலைகள் நிழலைச் செய்யும்படியான அம்மை மடமும், அப்பன் ஏரியும், மலையின் உள்ளிடத்தைப் பிளந்தது போன்று கற்களும் இடையில் மிகப் பெரிய பள்ளத்திலிருந்து நீர் வந்து வெளிப்படுகின்ற 'வடிவாள் வல்ல பெருமாள்' என்ற பெயரை உடைய கிணறும்,

அளிமுரல் கமலமும் ஆம்பலும் மலர்ந்து
குளிர்புனல் காடவ குமாரன் தடாகமும்
குன்றுண்டன்ன கோடுயர் நெடுங்கரை
வென்றுமலை கொண்ட பெருமாள் ஏரியும்
சுரர்தரு நெருங்கிய சோலையும் ஒவ்வாப்
பரதம் வல்ல பெருமாள் தோப்பும்
வரிஞமி றார்க்கு மடலினம் பாளை
விரைகமழ் வீரராயன் தோப்பும்
கடலென நிறைந்து கார்வயல் விளைக்கும்
........................நிச்சயங்க மல்லனேரியும்
காங்கயன் தடாகமும் காங்கையன் மடமும்
பூங்கமழ் சோலையும் பொற்புடன் விளங்க
இவ்வகை யாவையும் செய்தனன்.

வண்டுகள் ஒலிக்கும் தாமரைகளும் ஆம்பல் பூக்களும் மலர்ந்து குளிர்ந்து விளங்கும் நீரை உடைய காடவ குமாரன் என்ற பெயருடைய குளமும், குன்றுகளையே கரையாக அமைத்தாற் போன்ற பக்கம் உயர்ந்த நீண்ட கரைகளை உடைய, மலைகளை வென்று கைப்பற்றிய பெருமாளுடைய பெயரால் அமைந்த ஏரியும், தேவதருக்கள் நிரம்பிய கற்பகச் சோலையைக்கூடச் சமமாகக் கொள்ளாத 'பரதம் வல்ல பெரு

மாள்' பெயராலமைந்த தோப்பும், கோடுகளை உடைய வண்டுகள் ஆரவாரிக்கும் மடல்களை உடைய இளைய பாளை கள் வாசனை வீசும் வீரராயன் தோப்பும், கடலைப்போன்று நீர் நிரம்பப்பெற்று வயல்களின் விளைச்சலுக்கு உதவும் நிச்சங்க மல்லன் ஏரியும், காங்கயன் குளமும், காங்கயன் மட மும், பூக்கள் வாசனை வீசும் சோலைகளும், அழகுடன் விளங்க —இவ்வாறு எல்லாவற்றையும் அமைத்தான்.

**பெருமாள் ஏரி :—**

இது தென்னுர்க்காட்டு ஜில்லாவில் கடலூருக்கு அருகாமையிலுள்ள பெரிய நீர்ப்பாசன ஏரிகளில் ஒன்று. கோப்பெருஞ்சிங்கனின் விருதுகளில் **சாடும்பெருமாள்** என் பது ஒன்ருகும். இவ் வேரி இம்மன்னனின் பெயரால் "பெரு மாள் ஏரி" என்று வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

அதனுல்,

பாவை பாகன் சேவடித் தாமரை
பணிந்த சென்னியர் பார்க்குங் கண்ணினர்
அணிந்த நீற்றினர் ஆகம நன்னெறி
படிந்த நெஞ்சினர் பரசம யங்களை
கடிந்த ஆணையர் கண்ணுதற் பெருமான்
ஆதி நாதனுய் வேடங் கொண்டு
பாய்புனற் கங்கை ஆயிர முகங்கொண்டு
ஆர்த்தெழும் அந்நாள் ஏற்றுக் கொண்ட
திருந்திய பிறைமுடி அருந்தவச் சடாதரர்

ஆதலின். உமாதேவியை ஒரு பக்கத்தில் கொண்டிருக் கும் சிவபெருமானுடைய திருவடித்தாமரைகளை வணங்கிய தலையினரும் காணும் கண்ணினரும், திருநீற்றை அணிந்த உடலினரும் சிவபெருமானுடைய ஆகமமாகிய நல்ல வழியில் பொருந்திய மனத்தினரும், மற்ற சமயங்களை நீக்கிய கருத் துடையவரும் ஆன சிவனடியார்கள், நெற்றியில் கண்ணை உடையவராய் ஆதித் தலைவனுகிய வேடம் கொண்டு, பாய்கின்ற நீரினை உடைய கங்கை ஆயிரம் கிளைகளாக ஆரவாரம் செய்துகொண்டு ஆகாயத்திலிருந்து இறங்கிய அக்காலத்தில் அதனை ஏற்றுக்கொண்ட திருத்தமான, பிறைச் சந்திரனை அணிந்த சடை முடியை உடையவரும் பெரியதவம் உடையவரும் ஆகிய சிவபெருமானுடைய,

ஆதியில் அஞ்செழுத் தோதிய தொண்டரென்
றெண்ணிய நாற்பத் தெண்ணா யிரவரும்
திருவருள் இவன்மேல் வைத்தனர்
இருநிலந் தள்ளில் இனிது வாழ்கெனவே.

மந்திரமாகிய திருவைங்தெழுத்தை ஆதியில் உச்சரித்த நல்ல தொண்டர்களாகிய நாற்பத்தெண்ணாயிரம் பேரும், இவன் இவ்வுலகத்தில் நீடுவாழ்க என்று இவன்மேல் தம் முடைய திருவருளை வைத்தனர். ஆதலின் இவ்வரசன் நீடு வாழ்க.

இவற்றைத் தவிரத் தென்னாட்டில் திராக்ஷாராமச் சுவயம்புவின் கோயில், காஞ்சியிலுள்ள ஏகாம்பரநாதர் கோயில், திருவீரட்டானம், சுவேத ஜம்பு என்னும் ஜம்புகேசு வரம், மதுரை, காளஹஸ்தி முதலிய சிவ தலங்களுக்குப் பல திருப்பணிகளும், தானங்களும் இம் மன்னர் பெருமானால் செய்யப்பட்டன என்றும் கல் வெட்டுக்கள் கூறுகின்றன. இவனுடைய ஆக்கூர்ச் சாசனம் (Vol. XII No. 129. 229/1925) இவனுடைய பெருமையை இவனுடைய சிவ பக்தியோடு இணைத்துக் கூறுகிறது.

''ஸ்வஸ்தி ஸ்ரீ சகலபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ கோப் பெருஞ்சிங்க தேவர் அழகிய பல்லவரான வீரப் பிரதாபர் போசளர்களையும் சிறைகொண்டருளி, பாண்டியர்களைத் திறை கொண்டருளி மீண்டு எழுந்தருளிச் சோழ மண் டலம் பாத்தருளி காவேரியாற்றுக்குத் தென்கரையே கிழக்கு நோக்கி எழுந்தருளி, திருப்பதிகள் எல்லாம் கும்பிட் டருளி, தேவதானங்களும், திருவிடை யாட்டங்களும் இறை யிலி விட்டருளி, திருப்பணிகள் எல்லாம் செய்வித்தருளி''... னர்... என்பது அச்சாசனப் பகுதியாகும்.

## அத்தியாயம்-7

# 'கோப்பெருஞ்சிங்கனுடைய அரசியலும் நாட்டு நிலையும்'

### நிர்வாகமும் சமூகப் பொருளாதார நிலையும்

தான் வென்ற நாட்டைக் கோப்பெருஞ்சிங்கன் சீரிய முறையில் ஆண்டான். சோழர்களது நாட்டை வென்ற இப் பல்லவன் சோழர்களது நிர்வாக முறையையே பெரிதும் விரும்பிக் கைக்கொண்டான். அமைச்சர்கள் 'முதலிகள்' என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். அவர்கள் சிவில், இராணுவ அதிகாரம் பெற்றவராய் வாழ்ந்தனர். கோப் பெருஞ்சிங்கனுடைய முக்கிய அமைச்சர்களில் ஒருவன் அரைசூருடையான் செங்கனிவாயன் சோழகோன் ஆன பெருமாள் பிள்ளை என்பான். சிதம்பரம் விருத்தாசலம் முதலிய ஊர்களில் இவனுடைய ஓலையின் மூலம் பலதானங் கள் செய்யப்பட்டன. அரசனுடைய ஆணைகளும் நிறை வேற்றப்பட்டன.

இம் மன்னன் தன் பெயரிலேயே சில ஆணைகள் பிறப்பித் துள்ளான். சில தானங்களையும் செய்துள்ளான். திருவெண் ணெய்நெல்லூரிலுள்ள கோப்பெருஞ்சிங்கனுடைய 18-ஆம் ஆண்டுக் கல்வெட்டு (S. I. I. Vol. XII No. *206-432/1921)* "திருநாமத்துக்காணியும், இறையிலியுமாக இட்ட திருத் தோப்புக்களின் நிலத்துக்கும், திருநாமத்துக்காணியான பழந் தேவதானமான நிலத்துக்கும் இறையிலியாகத் தந்தருளின திருமுகத்துக்குக் கல்வெட்டு" என்று குறிக்கப்பட்டுள்ளது. இது "கோப்பெருஞ்சிங்கன் ஓலை" என்று தொடங்கி— "இவை கோப்பெருஞ்சிங்கன் எழுத்து. இவை தொண்டை மான் எழுத்து. இவை விழுப்பரையன் எழுத்து. இவை குரு குலத்தரையன் எழுத்து" என முடிகிறது, கோப்பெருஞ்சிங்

கனே இவ்வோலையைப் பிறப்பித்தவன் போலும். இவ் விறையிலிப் பொருளைக் கொண்டு இவன் செய்வித்த "ஆனைக்கு அரசு வழங்கும் பெருமாள் தோப்புக்கும் கோப் பெருஞ்சிங்கன் தோப்புக்கும் ஆள் பதினன்கு பேருக்கு இலக்கைக்கும் கொற்றுக்கும் செலவான துபோக நீக்கி நின்ற உடல் கொண்டு பூசையும் திருப்பணியும் செய்வதாகவும் விடை தந்தார்.

சகலபுவன சக்ரவர்த்திகள் கோப்பெருஞ்சிங்கனின் 19-ஆம் ஆண்டில்" திருக்கோயிலூரிலுள்ள திருவிடைகழி நாயனுற்கு (தற்காலம் திருவிக்ரம பெருமாளுக்கு) இம் மன்னனே சாவா மூவாப் பெரும்பசு-32 ம், இடபம் ஒன்றும் கொடுத்து ஒரு திருநந்தாவிளக்கு எரிக்க நிவந்தம் செய்தான். இதை "அவனியாளப் பிறந்தான் கோப்பெருஞ்சிங்கனேன் வைத்த திருநந்தாவிளக்கு" என்று இந்தச் சாசனம் கூறு கிறது (S. I: I. Vol. XII No. *213—316/1921*)

ஆளியார் திருநந்தவனம், ஆளியார் திருத்தோப்பு, பெருமாள் திருவோடை, திருநிலை அழகியான் திருநந்தவனம், சோழகோன் திருநந்தவனம், அவனியாளப் பிறந்தான் தெங் குத் திருநந்தவனம், சொக்கச் சீயன் கமுகுத் திருநந்தவனம் செங்கனிவாயன் திருநந்தவனம், வழியடிமை கொண்டான் தோப்பு, கண்ணுடைச்சீயன் திருவோடை என்ற பெயர் கொண்ட பல பூந்தோட்டங்களும் ஓடைகளும் கோப்பெருஞ் சிங்கனது ஆட்சியில் அமைக்கப்பட்டன.

கோப்பெருஞ்சிங்கனுடைய 8-ஆம் ஆண்டில் சோழ கோன் தில்லையம்மன் கோயிலைக் கட்ட ஏற்பாடு செய்தான். தில்லையின் விக்கிரம சோழன் தெங்குத் திருவீதியின் தென் புறத்தில் 1000 காசுக்கு 50 குழி நிலத்தைச் சோழ கோன் விலைக்கு வாங்கிப் பிடாரியார் கோயிலைச் சமைத்தான். (*401/1903*) இக் கோவிலுக்குத் 'தில்லைவனமுடைய பரமேசு வரி கோவில்' 'திருச்சிற்றம்பல மாகாளி கோவில்' என்ற பெயர்கள் சாசனங்களால் அறியப்படுகின்றன. (*312/1913–396 1903*).

தில்லை நடராசர் கோயிலின் இரண்டாம் திருச்சுற்றி லுள்ள மேலை வாயிலிலும், சிவகாமி அம்மன் கோயிலின்

வாயிலிலும் இவனுடைய பெயர் பொறிக்கப்பட்ட கற்றூண்கள் உள்ளன.

இவனுடைய தம்பியான பெருமாள் வேணுடையான் அரசனுடைய மற்ருெரு முதலியாவான். கோப்பெருஞ்சிங்கனுடைய பிந்திய காலத்தில் இவனுடைய பெயரால் அரச ஆணைகள் பல வெளி வந்துள்ளன. சோழ கோன் இறந்த பிறகு இவனே முதற்பதவி பெற்ருன் போலும் கெடில நதிக் கரையிலுள்ள விண்ணகரமான திருவயீந்திரபுரக் கோயிலின் மேலைக் கோபுரத்தை இவன் கட்டுவித்தான் (146/1902).

இம் மன்னனின் ஏனைய முதலிகளும், ஓலை நாயகர்களும் —எதிரிலி காங்கேயன் பொத்தப்பிச்சோழன், கச்சியராயன், சீனத் தரையன், பஞ்ச நதி வாணனுன நீலங்கரையன், சிலம் பணிந்தான் கூத்தாடுவானுன சேதியராயன், தென்னவன் பிரமராயன், தொண்டைமான் குரு குலத்தரையன் முதலியோர் ஆவர்.

ஊர், நகரம், நாடு முதலிய பல பகுதிகளும் செவ்வனே ஆளப்பட்டு வந்தன. இப் பகுதிகளில் சுய ஆட்சி முறையே கையாளப்பட்டது. பெருங்குறி என்ற பொதுமக்கள் சபையும், ஆளும் கணத்தார் என்ற நிர்வாகக் குழுவும் நிர்வாகத்தை நடத்தி வந்தன.

சபையார்கள் கிராமத்து நிலங்களின் வரிகளை வசூலிக்கவும், மக்களுடைய சார்பில் அவ்வரித் தொகையை மன்னனிடம் செலுத்தவும் புறம்போக்கு நிலங்களை விற்கவும் வரியைத் தவிர்க்கவும், பொதுப் பணத்தை நன்முறையில் பயன்படுத்தவும், உரிமை பெற்றிருந்தனர்.

## கோயில்கள்

முற்காலத்தில் கோயிலே சமூக ஸ்தாபனங்களில் முக்கியமானது. கோயில் இறைவனை வழிபடும் தூய இடமாகும். இசைக்கலை இங்கு வளர்ந்தது. சிற்பக்கலை, ஓவியக்கலை, கட்டிடக்கலை ஆகியவை கோயிலில் இடம் பெற்றன. கோயில் மண்டபங்களில் சமயச் சொற்பொழிவுகளும் கதா காலக்ஷேபங்களும் நடைபெற்றன. அங்கே வேதங்களும் திருமுறைகளும் ஓதப் பெற்றன. ஓலையில் எழுதப்பட்ட நூல்கள் கோயில்களில் சேமித்து வைக்கப்பட்டன. இந் நூல்

நிலையங்களுக்குச் 'சரஸ்வதி பண்டாரம்' என்று பெயர். கோயிலிலே மருத்துவ சாலைகளும் இடம் பெற்றன. அவை கள் ஆதுலர்சாலைகள் என்று அழைக்கப்பெற்றன. ஊராரின் பொதுக்கூட்டங்களும் கோயிலில் நடைபெற்றன.

கொடுத்த தானங்களை அங்கீகரித்தும் அத்தானங்களை நிறைவேற்றியும் சபையார் அறங்களைக் காத்தனர். சபையார் செய்யும் தீர்மானங்கள், கோயிலுக்கு வழங்கப் பெற்ற கொடைகள், மன்னனுடைய ஆணைகள் முதலிய யாவும் கோயிலின் கற்சுவர்களில் பொறிக்கப்பட்டன. தற்காலத்து "'ஆவணக் களரி நிலையம்' (ரிஜிஸ்தர் ஆபீசு) செய்யும் வேலையைக் கோயிலே செய்து வந்தது. எல்லா மூல சாசனங்களும் ஓலையிலோ செப்பேடுகளிலோ எழுதப்பட்டன. அவற்றின் படியே ஸ்தபதிகளால் கற்கோயில் சுவர்களில் பொறிக்கப்பட்டன. மூல சாசனங்களைக் கோயில் பண்டாரங்களில் ஒடுக்கி வைப்பது வழக்கம். மேலும் கொடைகளைப் பதிவு செய்யும் காலத்தில் ஆளும் மன்னனுடைய பெயரும் அவனுடைய மெய்க்கீர்த்தியும் ஆட்சியாண்டும் முன்னால் இணைக்கப்பட்டன. இப் பகுதிகளே சரித்திரத்துக்கு முக்கிய ஆதாரங்களாய் விளங்குகின்றன. கோயில்களில் கல் வெட்டுக்கள் பொறிக்கப்பட்ட சுவர்களை நாம் இடித்து விட்டால் நாம் தென்னிந்தியச் சரித்திரத்தையே இழந்தவர்கள் ஆவோம். கோயிலில் அன்றாடம் பல பணிகளை நிகழ்த்துவதற்காகப் பல மக்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். அதனால் பல குடி மக்கள் பிழைக்க வழி ஏற்பட்டது. பஞ்சம் முதலிய துன்பக் காலங்களில் கோயிலதிகாரிகள் கோயிலிலிருந்து பண உதவி செய்து மக்களைக் காத்தனர். பண்டைக் காலத்தில் கோயிலைப் போலப் பொது நலப் பணி செய்த ஸ்தாபனம் வேறு எதுவும் இன்று என்று துணிந்து கூறலாம். அனுமதிக்கப் பட்ட அளவைகள் (நீட்டல், நிறுத்தல், முகத்தல்) கோயில் களில் ஒடுக்கப்பட்டிருந்தன.

கோயிலில் பொறிக்கப்பட்ட சாசனங்கள் அழிந்து விடுமோ என்று அஞ்சிச் சில முக்கியமான சாசனங்களை இரண்டு மூன்று கோயில்களில் பொறித்து வைத்தனர். கூடல் ஆளப் பிறந்தான் காடவராயனின் விருத்தாசலத்துக் கல் வெட்டின்படி திருவெண்ணெய்நல்லூரில் காணப்படுகிறது. பல்லவாண்டாரின் மெய்க்கீர்த்திப் பாடல்கள் அத்தி, மோரி

ஜோலே, திருக்கழுக்குன்றம் ஆகிய இடங்களில் காணப்படு கின்றன. தில்லைத் தெற்குக் கோபுரத் திருப்பணிச் சாசனம் ஆத்தூர், சிதம்பரம் என்ற ஊர்களில் காணப்படுகிறது. அச் சாசனத்தின் மற்ருெரு படி காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலில் பொறிக்கப்பட்டதாக ஆத்தூர்ச் சாசனம் கூறுகிறது.

ஒரு கோயில் தானத்தார் மற்ருெரு கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை வாங்குவதும், அதற்கு வேண்டிய **நிலவிலைப் பிரமாண இசைவுத் தீட்டுக்களைக்** கோயில்களில் பொறிப்ப தும் வழக்கமாக இருந்தன. கோப்பெருஞ்சிங்கனின் 7-ஆம் ஆண்டினதாகிய திருநாரையூர்க் கல்வெட்டொன்று இவ்வித நிலவிலைப் பிரமாணத் தீட்டினைக் குறிப்பிடுகிறது. வீர நாரா யண சதுர்வேதிமங்கலத்து (காட்டு மன்னுர்குடியின் பழைய பெயர்) பிடாகையான முகையூரில் இராசாதிராச வளநாட்டுத் தனியூரான பெரும்பற்றப் புலியூர் உடையார் திருப்புலீசுர முடையார் கோயில் ஆதி சண்டேசுவரர் திருவருளால் திரு நாமத்துக் காணியாக வழங்கி அதைத் திருநாரையூர் திருமூலத் தானமுடையார் கோயில் ஆதிசண்டேசுவரர் தேவகன்மி களுக்கு விற்றுக்கொடுத்துக் கொள்வதென (நூருயிரத்து இருபதினுயிரம் காசுக்கு) நில விலைப் பிரமாண இசைவுத் தீட்டு செய்துகொண்டனர் என்று அறிகிருேம்.

நகரத்துச் சாலியர்களைக் குடியேற்றிப் பெரும்பற்றப் புலியூரில் ஏற்றுவித்த சாலியர்களுக்கு நகரமாகச் செய்த திருவம்பலம் பெருமாள்புரம் சிதம்பரத்திலுள்ள கோப்பெருஞ் சிங்கனுடைய எட்டாம் ஆண்டுக் கல் வெட்டில் குறிக்கப் பட்டுள்ளது.

"கோயிலுக்கும் திருக்காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியாருக்கும் நிலம் 8-ஆவது முதல் நகரத்துக் குடியிருப்பு நத்தமாகக் காணியாகப் பெறவும், பல பணி நிபந்தக்காரர் களுக்கு ஜீவித மாறிக் கூட்டின நிலத்துக்குத் தலைமாறு இவர்களுக்குச் சேர்வான இடங்களிலே ஜீவிதம் அடைத்துக் கொடுக்கவும், இப்படிக்குத் திருமாளிகையிலே கல்வெட்டக் கடவதாகவும் பண்ணுவதென்று தேவர் முதலிகளில் அரை சூருடையான் பெருமாள் பிள்ளையான சோழ கோனுர் கோயி லுக்குச் சாத்துவரிச் சட்டமும் வழக்கத்துக்கு 25 இடவும் 'திருவம்பலப் பெருமாள்புரம்' என்றும் திருநாமத்தால் ஏற்று வித்த நகரத்துச் சாலியர்க்கு நகரமாகச் செய்த குடியிருப்பு

நத்தத்துக்கு எழுதிப் புகுந்து திருக்கை யொட்டியில் ஒடுக்கின ஏவல் தீட்டுப்படிக் கல் வெட்டியது.''

## வடவன் ஒருவன் தில்லையில் செய்த தானம்

'தக்ஷிணராதா' என்பது வங்காள நாட்டின் 'அஞ்யா' நதிக்குத் தென் பாகத்திலுள்ள பிரதேசத்தைக் குறிக்கும். கங்கைகொண்ட சோழனின் மெய்க் கீர்த்தியிலுள்ள 'திக்கணைக்கீர்த்தி தக்கணலாடம்' என்பது இப் பகுதியைக் குறிக்கும். ''உத்தரர்பதத்துத் தக்ஷிண ராதத்து ஸாவர்ண கோத்திரத்துக் கங்கோணி திருச்சிற்றம்பலமுடையாரான உடையார் 'ஈசுவர சிவர்' என்பவர், திருச்சிற்றம்பலமுடையான் திருநந்தவனத்துக்குத் திருப்பள்ளித்தாமம் ஆக்கித் தில்லைத் திருச்சிற்றம்பலம் உடையார்க்கும், திருக்காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியாருக்கும் அளக்கிற பேர் நால்வருக்கு இலக்கைக்கு உடலாக நிலம் தானம் செய்தார். இச் சாசனம் கோப்பெருஞ்சிங்கனின் 19-ஆம் ஆண்டில் தீட்டப் பட்டது. (S. I. I. Vol. XII No. *216—105/34-35*) இதனால் கோப்பெருஞ் சிங்கனுடைய காலத்தில், வடநாட்டவரும் தில்லைக்கு வந்து வழிபட்டு நிலம் வழங்கும் அளவுக்குத் தில்லை நடராசர் கோயில் பிரசித்தி பெற்றிருந்தமை தேற்றம்.

## மடப்புறம்

மடங்களுக்கும் நிலத்தானங்கள் வழங்கப்பட்டன. கோப் பெருஞ்சிங்கனின் 4-ஆம் ஆண்டில் திருவாமாத்தூர்க் கல் வெட்டுப்படி, பிர்மதேயமான திருவெண்ணெய்நல்லூரில் இருக்கும் உடையார் ஆட்கொண்ட தேவர் கோயிலுக்கு வடக்கு 'ஆண்டார் பிச்சர் பிறைசூடி ஆண்டார் திருமடமான திருவேடம் அழகியான்'' திருமடத்துக்கு உடையார் அணியன் மூவேந்தரையன் என்பவன் பிர்மதேயம் ஜனநாத சதுர்வேதி மங்கலத்து அஞ்சாங்கட்டளை அவ்வியூரிலுள்ள நாலுமாவும் இம்மடத்துக்கு மடப்புறமாக ஆயம், பாடிகாவல் உட்பட மடத்துக்கே உடலாகச் சந்திராதித்தவரைச் செல்வதாக விட்டான் (S. I. I. Vol XII No. *141. 35/1922*)

## கடிகை ஸ்தாபனம்

கடிகை என்பது கல்வித்தானமாகும். கி. பி. 5-ஆம் நூற்றாண்டிலிருந்து காஞ்சிமாநகரில் பிரபலமான ஒரு கல்வி

ஸ்தாபனம் இருந்ததாகவும், கல்வியில் பற்றுடைய பிற நாட்டவரும் அக்கடிகைக்கு வந்து கல்வி பயின்றதாகவும் அறிகிறோம். இராசசிம்மன் காலத்தில் காஞ்சியில் உள்ள கைலாச நாதர் கோயிலிலே கடிகையார் கூடியதாகத் தெரியவருகிறது. அக்கடிகைக்கு நிலதானங்கள் செய்யப்பட்டன. அக்கடிகையைப்போல வேறு ஊர்களிலும் கோயில்களின் சார்பிலும் பல கடிகைகள் இருந்தன என்று அறிகிறோம்.

கோப்பெருஞ்சிங்கனின் 5 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆற்றூர்ச் சாசனத்தில் மன்னன் ஆற்றூர்க் கிராம வருவாயைத் தில்லைநகரில் உள்ள நடராசப் பெருமானின் தெற்குக் கோபுரவாயில் திருப்பணிக்காக உதவினான். அப்போது அங்கிருந்த கடிகையார் வசமிருந்த 32 வேலி இறையிலி நிலத்தையும், தருமங்களுக்காக விடப்பட்ட நிலங்களையும் நீக்கி மற்ற நிலங்களின் நெல் ஆயங்களையும் காசு ஆயங்களையும் திருப்பணிக்கு உடலாக அளித்தான். இதிலிருந்து கல்வி ஸ்தாபனங்களுக்கு மன்னர்களும் மக்களும் காட்டிய ஆதரவு எளிதில் போதரும். கோயில் திருப்பணிக்குக் கூடக் கல்வி ஸ்தாபனங்களின் வருவாயைப் பயன்படுத்துவதில்லை என்பது பெறப்படுகிறது.

## தலைப்பலி

தென்னார்க்காட்டு ஜில்லா சண்பையில் உடையார் திருத்தாந்தோன்றி ஆளுடைய நாயனார் கோயில் நிருத்தமண்டபம் கட்டி முடிப்பதற்கு ஆட்கொண்டான் என்பான் தலைப்பலி கொடுத்தான். அதற்காக அவனுடைய தம்பிக்கு 150 குழி நிலம் இறையிலியாக அனுபவிக்கும் படித்தானம் செய்யப்பட்டது. (S. I. I. No. *178; 119/1906*)

“ நிர்த்த மண்டபம் சமைக்கிற இதுக்கு இவ்வூர்த் தேவடியாள் பெற்றுழ்வி தம்பி ஆட்கொண்டான் **தலைஅரிந்து கொண்ட இதுக்கு** இவ்வூர் வண்ணக்கஞ்செறுவுடையார் **காங்கையர் திருமுகப்படிக்கு தானத்தாரோம்** ஆட்கொண்டான் தம்பி அண்ணமலைக்கு விட்டகுழி நூற்றைம்பதும் (கோப்பெருஞ்சிங்கனின்) 14 ஆவது முதல் சந்திராதித்தவரை இறையிலியாக அனுபவிக்கக் கடவதாக விட்டோம் ” என்று அக்கோயில் தானத்தார் ஆணை பிறப்பித்தனர்.

பண்டைக்காலத்தில் காளி தேவிக்குத் தலைப்பலி யிட்டு வந்தனர். கட்டிடங்கள் இடையூறின்றிக் கட்டி முடிவதற்கும் தலைப்பலியிடும் வழக்கம் இருந்தமை 13 ஆம் நூற்றுண்டிலும் அறியப்படுகிறது. இவ்வழக்கம் விஜய நகர அரசர்கள் காலத்திலும் இருந்து வந்தது.

## தேவரடியார்கள்

சங்க நூலாகிய பட்டினப்பாலையில் பகை மன்னரிடம் பிடிபட்ட மகளிர் மாலையில் அம்பலங்களில் நந்தா விளக்கு ஏற்றும் வழக்கம் இருந்தமை

*கொண்டி மகளிர் உண்டுறை மூழ்கி*
*அந்தி மாட்டிய நந்தா விளக்கின்*
*மலரணி மெழுக்கம் ஏறிப் பலர்தொழ*
*வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில் (246—49)*

என்ற அடிகளால் குறிப்பிடப் படுகிறது.

முதலாம் குலோத்துங்கனின் 49 ஆம் ஆண்டுக் கல் வெட்டுப்படிச்சோழ மன்னனின் முதலிகளில் ஒருவனுன அச்சபிடாரம் கணவதி நம்பியான அழகிய பாண்டிய பல்லவராயன் தன் குடும்பத்தைச் சேர்ந்த சில மகளிரைத் திருவல்லம் கோயிலுக்குத் தொண்டு செய்யும்படி அடியார்கள் ஆக்கினுன் என்று அறிகிரேம். அவர்கள் நரி சூலத்தால் சூடு போடப்பட்டார்கள் என்றும் அக்கல்வெட்டு தெரிவிக்கின்றது. ஆகவே இவ்வகுப்பினர் கோயிலுக்குத் திருத்தொண்டு செய்யும் சீரிய பணியாளர்களாகத் திகழ்ந்தனர். பிற்காலத்து இவர்களது சீரிய நிலைமை மாறியது போலும்.

இசை, நாட்டியம் முதலிய பல அரிய கலைகளை இவர்கள் கையாண்டு வந்தனர்.

இவ்வகுப்பினர் கோப்பெருஞ் சிங்கனுடைய காலத்தில் கோயில்களுக்குப் பல நிபந்தங்களும் திருப்பணிகளும் செய்தனர். அவை பின்வருமாறு:

திருவெண்ணெய் நல்லூரில் உள்ள கோப்பெருஞ்சிங்கனின் 6 ஆம் ஆண்டுக்கல்வெட்டு அவ்வூர் ஆட்கொண்ட தேவர் தேவரடியாரில் அறமுடையார் மகன் திருமலை அழகியானுன வீரகன் வீரப்பல்லவராயன் தூபமணியும் துடரும் திருவாலத்தித் தட்டமும் தானம் செய்தான் என்று கூறுகிறது.

இவனே கோப்பெருஞ் சிங்கனின் 8-ஆம் ஆண்டில் 5 பசுக்கள் சுரபிமன்ருடிகளில் மாவாளக்கோன் பக்கல் நாள் ஒன்றுக்கு அருண்மொழித் தேவன் நாழியால் இரண்டு ஆழாக்குப் பால் அளக்கக்கடவதாக நிபந்தம் செய்தான். (50/1902)

இவன் கி. பி. 1257-இல் இறந்திருக்க வேண்டும். இவன் இறக்கையில் தேவர் (கோப்பெருஞ் சிங்கன்) முதலிகளில் இராசராச தேவன் அம்மையன் வாளவராமனுக்குத் தேவர் மேற்படியான் நிலத்தைத் திருக்கை வழக்கமாகத் தந்தருளினர் (திருக்கைவழக்கம்—கோயிலிலே விசேடகாலங்களிலே தெய்வப்பிரசாதம் வழங்குகை) ஆனுல், வாளவராமன் உடையார் ஆட்கொண்ட தேவருக்குத் திருவிளக்குப்புறமாக விட்டருள வேண்டும் என்று விண்ணப்பம் செய்ய, அப்படியே செய்க என்று திருவுள்ளம் ஆகையால் இந்நிலம் ஒண்பது மாவரையும் திருவிளக்குப்புறமாக விடப்பட்டது. 18 சந்தி விளக்குகளை இக்கோயிலில் 30 வட்டத்துச் சிவபிராமணரும் எரிப்பதாக இசைந்தனர்.

மற்ரெரு தேவரடியாரான பெற்ருழ்வியின் தம்பி ஆட்கொண்டான் தலைப்பலி கொடுத்து நிருத்த மண்டபம் எடுப்பிப்பதற்கு உதவினுன் என்று சண்பைக் கல்வெட்டு கூறியதை முன்னும் நோக்கினேம்.

திருவாமாத்தூரில் தேவரடியார் மாணிக்கத்தின் மகள் மடப் பிள்ளையான ஆலால சுந்தரமாணிக்கம் ஐந்து பசு கொடுத்துச் சந்தி விளக்கு எரிப்பதற்கு ஒரு நிபந்தம் செய்தான்.

திருப்புலி வலமுடைய நாயனுர்க்கு அக்கோயில் தேவரடியாள் பிச்சியார் மகள் ஐயநாயனுன வீரகங்கர் திருநந்தா விளக்கு இரண்டுக்காக 64 பசுக்களும் 2 ரிஷபங்களும் விட்டாள். (198)

குன்றத்தூரில் திருநாகீசுர முடையநாயனுர் கோயில் தேவடியாள் பொண்ணுழ்வார் மகள் பிறையணி வாணுதலார் குட்டத்தில் (கோஷ்டத்தில்) எழுந்தருளுவித்த தக்ஷிணுமூர்த்தி தேவருக்கு ஒரு சந்தி விளக்கு எரிக்க மூன்று பழங்காசு வழங்கினுள்.

இதே ஊரில் இங்நாயனூர் கோயில் தேவரடியாள் பொன்னி யார்மகள் கண்ணுடை நாச்சியார் ஒரு சந்தி விளக்குக்குப் பழங்காசு மூன்று அளித்தாள். (S. I. I. XII-214)

## நாணயங்கள்

கழஞ்சு, காசு, மாடை, நெல்லூர் மாடை முதலிய பல நாணயங்கள் அக்காலத்தில் நடமாட்டத்தில் இருந்து வந்துன

| | | |
|---|---|---|
| a. | 32 பசுக்களும் | ஒரு ரிஷபமும் |
| b. | அல்லது | 96 ஆடுகள் |
| c. | அல்லது | 1 மாடை |
| d. | அல்லது | 15 நெல்லூர் மாடை |
| e. | | 3 பழங்காசு (S. I. IVol XII-204, 214) |
| | 9 பணம் | (S. I. I. Vol XII-205) |

கோயிலில் ஒரு விளக்கு எரிக்க உடலாக வைக்கப்பட்டன என்று அறிகிறோம்.

பெருமாள் இராசப்பணம்—15 நெல்லூர் மாடை (No. 218) இவையும் ஒரு நந்தா விளக்கு எரிக்க உடலாக வைக்கப்பட்டன. ஒரு மாநிலம் 1000 முதல் 3000 காசுவரை பெறுமான முடையதாகக் கூறப்பட்டுள்ளது. இடம், தரம், பொருளாதார நிலை முதலிய பல காரணங்கள் பற்றி விலை வித்தியாசம் ஏற்பட்டிருக்கலாம்.

| | | |
|---|---|---|
| 60 மா. | ஷ ஷ | 1,20,000 காசு (5461/1920) |
| 50 மா. | விலை | 18,000 காசு (400/1903) |
| 84 மா. | விலை | 80000 கட்டையா காசு (432/1934) |
| 50 குழி விலை | | 1000 காசு (401/1903) |
| 1024 குழி விலை | | 3000 காசு (414/1902) |
| $13\frac{1}{2}$ குழி-(14அடிகோலால்) | | 10000 காசு (518/1901) |
| 195 குழி | ,, | 7500 புதுக்காசு (60) 1932-33 |

மூன்றும் இராசேந்திரன் காலத்திய கல்வெட்டு ஒன்றின் படி ஒரு கழஞ்சு $411\frac{1}{2}$ காசுகளுக்குச் சமம் என்று அறிகிறோம். வயலைக் காவூரில் ஒரு மாடை வழங்கி ஒரு விளக்கு எரிப்பதற்கு நிபந்தம் செய்தனர். ஆனால் காஞ்சிபுரம் அருளாளப் பெருமாள் கோயிலில் ஒரு விளக்கு எரிப்பதற்கு 15 நெல்லூர் மாடை அளிக்கப்பட்டது. இதி

லிருந்து ஒரு மாடை 15 நெல்லூர் மாடைக்குச் சமம் என்பது தெளிவாகிறது.

கோப்பெருஞ்சிங்கனுடைய கல்வெட்டுகளில் கீழ்க்குறிப் பிடப்பட்ட அளவைகள் காணப்படுகின்றன.

a. 1. உலகளந்த நாழி (திருக்கோவலூர் 317/1921; 323/1921)

2. தேவாசிரியன் நாழி (விருத்தாசலம் 69/1918; 85/1915)

3. செல்விராஜகேஸரி (சிதம்பரம் 466/1902)

4. அருமொழித்தேவ நாழி (திருவெண்ணெய்நல்லூர் 500/1921)

b. சொக்கச்சீயன் கோல் (சிதம்பரம் 215–103/1934-35)

c. சொக்கச்சீயன் கல்இடை (திருவாமாத்தூர் 50/1922)

## நீர்ப்பாசனம்

நிலவரி அரசனுடைய முக்கியமான வருவாய் ஆகும். மேலும் உணவுப் பொருள்கள் மக்களுடைய நல் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. ஆகவே, அரசர்கள் நதிகளுக்கு அணை கள் கட்டியும், ஏரிகளைத் திருத்தியும் மதகுகளை அமைத்தும் நீர்ப்பாசன வசதிகளை விருத்தி செய்தனர். கோப்பெருஞ் சிங்கனும் பல இடங்களில் இப்பணியை ஏற்று மக்களுக்கு நன்மைபுரிந்தான்.

புதுவை நாட்டிலுள்ள திரிபுவனியில் வரதராஜப் பெரு மாள் கோயிலின் தென்சுவரிலுள்ள கோப்பெருஞ்சிங்கனு டைய சாஸனம் வடமொழி தென்மொழி என்ற இருமொழி களிலும் உள்ளது. அது இம்மன்னனின் பல விருதுகளையும் இவன் வென்று ஆண்ட நாடுகளையும் (ஆந்த்ரகர்நாடக சோள மத்திய துண்டீர நாடுகள்) கூறுவதோடு திரிபுவனமா தேவி ஏரிக்கரையில் ஹேரம்ப கணபதிக்கு (யானைமுகம், 10 கரங்கள், சிம்ம வாஹனம்–இலட்சணங்கள் உள்ள சிற்பம் என்று சிற்பசாத்திரம் கூறும்) ஒரு கோயில் கட்டியதாகவும், உடைந்த ஏரிக்குக் கரை கட்டி, மதகுகள் அமைத்து, கலிங்கு கள் செய்ததாகவும் குறிப்பிடுகிறது.

## அது பின் வருமாறு

முதல் நான்கு வரிகள் தமிழில் உள்ளன. ஏனைய 6 வரிகள் வடமொழியில் உள்ளன. தமிழ்ப்பகுதி பின்வருமாறு:

1. ஸ்வஸ்தி ஸ்ரீ ஸகலபுவன சக்கரவர்த்தி அவனியாளப் பிறந்தான் கோப்பெருஞ்சிங்கன்.

2. திரிபுவன மாதேவி ஏரிகரை பல இடங்களிலும் உடைந்து, ஏரியும் துருந்து, மதகுகளும் முறிந்து, 3. கலிங்குகளும் அழிந்து கிடக்கையில் உடைந்த படைகளையும் அடைத்து, ஏரியும் கல்லி கரையும் கற்கட்டி மதகுகளும் அட்டுவித்துக் கலிங்குகளும் செய்தபடி.

## வடமொழிப் பகுதியின் தமிழாக்கம்

5. சிறந்த கிராமத்தின் தடாகக் கரையில் ஹேரம்ப விநாயகருக்கு அவநியாளப் பிறந்தார் கற்களால் மண்டபத்தை எடுப்பித்தார்.

6. அவ்வவநியாளப் பிறந்தார் திரிபுவனமாதேவி என்ற கிராமத்தில் பல இடங்களிலும் கரைகள் உடைந்த தடாகத்தை ஆதிசேஷனுடைய படங்களிலுள்ள மாணிக்கம் தெரியும் வரையில் வெட்டினர். மறுபடியும் கரைகளை நன்கு விரிவாகக் கட்டியமைத்தார்.

7. காடவ வம்சத்தில் முத்துப் போன்றவரும் நில உலகத்தைப் பாதுகாக்கப் பிறந்தவரும் ஆகிய மன்னர் சோழ நாடு, மத்திய நாடு, தொண்டை நாடு இவற்றை வென்று கவரப்பட்ட செல்வத்தால் இந்தக் கிராமத்தில் மலைப்பாறைகளால் சமுத்திரத்தில் சேதுபந்தனம் கட்டிய இரண்டாவது இராமரைப்போல இந்த உத்தமமான கரையை நிர்மாணித்தார்.

8. கத்திச் சண்டையினுல் ஆந்திர நாட்டையும் கர்நாடகத்தையும் வென்றவரும் பூமியைப் பாதுகாக்கப் பிறந்தவரும் ஆகிய இம் மன்னர் நீர் வெளியேறும் பாதைகளைக் கல்லமைப்பால் உறுதியாகக் கட்டுவித்தார்.

9. இம் மன்னருடைய கீர்த்தியாகிய நதியின் வெள்ளம் திசைகளாகிய சுவர்களைத் தாக்குகின்றது. இம் மன்னர் கலிங்குகளை நூற்றுக்கணக்கான பாறைகளால் குளத்தில் நிர்மாணித்தார்.

## 2. ஒழுகரை ஏரி (246) திருவக்கரை

இங்ஙனமே விழுப்புரம் தாலுகாவிலுள்ள திருவக்கரை என்ற ஊரில் சகலபுவன சக்கரவர்த்தி அவனியாளப் பிறந்தான் கோப்பெருஞ்சிங்கன் ஒழுகரை ஏரிக்கு மதகும் செய்வித்து, அவ்வேரிக்கு நீர் புகுகிற காலும் கல்லுவித்தான்.

அக் கல்வெட்டின் வடமொழிப் பகுதியும் இச் செய்தியை வலியுறுத்தும். அது பின் வருமாறு :

1. ஒழுகரை நகரின் குளக்கரையில் பெரிய கற்களால் இணைக்கப்பட்ட மதகினை அவநியாளப் பிறந்தான் கிருபாண மல்லன் என்ற பெயர் கொண்ட அரசன் நிர்மாணித்தான்.

2. ஒழுகரை நகரின் குளம் நிரம்புவதற்கு அவநியாளப் பிறந்த இம் மன்னன் திரிபுவன நிருபநாதன் என்ற பெயர் கொண்டதும் நிறைய நீர் போகக் கூடியதும் ஆகிய கால்வாயை நிர்மாணித்தான்.

ஒழுகரை ஏரிக்கு மதகும் செய்வித்து இவ்வேரிக்கு நீர் புகுகிறகாலும்—ஸ்வஸ்தி ஸ்ரீ சகலபுவன சக்கிரவர்த்தி அவநியாளப் பிறந்தான் கோப்பெருஞ்சிங்கன்—கல்லுவித்தபடி.

### பெருமாள் ஏரி

3. கோப்பெருஞ்சிங்கனுக்குச் சாடும் பெருமாள் என்ற விருதுப் பெயர் உண்டு. தென்னார்க்காடு ஜில்லாவில் **பெருமாள் ஏரி** என்ற பெரிய நீர்ப்பாசன ஏரி உள்ளது. இதைக் கோப்பெருஞ்சிங்கன் கல்லுவித்திருக்க வேண்டும். இதைத் திருவண்ணமலைச் சாசனம் அழகாக வர்ணிக்கிறது.

“ குன்றுகண் டன்ன கோடுயர் நெடுங்கரை
வென்று மலை கொண்ட பெருமா ளேரியும்”

என்பது திருவண்ணமலைச் சாசனப் பகுதி.

இன்னும் ஐயனேரி, நிச்சங்க மல்லனேரி என்ற இதர ஏரிகளும் இவனுடைய காலத்தில் திருத்தப்பட்டன.

### திருவெண்ணெய்நல்லூர் (S. I. I. XII, 256)

இக் கல்வெட்டு கோப்பெருஞ் சிங்கனுடைய 26-ஆம் ஆண்டில் ஏற்பட்டது. அரசன் தன் முதலிகளுள் ஒருவனை சீனத்தரையனுக்கு அனுப்பிய நினைப்பாகும்.

சேந்தமங்கலப் பற்றிலுள்ள விளிநல்லூரில் காணியாளர் 26 முதல் வெற்றிலை, கமுகு வைத்த நிலத்திற்கு, திருவெண்ணெய்நல்லூருடையார் ஆட்கொண்ட தேவர் திருநாமத்துக் காணி பொன்மேய்ந்த, சோழமங்கலத்தார் உரிமை பாதிக்கப் பட்டது. கோயில் தானத்தார் இதற்கு இணங்காமல் எதிர்த்த னர். அதன்மேல் இந்த ஊறல்காலால் நீர் பாய்ச்சக் கடவது **அன்று** என்று அதிகாரிகள் உத்திரவிட்டனர். வைத்த கமுகுகள் உலர்ந்தன என்று காணியாளர்கள் முறையிட்டனர். அதன் மேல் அவ்வூர்ப் படைப் பற்றிலும், துரவுகள் உள்ள நிலங்களிலும், கமுகு வாங்கி வைப்பார்களாகப் பண்ணவும், **கீழ்ப் பயிருக்குக் கடமை (Lower assessment)** கொள்வதாகவும் முறை செய்யப்பட்டது. இவை கோப்பெருஞ்சிங்கன் எழுத்து. தொண்டைமான் எழுத்து என்ற பகுதியோடு இக் கல்வெட்டு முடிகிறது.

மேற்குறிப்பிடப்பட்ட திரிபுவனி, திருவக்கரை, திருவண்ணுமலை, திருவெண்ணெய்நல்லூர்ச் சாசனங்களால் கோப் பெருஞ்சிங்கன் காலத்தில் நீர்ப்பாசன வசதி செம்மையாகக் கண்காணிக்கப்பட்டு வந்தமை தெளியப்படுகிறது.

## நிலவிலைப் பிரமாணத் தீட்டு (S. I. I. Vol. XII—166)

தனியூர் பெரும்பற்றப்புலியூர் ஆலச்சன் பொன்னம்பலக் கூத்தனுன நிருத்தராசன் கோப்பெருஞ்சிங்கனின் 11 ஆம் ஆண்டு. இவ்வூர்ப் பிடாகை பண்ணங்குடிச்சேரி (தற்காலம் சிங்காரத் தோப்பு என்ற வடபகுதி) ஆன பரகேசரிநல்லூரில் எழுந்தருளியிருக்கும் நாயனுர் திருக்களாஞ்செடி உடையார் கோயில் ஆதி சண்டேசுரருக்குத் திருநாமத்துக் காணியாக இவ்வூர்மேல் பிடாகை கங்கைப் பேரிளமை நாட்டு இளநாங் கூரான சுந்தர சோழ பாண்டிய நல்லூர்பால் 9 மாவும் விற்றுக்கொடுக்க இசைந்தான். இதற்கு இசைந்த விலைப் பொருள் அன்ருட நற்காசு ஐயாயிரம் 5000/- இந்த விலைப் பிரமாணத் தீட்டின் ஷரத்துக்களை நோக்கவும்.

மூல பருஷையர் எழுதின மஹா வியவஸ்தைப்படி நாங் கள் கொண்டு கடமைக்குக் கைகொண்டு முற்குறித்த நிலம் 9 மாவும் விற்றுக்கொடுத்தேன். இக் கோயில் ஸ்ரீ மாஹேசு வரக் கண்காணி செய்வார்களும், சீகாரியம் செய்வார்களும்,

தேவகன்மி கோயில் கணக்கனும், ஆலச்சன் பொன்னம்பலக் கூத்தன் நிருத்தராசனேன்.

இங் நிலத்துக்கு மேற்படி பாயும் நீர் பாயவும், வாரு நீர் வாரவும், இறைக்கும் நீர் இறைக்கவும் பெறுவதாகவும்.

இங் நிலத்துக்கு வந்த தடையும் இடையூறும் தீர்த்து ஆழ்விப்பதற்கு என் வாழ்வே ஆழ்ச்சி இறைப்புணே ஆவதாகவும், இதுக்கு இதுவே விலே ஆவணமும், பொருள் மாவறுதிப் பொருள் செலவோலேயும், (Sale. deed and receipt) இதுவே ஆவதாகவும் இது வல்லது வேறு பொருள் மாவறுதிப் பொருள் செலவோலே (Receipt) காட்டக் கடவதல்லதாகவும்.

இப்படிச் சம்மதித்து முற்குறித்த காசு 5000/- முற்குறித்தபடியே நேராகக் கைக்கொண்டு மேற்குறித்த நிலம் 9 மாவும், முற்குறித்த உடைமைகளும் உரிமைகளும் மூலவோலேப் படிகளாலும், பொத்தகப் படியாலும் உள்ள உடைமைகளும் உரிமைகளும் ஆக இத்தனேயும் விற்றுக்கொடுத்தேன் (179 ம் நோக்குக).

மேற்குறிப்பிடப்பட்ட கல்வெட்டிலிருந்து அக் காலத்தில் நில விலே பிரமாணத் தீட்டு எங்ஙனம் அமைக்கப்பட்டிருந்தது என்று அறிந்தோம். இனி, அக் காலத்து வழங்கிய 'நிலத் தலே மாற்றுத் தீட்டு' (பரிவர்த்தனே) எங்ஙனம் அமைந்திருந்தது என்பதை நோக்குவோம்.

## நிலத்தலேமாறு (S. I. I. XII 159)

கோப்பெருஞ்சிங்கனின் 10 ஆம் ஆண்டில் தில்லேநாயகர் திருக்கடலுக்கு எழுந்தருளும் விக்கிரம சோழன் தெங்குத் திருவீதித் தெருப்பக்கத்து எழுந்தருளுவித்த பிடாரி திருச்சிற்றம்பல மாகாளி ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் திருமடவிளாகத்திலும் அகப்பட்ட. **பள்ளிப்படையான விக்கிரம சோழ நல்லூரில்** நில வரவு கூட்டப் பெருமக்களும் கண்காணிக்கக் கடவாரும், அளந்து கண்ட குழி நூற்று நாற்பதே முக்காலே அரைக்காலுக்குத் ($140\frac{7}{8}$) தலேமாருக இக் கட்டளேயில் வாரணவாசிமஹா தேவர் கோயில் தானத்தார் பக்கல்... குழி நூற்று நாற்பத்தொன்றும் (குழி 141) கைக்கொண்டார்கள்.

ஒரு நிலத்தைக் கொடுத்து மற்ருெரு நிலத்தை வாங்குவதைத் **தலேமாறு** அல்லது **பிரதிக்ஷேத்திரம்** என்று அக் காலத்

தார் வழங்கினர். தற்காலத்தில் அது **பரிவர்த்தனை** என்று குறிக்கப்ப்டுகிறது.

ஒவ்வொருவரும் கொண்டிருந்த நிலத்தை அளந்தும் பதிவு செய்தும் வந்தார்கள் என்று அறிகிறோம். இச் சாசனத்தில் கூறப்பட்டுள்ள **'நில வரவுக் கூட்டப் பெருமக்கள்'** என்ற நிர்வாகக் குழுவினரின் அலுவல் இது போலும். தற்காலத்தில் **அடங்கலில்** பதிவு செய்து வருகின்றதைப்போல, பதிவு செய்து வந்தனர் என்பது வெளிப்படை. அக் காலத்தில் நில அளவுப் புத்தகத்தை **ஒழுகு** என்று அழைத்தனர். இதைப் பின்வரும் வாசகத்தால் அறிகிறோம்.

இந் நிலம் **ஒழுகு** எழுதும் இடத்துத் திருநாமத்துக் காணி உடனே ஊர்க் கீழ் இறையிலியாகக் கூட்டி **ஒழுகு** எழுதக் கட்வதாகவும். (S. I. XII No. *233*)

## வரி வசூல்

கடமை முதலிய வரிகள் சரிவரச் செலுத்தப்பட்டனவா என்று அதிகாரிகள் கணக்குக் கேட்டு, செலுத்தாத வரியை எப்படி வசூல் செய்தார்கள் என்பது தஞ்சை ஜில்லா பல்லவராயன் பேட்டையிலுள்ள கோப்பெருஞ் சிங்கனின் *16*-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றால் அறியப்படுகிறது.

கோப்பெருஞ்சிங்கனின் 16-ஆம் ஆண்டு ஆடி மாதம் 23-ஆம் நாள் முதல் 25-ஆம் நாள்வரை, பிள்ளை சோழ கோனார் அகம்படி முதலிகளில் ஸ்ரீ கயிலாயமுடையானான சோழகோன் பல்லவரையன் இராசராச வளநாட்டுத் திரு விந்தளூர் நாட்டு இராசராச குளத்தூருடையார் இராசராச ஈசுரமுடையாரின் பிரமதேயம் திருவிந்தளூர் அமுதன்சாயன் தாமோதரபட்டன் இறுக்கும் நிலத்துக்கும் கொல்லைக்கும் கணக்குக்கேட்டு, இப் பேரால் சிகை (வட்டி) யான காசு தண்ட, இத் தாமோதரபட்டன் அகமுடையாளையும் இவன் மகன் சூரிய தேவபட்டனையும் இக் காசு ஒடுக்கச்சொன்ன விடத்து—'' எங்களுக்கு உடல் இல்லை. எங்களுடைய **அருங்காடன் நிலத்தைத் திருநாமத்துக் காணியாக** எழுதிக்கொண்டு எங்களை இரட்சிக்கவேண்டும்'' என்று சொல்லுகையில், **கடமை யான காசு எண்ணாயிரத்துக்கு** இவள் கொழுந்தனான, சடை யாண்டான் திருவீரட்டானமுடையான் பட்டன் பட்டனை முது

கண்ணுக விலைப் பிரமாணம் பண்ணிக்கொண்ட இந் நிலம் எண்மா வரைக்கு அடை முதல் வரிசைப்படி, நெல்லு நூற்றிருபத்தேழு கலனே தூணிப் பதக்கால், நாள் ஒன்றுக்கு நெல்லு, தூணி இரு நாழிக்கு, உச்சி சந்தியுடன், அமுது செய்தருள நாள் ஒன்றுக்குத் திருவமுது அரிசி குறுணி ஐந் நாழியும், கறியமுது விஞ்சனத்துக்கு நெல்லு நானுழி உரியும், இந் நிலத்தில் நின்ற தெங்குகளுக்கு எண்ணெய் 17 நாழிக்கு, இரு சந்தியிலே திரு முன்பு எரியும் நாள் ஒன்றுக்குத் திரு விளக்கு இரண்டும்.

''இந் நிபந்தம் இச் சந்தி உடன் கூட இப்படிச் சந்திராதித்த வரை செல்லக் கடவதாக நிச்சயித்து இவர்கள் பக்கல் கொண்ட விலைப் பிரமாணம் இக் கோயில் தானத்தார் வசம் கொடுத்தது'' என்பது கல்வெட்டுப் பகுதி. (S. I. I. Vol. XII No. *199-432/1924*).

இக் கல்வெட்டால் அக் காலத்துச் சில அரிய சமூக வழக்காறுகளை அறிகிறோம்.

அரசனுடைய அதிகாரிகள் அவ்வாண்டு ஆடி மாதம் 23-ஆம் தேதி முதல் 25-ஆம் தேதி வரை கோயில் கணக்கைக் கேட்டுத் தணிக்கை செய்தனர். செலுத்தாமல் எஞ்சி நின்ற கடமைக் காசைச் செலுத்தும்படி அதிகாரிகள் சொன்னார்கள். இத் தாமோதரபட்டன் இறந்துபோகவே, தாமோதரபட்டன் அகமுடையாளையும், மகன் சூரியதேவ பட்டனையும் காசு எண்ணுயிரத்தையும் ஒடுக்கச் சொன்னபொழுது அவர்கள் ''எங்களுக்கு உடல் இல்லை. எங்களுடைய அருங்காடன் நிலத்தைத் திருநாமத்துக் காணியாக எழுதிக்கொண்டு எங்களை இரட்சிக்கவேண்டும்'' என்று வேண்டினர். கடமையான காசு எண்ணுயிரத்துக்கு அவள் கொழுந்தனன சடையாண்டான் திருவீரட்டானமுடைய பட்டன் பட்டனை முது கண்ணுகக் (Surety) கொண்டு விலைப் பிரமாணம் பண்ணிக் கொண்ட இந் நிலம் எண்மாவரைக்கு அடைமுதல் வரிசைப் படி, நெல்லு நூற்றிருபத்தேழுகலனே தூணிப்பதக்குக்கும், நிலத்தில் நின்ற தெங்குகளிலிருந்து கிடைக்கும் எண்ணெய்க்கும் செலவிடவேண்டிய முறைகளை வரையறுத்து இவர்கள் பக்கல்கொண்ட விலைத் தீட்டைத் தானத்தார் வசம் கொடுத்தனர்.

மேலும், பிள்ளைச் சோழ கோனார் திருமேனி கல்யாணத் திருமேனியாக இவர்கள் அகம்படி முதலிகளில் ஸ்ரீ கயிலாய முடையானான சோழகோன் பல்லவரையன் இத்தானத்தைச் செய்வித்ததாக அறிகிறோம்.

மேலும் கோப்பெருஞ்சிங்கனுடைய 24-ஆம் ஆண்டில் திருவலஞ்சுழியில் ஏற்பட்ட சாசனம், வரி வசூல் முறையில், வல்லத்துத் தண்டல் என்ற தண்டனை விதித்தலையும், நிலத்தைப் பறிமுதல் செய்தலையும் அதற்கு அரசனின் ஆணையின் அவசியத்தையும் குறிப்பிடுகிறது.

தஞ்சை ஜில்லா கொற்றங்குடியான குலோத்துங்க சோழ நல்லூரில் காணியுடைய கோமடத்துத் திருநட்டமாடிபட்டன் மகன் யக்ஞ பட்டனும், இவன் தம்பி சுந்தரத்தோடு உடையானும் இவர்கள் மாதா வண்டுவார் குழலிச் சானியும் 23–ஆவது, காரும் ஒரு பூவும் பயிர் செய்து கடமை இறுக்க இவர்களுக்குத் தனிச்சுப் புணைப்படுவார் இல்லாமையாலே இவர்கள் ஊரிலிருந்த பேர்க்கு முன் நின்று கடமை இறுக்கக் கடவதாகவும்.

முன்னில்லாதே இருத கடமை குடிமைக்கு உடையார் திருவலஞ்சுழி உடைய நாயனார்க்கும் வெள்ளைப் பிள்ளையார்க்கும், பண்டாரத்தும், **மலை மண்டலத்து மலையாளர்** பக்கலும் வாங்கி இறுப்பதாக இவர்கள் தீட்டு இட்டுச் **சிறிது கடமை இறுத்து;**

நீக்கி நின்ற கடமை குடிமை இவர்கள் இருதே ஓடிப் போகையில், இப் பேர்களால் **உழவரி பட்ட காசுக்கு** எங்களைப் புணைத்து இந் நால்வரையும் **வல்லத்துத் தண்டலில் வைத்து** நாங்கள் நெடுநாள்படக் கிடந்து **மிறுக்குப் படுகையில்** இவ்வூர் வந்தராயர் **திரு** (மன்னர்) **முன்பே கேட்டு அருளி வரும் இவர் இட்ட தீட்டுப்படியைப்** பற்றி, உடையார் திருவலஞ்சுழி உடைய நாயனார்க்குத் திருநாமத்துக் காணியாக விற்றுக்கொடுத்த காசு பிரித்து அவர்களுக்குச் செலவாக்குவதென்று, **திருவெழுத்திட்ட ஓலைதந்தருளுகையில்,** இவர்களுக்குக் காணியான நிலங்களும், மனைகளும் இந் நாயனார்க்குத் திருநாமத்துக் காணியாக விற்றுக்கொடுத்த நிபந்தங்களும் மனைகளும்—

விளை நிலம் எட்டுமா முந்திரிகைக் கீழ் முக்காலே ஒரு மாவும் மனைக் குழி முப்பதும் விற்றுக் கொடுத்துக்கொள்வ

தான எம்மில் இசைந்த விலைப்பொருள் அன்றாடு நற்காசு நாலாயிரத்தெண் (ணூறு) **கைச்** செலவறக் கைக்கொண்டு, விற்று, **நிலவிலை பிரமாண இசைவுத் தீட்டுக் கொடுத்**தோம். ஆதி சண்டேசுவரர் திருவருளால் அகில நாயக சருப்பேதிமங்கலத்துத் தேவதானம் அகில நாயகச்சேரி மகாசபையோம்.

## ஊர்க்கீழ் இறையிலி—சபையார் சமைத்தல்

தஞ்சை ஜில்லா திருவாய்ப்பாடி ஊரில் உள்ள கோப்பெருஞ்சிங்கனின் 29-ஆம் ஆண்டுக் கல்வெட்டு சேய்ஞலூர் மூலபருஷையார் கோயில் திருவாபரணத்தை அழித்துக் காணி நிலத்தை விலைகொண்டு திருத் தோப்பும் திருநந்தவனமும் திருநாமத்துக் காணியாகச் செய்து, அங் நிலத்துக்கு உரிய கடமை முதலிய வரிகளை ஊரிலேயே ஏற்றி (இங் நிலத்தினின்றும் இறக்கி) ஊர்க்கீழ் இறையிலியாகச் செய்தார்கள் என்று கூறுகிறது. (S. I. I. Vol. XII No. 233) அது பின்வருமாறு:

"தநு நாயிற்று அபர பக்ஷத்துத் துவிதியையும் சனிக் கிழமையும் பெற்ற பூசத்து நாள், விருதராஜ பயங்கர வள நாட்டு மிழலை நாட்டுச் சேய்ஞலூர் மூல பருஷையோம். நம்மூர் உடையார் திருவாய்ப்பாடி உடையார் கோயில் பாலுகந்தான் திருமண்டபத்து மகாசபா வியவஸ்தை பண்ணின நம்மூர் உடையார் திருவாய்ப்பாடி உடைய நாயனுர்க்கு இவ்வூர் ஆறுங்கட்டளை ஆவாரங் கொல்லையில் இவ்வூர்க் காணியாகத் **திருவாபரணம் அழித்து** விலைகொண்ட கொல்லைப் புன்பயிர் ஒட்டுக்கு இறுக்கும் இக் கொல்லை நிலம் இரு வேலியும், மூல பருஷையார் திருத் தோப்பும், திருநந்தவனமும் ஆகவும்; இங் நிலம் இரு வேலியும் **ஊர்க்கு இறையிலியாக** நாங்கள் கு(கொ)டுக்கையில் இங் நிலம் இரு வேலிக்கும் வரும் கடமையையும் ஊர் வினியோக மற்றுவரும் வற்கங்கள் உட்பட இறையிலியாகப் பெறவும் **இத்தால் வருங்கடமை ஊரிலே ஏற்றி இறுக்கவும்**, இப்படிச் சந்திராதித்த வரையும் இறையிலியாகவும். இங் நிலம் **ஒழுகு** எழுதும் இடத்துத் திருநாமத்துக் காணியுடனே ஊர்க்கீழ் இறையிலியாகக் கூட்டி ஒழுகு எழுதக் கடவதாகவும். இந்த சபா ஆக்ஞைப்படியே திருக்கற்றளியிலே கல்வெட்டிக் கொள்ளவும் கடவதாகவும்."

## வரிகளின் விபரம்

சித்தூர் ஜில்லா மேல்பாடியில் கோப்பெருஞ்சிங்கனின் 17-ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று கிடைத்துள்ளது. இது இப்பாகத்தை ஆண்ட இவனுடைய சிற்றரசனை "ஸ்ரீமங் குவலாலபுர பரமேசுவரன், கங்க , குலோத்பவன், காவிரி வல்லவன், நந்திகிரிநாதன், சீயகங்கன்" என்று வர்ணிக் கிறது. இச் சீயகங்கன் தமிழ் இலக்கண நூலாகிய நன்னூலை இயற்றிய பவணந்தி முனிவரைப் போற்றிய வள்ளலாவான்.

இக் கல்வெட்டில் ஊரார் அக் காலத்தில் செலுத்திய **வரிகளின் விபரம்** குறிக்கப்பெற்றுள்ளது. (S. I. I. Vol. XII No. *202*) அது பின்வருமாறு:

சீயகங்கன் ஓலை. மருதம் பாக்கத்து ஊரவர்கண்டு விடை தந்ததாவது தங்களூர் தேவதான திருவிடையாட்ட ஸ்ரீ பண்டாரபாதிக்கு அந்தராயப் பாதி உள்பட, ஊரடங்கில் நஞ்சை புஞ்சை கடமையும் ஸ்ரீ பண்டாரப்பாதி உள்பட வெட்டி, தனியாள், சிறுபாடிகாவல், கண்காணி, எடுத்துக் கொட்டி அரிமுக்கை கணக்குமிகுதி உள்பட்ட பல நெல் லாயங்களும் வெட்டிப் புடவை முதல்தரங்காத்திகை காசு வகை நற்காசு முள்ளடி இளவரி, ஏரி மீன் பாட்டம் ஆசுவி கள் பேர்க் கடமை உள்ளிட்ட பலகாசுக் கடமையும் அச்சுத்தறி, பறைத்தறி, சாலியத்தறி, உள்ளிட்ட தறிக் கடமை, வேலிப் பயறு தரப்படி அரிசி தூணி, நிலத் திறப்புக் கடமை, செக்குக் கடமை, பேர்க் கடமை, இருந்து பரிமாறுவார் பேர்க் கடமையும், செட்டிகள் வாணியர் பேர்க் கடமையும், வால் மஞ்சாடிக் கடமையும், பாலிக்கப்பாட்டமும், பழங்குடி நீக்கிப் புதுக்குடியாய் ஏறிக்கொண்ட மன்றுடிகள் பேர்க் கடமை யும், பொன்வரி, வேண்டுகோள், நல்லெருது, நற்கிடா காணிக்கை, கார்த்திகைப் பச்சை புடவை மாடையும் மற்றும் நாம் கொள்ளும் எப்பேர்ப்பட்ட அனைத்து வரிகளும் உட்பட இவ்வூர் நாற்பாற்கெல்லைக்கும் உட்பட்ட மேல் நோக்கிய மரமும் கீழ் நோக்கிய கிணறும் உட்பட, பதினேழாவது சித்திரை மாதம் முதல் சோளேந்திர சிங்கமுடைய நாயனர் திருநாளுக்கு வேண்டுவனவதுக்கு வேட்டும் அமராபரண சீயகங்கன் விட்டேன்" தென்னார்க்காடு ஜில்லா **தீர்த்த நகரிக் கல்வெட்டும்** (அக் காலத்து **வரி விபரங்களைப்** பற்றி விளக்கு கிறது. (S. I. I. Vol. XII No. *221*).

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பெருஞ்சிங்க தேவருக்கு யாண்டு 22–ஆவது முதல் உடையார் **திருத்தினை நகருடையார்** தேவ தானங்கள் திருநாமத்துக் காணிகள் நிலத்துக் காற் கடமை பசானக் கடமையும் புன்செய் நிலத்துக் கடமையுந் திருமடை விளாகத்துக் குடியிருந்து பறிமாறுவார் வியாபாரிகள் தறி யிறை, தட்டாரப்பாட்டஞ் செக்குக் கடமை, ஆள் வரி, சுற் ருயக் காசு, வால்மஞ்சாடி, கண்மாலை, நாவிசர் வண்ணார் கற்காசுள்ளிட்ட கடமைகளும் வெட்டி, கோயிற்றமப்பெறும் பாடிகாவல், தச்சர், கொல்லர், குசவர் நடக்குச் செய்யும் தேவைகளும் மற்றும் வரும் கடமைகள் ஆயங்கள் உட்பட அனைத்தாயங்களும் இந் நாயனாருக்கு அமுது படி சாத்துபடி வற்கங்களிந் திருமேற்பூச்சுந் திருப்பரிச் சட்டத்துக்கும், பரிகல பரிச் சின்னங்களுக்கும் அழகியசீயன் திருநந்தா விளக்குஞ் சந்தி விளக்குக்குந் திருப்பங்குனித் திருநாளைக்கும் விஷு வயன சங்கிரம கிரகணங்களுக்குத் திருப்பணிகளுக்கும் இறையிலியாக விட்டோம்.''

## நாநா தேசிகள்

நாநா தேசிகள் என்பவர் ஒரு வணிகக் குழுவினர். இவர்கள் வாசுதேவர் மூலபத்திரர் அல்லது வீரபத்திரர் ஆகிய இவர்களின் வழித்தோன்றல்கள். தேவி பகவதி அல்லது ஐம்பொழில் பரமேசுவரி அல்லது நாச்சியாரை இவர் கள் வழிபட்டார்கள். நாநா தேசி திசை ஆயிரத்து ஐஞ்னூற் றுவர் என்றும், பதினெண் பூமிக்கும் (விஷயம்) 32 வளர்புரங் களுக்கும் 64 கடிகைத் தாவளத்துக்கும் அதிபதிகள் என்றும் தங்களை வர்ணித்துள்ளார்கள். (தாவளக்காரர்—வெளிநாட்டு வியாபாரிகள்) இவர்கள் பாத மார்க்கமாகவோ ஜல மார்க்க மாகவோ ஆறு கண்டங்களையும் விஜயம் செய்தவர். யானை கள், குதிரைகள், இந்திர நீலம், சந்திரகாந்தம், முத்து, வைரம், வைடூரியம், கோமேதகம், புஷ்பராகம், மரகதம் முதலிய நாநா வஸ்துக்களையும் ஏலம், இலவங்கம், அகில், சந்தனம், கற்பூரம், கஸ்தூரி முதலிய சுகந்த திரவியங்களை யும் கொண்டு வியாபாரம் செய்தனர்.

இவர்கள் வியாபாரம் செய்த நாடுகளாவன :

சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, மலாய், மகதம், கோசலம், சௌராஷ்டிரம், தனுஷ்டிரம், குறும்பம், காம்

போஜம், கவுடம், லாடம், பாவிரு, பராசம் (பாரசீகம்) நேபாளம், ஏகபாரம், லம்பகர்ணம், ஸ்ரீ ராஜ்யம் (ஸ்ரீ விஜயம்) கோளமூலம் என்பன.

இவர்கள் திரை கடலோடியும் திரவியம் தேடினர். பல ஊர்களில் பண்டகசாலைகள் அமைத்துத் தற்காப்புக்குப் படையும் நிறுவிப் பல நாடுகளுடன் வியாபாரம் செய்து வந்தனர். பொருளை நிரம்ப ஈட்டினர். அளவிலா தான தருமங்கள்கள் செய்தனர்.

இக் குழுவினரைப் பற்றி இதுவரையில் கிடைத்துள்ள புராதனக் கல்வெட்டு புதுக்கோட்டைச் சீமையிலுள்ள **முனி சந்தைக் கல்வெட்டு** இது கி. பி. 870-இல் ஏற்பட்டது. தஞ்சை விஜயாலயச் சோழன் காலத்தது. இவ்வூரில் ஐஞ்னூற்றுவர் பேரேரிக்குத் திசையாயிரத்து ஐந்நூற்றுவர் பேரால் வளஞ் சீயர் ஐந்நூற்றுவர் இரண்டு காசு வைத்து, அதன் பலிசை யைக்கொண்டு மராமத்து செய்ய ஏற்பாடு செய்துள்ளார். இதைப்போல் இவர்களுடைய தர்ம சாசனங்கள் பல உள்ளன. இந்தியாவின் தென்கிழக்கே உள்ள சுமத்ராத் தீவில் சகர யாண்டு 1010இல் (கி. பி. 1088) லோபி தீவா என்ற ஊரில் திசையாயிரத்து ஐஞ்னூற்றுவரைப் பற்றி ஒரு சிதைந்த கல் வெட்டு கிடைத்துள்ளது. உண்மையில் இவர்களே நாநா தேசிகள் என்பதற்கு வேறென்ன சான்றுவேண்டும்? இக் கடல் கடந்த தமிழ்ச் சாசனம் முதலாம் குலோத்துங்கன் காலத்தது. இச் சோழ மன்னன் காலத்தில் ஸ்ரீ விஜயம் என்று அழைக்கப்பட்டதும், கடாரத்தை முக்கிய நகரங்களில் ஒன்று கக் கொண்டதுமான சைலேந்தர வமிசப் பேரரசு தழைத் தோங்கியது. இக் குழுவினரைப் பற்றிய பிரான் மலைச் சாசனப் பகுதி பின்வருமாறு.

ஐம்பொழில் பரமேசு வரிக்கும் பூமிதேவிக்கும்
மக்க ளாகி நிகழா நின்ற
மதிதொடப் பொங்கும் மாட வீதி
பதினெட்டுப் பட்டினமும் முப்பத்திரு வளர்புரமும்
அறுபத்து நாலு கடிகைத் தாவளமும்
தாவளத் திருந்து தன்மை வளர்க்கும்
செட்டியும் செட்டிச் சிறப்புத் தானும்
தவறென் றில்லாத தன்மை ஒழுக்கத்து
கவறை தன்னெடு காசிபன் வகுத்த

சாமுண்டே சுவரியும்
உருத்திரன் விடுத்த ஓலைவா ரியனும்
உன்னியது முடிக்கும் ஒண்டிறல் வீரர்
பன்னிரு திறத்துப் பணிசெய் மக்களும்
முன்னி யாக முழவொலி வளர்க்கும்
முத்தமிழ்ப் பாடலோ டாடல் ஓவா
விழவும் வேள்வியும் விளங்கிய வீதியுடைத்
தெங்கும் பலாவும் தேமாஞ் சோலையும்
சந்தன வேலி சண்பகப் பொழிலும்
வாழையும் கமுகும் வளர்கொடி முல்லையும்
பூவையும் கிள்ளையும் பொலிவொடு சூழ
வாட்ட மின்றிக் கூட்டம் பெருக
அறம் வளரக் கலிமெலிய
புகழ்பெருகப் பகை தணிய
திசையனைத்தும் செவிடுபடச் செங்கோலே முன்னாகவும்
செம்பொற் பசும்பையே தெய்வமாகவும்
கமையி னேடும் கருணை எய்தச்
சமைய தன்மை இனிது நடாத்தி

நிகழா நின்ற நான்கு திசை சமஸ்த லோகப் பதினெண் விஷயத்தோமும், எட்டை வட்டை இடைவட்டைகளில் திசை விளங்கும் திசை ஆயிரத்து ஐந்நூற்றுவரோமும், ஏறுசாத்து இறங்கு சாத்து, திசை ஆயிரத்து ஐஞ்னூற்றுவரோமும், அற்றைவட்டை, அருவட்டை நாரத்தரை நல்வாத்தரை திசை விளங்கு திசை ஆயிரத்தைஞ்னூற்றுவரோமும், நாடு நகரங்களின் திசை விளங்கு திசை ஆயிரத்து ஐஞ்னூற்றுவரோமும்......முதலிய பல நகரத்தோமும்.

திருமலை நாட்டுத் திருக் கொடுங்குன்றத்து (பிரான்மலை) திருமலை அடிவாரத்து மார்க்க வகை தீர்த்த முதலியால் நாயனார் உடையார் அழகிய திருச்சிற்றம்பலமுடைய நாயனார் திருக்கோயிலும் திருக்குளமும் மடமும் திருமடைவிளாகமும். பதினெண் விஷயத்தார் இரகைஷயால், இந்நாயனார் கோயிலில் திருக்காவணத்து நிறைவற நிறைந்து குறைவறக் கூடி, அமையப் பேசி இசையச் செய்த தன்ம சமையக்காரியமாவது :

இந் நாயனாருக்குத் திருப்படி மாற்றுக்கும் திருப்பணிக்கும் திருப் பரிச்சட்டம் திருமேற்பூச்சு இவற்றிற்கும் இந்த

மடத்துக்கும் உள்ள நிபந்தங்களுக்கும் சந்திராதித்த வரை செய்வதாகச் சில சுங்க வரிகளை வழங்குவதாக இசைந்தனர்

வரி வசூலிக்க இசைந்த சரக்குகள் பின்வருமாறு :

உப்பு, நெல், அரிசி, பயறு, துவரை, ஆமணக்கு, பாக்கு, மிளகு, மஞ்சள், சுக்கு, வெங்காயம், கடுகு, சீரகம், நெல்லி, தான்றி, இரும்பு, பருத்தி, நூல், புடவை, உலண்டு பீலி, மெழுகு, தேன் குடம், எள், கொணிகைப்பட்டு, சந்தனம், அகில், பட்டு, பன்னீர்க் குடம், சவரி மயிர், கற்பூரத் தைலம், சாந்து புழுகு, ஜவ்வாது, சேமாடு, குதிரை, யானை முதலிய சரக்குகளுக்குச் சுங்க வரி விகிதங்கள் குறிக்கப் பட்டுள்ளன.

இவ்வித வணிகக் கூட்டத்தினரைப் பற்றிக் கோப்பெருஞ் சிங்கனின் 30-ஆம் ஆண்டு (கி. பி. 1272) ஆவூரில் (வட ஆர்க் காடு ஜில்லா) கல்வெட்டொன்று உள்ளது.

'பதினெண் பூமித்திசை விளங்கு திறல் ஆயிரத்துத் திகழ் வணிகர் பெண்ணை வடகரைச் சேதி மண்டலத்து ஆவூர் உடையார் திருவகத்தீசுரமுடைய நாயனர்க்கு 'அஸ்தர தேவரை'ப் பிரத்ஷ்டை செய்ததாகக் கூறுகின்றனர்.

இது சூராண்டாரான செயசேவகஞ்சேதிராயர் ஆட்சி நாளில் செய்யப்பட்டது.

ஸ்ரீமந் சென்ம மஹாபோதி நந்தபந்தன் மேவணிகரோம் என்றும், **'சாக்கியர் வளர**, கலிமலியப் புகழ் பெருக; பகை தணிய'' என்றும் கூறப்பட்ட வாசகங்களால் இவ் வணிகர் குழுவினர் புத்த மதப் பற்றுடையவரோ என்று ஐயம் ஏற்படு கிறது. ஆனால் இத் தருமம் சிவன் கோயிலுக்குச் செய்யப் பட்டதென்று இக் கல்வெட்டால் அறிகிறோம். இதனல் அக் காலத்து மக்களின் பரந்த நோக்கமும் வேற்று மதச் சகிப்புத் தன்மையும் தெரியவருகின்றன.

இக் குழுவினரின் உயர்ந்த குறிக்கோள் இன்றும் நமக் குப் பயன்படுவதாகும். இதுவே நம் பாரத நாட்டின் தர்ம கோஷமாகும்.

அறம் வளர்க! கலி மலிக!

புகழ் பெருகுக! பகை தணிக!

## பிற்சேர்க்கை

வட ஆர்க்காடு மாவட்டம், செய்யாறு தாலூகா கரந்தையிலுள்ள குந்து தீர்த்தங்கரர் கோயிலின் கோபுர வாசல் வலப்புறத்திலுள்ள கல்வெட்டு. ந. 140, 1939—40.

### கட்டளைக் கலித்துறை

*1.* சுந்தரத் தோரணம் நாட்டித் துகிற் கொடிசூட்டிமுத்துப்
பந்தர்ப் பாலிகை தீபம் பரப்புமின் பல்லவர்கோன்
செந்தளிர்க் கைகோத் தவையன் மகளுடன் தில்லையுலா
வந்தளிக் கும்பெரு மான்வெற்பா மாதை மணஞ்செய்யவே.

பல்லவர் மன்னவனும் சோழன் மகளை மணந்து அவளுடன் தில்லை நகரிலே உலா வந்து மக்களுக்குக் கருணை செய்பவனும் ஆகிய கோப்பெருஞ் சிங்கனுடைய மலைநாட்டைச் சேர்ந்த தலைவரே! எம் உறவினர் எம் தலைவியை உமக்கு மணம் செய்து கொடுக்க ஒத்துக்கொண்டு விட்டனர். எனவே உம் இல்லத்தில் நடக்க இருக்கும் அத்திருமணத்திற்கு அழகிய தோரணங்கள், துணிக் கொடிகள், முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட பந்தர், பாலிகை, தீபம் இவற்றால் நும் இருப்பிடத்தை அலங்கரியுங்கள்' என்று தோழி தலைவியின் திருமணத் தீர்மானத்தைத் தலைவனிடம் கூறியது.

### நேரிசை வெண்பா

*2.* திறையிட் டிருமின்கள் தெவ்வேந்திர் செம்பொன்
துறையிட்ட பூம்புகார்ச் சோழன்—சிறைகிடந்த
கோட்டந் தனைநினைமின் கோப்பெருஞ்சிங்கன் கமல
நாட்டம் கடைசிவந்த நாள்.

"பகை மன்னர்களே! பொன் கொழிக்கும் காவிரி பாயும் புகார் நகரத்தைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆண்ட சோழர் மரபினனான மன்னன் கோப்பெருஞ் சிங்கனுடைய கடைக்கண் சிவந்த அளவிலே சிறையிலிடப்பட்டான். அச்சிறைச்சாலையை நினைத்து நீங்கள் எம் மன்னனுக்குக் கப்பஞ் செலுத்தி நண்பர்களாகுங்கள்" என்று சான்றோர் பகை மன்னருக்கு அறிவுறுத்தியவாறு.

### நேரிசை வெண்பா

*3.* செஞ்சாலி வேலிச் செழுந்தொண்டை நன்னாடா
பஞ்சாயு தாசியா பல்லவா—வஞ்சியான்

கோழியான் புக்க சிறைக்கூடம் புகக் கொதிக்கும்
ஆழியாய் நாழிகை ஓ ரஞ்சு.

செந்நெல் வளம் மிக்க தொண்டை நாட்டரச! திருமாலின் அமிசமாதலின் கைக்கொண்டிருக்கும் ஐந்து ஆயுதத்தை உடையோய்! கோப்பெருஞ் சிங்கனே! பல்லவனே! சேர நாட்டை ஆளும் சேரன் சோழன் பட்ட சிறையிலே அகப்படுமாறு அவனைக் கோபிக்கும் ஆக்ஞாசக்கரத்தை உடையவனே! பொழுது விடிய ஓரைந்து நாழிகையே உள்ளன—எனக் கோப்பெருஞ் சிங்கனைத் துயிலெழுப்புவோர் கூறிய வாறு.

### ஆசிரியத் தாழிசை

4. போரில் திகழ் தெள்ளாறையில் வெள்ளாறு சிவக்கப்
புண்ணீர் புக வளவன் சிறை புகுதப் பொருவென்றிக்
காரில் கொடைதிகழ் காடவன் வேளத்து
ஒதுங்கா நற்குல மடவீர் கடைதிற மின் திறமீன்.

போரினால் சிறப்புற்ற தெள்ளாறு என்ற ஊரின் வெண்மையான வழிகள் சிவப்படையுமாறு குருதி பாயவும் சோழன் சிறைப்படவும் போரிட்ட வெற்றியையும், மேகம் போன்று விளங்கும் கொடையையும் உடைய கோப்பெருஞ் சிங்கனின் அந்தப்புரப் பணிப்பெண்கள் தொகுப்பில் சேராத நல்ல குல மகளிரே! அவன் வெற்றிப் புகழை யாம் பாட அதனைக்கேட்டு அவ்வெற்றியைக் கொண்டாட நும் இல்லத்துக் கதவுகளைத் திறந்து வெளியே வருக—என்று காடவன் வெற்றிப்புகழ் பாடுவோன் மடலாரை நோக்கிச் சொல்லியது.

### நேரிசை வெண்பா

5. அங்கண் அமர் ஞாலத் தரசர்களெல்லாம்
செங்கண் விடையேறு தீட்டுமின்கள்—கங்கை
சடையேற்றி யாளுடைய சங்கரனும் சீயன்
விடையேற்றி ஆளுந்தன் வெற்பு.

"அரசர்காள்! கங்கையைத் தன் சடையில் தாங்கி உலகை விபத்திலிருந்து காத்த ஆற்றலுடைய சிவபெருமானும் கோப்பெருஞ்சிங்கனுக்குரிய விடைக் கொடியை உயர்த்தியே தன் கயிலை மலையை ஆண்டு வருகிறான். அவனே, அங்ஙனம் செய்தலால அழகிய இடத்தை உடைய

விரும்பத்தக்க இவ்வுலகை ஆளும் அரசர்கள் யாவரும் சிவந்த கண்களை உடைய காளை வடிவைக் கொடியில் தீட்டிக் கோப் பெருஞ் சிங்கனுடைய நண்பர்கள் என்று குறிப்பிட்டு வாழுங் கள்'' என்று சான்றோர் சிங்கன் பேராற்றல் கூறியவாறு.

### நேரிசை வெண்பா

6. சீயன் கழல் பணியாச் சென்னி படவேறிப்
போய பழியே பொருகடலே—நீயன்பர்
திண்டேர் வழியழிக்கை தீதன்றே யாமதனைக்
கண்டே உயிர்காத்த லால்.

"கோப்பெருஞ் சிங்கனின் திருவடியைப் பணியாத சோழன் போரில் தோற்றமையால் பரந்துபட்ட பழிபோல அளப்பரிய பரப்பை உடைய கடலே! யாம் அன்பருடைய தேர்ச்சுவடு கண்டு ஆறுதலுற்று உயிர் வாழ்கிறோம். அத்தகைய எமக்கு நீ அலைகளால் தேர்ச் சுவட்டைக் கலைப்பது துயரந் தருவதாகும்'' என்று தலைவன் சிறைப்புறத்தானாகப் பகற்குறிக்கண் தோழி தலைவியது ஆற்றாமை கூறித் தலைவனை மணக்குமாறு தூண்டியது.

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

7. உடனுறையும் மட வன்றில் முன்றி லாரப்
படரு மலர்ச் சண்பகத்தில் ஊடிப் பேடை
விட அகலிக் குயில் கூவி அழைப்பக் கேட்டால்
மெல்லிய லன்ருற்றுவளே வீர ! வீரா !
வட வரசர் மதிலிடிந்து மாளிகைவேர் பறிந்து
மண் சிதைந்த பெருந்தூளி வான யாறு
திடரிய வெம்பரி நடத்து மிண்டன் சீயா
திரி புவனத் திராசாக்கள் தம்பி ரானே.

"வீரருள் வீரனே ! வடநாட்டரசர்களுடைய மதில் இடிய மாளிகை தூள்பட அதனால் மேலெழுந்த மிக்க தூசியால் ஆகாய கங்கை நீர் வற்றித் திடராகும்படிக் கொடிய குதிரையைச் செலுத்தும் ஆற்றல் மிக்க கோப்பெருஞ் சிங்கனே! சேர சோழ பாண்டிய-நாட்டு மன்னர்களின் தலைவனே ! வீட்டின் முகப்பில் இளைய அன்றில்கள் கூடி இன்புறவும், அதனைக் கண்டும், அடுத்துள்ள சண்பகச் சோலையில் பேடைக் குயில் சேவற் குயிலுடன் ஊடல் கொண்டு அகன்றுபோக அதனைத்

தழுவுவதற்குச் சேவற்குயில் கூவி அழைக்கவும் அதனைக் கேட்டும், நின் கோப்பெருந்தேவி, போர்க்களத்திலேயே காலத்தைக் கழிக்கும் நின் பிரிவு தாங்காமல் எங்ஙனம் பொறுத்திருக்க நேர்வாள்?'' என்று பாணர்கள் பாசறை சென்று கோப்பெருஞ் சிங்கனின் வீரமும் அவன் தேவியின் பிரிவாற்ருமையும் பாடியவாறு.

**சந்த விருத்தம்**

8. முட்டவிட்ட கடற்களிற்றணி
முத்த வெண்குடை மன்னிசூழ்
முரிதிரைக்கடல் பணி நிலத்தணி
முடிவழங்கு முகுந்த ! போர்
வட்டவிற்சயி லத்துமா யத்தும்
அவன்மலை பலிவைத்த போர்
வளவளின்னெடு மாறுகொண்டு
மலைந்தநா ளவன்மாளிகை
கட்டணத்துறை மாதர் நின்னிரு
கவரிமாதர் இவன்குலக்
கருவுலகம் அடையக் கவர்ந்
ததுகைவழி அவனிகற்
பட்டவத்தன யானைநின் தடை
என்னும் யானை அவன் புயம்
பயிலு மாலைகள் நின் திருக்கழல்
பாடு மாலைக ளானதே.

'ஒன்றோடொன்று மோதுமாறு பழக்கப்பட்ட மதம் பொருந்திய யானைத் தொகுதியையும், முத்துக்கள் தொங்க விடப்பட்ட வெண் கொற்றக் குடையையும் கொண்டு, கடலால் சூழப்பட்ட உலகில் நின் அடிபணியும் அரசர்க்கு அவரவர் முடிகளை வழங்கிய திருமாலை ஒப்பவனே! வட்டமான ஒளி பொருந்திய சக்கரவாள மலையிலும் அதனோடு தொடர்புடைய ஏனைய மலைகளிலும் தனக்குரிய நெரிமலையில் பொறித்த புலி முத்திரையைப் பொறித்த போரில் பழம் பெருமையுற்ற சோழர் குடியில் பிறந்த மன்னன் உன்னோடு பகைமை கொண்டு போர் செய்த காலத்து அவன் மாளிகையில் சிறப்புற வாழ்ந்த பெண்கள் உனக்குக் கவரி வீசும் பெண்களாயினர். அவன் மரபிலும் உனக்குச் சந்ததி நேரும்படி அவன் மகளை நீ கைப்பிடித்தாய், அவனுடைய பட்டத்து

யானை நின் பட்டத்து யானையின்மேல் ஏறும் படியாயிற்று. அவன் புயங்களில் அணிந்தமாலைகள் உன் திருவடிகளில் சூடப் பட்ட மாலைகள் ஆயின' எனப் பழஞ் சிறப்புடைய சோழனை வென்று அவன் ஆயங்களைக் கவர்ந்து அவன் மகளை மணந்து அவனது வழிபாடு பெற்ற கோப்பெருஞ் சிங்கனுடைய வெற்றிச் சிறப்பைப் புலவர் புகழ்ந்தவாறு.*

*கல்வெட்டு இலாக்காத் தலைவருக்கு நன்றி.